Ma′ny-sid′ed, *a.* பலபக்கமுள்ள ; அனேகவிதமாய்ஆலோசிக்கத்தக்க; having many sides.

Many-sidedness, *n.* பலபக்கங்களுண்டாயிருத்தல்.

Ma′ny-ways′, } *adv*, அனேகவிதமாய், in many ways.
Ma′ny-wise′,

Map, *n.* படம், a (graphical) representation of the earth's surface or the like.—*vt.* படமாய் எழுது, represent by a m., sketch. [L. *mappa*, napkin.]

Ma′ple, *n.* பூவரசுபோன்ற மரம்.

Mar, *vt.* கெடு, பழுதாக்கு, make defective, injure, impair, spoil, disfigure, deface.—*n.* கெடுதி, கேடு, பங்கம், disfigurement, injury, blemish. [AS.]

Ma-ras′mus, *n.* க்ஷயரோகம், காசம்.

Ma-raud′, *vi.* கொள்ளையடிக்கத்திரி, கொள்ளையடி, சூறையாடு, rove in quest of plunder, plunder.—*n.* கொள்ளையடிக்க தேசத்தை தாக்குதல், an excursion for plunder. [F.'to beg', 'to play the rogue'.]

Ma-raud′er, *n.* சூறையாடுவோன், கூட்டங்கூடி கொள்ளையடிக்கிறவன், a rover in quest of booty or plunder, plunderer. [fr. Maraud.]

Mar′ble, *n.* சலவைக்கல், மாக்கல் ; கோலிகுண்டு, a little ball used by children in play.—*vt.* சித்திரவர்ணமாக்கு. [lit. 'the sparkling stone'; Gr. *marmairo*, to flash, to gleam.]

Mar′ble-edged′, *a.* சித்திரவர்ணமிட்ட ஓரமுள்ள.

Marble-paper, *n.* சித்திரவர்ணமுள்ள ஒருவித காகிதம்.

March, *vi.* [F.] கிரமமாய் காலடிகள் போட்டுக்கொண்டு நட அ-து போ, walk or move with regular steps.—*vt.* கிரமமாய் காலடிகள்போட்டுக்கொண்டு நடக்கச்செய், cause to walk or advance in a steady or stately manner.—*n.* படைபெயர்ச்சி அ-து பிரயாணம், advance of troops, military progress ; சென்றதூரம், the distance passed over; ஒயில்நடை, steady walk or movement; [L. *Martius*, pert. to Mars, the god of war: Mars' month.] ஆங்கிலேய மாதங்களில் மூன்றாவது; [AS.] m-es, எல்லை, எல்லைப்பிரதேசம், frontier, border.

Mar′chioness, *n.* Marquis என்னும் பிரபுவின் மனைவி.

Mar′cid, *a.* மெலிந்த, நோய்ஞ்சலான.

Mare, *n.* பெட்டைக்குதிரை, மாதுவான், the female of the horse ; தூக்கத்தில் ஈரல்பளுவாகி பேசமுடியாமல் போகும் வியாதி. [AS.]

Marge, } *n.* அருகு, ஓரம், கரை, தீரம், border, edge, brink, verge ; எழுதியகாகிதத்தில் எழுதாமல் விடப்பட்ட ஓரம், the edge of a page or sheet of paper left blank in writing or printing. [L.]
Mar′gin,

Mar′ginal, *a.* அருகுக்குரிய, அருகெழுதிய, பக்கத்திலெழுதிய, pert. to, or written or printed in, the margin. [fr. Margin.]

Mar-go′sa, *n.* வேப்பமரம், நிம்பவிருக்ஷம். [Pg. *amargoso*, bitter.]

Mar'grave, *n.* ஒருவித ஜமீன்தார்.

Mar'gravine, *n.* Margrave என்னும் ஜமீன்தாரின் மனைவி.

Ma-rig'enous, *a.* சமுத்திரத்திலுண்டான அ-து உற்பத்தியான, produced in the sea. [செடி.

Mar'igold, *n.* ஒருவித மஞ்சட் பூச்

Ma-rine', *a.* கடலுக்குரிய, கடலின், pert. to, or connected with, the sea, maritime.—*n.* கப்பல்சிபாய், a sea-soldier; ஒரு தேசத்தின் கப்பற்கூட்டம், the whole navy of a country. [L. *marinus*, fr. *mare*, the sea.]

Mar'iner, *n.* கப்பலோட்டுகிறவன், நாவிகன், seaman, sailor. [F.; *see* Marine.]

Mar'io-nette', *n.* சூத்திரத்தால் ஆடும் பொம்மை, a puppet moved by strings or wires. [F.]

Mar'ital, *a.* விவாகத்துக்குரிய, pert. to marriage, matrimonial; கணவனுக்குரிய, pert. to a husband. [L., fr. *maritus*, husband, *mas*, *maris*, a male.]

Mar'itime, *a.* சமுத்திரக்கரையிலுள்ள, situated near the sea; கடல் சம்., கடலின், pert. to the sea, marine. [L., fr. *mare*, the sea.]

Mark, *n.* அடையாளம், குறி, சின்னம், ஜாடை, sign, token, indication, symptom, trace; முத்திரை, impression, stamp: மச்சம், புள்ளி, dot, spot; குறி, aim; ஒர்நாணயம், கையெழுத்து செய்யத்தெரியாதவன் போடும் கைநாட்டு.—*vt.* குறிபோடு, make a m. on, single out; பார், கவனி, லட்சியம்வை, notice, observe, note. [AS.]

Mark'er, *n.* குறிபோடுகிறவன்; எண்ணுகிறவன், கணக்குவைக்கிறவன்.

Mar'ket, *n.* கடைத்தெரு, பஜார், a public place for trade; சந்தை, fair; கடையிலே அ-து கிராக்கி, the price or demand.—*vi.* வியாபாரஞ் செய்.—*vt.* கடையிலே விற்பனைசெய். [OF., fr. L. *mercatus*, trade, *mercor*, to buy.]

Mar'ketable, *a.* விற்கத்தக்க, salable.

Mar'keting, *n.* விற்பனை, வியாபாரம்.

Market-rate, *n.* கடைவிலை.

Market-town, *n.* சந்தைகூடும் ஊர்.

Mark'ing, *n.* முத்திரை, அடையாளம்.

Marking-nut, *n.* சேராங்கொட்டை.

Marks'man, *n.* குறிபார்க்கிறதில் தேர்ச்சியுடையவன், a skillful shooter; கைநாட்டுக்காரன், one who makes his mark instead of his signature. [களிமண் பூமி.

Marl, *n.* சத்துள்ளமண், ஒருவிதக்

Marl'y, *a.* களிமண்ணுள்ள.

Mar'malade, *n.* மிட்டாயிவகை.

Mar'mot, *n.* பெருச்சாளிபோன்ற ஓர் ஜந்து.

Mar'quess, } **Mar'quis,** } *n.* Duke என்னும் பிரபுவுக்குத் தாழ்ந்த அந்தஸ்துள்ள பிரபு.

Mar'riage, *n.* கலியாணம், விவாகம், மணம், wedlock, wedding, nuptials, matrimony. [F., fr. L. *maritus*, husband.]

Mar'riageable, *a.* விவாகத்திற்கு ஈடான, விவாகத்திற்குத்தக்க பருவமுள்ள, விவாகத்திற்குத் தகுந்த, fit for marriage.

Mar'ried, *a.* விவாகமான, wedded.

Mar′row, *n.* எலும்புக்குள்ளிருக்கும் கொழுப்பு, மூளை, எலும்பின் சாரம், the tissue that fills the cavities of bones, medulla; சாராம்சம், முக்கியாம்சம், essence, the best part. [AS.]

Mar′rowless, *a.* எலும்பின் சாரமற்ற.

Mar′ry, *vt.* விவாகஞ்செய், unite in wedlock or matrimony, wed; விவாகஞ்செய்துக்கொள், take for wife or husband, wed. —*vi.* விவாகஞ்செய்துகொள், enter into the conjugal or connubial state, take a wife or a husband. [F. & L., fr. L. *maritus*, husband.]

Mars, *n.* அங்காரகன் (கிரகம்); யுத்தாதி தேவதை, the god of war. [L.]

Marsh, *n.* சதுப்புநிலம், சேற்றுபூமி, சவர்நிலம், கழிநிலம், swamp, morass, fen. [AS.]

Mar′shal, *n.* சேனாதிபதி.—*vt.* ஏற்பாடுசெய், arrange, dispose in order; வழிகாட்டு, guide, lead, direct; வரப்போகிறதை முன் அறிவி. [OF.]

Marsh′y, *a.* சதுப்பான, சேருள்ள, ஈரமான, swampy, fenny, wet, boggy. [fr. Marsh.]

Mart, *n.* கடை, பஜார், market. [Cont. fr. Market.]

Mar′ten, *n.* ஒருவித பெரிய கிரிப்பிள்ளை; பரத்துவாஜ பக்ஷிபோன்ற ஒரு பக்ஷி.

Mar′tial, *a.* யுத்தத்துக்கடுத்த, pert. to war, military; வீரனான, சூரனான, warlike, brave. [L. *martialis*, fr. *Mars*, *Martis*, the god of war.]

Mar′tin, *n.* ஒருவித சாதகப்புள், பரத்துவாஜபக்ஷி, a species of swallow; கிரிப்பிள்ளை.

Mar′ti-net′, *n.* கடினசிக்ஷை செய்கிறவன், a strict disciplinarian.

Mar′tingal, } *n.* சவாரி குதிரை
Mar′tingale, } யின் முகப்பட்டைக்கும் டங்குவாருக்கும் கட்டும் ஜெர்பந்து என்னும் தோல்பட்டை.

Mar′tyr, *n.* மதத்தினிமித்தம் பிராணனைக் கொடுத்தவன், one who suffers death (or persecution) for the sake of his convictions. —*vt.* மதவைரத்தினால் கொல், put to death for differences in opinions or convictions. [AS.; L.; Gr. *martys*, a witness.]

Mar′tyrdom, *n.* மதவிஷயமாய் கொல்லப்படுதல், the suffering of death for the sake of convictions.

Mar′tyr-ol′ogy, *n.* மதநிமித்தியமாக கொல்லப்பட்டவர்களின் சரித்திரம், a history or account of martyrs.

Mar′vel, *n.* அற்புதம், அதிசயம், அதிக ஆச்சரியகரமானது, a wonder, prodigy, miracle.—*vi.* ஆச்சரியப்படு, அதிசயப்படு, wonder. [F., fr L. *mirabilis*, wonderful.]

Mar′vellous, } *a.* அற்புதமான, ஆச்
Mar′velous, } சரியமான, அதிசயமான, wonderful, astonishing, surprising, strange. [F.; fr. Marvel.]

Ma′ry-bud′ = Marigold.

Mas′culine, *a.* புருஷனுக்குரிய, pert. to, or of, the male sex, not

female; ஆண்பாலைக்குறிக்கிற, புன் லிங்கமான, denoting or expressing the male sex, forming the names of male beings; தைரியம் முதலிய புருஷ லக்ஷணங்களுடைய, ஆண்மகனுக்குரிய, suitable to, or characteristic of, a man, manly, virile. M. gender = ஆண்பால், புன்லிங்கம். [L., fr. *masculus*, male, fr. *mas*, a male.]

Mash, *n.* கலந்த குழம்பு, கலப்பு, கூழ், a mass of anything in a soft pulpy state.—*vt.* நசுக்கு, அரை, பிசை, கலக்கு, crush, bruise, reduce to a soft pulpy state.

Mash'y, *a.* கலந்த; மொத்தையான.

Mask, *n.* (கண்களுக்கும் வாய்க்கும் மாத்திரம் துவாரமுள்ள) முகத்தை மூடும் அணி, பொய்முகம், a cover for the face, visor; வேஷக் கூத்து, masquerade; வேஷம், a disguise; சாக்குபோக்கு, pretext. — *vt.* வேஷம்போடு, cover the face with a m. or visor, disguise; மறை, ஒளி, conceal, cover, hide, disguise. [F.; A. *maskharat*, a buffoon.]

Mask'er, *n.* வேஷக்காரன், one who wears a mask, masquerader.

Ma'son, *n.* கொற்றன், கல்தச்சன், a builder in stone or brick, one who prepares stone for building purposes; ஒரு அந்தரங்க சங்கத்தில் சேர்ந்தவன். [F.]

Ma-son'ic, *a.* ஒரு அந்தரங்க சங்கத்திற்குரிய. [fr. Mason.]

Ma'sonry, *n.* கொல்லத்துவேலை, கல்வேலை, the occupation of building in stone or brick; செங்கல் முதலியவைகளால் செய்யப்பட்டவேலை, brick-work, stone-work; ஓர் அந்தரங்க சங்கத்தின் சட்டங்கள். [fr. Mason.]

Masque=Mask & Masquerade.

Mas'quer-ade', *n.* பொய்முகங்கள் கட்டிக்கொண்டு ஆடும் ஆட்டம், a performance by a party of persons in mask.—*vi.* பொய் முகம் கட்டிக்கொண்டு ஆடு, take part in a m.. [F.; *see* Mask.]

Mas'quer-ad'er, *n.* வேஷக்காரன், masker.

Mass, *n.* மொத்தை, கட்டி, குவியல், மொத்தம், lump, a quantity of matter cohering together; விஸ்தாரம், a large quantity; கூட்டம், assemblage; பரிமாணம், அளவு, magnitude, bulk; பூஜை, ஆராதனை, பிரார்த்தனை, a service that includes the holy communion & its liturgy. The m-es =சாமானிய ஜனங்கள். [F. & L.]

Mas'sacre, *n.* ஜன சம்ஹாரம், the killing of a considerable number of human beings, carnage. —*vt.* சம்ஹரி, வதை, கொல்லு, kill in considerable numbers, slaughter, butcher. [F., fr. G. 'to cut in pieces'.]

Mas'sage, *n.* உடம்பு பிடித்தல், பிசைதல், a rubbing or kneading of the body.—*vt.* உடம்பு பிடி, சரீரத்திலுளைவு முதலியவை நீக்கு. shampoo.

Mas-sa'gist, *n.* உடம்பு பிடிக்கிற வன், shampooer.

Mass'iness, *n.* அதிகபாரமாயிருத் தல், ponderousness.

Mass'ive, } *a.* ஸ்தூலமான, தடித்த,
Mass'y, } மிகவும்பெரிய, கனமான, பாரமான, consisting of a large mass, ponderous, heavy. [fr. Mass.]

Mast, *n.* கப்பலின் பாய்மரம், the pole or pillar set upright in a boat or vessel. [AS.]

Mas'ter, *n.* எஜமானன், பிரபு,பெரிய வன், நாயகன, owner, lord, proprietor, employer, head, l e a d e r, chief, commander, director ; சமர்த்தன், பண்டிதன், நிபுணன், தேர்ச்சியடைந்தவன், proficient, adept, e x p e r t; ஆசான், உபாத்தியாயன், teacher, tutor.—*vt.* சாதி, வெல்லு, வசப் படுத்திக்கொள், conquer, overpower, subdue ; தேர்ச்சியடை, become thoroughly conversant with, become an adept or proficient, or acquire proficiency, in. [OF. *maistre*, L. *magister*, master.]

Mas'terful, *a.* நிபுணனுன,masterly.

Master-hand, *n.* கைதேர்ந்தவன், பூரணசாமர்த்திய முடையவன்,an eminently skillful person.

Master-key,*n.* அனேகப் பூட்டுகளைத் திறக்கும்திறவுகோல்,a key adapted to open several locks.

Mas'terly, *a.* பூரணசாமர்த்தியத் தைக் காட்டுகிற, exhibiting great skill or ability, expert.—*adv.* மிகு சாமர்த்தியத்துடன், சாமர்த் தியமாய், with the skill of a master. [fr. Master.]

Mas'ter-piece', *n.* பூரணசாமர்த்தி யத்தைக்காட்டும் (காவியம் சித்தி ரம் மு.) வேலை, a work showing the hand of a master, a superior production or capital performance.

Mas'tership,*n.*எஜமானத்துவம், அதி காரம், ownership,control; உபாத் தியாயன்தொழில், teachership ; தேர்ச்சி, நிபுணம், superior skill, proficiency.

Master-stroke, *n.* சாமர்த்தியமான செய்கை,amasterly achievement; (—of policy) நல்லயுக்தி, சிரேஷ்ட யுக்தி, a consummate action.

Mas'tery,*n.* தேர்ச்சி, eminent skill, command,thorough proficiency; பிரபுத்துவம்,அதிகாரம்,dominion, supremacy ; வெற்றி, victory, triumph. [fr. Master.]

Mas'tic=Mastich.

Mas'ticable, *a.* மெல்லக்கூடிய, wh. can be masticated.

Mas'ticate, *vt.* மெல்லு, chew. [L. 'gnash the teeth'.]

Mas'ti-ca'tion, *n.* மெல்லுகை, தின் னுகை, chewing. [fr. Masticate.]

Mas'ti-ca'tor, *n.* மெல்லுகிறவன், chewer.

Mas'ticatory, *a.*மெல்லுகிற, மெல்லு வதற்கு உபயோகிக்கிற,chewing.—*n.* மெல்லும் வஸ்து,தாம்பூல மு-து, a substance to be chewed.

Mas'tich, *n.* ருமர்த்தகம், பூனைக்கண் குங்கிலியம்.

Mas'tiff, *n.* ஒருவிதமான பெரியநாய், a species of watch-dog of a large size. [(கப்பல்).

Mast'less, *a.* பாய்மரமில்லாத

Mat, *n.* பாய், a fabric of rushes, straw &c.; அடர்த்தியான வளர்ச்சி, a thick growth.—*vt.* பாய்போடு, cover with m-s; பின்னு, முடை, interweave, entangle, twist, twine or felt together. [AS.&L.]

Match, *n.* [AS. 'a mate', 'a wife'.] சமானன், ஈடு, ஜோடு, ஜதை, சரியானவன், an equal, mate; எதிரி, opponent, rival; பந்தயத்திற்காக சண்டைசெய்தல் அ-து ஆட்டம், a contest; கலியாணம், marriage; [F., fr. L. *myxus*, a wick.] நெருப்புக்குச்சி, a small strip or splint of wood tipped with a substance ignitible by friction, a lucifer.—*vt.* [same as in the beginning.] சரியாக்கு, equal, suit; ஜதையாக்கு அ-து செய், furnish with an equal or mate; சமமாய் எதிர், oppose as equal, contend against or rival successfully; விவாகம்செய், marry.—*vi.* சரிப்படு, ஒத்திரு, suit, correspond, tally; விவாகம் செய்துகொள், be united in marriage, mate.

Match-box, *n.* நெருப்புக் குச்சிப் பெட்டி.

Match'able, *a.* சரியான, தகுந்த, ஈடான, ஜதையான, that may be matched or joined, comparable, corresponding.

Match'less, *a.* சமானமில்லாத, நிகரற்ற, ஒப்பற்ற, having no equal, unequalled, unrivalled; ஈடாகாத.

Match'lock', *n.* பூர்வகாலத்துத்துப்பாக்கி, an old kind of musket (fired by means of a match).

Match'-mak'er, *n.* தீக்குச்சி செய்கிறவன்; விவாகம்பேசி முடிப்போன்.

Mate, *n.* கூட்டாளி, தோழன் (*m.*), தோழி (*f.*), companion, associate; ஜதை, ஜோடு, match, equal; புருஷன் அ-து மனைவி, a husband or wife.—*vt.* சரியாகு, match.—*vi.* ஜதையாகு, become a m. or companion. [AS.] [லாத.

Mate'less, *a.* ஜதையில்லாத, ஜோடில்

Materia, *n.* சடபதார்த்தம். M. medica = ஔஷதப்பதார்த்தம்; பதார்த்த தத்துவசாஸ்திரம்.

Ma-te'rial, *a.* உருவுள்ள, ஸ்தூலமான, ஜடமான, ஆதிபௌதிகமான, physical, corporeal; முக்கியமான, ஆவசியகமான, important, essential.—*n.* மூலப்பொருள், பிரதான வஸ்து, the substance or matter of wh. anything is made. [L., fr. *materia*, matter.]

Ma-te'rialism, *n.* அணுத்தும வாதம், சார்வாகமதம், லோகாயதமதம்.

Ma-te'rialist, *n.* அணுத்துமவாதி, லோகாயதிகன்.

Ma-te'ri-al'ity, *n.* ரூபமுடைமை.

Ma-te'rially, *adv.* முக்யமாய், ஆவசியகமாய், முக்கியாம்சத்தில், susbtantially, essentially.

Ma-ter'nal, *a.* மாத்ரு சம்., தாய்க்குரிய, motherly·[F.; L. *maternus*, fr. *mater*, mother.]

Ma-ter'nity, *n.* மாத்ருத்துவம், தாய்முறை, motherhood.

Math'e-mat'ic, } *a.* கணித சம்.,
Math'e-mat'ical, } கணிதப்படி,

pert., or according, to mathematics; திட்டமான, சரியான, precise, accurate.

Math'ema-ti'cian, *n.* கணிதசாஸ்திரி, one versed in mathematics.

Math'e-mat'ics, *n. sing.* கணிதசாஸ்திரம், the science that treats of quantity. [F., L., Gr. 'learning', 'science.']

Mat'in, *a.* விடியற்காலத்து, உதயகாலத்து, pert. to the morning.—*n.* பிராதக்காலம்; m-s, பிராதக்கால பூஜை பிரார்த்தனை அ-து ஜெபம், morning worship or prayers. [F., fr. L. 'morning'.]

Mat'i-nee', *n.* பகலில் நடக்கும் சதர் அ-து சபை, a reception held in the day-time.

Mat'ress, *n.* மெத்தை, படுக்கை, a quilted bed. [OF.; A. *matrah.*]

Ma'trice = Matrix.

Mat'ricide, *n.* மாத்ருஹத்தி, தாய்க் கொலை; மாத்ருகாதகன், தாயைக் கொன்றோன்; the murder or murderer of one's own mother. [F.; L. *mater*, mother + *caedo*, to kill.]

Ma-tric'ulate, *a.* சேர்த்துக்கொள்ளப்பட்ட.—*n.* சேர்த்துக்கொள்ளப் பட்டவன்; பிரவேச பரீக்ஷையில் தேர்ந்தவன்.—*vt.* பிரவேசிக்கச் செய், சேர்த்துக்கொள், enroll, admit to membership. [L. *matricula*, a register, *mater*, a mother.]

Ma-tric'u-la'tion, *n.* பிரவேசம், enrolment, admission; பிரவேசப் பரீக்ஷை, the entrance examination.

Mat'ri-mo'nial, *a.* விவாகத்துக் கடுத்த, pert. to marriage, connubial, conjugal, nuptial.

Mat'rimony, *n.* கலியாணம், விவாகம், marriage, wedlock, the married state. [L. *matrimonium*, fr. *mater*, mother.]

Ma'trix, *n.* கருப்பை, the womb; உற்பத்திஸ்தானம், origin; அச்செழுத்துகள் வார்க்கும் அச்சு, die, mould. [L., fr. *mater*, mother.]

Ma'tron, *n.* இல்லாள், தலைவி, வீட்டு எஜமானிச்சி, an elderly married woman, the mother of a family. [F. *matrone*; L. *matrona*, fr. *mater*, mother.]

Ma'tronly, *a.* தலைவிக்குரிய, இல்லாளுக்கேற்ற, like or befitting a matron, grave, sedate.

Mat'ro-nym'ic, *n.* தாயின் பெயரால் உண்டான பெயர், a name or appellation derived from the name of one's mother.

Mat'ted, *a.* பாய்போடப்பட்ட, covered with a mat; ஜடையான, சிக்கான, entangled, interwoven.

Mat'ter, *n.* ஜடப்பொருள், that of wh. the sensible universe is composed; சாதனப்பொருள், பதார்த்தம், சாமக்கிரியை, the constituent substance of anything, material; விஷயம், அருத்தம், சாரம், subject; காரணம், cause; ஆவசியகம், importance, consequence; காரியம், வியவகாரம், சங்கதி, பிரமேயம், affair business, concern; சீழ், சீ, pus, purulent substance. M. of fact

=உண்மையான விஷயம்.—vi. முக்கியமாகு, அவசியமாகயிரு, signify, import. It m-s not= கெட்டதயில்லை, பாவாயில்லை. [OF., fr. L. *materia*, matter.]

Mat′terless, *a.* வெறுமையான, வீண்.

Mat′ter-of-fact′, *a.* உண்மையான, உண்மையாய் நடந்த, adhering to facts or realities, not fanciful or imaginative, dry, prosaic.

Mat′tery, *a.* சீழ்பிடித்த, purulent.

Mat′ting, *n.* பாய்கள், mats (collectively), mat-work.

Mat′tock, *n.* மண்வெட்டி, களைவெட்டி, பிக்காக்சு, a pick-axe with one or both ends broad.

Mat′tress = Matress.

Mat′urate, *vt.* பழுக்கச்செய், பதப்படுத்து, ripen.

Mat′u-ra′tion, *n.* பழுத்தல், பக்குவமாகுதல், maturing, ripening.

Ma-ture′, *a.* பழுத்த, பக்குவமான, ripe, full-grown; சித்தமான, perfected, ready for action.—*vt.* பழுக்கும்படிசெய், பக்குவமாகும்படிசெய், பதமாக்கு, ripen, make ready for use or action.—*vi.* பக்குவமாகு, பழு, பதமாகு, முதிர், become ripe. [L. *maturus*, ripe.]

Mat′u-res′cent, } *a.* பக்குவத்திற்கு
Ma-tur′ing, } வருகிற, தேறுகிற, approaching maturity.

Ma-tu′rity, *n.* பாகம், பக்குவம், சூடு, யுக்தவயது, ripeness, full development, completeness, perfection. [fr. Mature.]

Mat′u-ti′nal, *a.* விடியற்காலத்துக்குரிய.

Mat′y, *n.* வேலைக்காரன், ஊழியன்.

Maud′lin, *a.* இளநெஞ்சுள்ள, சுலபமாய் கண்ணீர்வருகிற, கண்ணீர் நிறைந்த, excessively sentimental, easily moved to tears, tearful; குடித்து வெறிகொண்ட, drunk.

Mau′ger, } *prep.* ஆகிலும்.
Mau′gre, }

Maul, *n.* சம்மட்டி, a heavy wooden hammer or beetle.—*vt.* தகர், நசுக்கு, beat with a m..

Maund, *n.* மணங்கு, 8 வீசைகளின் நிறை.

Maund′er, *vi.* முணுமுணு, முறுமுறு, அசந்தர்ப்பமாய்ப் பேசு.

Mau′so-le′um, *n.* பெரியகோரி, [சமாதி.

Ma′vis, *n.* ஒருவித குயில்.

Maw, *n.* விலங்கு பறவை முதலியவைகளின் இரைப்பை, வயிறு, the stomach of brutes.

Mawk′ish, *a.* ருசியில்லாத, வெறுக்கச்செய்கிற, nauseous, disgusting. [an intestinal worm.

Maw′-worm′, *n.* நாக்குப்பூச்சி, கிருமி,

Max′illar, } *n.* கன்னத்துக்குரிய,
Max′illary, } pert. to the jaw.

Max′im, *a.* சூத்திரம், வாக்கு, வசனம், நீதிவாக்கியம், தருமம், நிபந்தனை, சித்தாந்தம், aphorism, saying, apophthegm, adage, proverb. [F. *maxime*; L. *maxima* (*sententia*), the greatest (sentence or proposition).]

Max′imize, *vt.* அதிகஉயர்ந்த ஸ்திதிக்கு கொண்டுவா.

Max′imum, *n.* உச்சம், அதிஉன்னத தசை, மும்முரம், the highest

point or degree ; பெருந்தொகை மொத்தம் அ-து பரிமாணம், the greatest quantity or value attainable.—*a.* அதிஉன்னததசையி லுள்ள, உத்தமஸ்திதியிலுள்ள, in the highest degree attainable : opp. to Minimum. [L. *maximus*, the greatest.]

May, *aux. v.* [AS. 'to be able.'] —ஆம்,as,you m.go=நீபோகலாம். M. you be happy !=நீ சந்தோஷமாக இருப்பாயாக ! M. be= ஒருவேளை, இருக்கக்கூடும்.—*n.* [from *Maia*, the goddess of growth or increase.] ஆங்கிலேயமாதங்களில் ஐந்தாவது.— *vi.* மே மாதத்தில் உதயகாலத்தில் புஷ்பங்கள் பறி.

May'be, *adv.* ஒருவேளை இருக்கக் கூடும், என்னமோ, perhaps.

May-beetle, May-bug, } *n.* வண்டுபோன்ற ஒருபுழு.

May-day, *n.* மேமாதத்தின் முதனாள்.

May'hap, *adv.* ஒருவேளை இருக்கலாம்.

May'or, *n.* நகராதிகாரி, the chief officer of a municipal corporation. [F., fr. L. *major*, greater.]

May'oralty, *n.* நகராதிகாரியின் அதிகாரம், the office or position of mayor.

May'oress, *n.* நகராதிகாரியின் மனைவி, the wife of a mayor.

May'pole', *n.* மேமாதத்தின் முதனாள் மைதானத்தில் நட்டு சுற்றி விளையாடும் ஸ்தம்பம், a tall pole erected in an open place, about wh. the Mayday sports are held.

Maze, *n.* கலக்கம், தடுமாற்றம், perplexity,bewilderment; வெளியில் வருவதற்கு கஷ்டமான அதிக சுற்றுகளுள்ள இடம், labyrinth,intricacy.—*vt.* தடுமாறச்செய், திகைக்கச்செய், perplex.

Ma'zy, *a.* தடுமாற்றமுள்ள, சிக்கான, intricate, perplexing, embarrassing.

Me, *pron. obj. case* of I. என்னை.

Mead, *n.* மைதானம், வெளி, meadow; ஷர்பத், a kind of fermented drink.

Mead'ow, *n.* பசும்புல்நிலம், புற்றரை, மைதானம், a low level tract of land under grass. [AS.]

Mead'owy, *a.* புற்றரை சம்., pert. to meadows. [fr. Meadow.]

Mea'ger, *a.* ஒல்லியான, இளைத்த, thin, lean, emaciated; பலமில்லாத, சாரமற்ற,சத்து இல்லாத, weak, poor, barren; அற்பமான, scanty, little. [F. & L. 'lean'.]

Mea'gerly, *adv.* அற்பமாய், ஸ்வல்பமாய், பலவீனமாய், poorly, scantily, thinly.

Mea'gre=Meager.

Mea'grely=Meagerly.

Meal, *n.* சாப்பாடு, உண்டி, ஒருவேளைபோஜனம், the portion of food taken at one time,a repast; மா, flour. [AS.]

Meal'y, *a.* மாப்போன்ற, மெதுவான, resembling meal, farinaceous, floury, soft.

Meal'y-mouthed',*a.* தைரியத்துடன் கண்டிப்பாய் சொல்லாமல் மெதுவாய்ப் பேசுகிற, affectedly or timidly delicate oi speech.

Mean, *a.* நீச, தாழ்ந்த, அற்பமான, ஈனமான, இழிவுள்ள, அற்பபுத்தியுடைய, base, low, ignoble, vile, dishonorable, sordid ; சாமானியமான, மத்தியம, சராசரியான, மத்தியபரிமாணமுள்ள, middle, intermediate, average, midway bet. extremes. —*n.* சராசரி, மத்தியமஸ்திதி, average, medium ; மிதம், moderation;(generally in the *pl.* form m-s) சாதனம், காரணம், கருவி, instrument, instrumentality, agency, measure or measures adopted ; ஆதாரம், ஆஸ்தி, வரும்படி, resources, property, income.—*vt.* & *vi.* கருது, எண்ணு, கருத்துக்கொள், உத்தேசி, intend, purpose, design; அருத்தங்கொள், அருத்தங்கொடு, signify, import, denote, indicate. [AS.]

Me-an′der, *n.* வளைந்து வளைந்து போதல், a tortuous movement; சுற்று வழி, கஷ்டமான வழி, a winding, crooked or involved course.—*vi.* வளைந்து வளைந்து போ, go in a winding course. [from L. *Meander*, Gr. *Maiandros*, a river in Phrygia, proverbial for its windings.]

Me-an′drous, *a.* வளைவு வளைவான, winding.

Mean′ing, *n.* அருத்தம், தாற்பரியம், கருத்து, பயன், signification, sense, import, force ; உத்தேசம், அபிப்பிராயம், object, intent, aim, purpose, intention. [unmeaning.

Mean′ingless, *a.* அருத்தமில்லாத,

Mean′ingly, *adv.* அருத்தமுண்டாய், அருத்தத்துடன்; உத்தேசத்துடன். [basely.

Mean′ly, *adv.* இழிவாய், குறைவாய்,

Mean′ness, *n.* இழிவு, தாழ்ந்த நிலைமை, lowness, baseness.

Means, *n.* (*sing.* & *pl.*) கருவி, சாதனம், உபாயம், காரணம்; (*pl.*) வரும்படி, வரவு, ஜீவனாதாரம் : see Mean. [டைய, base.

Mean′-spir′ited, *a.* நீசபுத்தியு

Meant, *pt.* & *pp.* of Mean, *v.*

Mean′time′, Mean′while′, } *n.* மத்தியகாலம், the intervening time.—*adv.* இடையில், இதற்குள்ளே, இப்படியிருக்கையில், in the intervening time, during the interval.

Mea′sled, *a.* சின்னம்மையின் வடுவுகளுள்ள, spotted with measles.

Mea′sles, *n. pl.* சின்னம்மை, தட்டம்மை.

Meas′urable, *a.* அளக்கத்தக்க, கணக்கிடக்கூடிய, wh. can be measured, not beyond measure, moderate.

Meas′ure, *n.* அளவு, பரிமாணம், dimensions, capacity, extent, size, quantity, degree ; அளக்கும்மரக்கால், படி, கோல், கயிறு மு-து, a measuring vessel, rod, line, or the like, a standard ; மிதம், moderation; காரியம், வேலை, உபாயம், act, step, a part of a course or policy ; (ஸங்கீதத்தில்) லயம், musical time ; (யாப்பில்) கணம், foot, metre, rhythm; ஓர் எண்ணை மிச்சமில்லாமல் வகுக்கும் மற்றோர் எண், பிரமாணம், குணகம், factor. A common m. = சாமான்னிய

பாஜகம், அபவர்த்தகம். Greatest common m.=கரிஷ்டாபவர்த்தகம், உத்தம பொது அளவு, உத்தம சாமான்ய பாஜகம், In some m.=கொஞ்சமட்டும். —*vt.* அள, பரிமாணத்தை தெரிந்து கொள், ascertain the dimensions, size, or capacity of; மிச்சமில்லாமல் வகு, be a m. or factor of. —*vi.* அளவைக்கொண்டிரு, அளவுள்ளதாயிரு, have a certain size or capacity. [F. *mesure*, fr. L. *mensura*, fr. *metior*, to measure.]

Meas′ured, *a.* மிதமான, மட்டான, யுக்தமான, moderate, limited.

Meas′ureless, *a.* அளவில்லாத, மிதமில்லாத, immeasurable, unlimited.

Meas′urement, *n.* அளத்தல், measuring; அளவு, பரிமாணம், (ascertained) size, dimension, capacity, quantity, extent &c. [fr. Measure.]

Meas′urer, *n.* அளப்போன்.

Meas′uring, *a.* அளவுள்ள; அளக்க உபயோகிக்கிற.

Meat, *n.* ஆஹாரம், food; மாமிசம், இறைச்சி, the flesh of animals. [AS.]

Me-chan′ic, *n.* வேலைக்காரன், சிற்பி, artisan, artificer, mechanician.—*a.*=Mechanical.

Me-chan′ical, *a.* யந்திரங்கள் மு-வைகளினால்செய்யப்பட்ட, யந்திரங்களாலான, made or formed by machinery, tools &c.; யந்திரத்திற்குரிய, pert. to machinery; யந்திரத்தைப்போல் செய்கிற, ஆலோசனையற்ற, done as if by a machine without reflection or intelligence, automatic. [L.; Gr., fr. *mechane*, a machine.]

Me-chan′ically, *adv.* பொம்மையைப்போல், ஆலோசனையின்றி.

Mech′a-ni′cian, *n.* சிற்பி, mechanic; யந்திரம்செய்வோன், machinist.

Me-chan′ics, *n. sing.* யந்திரசாஸ்திரம், பிரகிருதியிலுள்ள பதார்த்தங்களின் கமனவேகம் மு-வைகளைப் பற்றிய சாஸ்திரம், the science wh. treats of motion and force. [*see* Mechanical.]

Mech′anism, *n.* யந்திரம், சூத்திரம், யந்திரத்தின் ஏற்பாடு, the arrangement of the parts of a machine. [*see* Mechanical.]

Mech′anist, *n.* யந்திரகதி சாஸ்திரம் அறிந்தவன், machinist.

Med′al, *n.* விருதுமுத்திரை, வெகுமான முத்திரை அ-து பதக்கம், a coin-shaped piece of metal issued as a reward of Merit. [F. & L. lit. 'metal'.]

Med′alist, *n.* புராதன முத்திரைகளின் மூலத்தை விசாரிப்பவன்; விருதுமுத்திரையைவெகுமானமாயடைந்தவன், the receiver of a medal as a reward of merit.

Me-dal′lic, *a.* விருதுமுத்திரைக்குரிய, pert. to a medal.

Med′allist=Medalist.

Med′dle, *vi.* அனுவசியமாய் பிரவேசி, தலையிடு, interfere, intermeddle: foll. by *with*. [OF. 'to mix'.]

Med′dler, *n.* அதிகப்பிரசங்கி, அனுவசியகமான காரியங்களில் பிரவேசிப்

போன், an officious person, a busy-body.

Med'dlesome, } a. அதிகப்பிரசங்கித்
Med'dling, } தனமுள்ள, தொந்திரவுசெய்கிற, அனுவசியகமாய் பிரவேசிக்கிற, interfering, officious, intrusive.

Me'dial, a. நடுத்தரமான, சராசரியான, mean, average.

Me'diate, vi. மத்தியஸ்தம்செய், சமாதானப்படுத்து, interpose bet. parties for effecting a reconciliation, intercede, arbitrate, intervene.—a. நடுவான, மத்தியமான, middle, intermediate. [L. *medius*, middle.]

Me'di-a'tion, n. மத்தியஸ்தம், intercession, intervention, interposition, arbitration. [fr. Mediate.]

Me'di-a'tor, n. நடுவன், மத்தியஸ்தன், intercessor, arbitrator. [fr. Mediate.]

Me'diatory, a. மத்தியஸ்தம் செய்கிற, intercessory, interceding.

Me'di-a'tress, } n. மத்தியஸ்தி, a
Me'di-a'trix, } female mediator.

Med'icable, a. சிகிச்சை செய்யக்கூடிய, curable.

Med'ical, a. வைத்திய சம்., pert. to the science of medicine; ஔஷத சம்., medicinal. [L. *medicus*, fr. *medeor*, to heal.]

Med'ically, adv. வைத்தியசாஸ்திர முறையாய்.

Med'icament, n. மருந்து, ஔஷதம், a medicine.

Med'icate, vt. சிகிச்சைசெய், treat with medicine; மருந்து கூட்டு, tincture or impregnate with medicine, drug.

Me-dic'inal, a. ஔஷத சம்., pert. to medicine, having curative properties, medical. [fr. Medicine.]

Med'icine, n. மருந்து, ஔஷதம், a remedial agent, remedy, physic, drug; வைத்திய சாஸ்திரம், the science wh. relates to the cure or alleviation of disease, the healing art. [see Medical.]

Me'di-o'cre, a. சாமானியமான, நடுத்தரமான, சாதாரணமான, மத்தியமமான, ordinary, indifferent, middling, commonplace. —n. சாமானியன், நடுத்தரமானவன், மத்தியமன், a m. person. [F., fr. L. *mediocris*.]

Me'di-oc'rity, n. சாமானியத்துவம், நடுத்தரதன்மை, an ordinary state; சாமானியன், நடுத்தரமானவன், மத்தியமன், a mediocre person, one of mediocre talents or abilities.

Med'itate, vi. ஆலோசனைசெய், யோசனைபண்ணு, சிந்தி, தியானி, think, muse, reflect, cogitate, revolve any subject in the mind.—vt. ஆலோசனைசெய், ஆலோசி, உத்தேசி, contemplate, study; யூகி, design, intend. [L.]

Med'i-ta'tion, n. ஆலோசனை, தியானம், contemplation, musing, reflection. [fr. Meditate.]

Med'itative, a. ஆலோசனையுள்ள, தியானிக்கிற, contemplative.

Med'iter-ra'nean, } a. மத்திய
Med'iter-ra'neous, } தரையான, பூமியின் மத்தியிலுள்ள. [L. *medius*, middle + *terra*, land.]

Me′dium, *n.* இடையிலுள்ள வஸ்து, intervening substance, means of passage or transmission; சராசரி, mean. [L.]

Med′ley, *n.* கலப்பு, கலவை, சங்கரம், பலதிரட்டு, mixture, jumble, hodgepodge. [OF. 'to mix.']

Me-dul′la, *n.* மூளை, மஜ்ஜை, the marrow of bones. M. oblongata = மஜ்ஜாமுகம்.

Me-dul′lar, Med′ullary, } *a.* மூளை சம்., pert. to medulla.

Meed, *n.* வெகுமானம், நன்கொடை, கைம்மாறு, reward, recompense. [AS.]

Meek, *a.* சாந்தமுள்ள, சாதுவான, தாழ்மையுள்ள, அகங்காரமற்ற, gentle, mild, humble, unassuming, soft, yielding.

Meek′ly, *adv.* சாதுவாய், மெதுவாய்.

Meek′ness, *n.* சாந்தம், சாது, தாழ்மை, mildness, gentleness.

Meer, *n.* = Mere.

Meet, *vt.* [AS.] கல, சேர், கூடு, சந்தி, join, come in contact with, come close to; எதிர்ப்படு, சந்தி, confront, encounter; அனுபவி, படு, experience, suffer; திர்ப்திசெய், போதுமாயிரு, satisfy, answer.—*vi.* கல, join, come together; சபைகூடு, assemble, congregate.—*a.* [AS. fr. *metan*, to measure.] தகுந்த, யுக்தமான, சரியான, உசிதமான, fit, proper, suitable, appropriate.

Meet′ing, *n.* கூடுதல், சந்திப்பு, சமாவேசம், coming together, joining, junction; சபை, கூட்டம், assembly, conference, congregation, convention.

Meet′ly, *adv.* தகுதியாய், ஏற்றதாய்.

Me′grim, *n.* கடினமான தலைவலி.

Mei-o′sis, *n.* பெரியதாயிருப்பதை மிகுசிறிதாகச்சொல்லும் அலங்காரம்.

Mel′an-chol′ic, *a.* துக்கமுள்ள, துயரமுள்ள, dejected, unhappy.

Mel′ancholy, *a.* துக்கமுள்ள, sad, gloomy, unhappy, dispirited, down-hearted, dismal; துயரமான, துக்ககரமான, calamitous, afflictive.—*n.* விசாரம், வியாகுலம், துக்கம், deep dejection, gloominess, depression of spirits. [Gr. 'excess of black bile', *melaina*, black + *chole*, bile.]

Me′lange′, *n.* கலப்பு, கூட்டு.

Me′lee′, *n.* ஒழுங்கற்றயுத்தம், சண்டை, confused and hand to hand fight or conflict, affray.

Mel′iorate, *vt.* செம்மையாக்கு, அபிவிருத்திசெய், improve, ameliorate, better, soften.—*vi.* செம்மையாகு, அபிவிருத்தியாகு, become better.

Mel′io-ra′tion, *n.* செம்மையாக்குதல், திருத்தம்; அபிவிருத்தி; improvement. [L. *melior*, better.]

Mel-lif′erous, Mel-lif′ic, } *a.* தேனுண்டாக்கும்.

Mel′lifi-ca′tion, *n.* தேனுண்டாக்கல்.

Mel-lif′luence, *n.* மதுரப்பிரவாகம், a sweet smooth flow.

Mel-lif′luent, Mel-lif′luous, } *a.* மதுரப்பிரவாகமுள்ள, கேழ்க்கத்தக்க, இனிமையான, இன்பமான, flowing sweetly or smoothly.

Mel'low, *a.* மெதுவான, பக்குவமான, பழுத்த, soft, tender, ripe ; லாவணியமுள்ள, மிருதுவான, delicate; கொஞ்சம் போதைகொண்ட.—*vt.* பக்குவமாக்கு, மெதுவாக்கு, மிருதுவாக்கு, make m..—*vi.* பக்குவமாகு, மெதுவாகு, become m..

Mel'lowy, *a.* மிருதுவான, soft.

Me-lo'dious, *a.* காதுக்கினிய, கேழ்க்கத்தக்க, சிரவணானந்த கரமான, musical, sweet, agreeable to the ear.

Mel'odize, *vt.* செவிக்கினியதாக்கு.

Mel'o-dra'ma, *n.* அத்தியத்புதமான விஷயங்களுடைய நாடகபேதம், a romantic play or drama containing startling incidents and striking situations.

Mel'odra-mat'ic, *a.* நாடகம்போன்ற, இயற்கைக்கு விரோதமான, like a melodrama, unnatural.

Mel'ody, *n.* ராகத்தின் இனிமை, ஸ்வர மாதுரியம், a sweet or agreeable succession of sounds, sweetness of sound. [Gr.; akin to Sk. *mridu.*]

Mel'on, *n.* சர்க்கரைக்கொம்மட்டி.

Melt, *vt.* கரை, உருக்கு, liquefy, fuse, thaw, dissolve, (மனதை) soften.—*vi.* கரை, உருகு, become liquid, d i s s o l v e, (மனம்) be softened, become tender.

Melt'ing, *n.* கரைதல்; மனமுருகச் செய்தல்.

Mem'ber, *n.* சங்கத்தி லொருவன், சங்கத்தான், one of the persons composing a society or the like; அவயவம், உறுப்பு, limb, organ. [L. 'a limb'.]

Mem'brane, *n.* ஐவ்வு, மெல்லியதோல், புரை, a thin layer, sheet or tissue. [L. 'a thin skin'.]

Mem-bra'neous, Mem'branous, } *a.* ஐவ்வு சம்.; ஐவ்வுபோன்ற; ஐவ்வுள்ள; pert. to, resembling, or consisting of, membrane.

Me-men'to, *n.* ஞாபகக்குறிப்பு, memorial, souvenir, reminder. [L. *memini*, to remember.]

Mem'oir (மெம்வார்), *n.* சரித்திரம், விருத்தாந்தம், history, account; (ஒருமனிதனைப்பற்றிய) biography. [F.; L. *memoria*, memory ; Sk. *smar*, to remember.]

Mem'orable, *a.* ஞாபகம்வைத்துக் கொள்ளத்தக்க, பிரசித்தமான, முக்கியமான, worthy to be remembered, remarkable, important. [L. *memorare*, to bring to remembrance, fr. *memor*, mindful.]

Mem'o-ran'dum, *n.* (*pl.* Memoranda.) யாதாஸ்து, ஞாபகத்தின்பொருட்டு எழுதியது, a record or note to help the memory, a brief entry in a diary &c. [L.lit. 'something to be remembered'.]

Me-mo'rial, *n.* ஞாபகார்த்தமாயுள்ளது, that wh. perpetuates or preserves the memory of something, monument ; விண்ணப்பம், அர்ஜீ, a written representation or petition.—*a.* ஞாபகத்திலிருக்கச்செய்யும், serving to preserve remembrance, commemorative ; ஞாபகத்திலுள்ள, contained in memory. [*see* Memory.]

Me-mo'rialist, *n.* விண்ணப்பதாரன்,

அர்ஜிதாரன், மனுவுதாரன், one who presents a memorial, petitioner.

Me-mo′rialize, *vt.* மனுவு ஆ-து விண்ணப்பம் எழுதிக்கொள், அர்ஜி எழுதிக்கொள், present a memorial, address by a memorial, petition.

Mem′orize, *vt.* மனப்பாடம் பண்ணு, கண்டாபாடம் பண்ணு, ஞாபகம் வை, commit to memory, learn by heart.

Mem′ory, *n.* ஞாபகம், remembrance, recollection, reminiscence; ஞாபகசக்தி, the power or faculty of retaining the knowledge of past thoughts &c. [L. *memoria*, memory, *memor*, mindful.]

Men, *n. pl.* of Man. மனிதர், ஜனங்கள்; ஆண்மக்கள்.

Men′ace, *vt.* அதட்டு, பயமுறுத்து, threaten.—*n.* அதட்டுகை, பயமுறுத்துகை, threatening, threat. [F.; L. *minor*, to threaten, *minae*, projecting points or pinnacles.]

Men′acingly, *adv.* பயமுறுத்துவதாய், அதட்டலுடன், threateningly.

Me′nage′, *n.* குதிரைமு-ய மிருகங்களைப் பழக்குதல்.

Men-ag′erie, *n.* மிருகசாலை, a collection of (wild) animals for exhibition.

Mend, *vt.* திருத்து, சீர்ப்படுத்து, improve, better, amend, correct, rectify, reform; மராமத்துசெய், repair, patch up, set right.—*vi.* திருந்து, சீர்ப்படு, become improved. [abb. of Amend.]

Mend′able, *a.* சீர்ப்படுத்தக்கூடிய, திருத்தக்கூடிய, improvable, corrigible.

Men-da′cious, *a.* பொய்பேசுகிற, மோசஞ்செய்கிற, lying, false. [L. *mendacis*, lying.]

Men-dac′ity, *n.* பொய், பொய்பேசுங்குணம், மோசஞ்செய்யும்புத்தி, lying, deceit, falsehood, untruth.

Mend′er, *n.* சீர்ப்படுத்துவோன், திருத்துவோன், repairer.

Men′dicancy, *n.* யாசித்தல், பிச்சையெடுத்தல், begging, beggary, mendication.

Men′dicant, *n.* பிச்சைக்காரன், துறவி, யாசகன், சன்னியாசி, beggar, begging friar.—*a.* பிச்சைக்காரனை, யாசகனை, begging, living on alms. [L. *mendico*, to beg.]

Men′di-ca′tion, *n.* பிச்சையெடுத்தல், mendicancy, beggary.

Men-dic′ity, *n.* யாசகம், பிச்சை, யாசக ஜீவனம், mendicancy.

Men′ial, *a.* சேவகனை, ஊழியஞ்செய்கிற, performing low service, serving; இழிவான, servile, low, mean.—*n.* சேவகன், பரிசாரகன், ஊழியன், a domestic servant, one employed in low service. [OF. 'a household'.]

Men′sal, *a.* மாதத்திற்கொருமுறையான, மாதத்திய, monthly.

Men′ses, *n. pl.* தீட்டு, மாதவிடாய், ருது, the catamenial or menstrual discharge of a woman. [L. *mensis*, month, *menses*, months, and the monthly courses of women.]

Men'strual, *a.* மாதத்திற்கொருமுறையுண்டாகிற, monthly ; நீட்டு அ-து மாதவிடாய் சம்., pert. to the menses, menstruous. [L.]

Men'struant, *a.* பயிஷ்டியாகிற, மாதத்தீட்டாகிற, subject to menstruation.

Men'struate, *vi.* மாதத் தீட்டாகு, பயிஷ்டியாகு, discharge the menses, have the catamenial flow.

Men'stru-a'tion, *n.* மாதத்தீட்டாகல், the discharge of the menses.

Men'struous, *a.* மாதத்தீட்டான, having the monthly flow or discharge, menstruating; மாதத்தீட்டு சம்., catamenial.

Men'struum, *n.* கரைக்கும் மருந்து, solvent. [measure.

Men'sural, *a.* அளவு சம்., pert. to

Men'su-ra'tion, *n.* அளவு, measuring; அளவைக்குறித்த சாஸ்திரம், applied geometry wh. has to do with finding measurements. [L. *mensuro*, to measure.]

Men'tal, *a.* மனது சம்., மானஸிகமான, pert. to the mind, intellectual; மோவாய்க்கட்டை சம்., pert. to the chin. M. arithmetic =மனக்கணிதம், வாய்க்கணக்கு. [F., fr. L. *mens*, *mentis*, mind.]

Men'tally, *adv.* மனதில், in the mind, in thought or idea, intellectually.

Men'tion, *vt.* உதஹரி, சொல்லு, speak briefly of, name, refer or allude to.—*n.* சொல்லல், உதஹரித்தல, எனல், brief reference, allusion, or statement, speaking. [L.] [monitor, counselor.

Men'tor, *n.* உபதேசிகன், adviser,

Men-to'rial, *a.* உபதேசகமான, புத்தி சொல்லுகிற.

Me-phit'ic, *a.* கெட்ட நாற்றமுள்ள, பிராணஹானியான, துர்கந்த முள்ள, offensive to the smell, noxious, poisonous, pestilential.

Mer'cantile, *a.* வர்த்தக சம்., pert. to merchants or trade, commercial. [F. & L.]

Mer'cenary, *a.* கூலிக்கு வேலைசெய்கிற, சம்பளத்திற்காகவே செய்கிற, திரவியாசையினால்நீசகாரியத்திற்கு சம்மதிக்கிற, serving for pay, paid, hired, hireling, venal, sordid, moved by the love of money.—*n.* கூலிக்காகவே வேலை செய்வோன்; சம்பளத்திற்கு பரராஜ்ஜிய சேனையில் சேர்ந்தவன்; one who is hired, hireling, esp. a soldier hired into foreign service. [F., fr. L. *merces*, reward, wages.]

Mer'cer, *n.* ஜவளிவர்த்தகன், a dealer in textile fabrics. [F., fr. L. *merx*, *mercis*, wares.]

Mer'cery, *n.* ஜவுளிசரக்கு அ-து வர்த்தகம், textile fabrics or dealing in them. [fr. Mercer.]

Mer'chandise, *n.* வர்த்தகம், வியாபாரம், வாணிகம், trade ; வர்த்தக சரக்கு, goods, commodities, wares.—*vi.* வியாபாரஞ் செய், வர்த்தகம்செய், trade. [F.]

Mer'chant, *n.* வர்த்தகன், வியாபாரி, வாணிகன், trader, shop-keeper.—

a. வர்த்தக சம்..[F., fr.L.*mercari*, to traffic, *merx*, *mercis*, wares.]

Mer′chantable, *a.* விற்பனைக்குத்தகுந்த, விற்பனை செய்யக்கூடிய.

Mer′chantman, *n.* வர்த்தகக்கப்பல், a trading vessel: as dist. fr. man-of-war.

Mer′chantry, *n.* வர்த்தகர்கள்.

Mer′ciful,*a.* தயாளமான, தயையுள்ள, கிருபையுள்ள, கருணையுள்ள, இறக்கமுள்ள, உருக்கமுள்ள, kind, compassionate, humane, gracious, benignant, clement, tender.

Mer′ciless, *a.* இரக்கமில்லாத, குரூரமான, கருணையற்ற, உருக்கமற்ற, cruel, unmerciful, pitiless, ruthless.

Mer-cu′rial, *a.* பாதரச சம்., pert. to quicksilver; உற்சாகமுள்ள, சுறுசுறுப்பான, sprightly; சபலசித்தமுள்ள, fickle, volatile; திரவியாசையுள்ள, money-making.

Mer-cu′rify, *vt.* பாதரசம்சேர்.

Mer′cury, *n.* பாதரஸம், ரசம், quicksilver; புதன் (கிரஹம்); கிரீஸ் தேசத்தாரின் ஒரு தேவன். White sublimate of m. = ரஸகர்ப்பூரம். [L.]

Mer′cy, *n.* இரக்கம், உருக்கம், கிருபை, கருணை, தயை, pity, compassion, grace, clemency, tenderness. Cry m. = க்ஷமி அ-து பொறு என்று வேண்டிக்கொள். [F.&L.]

Mere, *a.* கேவலம், மாத்திரம், bare, pure, simple, unmixed, absolute, unqualified.—*n.* ஏரி, குளம், pool, lake; எல்லை, boundary.

Mere′ly, *adv.* சும்மாய், மாத்திரமாய், சுத்தமாய், only, barely, purely, simply, unmixedly, solely, absolutely.

Mer′e-tri′cious, *a.* வேசி சம்., கிருத்திரிம சோபையினால் மோகிக்கச்செய்கிற, மருட்டுகிற, வெளிப்பகட்டான, pert. to prostitutes or harlots, alluring by false show. [L., fr. *meretrix*, a prostitute, fr. *mereo*, to earn.]

Merge, *vt.* அமிழ்த்து, immerse, sink; அமுக்கு, உள்ளடக்கு, absorb, bury.—*vi.* அமிழ், be sunk or swallowed up; உள்ளடங்கு, be absorbed or lost. [L. *mergo*, to dip, to dive.]

Me-rid′ian, *n.* யாமியோத்தரரேகை; மத்தியானம், உச்சம்; உத்கிருஷ்டதசை.—*a.* மத்தியானத்து; உத்கிருஷ்டமான. [F. & L., fr. L. *medius*, middle + *dies*, day.]

Me-rid′ional, *a.* மத்தியான சம்., pert. to the meridian.

Me-ri′no, *n.* ஒரு ஜாதி ஸ்பேயின் தேசத்து ஆடு; இந்த ஆட்டின் மயிரால் செய்த துணி.

Mer′it, *n.* குணம், யோக்கியதை, பாத்திரம், தகுதி, தகைமை, desert; சிரேஷ்டம், worth, excellence; புண்ணியம், சுகிருதம், spiritual or *karmic* reward.—*vt.* பாத்திரனாகு, அர்ஹனாகு, deserve, earn, incur [F.; L. *meritum*, what is deserved, fr. *mereo*, to earn.]

Merited, *a.* தகுந்த, பாத்திரமான, அர்ஹமான, deserved.

Mer′itedly, *adv.* தகைமையாய், அர்ஹமாய், deservedly.

Mer'i-to'rious,*a.*யோக்கியதையுள்ள, புகழ்ச்சிக்குத் தகுந்த, பிரசஸ்தமான, possessing merit, deserving reward or praise, praiseworthy ;புண்ணியமுள்ள, சுகிருத, having spiritual merit, attended with *karmic* reward. [L.; fr. Merit.] [ஜாளி.

Mer'lin,*n.*ஒருவிதபட்சை அ-து இரா

Mer'maid, *n.* கவிகல்பிதமான நாக கன்னிகை அ-து கடல்மாது.

Mer'man, *n.* நாகப்புருஷன்.

Mer'rily, *adv.* சந்தோஷமாய், உல்லாசமாய்,மகிழ்ச்சியாய்,களிப்பாய், gaily, jovially, with mirth,with gayety and laughter.

Mer'riment,*n.*வேடிக்கை,உல்லாசம், சந்தோஷம், கொண்டாட்டம், மகிழ்ச்சி, களிப்பு, gayety, mirth, frolic, hilarity. [fr. Merry.]

Mer'ry,*a.* உல்லாசமுள்ள, சந்தோஷமாயிருக்கிற, ஆனந்தமாயிருக்கிற, களிப்புள்ள, மகிழ்ச்சியான, gay, jovial, sportive, mirthful, hilarious, blithe, vivacious, jocund, convivial; விநோதகரமான,ஹாஸியகரமான, நகைக்கப்பண்ணுகிற, causing mirth, gladness, or laughter. Make m.=உல்லாசமாயிரு, வேடிக்கைசெய். [AS.]

Mer'ry-an'drew,*n.*கோமாளி,ஹாஸியக்காரன், buffoon. [ராட்டினம்.

Mer'ry-go'-round', *n.* வேடிக்கை

Mer'ry-make', *vi.* வேடிக்கைசெய், உல்லாசமாயிரு, make merry, be jolly.

Mer'ry-mak'ing, *n.* பண்டிகை, வேடிக்கை, merriment,jollity, conviviality.—*a.* உல்லாஸமுண்டாக்குகிற, jolly, convivial.

Mer'sion, *n.* முழுகல், அமிழ்தல்.

Mes'dames', *n. pl.* of Madame & Madam.

Me-seems', *v. impers.* எனக்குத் தோன்றுகிறது,methinks,It seems to me. [தில்கிறுத்தும் தோல்புரை.

Mes'entery, *n.* குடலை அதின் ஸ்தலத்

Mesh,*n.* வலைக்கண், வலைரந்திரம், the opening bet. the threads of a net; வலை,net, network.—*vt.* வலையில்சிக்கச்செய், வலையில் பிடித்துக்கொள், catch in a m.. [AS. 'a noose'.]

Mesh'y,*a.*வலைபோல் செய்யப்பட்ட, formed like network, netted, reticulated.

Mes-mer'ic, } *a.*வசியம் சம்., வசியமான, மாந்திரிகமான, pert. to or induced by mesmerism.
Mes-mer'ical, }

Mes'merism, *n.* வசீகரணம், வசியம், ஆக்ருஷணம், மந்திரவித்தை, the art of influencing the will of another through animal magnetism. [from Mesmer, a German physician who propounded the doctrine.]

Mes'merist, *n.* வசியவித்தைதெரிந்தவன், மாந்திரிகன், one who practices mesmerism.

Mes'merize, *vt.* வசிய மயக்கமுண்டாக்கு, மந்திரி, bring into a state of mesmeric sleep, hypnotize.

Mess, *n.*[OF.] போஜனம்,ஆஹாரம், food ,கலந்து போஜனம் செய்கிறவர்கள் ; தாறுமாறு, கலகலப்பு,

பிசிரம், a disorderly mixture; கந்தரகூளம், சிக்கு, confused state, muddle.—vi. போஜனஞ்செய், பந்தியில்சாப்பிடு, take meals in company with others.

Mes′sage, n. வர்த்தமானம்,சொல்லியனுப்பிய சமாசாரம், தூது, communication. [F., fr. L. *mitto*, *missum*, to send.]

Mes′senger, n. வர்த்தமானங்கொண்டுபோகிறவன், தூதன், இராயபாரி, one who bears a message, courier. [OE. & F. *messager*: the *n* has intruded as in 'passenger'.] [ed'.]

Mes-si′ah, n. கிறிஸ்து.[He. 'anoint-

Mes′sieurs, n. *pl.* பெரியமனுஷர்: abbreviated to Messrs. which is used as the *pl.* of Mr.

Mess′mate′, n. கூட அ-து சஹபந்தியில் போஜனஞ்செய்கிறவன், an associate at meals.

Mes′suage, n. நிவாசஸ்தானம், குடியிருக்கிறவீடு.

Met, *pt.* & *pp.* of Meet.

Met′a-car′pal, a. பாணிக சம்..

Met′a-car′pus, n. பாணிகம்.

Me-tach′ronism, n. ஒருகாரியம் நிஜமாய் நடந்தகாலத்திற்குப் பிற்காலத்தில் நடந்ததாகச் சொல்லல், காலக்கணக்குப் பிசகு, the anachronism of placing an event after its real time. [measuring.

Met′age, n. அளவுகூலி, charge for

Met′al, n. உலோஹம்; தைரியம், courage, spirit, mettle; பருக்கைக்கல், broken stones used in macadamizing roads.—vt. பருக்கைக்கற்களால் மூடு, cover with broken stones, macadamize; உலோஹம் அ-து தகடால்மூடு, cover with m.. [F. & L.]

Me-tal′lic, a. உலோஹ சம்.; உலோஹத்தால்செய்த; pert. to or consisting of metal. [fr. Metal.]

Met′alling, n. வழிமு. ஸ்தலங்களை பருக்கைக்கற்கள் போட்டுக்கெட்டிசெய்தல்.

Met′al-lur′gist, n. லோஹசோதனை தெரிந்தவன், one skilled in metallurgy, one who works in metals.

Met′al-lur′gy, n. லோஹசோதனை வேலை அ-து வித்தை, the art of working metals, smelting, refining &c. [Gr. *metallon*, a metal + *ergon*, work.]

Met′a-mor′phic, a. ரூபம்மாறுகிற, subject to change, changeable.

Met′a-mor′phose, n. மாறுரூபம், ரூபபரிணாமம், உருத்திரிபு, வேற்றுரு, change of form, transformation.—vt. ரூபமாற்று, வேற்றுருவாக்கு, ரூபாந்தரப்படுத்து, change into a different form, transform. [Gr. *meta*, beyond, over + *morphe*, form, shape.]

Met′a-mor′phosis, n. = Metamorphose.

Met′aphor, n. ரூபகாலங்காரம், உருவக வலங்காரம், உருவகம், a figure (of speech) in wh. a comparison is implied, compressed simile. [Gr. *meta*, over + *phero*, to carry.]

Met′a-phor′ic, } a. உபமானமாய்ச்சொல்லப்
Met′a-phor′ical, }

பட்ட, உருவகவலங்காரத்துக் கடுத்த, pert. to or comprising a metaphor, figurative, tropical, not literal. [fr. Metaphor.]

Met'aphrase, n. பிரதிபத பாஷாந் தரம் அ-து தர்ஜுமா.

Met'a-phys'ic, Met'a-phys'ical, } a. தத்துவவிசாரசம்.; அப்பிரத்தியக்ஷமான.

Met'aphy-si'cian, n. தத்துவசாஸ்திரி, மானதசாஸ்திரி, வேதாந்த விசாரகன்.

Met'a-phys'ics, n. *sing*. தத்துவம், வேதாந்தம், மானதசாஸ்திரம், ontology, philosophy. [Gr. *meta*, beyond, after + *physica*, physics, fr. *physis*, nature.]

Me-tas'tasis, n. ரோகம் தேகத்தின் ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கத்திற்கு மாறுதல்.

Met'a-tar'sus, n. ப்ரபதாஸ்தி.

Me-tath'esis, n. அக்ஷர வியத்தியயம், எழுத்துமாறுகை. [Gr. *meta*, over + *tithemi*, to place.]

Me'ta'yer, n. விளைச்சலில் பாதிப் பாகத்திற்கு விவசாயம் செய்யும் குைத்து அ-து கிருஷிகன்.

Mete, vt. அள, அளவிடு, measure.—n. அளவு.

Me-temp'sy-cho'sis, n. புனர்ஜனனம், தேஹாந்தரம் எடுத்தல், transmigration of the soul, reincarnation.

Me'teor, n. உற்கை, ஆகாயத்தில் விழுகிறுப்போல் காணப்படும் நக்ஷத்திரம்போன்ற ஜோதி, விண்வீழ் கொள்ளி, shooting-star. The fall of a m.=உல்காபாதம். [Gr. *meta*, beyond + *aeiro*, to raise.]

Me'te-or'o-log'ic, Me'te-or'o-log'ical, } a.fr. Meteorology.

Me'teor-ol'ogy, n. ஆகாசத்தில் காணப்படும் பதார்த்த விஷயங் களை விசாரிக்கும் சாஸ்திரம், the science wh. treats of atmospheric phenomena. [Gr. *meteoros* + *logos*, discourse.]

Me'ter, n. அளப்போன் அ-து அளக்கும் யந்திரம், மாத்திரி, measurer; கணம், சந்தம, சந்தசு, யாப்பு, rhythmical arrangement of words into verses, rhythm; விருத்தம், பதம், செய்யுள், verse, measure; ஓரளவு, 39·37 inches.

Me-theg'lin, n. தேனினுற் செய்த பானம்.

Me-thinks', v. *impers*. எனக்குத் தோன்றுகிறது அ-து காணப்படுகிறது, meseems, It seems to me, I think.

Meth'od, n. கிரமம், பத்ததி, ஏற்பாடு, system, rule, regularity, order, orderly procedure or process; விதம், ரீதி, மார்க்கம், mode, manner, way, course, procedure. [F. & L.]

Me-thod'ic, Me-thod'ical, } a. கிரமமாய் ஏற்படுத்தப்பட்ட; ஒருபத்ததியை அநுசரிக்கிற; systematic, orderly, regular, arranged or disposed systematically. [fr. Method.]

Meth'odism, n. கிறிஸ்துமதத்தில் ஒரு வகுப்பு.

Meth'odist, n. கிறிஸ்துமதத்தில் ஒரு [வகுப்பான்.

Meth'odize, vt. ஒரு கிரமமாய் ஏற்படுத்து, ஒழுங்குபடுத்து, ஒருபத்திக்குக்கொண்டுவா, reduce to

method, set in proper or convenient order, regulate, systematize.

Me-thought′, *pt.* of Methinks. எனக்குத் தோன்றினது அ-து காணப்பட்டது, It seemed to me.

Me-ton′ymy, *n.* அன்னியாபதேசம், இலக்ஷணை, a figure in wh. one word is put for another that is suggested by it. [Gr. *meta*, beyond + *onoma*, a name.]

Me′tre=Meter.

Met′ric, Met′rical, } *a.* அளவு சம்., relating to measurement; செய்யுள் அ-து யாப்பு சம்., செய்யுள் நடைக்குரிய, pert. to metre; செய்யுள் பாங்கான, செய்யுள் ரூபமான, சுலோகரூபமான, consisting of verses. [fr. Metre.]

Me-trop′olis, *n.* இராஜதானி, பிரதான நகரம், the chief city, capital. [Gr. *metros*, a mother + *polis*, a city.]

Met′ro-pol′itan, *a.* இராஜதானிசம்.; இராஜதானியில் வசிக்கிற; belonging to the metropolis. [fr. Metropolis.]

Met′tle, *n.* தேஜசு, வீரியம், பௌருஷம், உற்சாகம், செருக்கு, தைரியம், spirit, courage, constitutional ardor, fire; குணம், temper, quality, disposition; சத்துவம், சாரம், ரஸம், stuff, material, substance. [altered spelling of 'Metal'.]

Met′tled, *a.* வீரமுள்ள, சுறுக்கான, உத்திரேகமுள்ள, உற்சாகமான, high-spirited, ardent, fiery.

Met′tlesome=Mettled.

Mew, *n.* பூனைகத்துகை, the cry of a cat; கூடு, பஞ்சரம், cage; கொல்லை, (வீட்டின்) புறக்கடை, inclosure; கொட்டாய்; ஒருவிதக் கடற்பக்ஷி.—*vt.* கூட்டில் அடை; கொல்லையிலடை; shut up, inclose, confine.—*vi.* (பூனை) கத்து.

Mewl, *vi.* நோவினால் அழு அ-து புலம்பு, முக்கு, பிணங்கு.

Mi′asm, Mi-as′ma, } *n.* (*pl.* Miasmata.) ரோககரமான விஷவாயு.

Mi′as-mat′ic, *a.* விஷவாயு சம்..

Mi-as′matist, *n.* விஷவாயு குணங்களை விசாரிக்கிறவன்.

Mi′ca, *n.* அப்பிரகம், அப்பிரம். [L. *mico*, to glitter.]

Mi-ca′ceous, *a.* அப்பிரகம் சம்., அப்பிரகம்போல் மெல்லிய தகடுப்புரை

Mice, *n. pl.* of Mouse. [களாஇற.

Mich′ælmas, *n.* செப்டெம்பர்மீ 29-ம் தேதி வரும் ரோமன்கதோலிக்கர் பண்டிகை.

Mic′kle, *a.* அதிகமான, மிக்க, பெரிய, [much, great.

Mi′crobe=Germ.

Mi′crocosm, *n.* சூக்ஷ்மபிரபஞ்சம், சிற்றண்டம், a little world, a miniature universe: opp. to Macrocosm. [Gr. *mikros*, little + *kosmos*, world.]

Mi-crom′eter, *n.* அதிசூக்ஷ்மமான வைகளை யளக்கும் சாதனம், an instrument for measuring minute distances.

Mi′crophone, *n.* சிறு சத்தத்தை பெரிதாய்க் கேட்கப்படும்படி செய்யும் சாதனம், an (electric) instrument for intensifying feeble sounds.

Mi′croscope, *n.* கண்ணுக்குத் தெரியாத அதி சூக்ஷ்மவஸ்துக்களை பெரியவைகளாய்க் காட்டும் யந்திரம், சூக்ஷ்மதரிசனி, an optical instrument wh. magnifies minute objects. [Gr. *mikros*, little + *skopeo*, to look at.]

Mi′cro-scop′ic, Mi cro-scop′ical, *a.* அதிசூக்ஷ்மமான, வெறுங்கண்ணுக்குத் தெரியாத, very small or minute, visible only by the aid of a microscope, invisible to the naked eye. [fr. Microscope.]

Mi-cros′copy, *n.* கண்ணுக்குத்தெரியாத சூக்ஷ்மவஸ்துக்களை யந்திரத்தினால் சோதித்தல். [middle.

Mid, *a.* நடு,மத்தியான,மத்தியிலுள்ள,

Mid′day′, *n.* மத்தியானம், உச்சி, நடுப்பகல், noon.—*a.* மத்தியானத்து, pert. to noon.

Mid′dle, *a.* நடு, மத்தியிலிருக்கிற, மத்திய, மையமான, equally distant from the ends,central,mean, intermediate, medial.—*n.* நடு, மத்தி, மையம், மத்தியபாகம், m. part or point, central part, centre. [AS.]

Mid′dle-aged′ *a.* மத்தியவயசுள்ள, நடுவயதுள்ள, being bet. youth and old age.

Mid′dleman, *n.* மத்தியஸ்தன், நடுவிலிருந்துவிவகாரம் நடத்துகிறவன், broker, go-between, intermediary, inter-agent.

Mid′dle-most′, *a.* நடு,நடுவிலிருக்கிற, சரியாய்மத்தியிலிருக்கிற,midmost.

Mid′dling, *a.* சாமானியமான, சாதாரணமான, நடுத்தரமான, of middle rank or quality, medium, mediocre, ordinary, moderate.

Midge, *n.* சிறுகொசு, இருட்டீ, a kind of fly.

Mid′-heav′en, *n.* ஆகாசமையம், விண்மத்தி, அந்தரிக்ஷமத்தி, the middle part of the sky.

Mid′land, *a.* சமுத்திரதீரத்திற்குத் தூரமாயிருக்கிற,தேசத்தின் மத்தியிலுள்ள, உள்நாட்டுக்குரிய, நாட்டகத்து, interior, distant from the sea coast.

Mid′-life′, *n.* நடுவயது.

Mid′most′, *a.* சரி நடுவிலிருக்கிற, மத்தியிலிருக்கிற, middle, middlemost.

Mid′night′, *n.* நடுராத்திரி,பாதிராத்திரி, மத்தியராத்திரி, நடுச்சாமராத்திரி, the middle of the night. —*a.* நடு ராத்திரியிலுள்ள, மிகவும் இருட்டான, of m., very dark.

Mid′riff=Diaphragm.

Mid′ship′man, *n.* கப்பலின் ஒரு உத்தியோகஸ்தன்.

Midst, *n.* நடு, மத்தி, மையம், the middle, the central part or place.—*adv.* நடுவில், மத்தியில்.—*prep.* மத்தியில், amidst.

Mid′sum′mer, *n.* நடுக்கோடை, நடுவெயிற்காலம்,the middle of summer.

Mid′way′, *n.* நடுவழி, பாதிதூரம், பாதிவழி, the middle of the way or distance; மத்தியவழி, மையம், நடுமார்க்கம், a middle way or course.—*a.* நடுவழியிலுள்ள.—*adv.* நடு வழியில், இடைவழியில்,

in the middle of the way or distance.

Mid′wife′, *n.* மருத்துவிச்சி, மருத்துவப்பெண், a woman who assists at child-birth or practices the obstetric art, a female obstetrician or accoucheur. [lit. 'helping woman,' AS. *mid*, together with + *wif*, woman.]

Mid′wife′ry, *n.* மருத்துவம், பிரசவீகம், obstetrics, assistance at child-birth or parturition.

Mid′win′ter, *n.* நடுகுளிர்காலம், சீதளகாலத்தின் மத்தியநாட்கள், சிசிரமத்தி, the middle of winter.

Mid-wood, *n.* நடுக்காடு, அரணியமத்தி.

Mien, *n.* ஆகாரம், தோற்றம், நடை, சாயல், காணப்படுமீதி, appearance, air, carriage, bearing, aspect, manner, demeanor, look. [F.]

Might, *n.* சக்தி, திராணி, வல்லமை, பலம், சாமர்த்தியம், strength, force, power, ability, capacity, energy ; பலவந்தம், ஜோராவரி, violence, force. With m. and main=முழுபலத்துடன், பூர்ணசக்தியோடு.—*pt.* of May, *aux. v.* [AS.]

Out, *adv.* வெளியே, புறம்பே, not in or within, without, on or towards the outside; சப்தமாய், பஹிரங்கமாய், loudly, openly; கடைசிவரைக்கும், பூர்த்தியாய், completely, to the end. O. of=உள்ளேயிருந்து, நின்று. The secret is o. =இரகசியம் வெளிப்பட்டது. O. and o.=பூர்த்தியாய், மறைக்காமல். The provisions are o.=போஜனசாமக்கிரி ஆய்போய்விட்டது.—*vt.* வெளியே அனுப்பிவிடு, expel.—*n.* வெளியேயுள்ளது, that wh. is o.—*interj.* போ, begone, go out, away, off.—*a.* தூரமான, வெளியேயுள்ள, remote, foreign. [AS.]

Out-act′, *vt.* வரம்புகடந்து செய், மிதம் மீறிச்செய்.

Out-and-out, *a.* பூர்த்தியான, மறை

யாத, complete, open.—*adv.* பூர்த்தியாய், மறைவாமல், முழு தும், completely, openly, thoroughly, without reservation.

Out-ar′gue, *vt.* மிஞ்சிவாதி, surpass or conquer in argument.

Out-bal′ance, *vt.* நிறையில் மிஞ்சு, out-weigh.

Out-bid′, *vt.* போட்டியாய் விலையேற்று, அதிக விலைக்குகேள், exceed in bidding, bid more than (*i.*), offer a higher price than (*i.*).

Out-bound′=Outward-bound.

Out-brave′, *vt.* தைரியத்தில் மிஞ்சு, excel in bravery; திரஸ்கரி, அலக்ஷியம்பண்ணு, defy.

Out′-break′, *n.* திடீலென்று உடைதல், வெடிப்பு, பிளப்பு, பந்தமறுப்பு, திடீலென்று சம்பவித்தல், a sudden and violent breaking forth, bursting forth, eruption.

Out-breast′, *vt.* பாடுஞ்சக்தியில் மிஞ்சு, surpass in singing, outsing; சுவாஸ சக்தியில் மிஞ்சு, surpass in strength of chest or voice.

Out′-build′ing, *n.* ஒரு பெரியவீட்டோடு சேர்ந்து அதின்கிட்டவிருக்கும் சிறுவீடு, out-house.

Out′burst′, *n.* திடீலென்று உடைதல், உடைந்து வெளிப்படல், வெடித்தல், வெடிப்பு, பிளப்பு, பந்தமறுப்பு, bursting forth, a violent issue.

Out′cast′, *n.* பிரஷ்டன், சண்டாளன், தள்ளப்பட்டவன், பஹிஷ்காரம்செய்யப்பட்டவன், one who is cast out or expelled, one driven from home, society, or country.—*a.* தள்ளப்பட்ட, வெளியே தள்ளுண்ட, cast out, degraded.

Out′come′, *n.* பலன், பயன், பலிதார்த்தம், result, consequence, upshot, issue. [‘that wh. comes out of something’.]

Out′cri′er, *n.* விளம்பரப்படுத்துவோன், கூறுகிறவன், one who cries out or proclaims, herald.

Out′cry′, *n.* கூக்குரல், இரைச்சல், a loud cry, clamor.

Out-do′, *vt.* மிஞ்சு, அதிகப்படு, மீறு, excel, surpass.

Out′-door′, *a.* வீட்டிற்கு வெளியான, being or done in the open air.

Out′-doors′, *adv.* வீட்டிற்குவெளியே, வெளியே, out of the house, in the open air, abroad.

Out′er, *a.* வெளியான, புறம்பான, external.

Out′er-most′, *a.* மிகவும் வெளியேயுள்ள, farthest outward.

Out-face′, *vt.* எதிர், பார்வையினால் பயப்படுத்து, face, brave, resist or bear down by bold looks or effrontery.

Out′fit, *n.* முஸ்திப்பு, முஸ்தீது, சாமான், equipment, requisites or necessaries (for a journey or the like).

Out′flow′, *n.* வடிதல், ஒழுகுதல், ஒழுக்கு, a flowing out, efflux.

Out-fly, *vt.* மிஞ்சிப்பற, பறப்பதில் மிஞ்சு, surpass in flying.

Out-fool′, *vt.* புத்தியீனத்தில் மிஞ்சு, exceed in folly.

Out-give′, *vt.* கொடையில் மிஞ்சு, surpass in giving.

Out-go′, *vt.* மிஞ்சிப்போ, go beyond; மோசஞ்செய், ஏய்.—*vi.* முடிவாகு, அந்தமாகு, come to an end.—Out′go′, *n.* செலவு, செலவழிவு, expenditure; opp. to Income.

Out′go′ing, *n.* வெளிப்படல், புறப்பாடு, going out; செலவு, செலவழிவு, expenditure.—*a.* போகிற, வெளியே போகிற, going out, departing.

Out-grow′, *vt.* அதிகமாய் வளர், வளர்ச்சியில் அதிகரி, surpass in growth, grow too large or old for.

Out′growth′, *n.* அதிகமாய்வளர்த்தல்; அதிகமாய்வளர்ந்தது, excrescence, off-shoot.

Out-her′od, *vt.* கொடுமையில் அதிகப்படு, surpass in wickedness.

Out′-house′, *n.* ஒருபெரியவீட்டோடு சேர்ந்து பிரத்தியேகமா யிருக்கிற சிறுவீடு, சிற்றில், உபக்கிரகம், out-building.

Out-knave′, *vt.* கள்ளத்தனத்தில் மிஞ்சு, surpass in knavery.

Out-land′ish, *a.* அன்னியதேசத்து, foreign, not native; விந்தையான, விபரீதமான, விகாரமான, strange, uncouth, barbarous, clownish.

Out-last′, *vt.* அதிகநாட்படவிரு, last longer than (*i.*), exceed in duration, outlive.

Out′law′, *n.* துரைத்தனத்தார் நியாயரக்ஷணத்தில் நின்று நீக்கப்பட்டவன், பிரஷ்டன், a person deprived of the protection of law.—*vt.* துரைத்தனத்தார் நியாயரக்ஷணையி லிருந்து வெளிப்படுத்து, deprive of the protection of law, proscribe.

Out′law′ry, *n.* துரைத்தனத்தார் நியாயரக்ஷணையிலிருந்து வெளிப்படுத்தல் அ-து பஹிஷ்காரம், outlawing, the putting a man out of the protection of law.

Out′lay′, *n.* செலவு, செலவழிவு, laying out, expending; செலவழிந்தது, what is laid out, expenditure.—Out-lay′, *vt.* பரப்பு, விரி, lay or spread out, display; செலவழி.

Out-leap′, *vt.* மிஞ்சித்தாண்டு, surpass in leaping.

Out′let′, *n.* வெளியேபோகும்வழி, போகும் மார்க்கம், துவாரம், an opening by wh. any thing is let out or escapes, a passage out, vent, means of egress, place of exit.—Out-let′, *vt.* வெளியே விட்டுவிடு, let out.

Out′line′, *n.* ஆகிருதி, ஆகாரம், ரூபம், ரூபக்குறிப்பு, எல்லைக்குறிப்பு, the exterior line or edge, contour, sketch; சுருக்கமான விவரிப்பு, சம்க்ஷேபமான வருணனை, a brief account, sketch.—*vt.* ரூபக்குறிப்பெழுது, draw the o. of; சுருக்கமாய் அ-து சம்க்ஷேபமாய் வர்ணி, sketch.

Out-live′, *vt.* ஒருவன் இறந்தபிறகு ஜீவித்திரு, survive, continue to exist after.

Out′look′, *n.* ஜாக்கிரதையாய் பார்த்துக்கொள்ளல், looking out, watch;

காணப்படும் பிரதேசம், திருஷ்டி கோசரபிரதேசம், the expanse in view, scope of vision, view; வரவு விரும்பி யிருத்தல், உத்தராபேக்ஷை, prospect.—Out-look′, *vt.* பார்வையினால் பயப்படுத்து அ-து மிரட்டு, outstare.

Out′-ly′ing, *a.* வெளியேயிருக்கிற, outside the boundary.

Out-march′, *vt.* முன்னுக்குமிஞ்சிப் போ, பிரயாணத்தில் முந்திப்போ, march so as to leave behind.

Out-meas′ure, *vt.* பரிமாணத்தில்மிஞ்சு, exceed in measure or extent.

Out′most′, *a.* மிகவும் வெளியேயுள்ள, farthest from the interior.

Out′ness, *n.* பாஹியம், வெளியேயிருக்குந் தன்மை, externality.

Out-num′ber, *vt.* எண்ணிக்கையில் அதிகப்படு, எண்ணில்மிஞ்சு, exceed in number.

Out′-of-door′, *a.* வீட்டிற்குவெளியான, வெளியே செய்கிற, out-door.

Out′-of-doors′, *adv.* வெளியே, வீட்டிற்கு வெளியே, out of the house, in the open air.

Out′-of-the-way′, *a.* சாதாரண மல்லாத, வழக்கந்தப்பின, விபரீதமான, unusual, eccentric, singular, odd.

Out′-pa′tient, *n.* வைத்தியசாலையிலிருக்காமல் மருந்துமாத்திரம் வாங்கிக்கொண்டுபோகும் ரோகி, a non-resident patient of a hospital.

Out′port′, *n.* பெரியவர்த்தக ஸ்தலத்திற்கு சற்றெட்டிய துறை, நகர்ப்புறத்துறை, a port at some distance from the chief town or seat of trade.

Out′post′, *n.* முக்கியசேனைக்கு சற்று தூரத்தில் சில சிப்பாய்களை வைத்திருக்கும் ஸ்தலம், a post or station held by a detachment of troops, at a distance from the main body or camp.

Out-pour′, *vt.* சொரி, வார், ஊற்று, pour out.

Out′rage, *vt.* உபத்திரவப்படுத்து, தௌர்ஜன்யஞ்செய், பங்கப்படுத்து, அவமானப்படுத்து, treat with violence and wrong, do violence to, maltreat.—*n.* உபத்திரவம், பலாத்காரம், துர்மார்க்கம், தௌர்ஜன்யம், அவமானம், அநியாயம், மூர்க்கம், மானபங்கம், shocking violence, gross violation of morality or decency, insult. [F., fr. L. *ultra*, beyond.]

Out-ra′geous, *a.* கெட்ட, துஷ்ட, தௌர்ஜன்யமான, மூர்க்கமான, குரூரமான, வெட்கங்கெட்ட, violent, atrocious, flagrant, shameless. [fr. Outrage.]

Out-reach′, *vt.* மிஞ்சிப்போ, எல்லைக்கப்புறமெட்டு, reach beyond.

Out-ride′, *vt.* குதிரைசவாரி செய்வதில் மிஞ்சு, முந்திச்செல், ride faster than (*i.*).

Out′-rid′er, *n.* வண்டியின் பிறகே குதிரைமீது செல்லும் வேலைக்காரன், a servant on horse-back following a carriage. [தூலம்.

Out′rig′ger, *n.* கப்பற் பாய்கட்டும்

Out′right′, *a.* பரிஷ்காரமான, ஸ்பஷ்டமான, தடையில்லாத, positive, downright, free from reserve or

restraint, unqualified, undisguised.—*adv.* பரிஷ்காரமாய், முழுவதும், altogether, entirely, utterly; பகிரங்கமாய், வெளியாய், openly; தட்சணமே, உடனே, immediately, on the spot.

Out-ri′val, *vt.* மிஞ்சு, defeat.

Out′-room′, *n.* வெளியறை, an outer room, an out-lying apartment.

Out-root′, *vt.* வேரோடே பிடுங்கு, நிர்மூலம் செய், root out.

Out-run′, *vt.* ஓடுவதில் மிஞ்சு, ஓட்டத்தில் அதிகப்படு, ஓடி-முந்து, ஓட்டத்தில்வெல்லு, run beyond, leave behind, outstrip.

Out-sell′, *vt.* அதிகமாய்வில், விற்பனையில் மிஞ்சு, surpass in selling (goods).

Out′set′, *n.* தொடக்கம், ஆரம்பம், துவக்கம், முதல், a setting out, beginning, start, opening.

Out-shine′, *vt.* அதிகமாய்ப் பிரகாசி, பிரகாசத்தில் மிஞ்சு, excel in splendor or brightness.

Out′side′, *n.* வெளிப்புறம், புறம்பு, பகிர்பாகம், external part, exterior, outer side; அவதி, அதிகம், நுனி, உச்சி, the utmost (limit), the extreme, the fullest or highest degree.—*a.* வெளியான, வெளிப்புறத்துள்ள, பாஹியமான, exterior, external.—*adv.* & *prep.* வெளியே, புறத்தில், without, out of, externally, on the exterior (of).

Out′sid′er, *n.* வெளிப்புறத்தான், இதரன், அந்நியன், one not belonging to, or one unconnected with, a party &c., stranger.

Out′skirt′, *n.* ஊரின் வெளிப்பிரதேசம், ஊரின் அ-து தேசத்தின் கடையெல்லை, புறக்கரை, ஓரம், border region.

Out′-speak′, *vt.* இன்னொருவனைப் பார்க்கிலும் அதிகமாய்ப்பேசு, பேச்சில் மிஞ்சு, exceed in speaking.

Out-spo′ken, *a.* நிஷ்கபடமாய்ப் பேசுகிற, plain-spoken, frank, speaking or spoken out freely and frankly, bold or free of speech, candid.

Out-spread′, *vt.* விரி, பரப்பு, வியாபிக்கச்செய், spread out. extend.—*pa.* விரித்த, பரப்பின, நீட்டின, spread out, extended.

Out-stand′, *vi.* முன்னுக்கு வந்திரு, stand out or project from a surface; செலுத்தப்படாமலிரு, காலமதிக்கிரமித்துநில், நீடித்துநில், stand over, remain unpaid, unsettled; or the like, be overdue.

Out-stand′ing, *a.* செலுத்தப்படாத, வசூலாகாத, இன்னும் பாக்கியிருக்கிற, remaining uncollected, overdue.

Out-stare′, *vt.* பார்வையினால் பயமுறுத்து, stare out of countenance, face down, outface.

Out-stay′, *vt.* மிஞ்சிநில், overstay.

Out′-street′, *n.* பட்டணமத்தியத்துக்குத்தூரமாயிருக்கும்வீதி, a street remote from the centre of a town.

Out-stretch′, *vt.* நீட்டு, பரப்பு, விரி, stretch or spread out, extend, expand.

Out-strip′, *vt.* கட, முந்திப்போ,

மிஞ்சு, advance beyond, leave behind, exceed.

Out-talk′, *vt.* இன்னொருவனை வாயெடுக்கவிடாமற்பேசு, overpower by talking, exceed in talking, talk down.

Out-tongue′, *vt.* வார்த்தைகளினலே அடக்கு, பேச்சில்வெல்லு, talk louder than (*i.*).

Out-vie′, *vt.* மிஞ்சு, மீறு, கெலி, வெல்லு, மேற்கொள்ளு, outdo, excel, surpass.

Out-vote′, *vt.* அதிகபேர் ஒரு பக்ஷமாய்ச்சொல்லி ஜெயி, exceed in the number of votes, defeat by votes.

Out-walk′, *vt.* நடையில் முந்து, முந்திவிட, excel or leave behind in walking [the exterior wall.

Out′wall′, *n.* புறமதில், வெளிச்சுவர்,

Out′ward, *a.* வெளியான, புறம்பான, பாஹியமான, external, exterior, outer; வெளியேபோகிற, tending to the outside.—*adv.* வெளியே, புறம்பே, out, toward the exterior, to the outside, away.

Outward-bound, *a.* வெளிதேசத்திற்குச் செல்லுகிற (கப்பல்), bound in an outward direction or to foreign parts.

Out′wardly, Out′wards, } *adv.* வெளியே, புறம்பே, புறம்பாய், வெளியாய்; பார்வைக்கு; outward.

Out-wear′, *vt.* அதிக நாட்பட இரு, outlast.

Out-weigh′, *vt.* பாரத்தில் அதிகமாயிரு, அதிகமாய்க் கனம் மு-து காட்டு, exceed in weight, value, importance, influence &c., outbalance, preponderate.

Out-wind′ (ஔட்வைண்ட்), *vt.* விரி, திற, unwind.

Out-wing′, *vt.* முந்திப்பற, பறந்து முந்து, outstrip in flying.

Out-wit′, *vt.* அதிக தந்திரத்தினல் மோசஞ்செய் அ-து வெல்லு, surpass in cunning, defeat by greater cunning, over-reach, cheat.

Out′work′, *n.* கோட்டையின்புற அரண், part of a fortification distant from the main fortress or citadel.—Out-work′, *vt.* மிஞ்சி வேலைசெய், exceed in work, work better than (*i.*), outdo.

O′va, *n. pl.* of Ovum.

O′val, *a.* முட்டைவடிவான, அண்டாகாரமான, நீண்ட உண்டையான, elliptical, egg-shaped.—*n.* அண்டாகிருதி, முட்டைவடிவு, an egg-shaped figure (or body), ellipse. [F., fr. L. *ovum*, an egg.]

O′vary, *n.* ஜந்துக்களின் வயிற்றில் முட்டை யுத்பத்தியாகும் ஸ்தானம், அண்டாசயம், அண்டகோசம், முட்டைப்பை, சினைப்பை, the female reproductive organ in wh. ova are produced; பூமத்தியில் விதையிருக்கும் ஸ்தலம், the part of the pistil of a flower wh. contains the seed, a case inclosing ovules or young seeds.

O′vate, *a.* முட்டைவடிவமான, அண்டாகாரமான, oval.

O-va′tion, *n.* ஜயோற்சவம், a

triumphal reception. [L., fr. *ovare*, to exult.]

Ov'en, *n.* அடுப்பு, ரொட்டிசுடும் அடுப்பு, சூளை, an arched structure or chamber for baking &c. [AS.]

O'ver, *prep.* மேலே, மீது, above; பார்க்கிலும், above, superior to; மேலிருந்து, across. All o. the country=தேசமுழுவதும்.—*adv.* ஒருபக்கத்திலிருந்து இன்னொரு பக்கத்திற்கு, அந்தபக்கத்துக்கு, from one side to the other, across; பூர்த்தியாய், முழுவதும், completely, from beginning to end, throughout. The work is o.=வேலைமுடிந்தது. O. again=திரும்பவும், மறுபடியும். O. and again=திரும்பி திரும்பி. O. and above=மேலே, அதிகமாய், அளவிற்கு மிஞ்சி. O. & o. = மறுபடிமறுபடி. Give. o.=ஆசை(யின்றி)விட்டுவிடு. Go o.=வாசி; பார்.—*a.* (used chiefly in comp. words) மேலிருக்கிற, மீதுள்ள, upper, outer, covering, as, an o.-coat; முடிந்த, ஆய்போன, ஆய்விட்ட, completed, finished; கடந்த, past. [AS.; allied to Sk. *upari*, above.]

O'ver-act', *vt.* & *vi.* மிதமிஞ்சிச்செய், அதிகஞ்செய், act or perform to excess or more than necessary.

O'ver-ac'tion, *n.* மிதமிஞ்சிச்செய்தல், அதிகஞ்செய்தல், excessive action.

O'ver-anx-i'ety, *n.* அதிகக்கவலை, வியாகுலம், அதியாவல், excessive anxiety.

O'ver-anx'ious, *a.* அதியாவலுள்ள, அதிகக் கவலையுள்ள, excessively anxious, anxious to a needless degree.

O'ver-awe', *vt.* பயமுறுத்து, பயப்படுத்து, restrain by awe, awe exceedingly.

O'ver-aw'ful, *a.* அதிபயபக்தியுள்ள.

O'ver-bal'ance, *vt.* பாரத்திலதிகமாய்த்தாழ்த்து, சாயும்படிச்செய், கனத்தில் மிஞ்சு, outweigh, overweigh, preponderate, exceed in weight (importance &c.).-O'ver-bal'—, *n.* அதிகபாரம், கனம், excess of weight or value.

O'ver-bear', *vt.* கீழேதள்ளு, bear down, carry down; கீழ்ப்படுத்து, அடக்கு, overcome.

O'ver-bear'ing, *pa.* கர்வமுள்ள, அகந்தையுள்ள, அஹங்காரமுள்ள, haughty, arrogant, domineering, insolent.

O'ver-board', *adv.* கப்பல்மீதிருந்து ஜலத்தில், from (on board of) a vessel into the water.

O'ver-boil', *vi.* அளியவேகு.—*vt.* அளியவேகவை. boil too much.

O'ver-bold', *a.* அதிகத்துணிவுள்ள, அதிகப்பிரசங்கியான, அஞ்சாத, excessively or presumptuously bold, impudent.

O'ver-bur'den, *vt.* சுமக்கமாளாத சுமையேற்று, அதிகபாரமேற்று, burden with too great weight, overload; அதிகவேலைகொடு, overtask. [officious.

O'ver-bus'y, *a.* அதிகப்பிரசங்கியான,

O'ver-care', *n.* அதிகக்கவலை

வியாகுலம், அதியாவல், excessive care, over-anxiety.

Over-car′ry, *vt.* அதிகதூரத்திற்குக் கொண்டுபோ, எல்லைத்தாண்டிக் கொண்டுபோ, அளவுக்கு மிஞ்சிச் செல், carry too far or beyond the proper point.

O′ver-cast′, *vt.* இருட்டாக்கு, மேகங்களினால்மறை, cloud, darken, cover with gloom, obscure with clouds.

O′ver-cau′tious, *a.* அமிதஜாக்கிரதையுள்ள, too cautious, prudent to excess.

O′ver-charge′, *vt.* அதிகவிலைபோடு, உயர்ந்தகிரயமிடு, charge excessively or beyond a fair rate or price; அதிகபாரமேற்று, அதிகம்போடு, overburden, fill too full. —O′-ver-charge′, *n.* அதிகவிலை, உயர்ந்தகிரயம், an excessive charge in an account; அதிகபாரம் போடுதல், an excessive load.

O′ver-cloud′, *vt.* மப்புபோடு, cover or overspread with clouds, becloud, cloud over.

O′ver-coat′, *n.* பெரிய மேல்சொக்காய் அ-து சட்டை, top-coat, great-coat.

O′ver-come′, *vt.* வெல்லு, மேற்கொள்ளு, ஜெயி, conquer, vanquish, defeat, get the better of, subdue, surmount, overpower.

O′ver-confidence, *n.* அதிகதைரியம், அதிகநிச்சயம், அதிகநம்பிக்கை, அதிகத்துணிவு, too great or excessive confidence, trust or reliance.

O′ver-con′fident, *a.* அதிக நம்பிக்கையுள்ள, அதிகதைரியமுள்ள, அதிகநிச்சயமுள்ள, excessively confident, confident beyond warrant of reason.

O′ver-date′, *vt.* நிஜமானதேதிக்குப் பின் தேதிபோடு, postdate.

O′ver-do′, *vt.* அதிகஞ்செய், மிதமிஞ்சிச்செய், do to excess, over-act, carry too far; மட்டுக்குமிஞ்சினதினால் கெடு, spoil by going too far.

O′ver-dose′, *n.* அதிகமாத்திரை, மருந்தின் அதிகப்பிரமாணம், too great a dose, excessive dose.—O′ver-dose′, *vt.* அதிமருந்து கொடு, dose to excess, give an o. to.

O′ver-draw′, *vt.* செல்லத்தக்க தொகைக்கு அதிகமாய்ப் பணம்வாங்கு, draw in excess of the proper amount.

O′ver-dress′, *vt.* அதிகமாய் சிருங்காரி, மிதமிஞ்சி உடுப்புப்போடு, dress too much.

O′ver-drive′, *vt.* மிதமிஞ்சி யோட்டு, துரத்து, drive too hard or beyond strength.

O′ver-due′, *a.* வாயிதாமிஞ்சின, காலம்மிஞ்சின, delayed beyond the proper time of payment, arrival &c.; காலம் மிஞ்சி பாக்கியாயிருக்கிற, தவணை அ-து கெடுகடந்து பாக்கியுள்ள, outstanding, remaining uncollected. [too eager.

O′ver-ea′ger, *a.* அதிகயாவலுள்ள,

O′ver-eat′, *vt.* & *vi.* அதிகமாயுண், eat to excess, surfeit (oneself).

O′ver-es′timate, *vt.* அதிகவிலைபோடு, அதிகமாய்மதி, value too highly,

overvalue.—*n.* அதிகமதிப்பு, a too high estimate.

O'ver-es'ti-ma'tion, *n.* அதிகமதிப்பு அ-து கண்ணியம், excessive valuation. [excite too much.

O'ver-ex-cite', *vt.* அதிகமாகஎழுப்பு,

O'ver-exert', *vt.* அதிகவேலை அ-து சிரமைகொடு, exert too much.

O'ver-exer'tion, *n.* அதிகமுயற்சி, அதிக உழைப்பு, too much exertion.

O'ver-feed', *vt.* & *vi.* அதிகமாய் ஊட்டு, தினி அ-து தின், feed to excess, surfeit. [to excess.

O'ver-fill', *vt.* அதிகமாய்நிரப்பு, fill

O'ver-flow', *vt.* மேலேபிரவஹி, மூழ்கச்செய், flow over, inundate, deluge, submerge; பொங்கிவழி, புரண்டோடு, ததும்பு, flow or run over the brim of.—*vi.* பொங்கி வழி, வெள்ளமாய் பிரவஹி, flow over the brim or banks; அதிகமாய்நிரம்பு, be so full that the contents run over.—O'ver-flow', *n.* வெள்ளம், பிரவாகம், a flowing over, inundation; அதிகம், மிகு பெருக்கு, superabundance.

O'ver-flow'ing, *n.* விஸ்தாரம், அதிகம், சம்பூரணம், abundance.—*a.* அதிகமான, அமித, விஸ்தாரமான, superabundant, exuberant.

O'ver-full', *a.* அதிகமாய்நிறைந்த, நிரம்பி அதிகரித்த, too full, filled to overflowing, surfeited.

O'ver-full'ness, *n.* அதிகமாய் நிறைந்திருத்தல், excess of fullness, surfeit. [over.

O'ver-glance', *vt.* பார்; வாசி; glance

O'ver-grow', *vt.* வளர்ந்து மூடிக்கொள், மேல்வளர், படர், grow over, cover with growth; அளவிற்கதிகமாய்ப்பெருகு அ-து பரு, grow beyond.

O'ver-grown', *pa.* அதிகமாய் ஸ்தூலித்த, மிகவும்கொழுத்த, அதிகம் வளர்ந்த, grown beyond the natural or normal size.

O'ver-growth', *n.* அதிகபருப்பம், மிகுவளர்ச்சி, excessive growth.

O'ver-hand', *n.* ஆதிக்கியம், மேன்மை, the upper hand, advantage.

O'ver-hang', *vt.* & *vi.* மேலே தொங்கு, கவி, மேற்கவியத்தொங்கு, impend or hang over, jut or project over.

O'ver-haste', *n.* மிகு ஆத்திரம், பதைப்பு, துரிதம், மிகுஅவசரம், துடுக்கு, too great haste.

O'ver-has'ty, *a.* ஆத்திரப்படுகிற, பதைப்புள்ள, அதிதுரிதமுள்ள, too hasty, precipitate, rash.

O'ver-haul', *vt.* இழு, haul or drag over; சோதித்துப்பார், நன்றாய் விசாரி, examine thoroughly, inspect carefully.—*n.* பூர்த்தியான சோதனை, a strict examination, a thorough inspection.

O'ver-head', *a.* மேலே யிருக்கிற, மேல்வைக்கப்பட்ட, placed or working above or aloft.—*adv.* மேலே, தலைக்குமேல், உயரத்தில், aloft, above, above one's head.

O'ver-hear', *vt.* அகஸ்மாத்தாய்க் கேள், ஒட்டுக்கேள், தற்செயலாய்க் கேள், hear by accident or stratagem, hear, while not intended or expected to hear.

O'ver-joy', *n.* அதிகசந்தோஷம், அத்தியானந்தம், excessive joy, wild delight, transport.—O'ver-joy', *vt.* அதிகமாய்சந்தோஷப்படுத்து, மிகக்களிப்புறச்செய், give great or excessive joy to, delight excessively, gratify extremely.

O'ver-kind, *a.* அதிக தயை காண்பிக்கிற, too kind.

O'ver-land', *a.* கரைவழியான, கரைமீதுபோகிற, passing by land, made upon or lying across the land.

O'ver-lap', *vt.* & *vi.* இன்னொன்றின் மேல்கொஞ்சம் விழு அ-து ஏறியிரு, lie partly upon, lap over.—*n.* ஒன்றின் மேல் இன்னொன்று கொஞ்சம் ஏறியிருத்தல், the lapping of one thing over another.

O'ver-late', *a.* அதிக ஆலசியமான அ-து தாமதமான, too late.

O'ver-lay', *vt.* மேலேமூடு,மூடிபோடு, cover. [or upon.

O'ver-lie', *vt.* மேலேயிரு, lie over

O'ver-live', *vt.* நீடித்திரு, அதிககாலமுயிரோடிரு, outlive.

O'ver-load', *vt.* அதிக பாரமேற்று, overburden.—*n.* மிதமற்றபாரம், an excessive load.

O'ver-long', *a.* அதிதீர்க்கமான, மிகவும் நீளமான, too long.

O'ver-look', *vt.* உயர்ந்தவிடத்திலிருந்து பார், மேலிருந்துபார், view or see from a higher place, look down upon; உபேக்ஷி, விட்டுவிடு, pass over, slight, disregard, neglect; மறந்து விட்டுவிடு, miss, omit; க்ஷமி, மன்னி, excuse, forgive.

O'ver-match', *vt.* அடக்கு, வெல்லு, ஜெயி, கெலி, be more than equal to or a match for, vanquish.—O'ver-match', *n.* பலத்தில் மிஞ்சினவன், one superior in power.

O'ver-mor'row, *n.* நாளைநன்று,நாளையினன்று, நாளைவிட்டு மற்றைநாள்.

O'ver-much', *adv.*, *a.* & *n.* அதிவிஸ்தாரமாய், மிதமின்றி; அதிக; அத்தியதிகம்; too much.

O'ver-night', *n.* கடந்த சாயங்காலம்.—*adv.* இராத்திரியில், through, during, or in the course of, the night.

O'ver-pass', *vt.* விட்டுவிடு, அலக்ஷியம் செய், தாண்டு, overlook.

O'ver-pay', *vt.* அதிக பணங்கொடு, pay in excess.

O'ver-peo'ple, *vt.* மிதமின்றி ஜனத்தினால் நிரப்பு, people too densely, overfill or overstock with inhabitants.

O'verplus, *n.* மேல்மிச்சம், சொச்சம், சேடம், நிலுவை, surplus.

O'ver-poise', *vt.* நிறையில்மிஞ்சு, சாயும்படிசெய், overbalance.

O'ver-pow'er, *vt.* மேற்கொள்ளு, வலிமையாய்வெல்லு, கெலி, அடக்கு, ஓடச்செய், subdue, vanquish, defeat, overcome, overthrow, conquer, overwhelm.

O'ver-praise', *vt.* மிதமின்றி ஸ்துதிசெய், praise excessively or unduly.

O'ver-prais'ing, *n.* அதிகஸ்துதி, மிதமிஞ்சின புகழ்ச்சி, excessive or undue praise.

O'ver-press', *vt.* நிர்ப்பந்தஞ்செய், தொந்தரவுசெய், வேதனைப்படுத்து, press or urge unduly.

O'ver-prize', *vt.* அதிகவிலைமதி, overvalue.

O'ver-rate', *vt.* அதிகக்கிரயம்போடு, அதிகமதிப்புப்போடு, rate or value too highly.—*n.* அதிகவிலை, excessive rate.

O'ver-reach', *vt.* மோசஞ்செய், ஏய், deceive, outwit, cheat; மிஞ்சிபோ, reach beyond.

O'ver-ripe', *a.* அதிகமாய் பழுத்த, கைஞ்சின, ripe or matured to excess, too ripe.

O'ver-rip'en, *vt.* அதிகமாய் பழுக்கச்செய் அ-து கனியச்செய், make too ripe.

O'ver-rule', *vt.* அதிக்கிரமி, உபேக்ஷைசெய், விலக்கு, தடு, set aside, rule against; அடித்துப்போடு, ரத்துசெய், annul, abrogate, reject.

O'ver-run', *vt.* மேலே வளர், படர், வியாபி, grow or spread over, cover all over; பாழாக்கு, ravage, devastate, lay waste.

O'ver-see', *vt.* மேல் விசாரணைசெய், superintend, look or see after.

O'ver-seer', *n.* மேல் விசாரணைக்காரன், superintendent, supervisor.

O'ver-set', *vt.* கவிழ், புரட்டு, தலைகீழாக்கு, upset.—*vi.* கவிழ், புரளு, கீழ்மேலாகு, be upset.

O'ver-shade', *vt.* நிழலிடு, இருட்டாக்கு, மூடு, cover with shade, render dark.

O'ver-shad'ow, *vt.* நிழலிடு, நிழல்போடு, இருட்டாக்கு, சாயையிடு, throw a shadow or shade over, darken; ரக்ஷி, கா, பரிபாலி, shelter, protect.

O'ver-shoot', *vt.* இலக்கிற்கு அப்புறஞ்சுடு, குறியைக்கடந்து செல்லும்படி பிரயோகி, குறிதாண்டு, shoot over or beyond.

O'ver-sight', *n.* தப்பு, தவறு, பராக்கில்செய்த பிசகு, மறந்து விட்டுவிடல், வழு, omission, inadvertence, neglect, overlooking, mistake, error; மேல்விசாரணை, மேற்பார்வை, supervision.

O'ver-skip', *vt.* மேலிருந்துதாண்டு.

O'ver-sleep', *vt.* & *vi.* அதிக நித்திரை கொள்ளு, நெடுநேரந் தூங்கு, sleep too long.

O'ver-slip', *vt.* விட்டுவிடு, தாண்டிப்போ, omit.

O'ver-soon', *adv.* சமயத்திற்குமுந்தி, too soon.

O'ver-spread', *vt.* மூடு, பரப்பு, மூடிக்கொள், மேலே வியாபி, spread over, cover.

O'ver-state', *vt.* அதிகமாய்ச்சொல், அதிசயப்படுத்திக்கூறு, exaggerate.

O'ver-state'ment, *n.* அதிகமாய்ச் சொன்னது, அதிசயோக்தி, exaggeration.

O'ver-stay', *vt.* நிர்ணயகாலத்திற்கு மிஞ்சியிரு, stay beyond or in excess of.

O'ver-step', *vt.* அதிக்கிரமி, மீறு, தாண்டு, மித மீறு, transgress.

O'ver-stock', *vt.* அதிகமாய்சேர்த்துவை, அதிகமாய்சேகரி, stock to excess, supply with more than enough, fill too full.

O'ver-strain', *vt.* அளவிற்குமிஞ்சி பிர

யாசப்படுத்து, அதிகமாய் சிரமைப்படுத்து ; நீட்டு; stretch or strain too much.—*vi.* மிகவும்கஷ்டப்படு, பிரயாசப்படு, அதிகமாய் முயல், strain one's self excessively.—*n.* மிகக்கஷ்டம், அதிகப்பிரயாசம், excessive strain, over-exertion.

O'vert, *a.* பஹிரங்கமான, வெளியான, open, public. [OF., fr. *ovrir*, to open.]

O'ver-take', *vt.* தொடர்ந்துபிடி, come upon from behind, surprise, capture ; கலந்துகொள், தொட்டுக்கொள், come up with, reach.

O'ver-task', *vt.* சக்திக்கு மிஞ்சினவேலை கொடு, அதிகவேலை ஏற்று, task too heavily.

O'ver-tax', *vt.* சுமக்கக்கூடாத வரிபோடு அ-து வாங்கு, tax too heavily ; மிதமிஞ்சிகஷ்டப்படுத்து, overstrain.

O'ver-throw', *vt.* விழத்தள்ளு, கவிழ், புரட்டு, throw over, overturn, upset; நிர்மூலமாக்கு, நாசஞ்செய், அழி, சங்கரி, நிலைகுலை, destroy, subvert; ஜெயி, கெலி, தோற்கடி, conquer, defeat, vanquish.—O'ver-throw, *n.* நாசம், நிர்மூலம், அழிவு, கவிழ்ச்சி, ruin, subversion ; அபஜயம், அவமானம், தோற்கடிப்பு, defeat.

O'ver-thwart', *prep.* குறுக்காய், across.

O'vertly, *adv.* பஹிரங்கமாய், வெளிப்படையாய், பிரசித்தமாய், openly.

O'ver-toil', *vi.* அதிகமாய் பாடுபடு. —*vt.* அதிகபாடுபடுத்து. overwork.

Overtook, *pt.* of Overtake.

O'ver-top', *vt.* இன்னொன்றின் சிகரத்தைப்பார்க்கிலும் உயரமாயிரு, உயரத்தில் மிஞ்சு, மேலோங்கு, rise above the top of, exceed in height ; மிஞ்சு, அதிகரி, மேற்படு, மேற்கொள், surpass.

O'verture, *n.* இஷ்டம்தெரிவித்தல், கோரிக்கை அ-து அபிப்பிராயத்தைத் தெரியப்படுத்தல், பிரஸ்தாபம், பிரயத்தனம், பிரார்த்தனை, proposal, offer, intimation of willingness to make terms; ஆலாபனம். [OF. & F. 'an opening.']

O'ver-turn', *vt.* கவிழ், புரட்டு, தள்ளிப்போடு, upset; அழி, நாசஞ்செய், subvert, overthrow, destroy.—O'ver-turn', *n.* கவிழ்த்தல், தள்ளிப்போடுதல்; அழித்தல், நாசஞ்செய்தல் ; overthrow.

O'ver-val'ue, *vt.* அதிகவிலைமதி, அதிக மதிப்புப்போடு, overestimate, set too high value on.—*n.* அதிகவிலை, too high valuation, overestimate.

O'ver-weak', *a.* மிகவும் பலவீனமான.

O'ver-ween', *vi.* கர்வப்படு, அகந்தைக்கொள், மேட்டிமையாயிரு, think too highly of one's self.

O'ver-ween'ing, *a.* கர்வமுள்ள, அகங்காரமுள்ள, மேட்டிமையான, conceited, presumptuous, arrogant.

O'ver-weigh', *vt.* பாரத்தில்மிஞ்சு, நிறை மிஞ்சு, outweigh, overbalance.

O'ver-weight', *n.* எடை அதிகம், அதிக கனம், அதிக நிறை, excess

of weight, preponderance.—*vt.* அதிக பாரமேற்று, overburden.

O'ver-whelm', *vt.* அமிழ்த்து, புதை, அமுக்கித் தாழ்த்து, மூழ்கச்செய், drown, submerge, ingulf, bury, overpower.

O'ver-work', *vt.* & *vi.* மிதமிஞ்சி வேலைசெய் -வு செய்வி, overtask, overtax, overstrain, work too much or beyond the strength.—**O'-ver-work'**, *n.* மிதமிஞ்சின வேலை, அதிக கஷ்டம், excessive labor or work, over-exertion.

O'ver-wrought', *pt.* & *pp.* of Overwork.—*pa.* மிதமிஞ்சின வேலை செய்த, too elaborate, overdone; மனம் அதிகமாயெழும்பின, over-excited.

O'ver-zeal'ous, *a.* அதிகசிரத்தையுள்ள, அதிக உற்சாகமுள்ள, too zealous.

O'viform, *a.* அண்டாகாரமான, முட்டைவடிவான, egg-shaped.

O'vine, *a.* ஆட்டு சம்., pert. to sheep. [L. *ovinus*, fr. *ovis*, sheep.]

O-vip'arous, *a.* முட்டையிடுகிற, producing eggs or ova.

O'vi-pos'it, *vi.* முட்டையிடு.

O'vum, *n.* முட்டை, அண்டம், egg, spore, germ or germ-cell.

Owe, *vt.* பாக்கியிரு, கொடுக்கவேண்டியிரு, கடன்பட்டிரு, be indebted to, be bound to pay; கடமைப்பட்டிரு, பாத்தியதையடைந்திரு, be obliged or indebted for. [AS. 'to have'.]

Ow'ing, *pa.* கொடுக்கவேண்டிய, கடன்பட்ட, செலுத்தவேண்டிய, பாக்கியுள்ள, due. O. to=ஆல், இருந்து, காரணத்தினால், on account of, from.

Owl, *n.* ஆந்தை, கூகை. The small o. = கோட்டான். [AS.]

Owl'er, *n.* சொண்டுபோகக்கூடாத சரக்கை கள்ளத்தனமாய்க் கொண்டுபோகிறவன்.

Owl'et, *n.* ஆந்தைக்குஞ்சு, a young or small owl. [dim. of Owl.]

Owl'ish, *a.* ஆந்தைபோன்ற, resembling an owl.

Owl'-light', *n.* போதாத வெளிச்சம்.

Own, *a.* தன், சொந்த, உரிய, உரிமையான, உடைமையான, சுதந்திரமான, சுவயமான, belonging (exclusively or especially) to oneself, peculiar, individual.—*vt.* உடைத்தாயிரு, உரிமையாக்கிக்கொள், அடைந்திரு, possess, have; தனதென்று ஒப்புக்கொள், avow or admit one's ownership of, recognize, acknowledge; ஒப்புக்கொள், சம்மதி, confess, admit, concede, acknowledge. He o-s a house= அவனுக்கொருவீடு உண்டு. O. a fault=செய்ததப்பிதத்தை ஒப்புக்கொள். [AS].

Own'er, *n.* உடையவன், சொந்தக்காரன், எஜமான், உரியவன், proprietor, master, possessor. [fr. Own.]

Own'ership, *n.* உடந்தை, ஆதீன ஆட்சி, சுதந்திரம், சொந்தம், proprietorship.

Ox, *n.* எருது, ரிஷபம்; விரையடித்த எருது. [AS.; L. *vacca*, a cow; Sk. *uksha*, ox.]

Oxen, *n. pl.* of Ox.

Ox′gang′, *n.* ஒரு எருது உழக்கூடிய நிலம். [of an ox.

Ox′-hide′, *n.* எருதுதோல், the skin

Ox′idate, *vt.* பஸ்மம்செய், பஸ்மமாக்கு, நீறுக்கு, தூளாக்கு, oxidize.

Ox′i-da′tion, *n.* பஸ்மம்செய்தல், oxidizing.

Ox′ide, *n.* அரு; பஸ்மம், சுண்ணம், நீறு. O. of red lead = சயச்சிந்தூரம், வங்கசிந்தூரம், நாகரேணு. O. of brass = பௌஷ்பகம்.

Ox′idize, *vt.* பஸ்மம்செய், நீற்று, தூளாக்கு, combine with or subject to the action of oxygen.—*vi.* பஸ்மமாகு, unite with oxygen.

Ox′ygen, *n.* பிராணவாயு, தகனவாயு, ஆமிலகரம். [Gr. *oxys*, acid + *gen*, to generate.] [oxidation.

Ox′ygen-a′tion, *n.* பஸ்பமாகுதல்,

Ox′ymel, *n.* காடித்தேன், தேனினால் செய்த ஒருபானகம்.

Oys′ter, *n.* சிப்பி, இப்பி, மட்டி. [OF. & L.]

Oyster-catcher, *n.* சிவப்புக்காலுள்ள ஒருவிதக்குருவி.

P

Pab′ular, *a.* ஆஹார சம்., pert. to pabulum.

Pab′ulum, *n.* ஆஹாரம், இரை, food.

Pace, *n.* காலடி, கவடு, a step; நடை, கமனம், கதி, போக்கு, manner of stepping or moving, gait, walk; அசுவ கதி, குதிரையின்நடை.—*vi.* கிரமமாய் அடிவைத்து நட, நட, walk, move with regular or measured steps.—*vt.* மேலேநட, walk over (with regular p-s, or with measured tread); நடத்து, நடைகற்பி, train to a certain gait, guide the p. or p-s of. [F. *pas*; L. *passus*, a step.]

Pa′cer, *n.* ஒருவிதநடையுள்ள குதிரை.

Pa-cha′, *n.* பாச்சாவென்னும் மகமதியர் அரசப்பட்டம்.

Pa-cif′ic, *a.* சாந்தகரமான, சமாதானஞ்செய்யும், peace-making, appeasing, conciliatory; சாந்தமான, அமைதலான, tranquil, calm, quiet, peaceful. [L. *pax*, *pacis*, peace + *facio*, to make.]

Pa-cif′i-ca′tion, *n.* சமாதானம்செய்தல், reconciliation; சாந்திசெய்தல், உபசமனம்செய்தல், appeasing.

Pa-cif′i-ca′tor, *n.* சமாதானம்செய்வோன், நடுவன், peace-maker; உபசாந்திசெய்வது, that wh. appeases.

Pa-cif′icatory, *a.* சாந்தமாக்குகிற, சமாதானம் பண்ணுகிற, conciliatory, tending to restore peace.

Pac′i-fi′er, *n.* உபசாந்திசெய்கிறவன், சமாதானம் பண்ணுகிறவன், one who pacifies.

Pac′ify, *vt.* உபசாந்திசெய், அமைதலாக்கு, சமாதானம்பண்ணு, calm, still, quiet, tranquillize, appease, allay the excitement of, cause to be at peace. [*see* Pacific.]

Pack, *n.* கட்டு, மூட்டை, பொதி, சிப்பம், பொட்லம், அடுக்கு, bundle, package, packet, parcel, bale; கும்பு, கூட்டம், gang, band.—*vt.* மூட்டைகட்டு, சேர்த்துக்கட்டு, சிப்பமாகக்கட்டு, make a p. of,

arrange closely in a p., compress tightly; தன் சாமான்களோடு அனுப்பிவிடு, send away with baggage or belongings, bundle.—*vi.* மூட்டைகட்டு, make up p-s; கொள், அடங்கு, allow of being packed closely; அவசரமாய் புறப்பட்டுப்போ, depart in haste.

Pack'age, *n.* கட்டு, மூட்டை, bundle, pack, packet, parcel, bale; கட்டு கட்டுதல், மூட்டைகட்டுதல், packing; மூட்டை அ-து சிப்பங் கட்டுங்கூலி, a charge for packing.

Pack'-an-i'mal, *n.* மூட்டை அ-து சுமை சுமக்கும் ஜெந்து, an animal used to carry packs or burdens, sumpter.

Pack-cloth, *n.* கோணித் துணி, coarse cloth for packing merchandise.

Pack'et, *n.* சிறுமூட்டை, சின்னசிப்பம், a small pack, package, or bundle, parcel; தபால்கப்பல் அ-து படகு, a mail boat.—*vt.* மூட்டை கட்டு; மூட்டைகட்டியனுப்புவி; pack, bundle. [F.; dim. of Pack.]

Pack'-horse', *n.* சுமைசுமக்கும் குதிரை, a horse used to carry burdens, sumpter-horse, baggage-horse.

Pack'ing, *n.* சிப்பங்கட்டுதல்; உள்ளேயிருக்கும் வஸ்துக்கள் அசைந்து கெடாமலிருக்கும்படி வைப்பது, any material used in packing or protecting the article packed.

Pack'-saddle, *n.* ஜெந்துக்களின் மேல் போடும் சுமைகளின் கீழே வைக்கும் சேணம், a saddle made for supporting the load on a pack-animal.

Pack'-thread', *n.* மூட்டைதைக்கும் நூல், சிப்பம்கட்டும் பரும்படி நூல், strong thread or twine.

Pack'wax', *n.* மிருகங்களின் கழுத்திலிருக்கும் ஒருநரம்பு.

Pact, *n.* உடம்படிக்கை, கரார், நிர்ணயம், ஒப்பந்தம், compact.

Pad, *n.* திண்டு, சிறுமெத்தை, சும்மாடு, சுமடு, a small cushion or cushion-like support for anything; எழுதும் கடுதாசியின் கீழ் வைக்கும் அட்டை அ-து பரப்பு; வழிப்பறிகாரன், highway-man.—*vt.* உள்ளே எதையாவது வைத்துத்தை, stuff, fill with any material; மேலே நட, travel or walk upon.—*vi.* மெதுவாய் நட அ-து பிரயாணஞ்செய், travel slowly, trudge wearily.

Pad'dle, *vi.* தண்ணீரில் விளையாடு, play in the water; விரல்களால் தடவு, use the hands or fingers in toying.—*vt.* தண்டுவலி, propel with a p. or oar.—*n.* தண்டு, துடுப்பு, a short oar.

Pad'dock, *n.* புல்விளையும் சிறு வயல்; ஆவரணம்; தவளை, தேரை.

Pad'dy, *n.* நெல்லு, சாலி, வரி, unhusked rice. [Malay.]

Pad'lock, *n.* பூட்டு, அமைப்பூட்டு, மாங்காய் பூட்டு, a movable lock.—*vt.* அமைப்பூட்டுப்போடு, fasten with a p..

Pad′nag, *n.* சிறு குதிரை, மட்டக் குதிரை.

Pa′gan, *n.* விக்கிரகாராதனை செய்யும் மதஸ்தன், idolater.—*a.* விக்கிரகாராதனை செய்கிற, idolatrous, heathen. [L. *paganus*, a peasant, fr. *pagus*, a village.]

Pa′ganism, *n.* விக்கிரகாராதனை செய்யும் மதம், heathenism, the worship of false gods.

Page, *n.* பக்கம், புறம், காகிதத்தின் ஒரு பக்கம், one side of a leaf of a book; கையாள், குற்றேவல்காரன், a serving boy, a male servant or attendant.—*vt.* புஸ்தக ஏட்டின் பக்கத்திற்கு இலக்கமிடு, mark or number the p-s of. [F.]

Pag′eant, *n.* உற்சவம், வேடிக்கை, entertainment; ஆம்பரம், வேஷம், show, display. [L. ' a scaffold or stage'.]

Pag′eantry, *n.* டம்பம், ஆடம்பரம், கண்காட்சி, pomp, show, display, parade; உற்சவம், வேடிக்கை, festivity.

Pa-go′da, *n.* கோவில், தேவாலயம், temple; விக்கிரகம்; வராகன். [Pe. & Hi.]

Paid, *pt.* & *pp.* of Pay.—*a.* செலுத்தப்பட்ட, கொடுக்கப்பட்ட, அளிக்கப்பட்ட.

Pail, *n.* முந்தை; தொட்டி, சால்; தவலை, ஜோடுதவலை; a small open vessel. [OF.]

Pail′ful, *n.* முந்தையளவு; தொட்டி கொண்ட அளவு; the quantity that a pail holds.

Pain, *n.* நோவு, பாதை, வேதனை, வலி, bodily suffering or distress, ache, smart; வியசனம், துக்கம், துன்பம், வியாகுலம், சங்கடம், grief, anguish; சிட்சை, தண்டனை, penalty, punishment; p-s, *pl.* பிரசவவேதனை, travail, labor, the throes of child-birth; வருத்தம், கஷ்டம், பிரயாசம், உழைப்பு, effort, exertion, trouble, labor, application. He shall not do so on p. of being dismissed = அவன் அப்படிச்செய்தால் உத்தியோகத்திலிருந்து தள்ளப்படுவான்.—*vt.* நோகச்செய், வருத்து, வேதனைப்படுத்து, துக்கப்படுத்து, பீடி, ஆயாசப்படுத்து, afflict, distress, trouble, torment, grieve. [F.; L. *pœna*, punishment.]

Pain′ful, *a.* நோவாயிருக்கிற, நோவுள்ள, full of or attended with pain; நோவுண்டாக்குகிற, causing pain; துக்ககரமான, afflictive, distressing. [படி; துக்ககரமாய்.

Pain′fully, *adv.* நோவுண்டாகும்

Pain′less, *a.* நோவில்லாத, நோவற்ற, free from pain, without pain.

Pains′-tak′er, *n.* பிரயாசமெடுப்போன் பிரயாசப்படுவோன், முயற்சியுள்ளவன், one who takes pains.

Pains′-tak′ing, *n.* பிரயாசமெடுத்தல், பிரயாசப்படுதல், முயற்சி, கஷ்டம், the taking of pains, careful labor.—*a.* பிரயாசமெடுக்கிற, கஷ்டப்படுகிற, taking pains, laborious andcareful, dilligent, working faithfully and attentively.

Paint, *n.* வர்ணம், சாயம், a pigment, a coloring substance.—*vt.* சாயம்

பூசு, வர்ணங்கொடு, coat with p., color ; சித்திரமெழுது, form a figure or likeness of in colors, portray with p-s ; வர்ணி, விவரித்துச்சொல்லு, describe vividly, depict, delineate. [F., fr. L. *pingere, pictum,* to paint.]

Paint′ed, *a.* சாயம்பூசிய, வர்ணங்கொடுத்த, சாயம்போட்ட, covered or adorned with paint, portrayed in colors.

Paint′er, *n.* வர்ணக்காரன், சாயக்காரன், one whose occupation is to paint ; சித்திரமெழுதுவோன், சித்திரக்காரன், an artist who represents objects on a surface by means of colors or pigments. [fr. Paint, *v.*]

Paint′ing, *n.* வர்ணங்கொடுத்தல் ; சாயம் பூசுதல் ; சித்திரமெழுதும் வேலை ; சித்திரவித்தை ; சித்திரம், படம், பிரதிமை, a colored representation of an object, a picture. [தை கற்ற ஸ்திரீ.

Paintress, *n.* சித்திரம் எழுதும் வித்

Pair, *n.* ஜதை, ஜோடு, இணை, இரட்டை, த்வந்த்வம், பிணையல், two of a sort, couple, b r a c e.—*vi.* ஜதையாகு, ஜோடாகு, இணை, பிணை, couple, mate.—*vt.* ஜதையாக்கு, ஜோடாக்கு. இணை, பிணை, form into a p. or p-s, unite in couples, assort in twos. [F., fr. L. *par,* equal.]

Pal′ace, *n.* ராஜமாளிகை, அரண்மனை, ராஜக்கிரகம், மாளிகை, the residence of a king or prince, a royal residence, a stately mansion. [F. *palais,* fr. L. *Palatium,* the house of the emperor Augustus on the hill of that name.]

Pal′adin, *n.* மகாசூரன், an eminent hero, knight-errant, a heroic champion.

Pal′an-keen′, } *n.* பல்லக்கு, சிவிகை, தண்டிகை, an
Pal′an-quin′, } inclosed litter. [F. & Pg.; *Prakrit* fr. Sk. *palyanka,* couch.]

Pal′atable, *a.* வாய்க்கின்பமான, சுவையான, ருசியான, மதுரமான, agreeable to the palate or taste, savory, tasteful. [fr. Palate.]

Pal′atal, *a.* அண்ணத்திற்குரிய, அண்ணத்தினாலுச்சரிக்கப்படும், pert. to or uttered by the aid of the palate.—*n.* தாலவ்வியம், தாலவ்வியாக்ஷரம், அண்ணத்தினாலுச்சரிக்கு மெழுத்து, a sound uttered by the aid of the palate. [fr. Palate.]

Pal′ate, *n.* அண்ணம், மேல்வாய், the roof of the mouth ; ருசி, சுவை, taste, relish. [L. *palatum.*]

Pa-la′tial, *a.* ராஜகிருஹம் சம். அ-து போன்ற, pert. to or resembling a palace. [*see* Palace.]

Pal′atine, *a.* அண்ணம் சம்., pert. to the palate ; ராஜகிருஹ சம். pert. to a palace.

Pa-la′ver, *n.* உதவாத சம்பாஷணை, பிதற்றுகை, idle talk.

Pale, *a.* [OF. & L.] வெளிறின, மங்கலான, மங்கல் வெளுப்பான, விவர்ணமான, wanting in color, not ruddy, pallid, wan, cadaverous; காந்தியில்லாத, மங்கலான,

not bright, dim.—*n.*[AS.] கோ திக்கொம்பு, கழுக்கொம்பு, a pointed stick or stake for driving into the ground, picket; வேலி, கிராதி, அடைப்பு, fence; ஆவரணம்,அடைப்பு, inclosure.

Pale′ness, *n.* மங்கல், வெளுப்பு, வைவர்ணியம், lack of color or lustre, sickly whiteness, w a n n e s s, pallidity, pallor.

Pal′ette, *n.* சித்திரக்காரன் வர்ணம் வைத்துக் கொள்ளும் தந்தப் பலகை.

Pal′frey, *n.* ஏற்றத்திற்குரிய மட்டக் குதிரை, a small saddle-horse. [OF.]

Pal′ing, *n.* கிராதி, வேலி, வேலி [யடைப்பு, fence.

Pal′is-ade′, *n.* நிலத்தில் நடும் நீண்ட கெட்டிக்கம்பம், a strong long stake or post set in the ground; கிராதி, வேலி, fence.—*vt.* சுற்றிலும் கொம்பு நட்டு, கிராதி போடு, கிராதி நடு, அரணுக்கு, surround with a p..

Pal′ish, *a.* கொஞ்சம் வெளிறின, காந்தியில்லாத, சற்றுவெளிப்பான, somewhat pale.

Pall, *n.* [AS.] சவப்பெட்டியின்மேல் மூடும் கறுப்புத்துணி, சவப்போர்வை, a black cloth thrown over a coffin; [W.] அரோசிகம், அருவருப்பு.—*vt.* மூடு, போர்வையிடு, wrap; ருசியில்லாமலிருக்கச்செய், சாரமற்றுப்போகச்செய், m a k e insipid or dull.—*vi.* சாரமற்றுப் போ, ருசியீனமாகு, become insipid or tasteless.

Pal-la′dium, *n.* ஊர்தேவதை; பாதுகாப்பு, க்ஷேமாதாரம்.

Pal′let, *n.* சிறுமெத்தை,சிறுபடுக்கை.

Pal′liate,*vt.* தணி,குறை, உபசமனஞ்செய், reduce, lessen, abate, mitigate; குற்றத்தை மூடு, மறை, cloak, cover, conceal, extenuate. [F., fr.L. *pallium*, a cloak.]

Pal′li-a′tion, *n.* தணித்தல், உபசாந்தி, mitigation, alleviation; சாக்கு போக்கு, மன்னிப்பு, excuse. extenuation. [fr. Palliate.]

Pal′liative, *a.* உபசாந்தி செய்யும், alleviative, mitigative; குற்றத்தை குறைக்கிற, தணிக்கிற, extenuating.—*n.* உபசாந்திசெய்வது, சமாதானம்,that wh.palliates. [fr. Palliate.]

Pal′lid, *a.* வெளிறின, வெளுத்துப் போன, மங்கலான, pale, wan, lacking color.

Pal′-lidness, Pal-lid′ity, Pal′lor, } *n.* மங்கல், காந்தியின்மை, வெளிறின நிறம், paleness.

Palm (பாம்), *n.* உள்ளங்கை, the inner part or surface of the hand; நான்கு விரலளவு, a hand; ஜயசின்னம், வெற்றியடையாளம், a token of success or triumph; பனை, ஈந்து, தெங்கு, கமுகு மு. விருக்ஷஜாதி, தாளவிருக்ஷம்.—*vt.* கையால் தொடு, handle; அகங்கையில் மறை, hide in or manipulate with the p.of the hand, juggle; மோசஞ்செய், ஏய், பித்தலாட்டம் செய், impose by fraud. [L. *palma*, the palm of the hand & a palm tree(so named from the shape of its branches.]

Pal′ma Chris′ti,*n.*ஆமணக்குச்செடி castor-oil plant.

Pal′mar, *a.* பனைமரம் சம்.; உள்ளங்கை சம்

Pal′mate, } *a.* கைவடிவமுள்ள,
Pal′mated, } hand-shaped.

Palm′er, *n.* மோசக்காரன்; புண்ணிய ஸ்தலங்கள்தோறுந்திரியும் யாத்திரிகன், pilgrim.

Palm′er-worm′, *n.* கம்பளிப்பூச்சி, இலைப்பூச்சி, any hairy caterpillar.

Pal-met′to, *n.* ஒருவித பனைமரம்.

Pal′miped, *a.* கால்விரற் கிடையில் தோலுள்ள, web-footed.—*n.* விரற்கிடையில் தோலுள்ள காலுடைய நீர்பக்ஷி, a web-footed or swimming bird.

Pal′mister, *n.* கையைப்பார்த்துக் குறிசொல்லுகிறவன், ஹஸ்தசாமுத்திரிகன், one who tells fortunes by palmistry, chiromantist.

Pal′mistry, *n.* ஹஸ்தசாமுத்திரிகம், உள்ளங்கை ரேகைகளைப்பார்த்துக் குறி சொல்லும்வித்தை, divination or the art of telling fortunes by the lines in the palm of the hand, chiromancy.

Palm′y, *a.* பனைமரங்களுள்ள, abounding in palms; அபிவிர்த்தியிலிருக்கும், ஜயகாலமாயிருக்கிற, உயர்ந்தஸ்திதியிலிருக்கிற, உன்னதநிலையான, prosperous, flourishing.

Pal-my′ra, *n.* பனைமரம்.

Palp, *n.* பூச்சிகளின்மீசை, feeler.

Pal′pa-bil′ity, *n.* பரிசிக்கக்கூடிய தன்மை, தொட்டறியக்கூடிய தன்மை, tangibleness; ஸ்பஷ்டம், தெளிவு, plainness, obviousness.

Pal′pable, *a.* பரிசிக்கக்கூடிய, பரிசிக்கத்தக்க, தொட்டறியக்கூடிய, ஸ்தூலமான, tangible; ஸ்பஷ்டமான, பிரத்தியக்ஷமான, தெளிவான, easily perceptible, plain, obvious. [F. fr. L. *palpo*, I touch.] [பக்ஷமாய், தெளிவாய்.

Pal′pably, *adv.* ஸ்பஷ்டமாய், பிரத்தி

Pal′pitate, *vi.* (தாது அ-து நாடி) வேகமாய்ஆடு, அடி, ஓடு, அதிர், துடி, beat quickly, throb, pulsate violently, flutter. [L. *palpito*, freq. of *palpo*, I feel.]

Pal′pi-ta′tion, *n.* தாது அ-து நாடி அதிர்தல், நெஞ்சிடிப்பு, துடித்தல், துடிப்பு, குலைபதைத்தல், throbbing, rapid and irregular pulsation, abnormal and rapid beating of the heart. [fr. P a l p i-tate.]

Pal′sical, } *a.* திமிர்வாத ரோகமுள்
Pal′sied, } ள, affected with palsy, paralytic, paralyzed.

Pal′sy, *n.* திமிர்வாதரோகம், பாரிசவாயு, பக்ஷவாதம், விறைப்பு, paralysis.—*vt.* திமிர்வாத முண்டாக்கு, விறைப்பி, ஸ்தம்பிக்கச்செய், affect with palsy, deprive of action or energy, paralyze. [cont. of. Paralysis.]

Pal′ter, *vi.* மோசமாய் பிரவர்த்தி, கபடத்துடன் நடந்துக்கொள், கபடம்செய், act insincerely, equivocate, dodge. [*see* cog. Paltry.]

Pal′try, *a.* உதவாத, அற்பமான, சிறுமையான, நீசமான, இளப்பமான, துச்சமான, சொற்பமான, mean, despicable, vile, worthless, contemptible. [L. G. lit. 'a rag.']

Pam′per, *vt.* கொழுக்கச்செய், அதி

கத்தீனிகொடு, food to the full or luxuriously, glut.

Pam′phlet, *n.* சிறுபுஸ்தகம், a small book. [doubtful origin.]

Pam′phlet-eer′, *n.* சிறு புத்தகங்கள் எழுதுவோன், a writer of pamphlets.

Pan, *n.* [AS.] தட்டு, தாலம், பாண்டம், சட்டி, a shallow open dish or vessel ; தாலம், பில்லை, சக்கரம், தட்டு, disk ; துப்பாக்கிக் காதின் பள்ளம்; ஒரு வனதேவதை ;[Hi.] (பான்), வெற்றிலை.

Pan′a-ce′a, *n.* சர்வரோகௌஷதம், சகலவியாதிகளையும் நீக்கும் சிந்தாமணி, a universal medicine, a cure-all, catholicon. [L., fr. Gr. *pan*, all + *akeomai*, to cure.]

Pa-na′da, *n.* ரொட்டி போட்டுக் காய்த்த கஞ்சி.

Pan′-cake′, *n.* தோசை, ஓட்டடை, ஓட்டப்பம், a thin cake.

Pan′creas, *n.* வயற்றில் ஒரு அவயவ பாகம், விரிக்வகம்.

Pan′cre-at′ic, *a.* fr. Pancreas. விரிக்வக சம்.. P. juice=மதுரஸம். P. duct=மதுவாஹினை.

Pan′dal, *n.* பந்தல். [In.]

Pan′dect, *n.* சாஸ்திர சங்கிரகம், சாஸ்திரசாரம்.

Pan-dem′ic, *a.* சர்வஜனங்களுக்கும் வருகிற, affecting a whole people, widely epidemic.

Pan′-de-mo′nium, *n.* பிசாசுகளின் சபை, the council-chamber of demons. [Gr. *pan*, all + *daimon*, a demon.]

Pan′der, *n.* கூட்டிக்கொடுக்கிறவன், படவா, pimp, procurer. —*vi.* கூட்டிக்கொடு, படவாத்தனம்செய், procure, pimp ; துர்மார்க்கத்திற்கு சகாயஞ்செய், minister to the gratification of any evil desire. [from *Pandarus* in the story of Troilus and Cressida.]

Pan′derism, *n.* கூட்டிக்கொடுத்தல், படவாத்தனம், pimping.

Pan-dic′u-la′tion, *n.* திமிர்விடுதல், சோம்பல் முறிக்கிறது.

Pan′dit, *n.* பண்டிதன். [In.]

Pane, *n.* கண்ணாடித்தட்டு, கண்ணாடி பில்லை, a plate of glass. [F. 'a portion of a surface'; L. *pannus*, a piece of cloth.]

Pan′e-gyr′ic, *n.* ஸ்தோத்திரம், ஸ்துதி, புகழ்ச்சிப்பிரசங்கம், a formal eulogy, encomium, praise, laudation.—*a.* ஸ்தோத்திரமான, புகழ்ச்சியான, eulogistic, laudatory. [Gr. lit. 'fit for a public assembly'.]

Pan′e-gyr′ical, *a.* ஸ்தோத்திரமான, புகழ்ச்சியான, encomiastic.

Pan′e-gyr′ist, *n.* ஸ்தோத்திரம் செய்வோன், புகழ்வோன், encomiast, eulogist. [*see* Panegyric.]

Pan′egyrize, *vt.* துதி, புகழ், ஸ்தோத்திரம்செய், eulogize.

Pan′el, *n.* சட்டத்தில் வைக்கப்பட்ட பலகை, தட்டு, a board with its edges inserted or set in a surrounding frame ; மத்தியஸ்தர்களுடைய நாம அட்டவணை, ஜூரிகளின் பேர்ப்பட்டி.—*vt.* சதுர சட்டங்களாய்ச் செய், form into or with p-s. [OF. dim. of Pan.]

Pane'less, *a.* கண்ணுடித்தட்டில்லாத.

Pang, *n.* வேதனை, நோவு, extreme pain, agony, anguish, throe.

Pan'ic, *n.* காரணமின்றி திடீலென்று உண்டாகிற திகில், ஏக்கம், பயம், a sudden overpowering fright, terror, alarm.—*a.* அகஸ்மாத்தாய் உண்டாகிற (பயம்), sudden and causeless, unreasonable. [from Gr. *Pan*, the god who caused sudden fear among a number of people.]

Pa-niv'orous, *a.* ரொட்டி தின்று பிழைக்கிற, subsisting on bread.

Pan'nel, *n.* முரட்டுச்சேணம், a kind of rustic saddle.

Pan'nier, *n.* கூடை, பழம் மு-வை கொண்டுபோகும் கூடை, a wicker basket for carrying fruit &c.

Pan'oply, *n.* ஸர்வாங்க கவசம், தேக முற்றும் மூடும் கவசம், complete armor, a full suit of armor. [Gr. *pan*, all + *hopla*, arms.]

Pan'o-ra'ma, *n.* எல்லாதிக்குகளிலு மிருக்குமவற்றைக் காட்டும் சித்திரம், a picture presenting a view of objects in every direction; எல்லா திக்குகளின் காட்சி, a complete view in every direction. [Gr. *pan*, all + *horama*, view.]

Pan'o-ram'ic, *a.* நாலுதிசையிலும் காணப்படுகிற, presenting a complete view or a view in every direction.

Pan'sophy, *n.* ஸர்வவிஷய ஞானம், ஸர்வஞானம், universal wisdom or knowledge.

Pan'sy = Heart's-ease.

Pant, *vi.* நெடுமூச்செறி, பெருமூச்சுவிடு, breathe quickly or in a labored manner, gasp; நெஞ்சிடி, நெஞ்சடித்துக்கொள், palpitate, throb; ஆசைப்படு, வாஞ்சி, long eagerly, desire earnestly.—*n.* நெடுமூச்சு, a quick breathing, a gasp; நெஞ்சுத்துடிப்பு, நெஞ்சிடித்தல், a violent palpitation of the heart. [OF.]

Pan'ta-loon', *n.* கோமாளி, அகசியகாரன், buffoon; p-s, காற்சட்டை, இஜாரு, ஷராயி, trousers. [F.]

Pan'theism, *n.* அத்வைத மதம், cosmotheism, monism. [Gr. *pan*, all + *theos*, God.]

Pan'theist, *n.* அத்வைதி, one who believes in pantheism. [*see* Pantheism.]

Pan'the-is'tic, *a.* விசுவமே அ-து உலகமே தெய்வமென்கிற, அத்வைதமான.

Pan-the'on, *n.* ஒரு தேசத்தாரால் வணங்கப்படும் சகல தேவதைகள், all the gods worshipped by a people; சகல தேவதைகளை வைத்திருக்கும் கோயில், a temple dedicated to all the gods. [Gr.]

Pan'ther, *n.* ஒருஜாதி சிறுத்தை, a variety of the leopard. [L. & Gr.; allied to Sk. *pundarika*.]

Pan'tile', *n.* வீட்டுக்கூரை தட்டோடு, a kind of roofing-tile.

Pant'ingly, *adv.* பெருமூச்சுடன், நெஞ்சுத்துடிக்க, with rapid breathing or palpitation.

Pan'tograph, *n.* படங்களை பிரமாணத்தை மாற்றாமலாவது மாற்றி

யாவது வேறு பிரதி எடுக்கும் யந்திரம், an instrument for copying plans &c. on the same or an altered scale.

Pan'tomime, *n.* அபிநயக்கூத்து, பேச்சில்லாமல் அபிநயத்தினால்மாத்திரம் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும் ஆட்டம், dumb-show. [L.; Gr. *pas, pantos,* all + *mimos,* a mimic.]

Pan'to-mim'ic, *a.* பேச்சில்லாமல் அபினயத்தாலேயே தெரிவிக்கும், representing by dumb-show.

Pan-toph'agous, *a.* சமஸ்தாஹாரங்களையும் தின்கிற.

Pan'try, *n.* போஜன சாமான் வைக்கும் அறை, உக்கிராணம், a store-room for bread and other provisions. [L. *panis,* bread.]

Pap, *n.* முலைக்காம்பு, முலை, nipple, teat, mammilla; குழந்தைகளுக்கு ஊட்டும் மிருதுவான போஜனம், கூழ், கஞ்சி, any soft food for infants; பழம் மு-வற்றின் சதை, கூழ், pulp.—*vt.* கூழூட்டு அ-து கூழ் குடிக்கச்செய்.

Pa-pa', *n.* ஐயா, அப்பா, a child's word for 'father.' [a reduplication of the cry of an infant.]

Pa'pacy, *n.* உரோமன் கதோலிக்கு மதாதிகாரியின் ஆதிபத்தியம், the office and dignity of the pope. [L. *papa,* the pope.]

Pa'pal, *a.* உரோமன் கதோலிக்கு மதாதிகாரி சம்., pert. to the pope. [*see* Papacy.]

Pa-pav'erous, *a.* கசகசாவைப்போன்ற.

Pa-paw', *n.* பப்பாளிமரம் அ-து காய்.

Pa'per, *n.* காகிதம், கடுதாசி; பத்திரம், எழுதியது; தஸ்தாவேஜு, document; வர்த்தமான பத்திரிகை, news-paper. P. kite = காற்றாடி, பட்டம். P. money = பாங்கிநோட்டுகள்.—*vt.* காகிதம் ஒட்டு. [L. *papyrus,* a plant, fr. wh. the Egyptians made a kind of paper.]

Paper-making, *n.* காகிதம்செய்யும் வேலை.

Paper-mill, *n.* காகிதம் செய்யும் யந்திரம்.

Pa'per-weight', *n.* காகிதங்கள் பறக்காமலிருப்பதற்காக வைக்கும் சிறு பாரம். [paper, chartaceous.

Pa'pery, *a.* காகிதம்போன்ற, like

Pa-pil'io-na'ceous, *a.* வண்ணாத்திப் பூச்சிபோன்ற, resembling the butterfly.

Pa-pil'la, *n.* (*pl.* Papillæ) சிறு பரு, a small nipple-like projection.

Pap'illary, } *a.* சிறு பருக்களால்
Pap'il-lose', } நிறைந்த; சிறு பருக்கள் போன்ற; covered with or resembling papillæ.

Pa'pist, *n.* உரோமன்கதோலிக்கு மதஸ்தன், a Roman Catholic.

Pa-pis'tical, *a.* உரோமன் கதோலிக்கு மத சம்..

Pap'pous, *a.* சுணையுள்ள; சிறுமயிர்கள் போன்ற.

Pap'py, *a.* மெதுவானகுழம்பு போன்ற.

Par, *n.* சரி, சமம், ஒப்பு, equal value, equality. At p. = அசல்விலைக்கு. On a p. = சமமாய். [L.]

Para, *n.* contr. of Paragraph.

Par'able, *n.* உவமை, ஒப்பனை, நீதிக் கதை, திருஷ்டாந்தக் கதை, a

fable or allegorical representation from wh. a moral is drawn; நீதிமொழி, பழமொழி, a proverbial saying, an allegorical or mystical saying. [F. & L., lit. 'to throw beside', 'to compare', Gr. *para*, beside + *ballo*, to throw.]

Pa-rab'ola, *n.* ஓர்கல்லெறிய அது போகும் போக்கைக் குறிக்கும் ஓர் வகை வளைந்த ரேகை.

Par'a-bol'ical, *a.* உவமையால் தெரியப்படுத்துகிற, expressed by a parable, allegorical.

Par'achute, *n.* அதி உயரத்திலிருந்து அடிபடாமல் கீழ் இறங்குவதற்கு குடைபோன்ற ஓர் சாதனம், ஆகாயக்குடை. [F. *parer*, to ward off + *chute*, fall.]

Pa-rade', *n.* டம்பம், ஆடம்பரம், pompous show, formal display or exhibition; கவாத்து செய்யும் மைதானம், the ground where military reviews are held; அதிகாரிகளின் பார்வைக்காக சேர்க்கப்படும் படையணி, the collection of troops for inspection, a review of troops.—*vt.* ஆடம்பரமாய்க் காட்டு, make a show off, exhibit ostentatiously; வரிசை வரிசையாய் நிறுத்து, assemble & marshal (in military order). [F. & Sp., fr. L. *paro*, *paratus*, to prepare.]

Par'adigm (—டிம்), *n.* வினைச்சொல் மு.வற்றின் ரூபபேதங்களை யுணர்த்தும் உதாரணம், வாய்ப்பாடு, a complete example of conjugation or declension. [Gr. *para*, beside + *deigma*, example.]

Par'adise, *n.* ஸ்வர்க்கம், the abode of sanctified souls after death; ஈடென் எனும் உத்யானவனம், நந்தவனம், the garden of Eden. [L. & Gr. 'a garden'.]

Par'a-dis'ean, } *a.* திவ்வியமான,
Par'adi-si'cal, } சுவர்க்க சம்., pert. to paradise.

Par'adox, *n.* அசத்தியாபாசம், பொய்யாகத்தோன்றும் சத்தியம், விபரீதம், விபரீதமாய்த்தோன்றும் வாக்கியம், an assertion seemingly though not really absurd or self-contradictory. [Gr. *para*, beyond + *doxa*, opinion.]

Par'a-dox'ical, *a.* அசத்தியாபாசமான, விபரீதமாய்த் தோன்றுகிற, விரோதமான, seemingly absurd but possibly or demonstrably true.

Par'agon, *n.* சிரேஷ்டமானது, உசிதமானது, உத்தமமானது, மாதிரி, திருஷ்டாந்தம், நிகரற்றது, a model of excellence or perfection, a pattern. [OF. & Sp. 'model', *para con*, in comparison with.]

Par'agram, *n.* சிலேடை(ப்பேசு), pun. [பேசுவோன், punster.

Par'a-gram'matist, *n.* சிலேடைப்

Par'agraph, *n.* பிரிவு, வாக்கியத்தொகுதி, பிரகரணம், a section or subdivision of a writing or chapter; புஸ்தகத்தாளின் ஓரத்தில் விஷயபேதத்தைக்காட்டுவதற்கு எழுதும்குறிப்பு. [Gr. *para*, beside + *grapho*, to write.]

Par'allax, *n.* (astro.) ஸ்தானபேதம், இலம்பனம், அங்கணம், விஷமஸ்தானம்.

Per-cent′age, *n.* நூற்றுக்கிவ்வளவென்று நிர்ணயிக்கப்படும் எண், நூற்றுக்கு(ஆகும்) வீதம், a certain rate per cent. or on a hundred.

Per′cept, *n.* புலப்படுவது, தெரிந்துகொள்ளப்பட்டது, that wh. is perceived.

Per-cep′ti-bil′ity, *n.* அறியக்கூடிய தன்மை, புலப்படத்தக்கதன்மை, கோசரத்துவம், capability of being perceived.

Per-cep′tible, *a.* தெரியத்தக்க, காணத்தக்க, புலப்படத்தக்க, பிரத்தியக்ஷமான, perceivable, cognizable, discernible.

Per-cep′tibly, *adv.* தெரியும்படியாய், புலப்படும்படி, ஸ்பஷ்டமாய், perceivably.

Per-cep′tion, *n.* உணர்ச்சி, தெரிந்துகொள்ளுதல், ஞானம், அறிவு, perceiving, cognition, apprehension, knowledge. [L.; *see* Perceive.]

Per-cep′tive, *a.* தெரிந்துகொள்ளுகிற, கிரகிக்கும்சக்தியுள்ள, அறியும், உணருகிற, having the power of perceiving, perceiving.

Perch, *vi.* (பக்ஷி) உட்கார், படி, வதி, alight or settle, as a bird, sit, roost.—*vt.* உட்காரவை, set, place.—*n.* பக்ஷிகள் உட்காருவதற்கு கோல், a pole or staff for birds to rest on, a roost; ஐந்தரைகஜ அளவுகோல்; ஒருவித மீன்.

Per-chance′, *adv.* ஒருவேளை, தற்செயலாய், தெய்வவசமாய், இருக்கலாம், by chance, perhaps, peradventure.

Per-cip′ient, *a.* கிரஹிக்கிற, உணர்ச்சியுள்ள, அறிகிற, having the perceiving faculty.—*n.* கிரகிக்க சக்தியுள்ளவன் அ-து யுள்ளது, one who or that wh. perceives.

Per′colate, *vt.* வடிகட்டு, வஸ்திரகாயம் செய், strain.—*vi.* வடி, ஊறு, பொசி, pass through fine interstices, filter. [L. *per*, through + *colare*, to strain.]

Per′co-la′tion, *n.* வடிகட்டுதல்; இரந்திரங்கள் வழியாய்ப்போதல்; filtration.

Per′co-la′tor, *n.* வடிகட்டும்சாதனம், [that wh. filters.

Per-cuss′, *vt.* பலமாய்த்தாக்கு, அடி, strike smartly, strike upon or against.

Per-cus'sion, *n.* பலமாய் தாக்குதல், ஒன்றோடொன்று மோதுதல், தாக்கல், அடி, violent collision.

Per-cuss'ive, *a.* பலமாய்த்தாக்குகிற, அடிக்கிற, striking sharply.

Per-di'tion, *n.* நரகம், அதோகதி, hell; நாசம், வினாசம், அழிவு, கேடு, ruin. [L. *perdo*, to destroy.]

Per-du', *n.* ஒளிந்திருப்போன், பதுங்கியிருப்போன்.

Per-due', *a.* மறைந்திருக்கிற, காணாமற் போன; குருதிருத்தியங்கள் செய்கிற.

Per-dur'able, *a.* சாசுவதமான, நிரந்தரமான, நிலைபெற்ற, lasting.

Per'egrinate, *vi.* தேசசஞ்சாரம் செய், சஞ்சரி, திரி, travel.

Per'egri-na'tion, *n.* தேசசஞ்சாரம், தேசந்திரிதல், travelling.

Per'emptorily, *adv.* கண்டிதமாய், கண்டிப்பாய், கெட்டியாய், நிர்மானமாய், தர்க்கிப்பதற்கிடமில்லாமல், positively, decisively.

Per'emptory, *a.* கண்டிதமான, கண்டிப்பான, நிர்மானமான, உறுதியாய்ச் சொல்லப்பட்ட, உல்லங்கனம் அ-து அலக்ஷியஞ் செய்யக்கூடாத, தர்க்கிப்பதற்கிடங்கொடாத, positive, decisive, absolute, precluding, or not admitting of, question or debate, as, a p. order. [L. *per*, thoroughly + *emo*, I take.]

Per-en'nial, *a.* வருஷமுழுவதுமுள்ள, எல்லா ருதுக்களிலுமிருக்கிற, lasting or continuing through the year; சாசுவதமான, நித்திய, எப்பொழுதுமிருக்கிற, நிலையான, perpetual, unceasing, never-failing. [L. *per*, through + *annus*, a year.]

Per-en'nity, *n.* சாசுவதம், எப்பொழுதுமிருத்தல், வருஷமுழுதும் நிலைத்தல்.

Per'fect, *a.* சம்பூரணமான, குறைவற்ற, தோஷமற்ற, முடிவான, அகண்டமான, அக்ஷதமான, பரிபக்குவமான, சுத்தமான, முடிந்த, உத்தமமான, complete, finished, faultless, flawless, entire, whole, sound, pure; முழுத்தேர்ச்சியடைந்த, பாரங்கதனான, completely skilled.—*vt.* குறைகள்இன்றிபூர்த்திசெய், பூர்ணமாக்கு, make p., complete, finish. [L. *per*, thoroughly + *facio*, I do.]

Per-fect'i-bil'ity, *n.* பரிபூரணமடையத்தக்கநிலை, பரிபூரணமாகத்தக்க தன்மை.

Per-fect'ible, *a.* பரிபூரணமடையத்தக்க, நன்றாக்கத்தக்க, capable of becoming, or being made, perfect.

Per-fec'tion, *n.* சம்பூரணம், குறைவின்மை, தோஷமின்மை, தேர்ச்சி, completeness, supreme excellence, faultlessness; பரிபக்குவம், maturity; முடிவு, சித்தி, completion. [fr. Perfect.]

Per-fect'ive, *a.* சம்பூரண ஸ்திதிக்குக் கொண்டுவருகிற, பூரணமாக்குகிற, பூர்த்திசெய்கிற.

Per-fec'tly, *adv.* சம்பூரணமாய், குறைவில்லாமல் திருத்தமாய், faultlessly; பூர்த்தியாய், சேடமின்றி, அற, தீர, completely, thoroughly, wholly.

Per-for′vid, *a.* மிகவும் மனப்பூர்வமான, உக்கிரமான, பற்றுதலுள்ள.

Per-fid′ious, *a.* துரோகியான, விசுவாசகாதகனான, இரண்டகமுள்ள, சதியுள்ள, வஞ்சனைசெய்யும், treacherous, faithless, false, untrue, traitorous.

Per′fidy, *n.* துரோகம், விசுவாசகாதகம், இரண்டகம், வஞ்சனை, நம்பினவனை துரோகம் செய்தல், treachery, faithlessness. [L. *per*, away from + *fides*, faith.]

Per′forate, *vt.* தொளை, துவாரம் செய், பொத்தலிடு, உருவக்குத்து, make a hole or holes through, bore through. [L. *per*, through + *foro*, to bore.]

Per′fo-ra′tion, *n.* துவாரமாக்குதல், தமரிடுதல், இரந்திரமாக்குதல், perforating, boring or piercing through; தமர், துவாரம், இரந்திரம், தொளை, hole, aperture.

Per′forative, *a.* தமருண்டாக்குகிற, தொளைசெய்யும், having power to perforate.

Per′fo-ra′tor, *n.* தொளைக்கருவி, a perforating instrument.

Per-force′, *adv.* பலவந்தமாய், பலாத்காரமாய், நிர்பந்தமாய், கட்டாயமாய், by force or compulsion, of necessity, necessarily. [Pref. *per*, through + force.]

Per-form′, *vt.* செய், நிறைவேற்று, அனுஷ்டி, நடத்து, நடப்பி, do, execute, accomplish, carry through, effect, fulfill.—*vi.* நாடகத்தில் வேஷம்தரித்து ஆடு, act on the stage, act a part; பாடு, வாசி, கொட்டு, sing, play on a musical instrument; ஏதாவது வித்தை காரியம் மு-வற்றை செய், acquit one's self, accomplish an act or a feat. [F. pref. *par* + *fournir*, to furnish.]

Per-form′ance, *n.* செய்தல், நிறைவேற்றுதல்; அனுஷ்டானம், ஆசரணம்; performing, doing, execution, accomplishment, fulfilment; வேலை, கிரியை, காரியம், கர்மம், deed, action, act, work, production; நாடகமாடுதல், a representation on the stage; அற்புதகிருத்தியம், விசேஷமான வேலை, அதிசயமான அ-து ஆச்சரியமானவேலை, exploit, feat, achievement, an exhibition of skill. [fr. Perform.]

Per-form′er, *n.* செய்கிறவன், நிறைவேற்றுகிறவன், one who performs; நடிப்போன், நாடகமாடுவோன், actor; பாடகன், musician; ஏதாவது ஒருவித்தை செய்கிறவன் அ-து காட்டுகிறவன், one who exhibits skill in any art.

Per′fume, *n.* சுவாசனை, பரிமளம், மணம், a pleasant odor, fragrance, aroma; பரிமள திரவியம், சுகந்த வஸ்து, a fragrant substance. —Per-fume′, *vt.* வாசனையூட்டு, பரிமளமேற்று, பரிமள திரவியம் சேர், மணக்கச்செய், fill or impregnate with a p., scent. [F.; L. *per*, through + *fumus*, smoke: lit. 'vapor that disseminates itself.']

Per-fum′er, *n.* பரிமளதிரவியங்கள்

செய்கிறவன் அ-து விற்கிறவன், one who makes or sells perfumes; சுவாசனையுண்டாக்குவது.

Per-fum'ery, n. பரிமள திரவியங்கள், perfumes (collectively); பரிமள திரவியங்கள் செய்தல், preparation of perfumes. [fr. Perfume.]

Per-func'torily, adv. கடனுக்கு, ஒப்புக்கு, அசிரத்தையாய், அஜாக்கிரதையாய், carelessly.

Per-func'tory, a. கடனுக்குச் செய்கிற, பொறுப்பு தீர்த்துகொள்ளுவதற்குமாத்திரம் செய்யும், சிரத்தையில்லாத, அஜாக்கிரதையுள்ள, கவலையற்ற, careless, indifferent, half-hearted, done merely to get rid of a duty. [L. *per* + *fungor, functus,* to perform or execute.]

Per-fu'sion, n. தெளித்தல்.

Per-haps', adv. ஒருவேளை, என்னமோ, சிலவேளை, இருக்கலாம், perchance, by chance, peradventure, it may be, possibly. [L. *per,* by + hap.]

Per'i-car'dium, n. இருதய கமலம் அ-து இரத்தாசயத்தை மூடிக்கொண்டிருக்கும் உவ்வு அ-து மெல்லியதோல், இருதயகோசம்.

Per'icarp, n. விதையின் மேற்றோல், பீஜகோசம், the shell of the seed-vessel.

Per'i-cra'nium, n. கபாலத்தின் மேற்றோல், கபாலாவரணம்.

Per'igee, n. கிரகமார்க்கத்தில் நீசஸ்தானம். [சம்.

Per'i-hel'ion, n. (astro.) மந்தோச்

Per'il, n. அபாயம், ஆபத்து, கண்டம், ஹானி, அவதி, danger, hazard, jeopardy, exposure to injury or destruction.—*vt.* அபாயத்திற்குட்படுத்து, ஆபத்திற்குள்ளாக்கு. risk. [F. & L.]

Per'ilous, *a.* அபாயமான, ஆபத்தான, அவதியான, பீதிகாரணமான, dangerous, hazardous, risky. [fr. Peril.]

Per-im'eter, n. சுற்றளவு, the bounding line of a body or figure, the sum of all the sides. [Gr. *peri,* about + *metron,* measure.]

Pe'riod, n. சமயம், காலம், time; அந்தரம், மத்தியகாலம், an interval of time, duration; யுகம், age, epoch; காலசக்கரம், cycle; சரியான காலம், யுக்தகாலம், நியதகாலம், proper time or season; வாக்கியத்தின் முடிவு, பூர்ணவிராமம், பூர்ணவாக்கியம், a complete sentence; பூர்ணவாக்கிய முடிவில் இடும் புள்ளி, a full stop; முடிவு, அவஸானம், conclusion, end; எல்லை, limit, bound. [L.; Gr. *peri,* about + *hodos,* way.]

Per'i-od'ic = Periodical.

Pe'ri-od'ical, *a.* காலக்கிரமத்தின்படி சம்பவிக்கிற, நியமிதகாலத்தில் வருகிற, happening or returning regularly at a certain period, occurring at fixed intervals, recurring.—*n.* நிர்ணய காலத்தில் பிரசுரிக்கப்படும் அ-து வெளிப்படும் புஸ்தகம் அ-து பத்திரிகை, a publication appearing at regular intervals. [fr. Period.]

Pe'ri-od'ically, *adv.* நிர்ணயகாலங்

களில், கொஞ்சகாலத்திற் கொரு தரம், at stated periods.

Pe'rio-dic'ity, n. கொஞ்சகாலத்திற் கொருதரம் சம்பவித்தல், நியமித்த காலங்களில் நடக்குதல், recurrence at regular intervals.

Pe-riph'ery, n. சுற்று, சுற்றளவு, மண்டலசுற்றளவு, பரிதி, பருதி, வட்டம், circumference. [Gr. *peri*, around + *phero*, to bear.]

Per'i-phrase, } n. வளர்த்துப்பே
Pe-riph'rasis, } சல், மிகப்படக்கூறல், வாக்பாஹுள்ளியம், circumlocution, round-about mode of expression. [Gr. *peri*, about + *phrazo*, to speak.]

Per'i-phras'tic,—cal, a. வளர்த்துச் சொல்லப்பட்ட, circumlocutory.

Per'ish, vi. சா, அழி, நசி, நாசமாகு, க்ஷயி, die, be destroyed. [F.; L. *per*, through + *ire*, to go.]

Per'ishable, a. அழியக்கூடிய, நசிக்கத்தக்க, சாசுவதமல்லாத, அநித்தியமான, liable to perish, subject to destruction or death, mortal. [ள்ள தூண்வரிசை.

Peri'style, n. வீட்டைச்சுற்றிலுமு

Per'ito-ne'um, n. வயிற்றகத்தை மூடிய ஜவ்வு, ஆந்த்ரவேஷ்டனம்.

Per'iwig, n. கள்ளமயிர், பொய்மயிர், a head-dress of false hair, wig.

Per'i-win'kle, n. ஒருவித நத்தை; ஒருவிதமான புஷ்பம்.

Per'jure, vt. used *reflexively*. பொய்யாணையிடு, பொய் சத்தியம் பண்ணு, பிரமாணம்செய்து பொய் சொல், forswear, cause to violate an oath, as, to p. one's self. [F.; L. *per*, through, over + *juro*, to swear.]

Per'jured, a. பொய்யாணையிட்ட, பொய்சத்தியம் பண்ணின, சத்தியஞ் செய்து பொய்சொன்ன, having sworn falsely, forsworn.

Per'juror, n. பொய்யாணையிட்டவன், பொய்சத்தியம் பண்ணினவன், பிரமாணம்செய்து பொய் சொல்லுகிற குற்றம் செய்தவன், one who wilfully takes a false oath, one guilty of perjury.

Per-ju'rious, } a. பொய் சத்தியம்
Per'jurous, } பண்ணின; பொய்யாணை சம்.; guilty of or pert. to perjury.

Per'jury, n. அசத்தியம், அப்பிரமாணம், பொய்யாணை, பிரமாணஞ் செய்து பொய் சொன்னகுற்றம், false swearing. [fr. Perjure.]

Perk, vi. இருமாப்பாய் தலை நிமிர், பிலுக்குக்காட்டு, hold up the head pertly.—vt. கெர்வமாய் (தலை) நிமிர், hold up pertly, straighten up, erect.

Perk'y, a. ஒயிலான, உல்லாசமுள்ள, குசாலுள்ள, இறுமாப்புள்ள, jaunty, trim. [pearly.

Per-la'ceous, a. முத்துபோன்ற,

Per'manence, } n. ஸ்திரம், மாறா
Per'manency, } நிலை, நிலைப்பாடு, காயம், அசையாநிலை, சாசுவதம், நித்தியம், durability, fixedness, lastingness, everlastingness, perpetuity, endless duration. [fr. Permanent.]

Per'manent, a. ஸ்திரமான, நிலையான, சாசுவதமான, நித்தியமான,

அசையாத, மாறாத, lasting, durable, fixed, abiding, perpetual, changeless, unchanging; பக்கா அ-ய காயமான, not temporary. [L. *per*, through + *maneo*, to remain.]

Per′manently, *adv.* ஸ்திரமாய், நிலையாய், சாசுவதமாய், நிலைவரமாய், எப்பொழுதும், நித்தியமாய், for ever, lastingly.

Per′me-a-bil′ity, *n.* ஊடுருவிச் செல்லத்தக்கத் தன்மை, நுழையவிடும் குணம், penetrability.

Per′meable, *a.* ஊடுருவிச்செல்லத் தக்க, நுழையவிடுகிற, capable of being permeated or passed through, penetrable. [*see* Permeate.]

Per′meate, *vt.* இரந்திரங்கள்வழியாய் போ, ஊடுருவிச்செல், உட்செல், pass through the pores or interstices of, penetrate through without rupture or displacement of parts; எங்கும் பிரவேசித்து வியாபி, enter and spread through, pervade. [L. *per*, through + *meo*, to flow or pass.]

Per′me-a′tion, *n.* இரந்திரங்கள் வழியாய் நுழைந்துச் செல்லல், வியாபித்தல், permeating, passing through pores. [fr. Permeate.]

Per-mis′cible, *a.* கலப்புசெய்யக்கூடிய, கலக்கத்தக்க, மிசிரம்செய்யத் தக்க, capable of being mixed.

Per-mis′sible, *a.* அநுமதிகொடுக்கத் தக்க, உத்தரவு அ-து விடைகொடுக்கத்தக்க, ஒப்புக்கொள்ளக் கூடிய, wh. may be permitted, allowable, admissible.

Per-mis′sion, *n.* விடை, உத்தரவு, அநுமதி, permitting, leave, allowance, consent, authority, authorization, liberty, license. [fr. Permit.]

Per-mis′sive, *a.* உத்தரவு கொடுக்கிற, விடை அளிக்கும், ஒத்துக்கொள்ளுகிற, இடங்கொடுக்கிற, permitting.

Per-mit′, *vt.* விடைகொடு, உத்தரவு கொடு, விடு, இடங்கொடு, allow, let, consent to, suffer, give leave or liberty to.—Per′mit, *n.* அநுமதி, விடை, உத்தரவு, permission, leave, warrant, license. [L. *per*, through + *mitto*, to send.]

Per-mut′able, *a.* பரஸ்பரம் மாற்றத் தகுந்த, exchangeable.

Per′mu-ta′tion, *n.* பரஸ்பரம் மாற்றுதல், interchange; வரிசை, arrangement. [fr. Permute.]

Per-mute′, *vt.* ஒன்றிற்கு மற்றொன்றுமாற்று, interchange; வரிசை மாற்று, arrange. [L. pref. *per* + *muto*, to change.]

Per-ni′cious, *a.* கெட்ட, ஹானிகரமான, நாசகரமான, பாழ்படுத்துகிற, அழிக்கிற, கெடுக்கிற, injurious, hurtful, destructive, noxious, deleterious, harmful, baneful, ruinous. [L. *per*, thoroughly + *nex*, *necis*, death.]

Per′o-ra′tion, *n.* முடிவுரை, பிரசங்கத்தின் முடிவு வார்த்தைகள், the concluding part of an oration. [L. *per*, through + *oro*, to speak.]

Per′pen-dic′ular, *a.* செங்குத்தான, நிறுதிட்டமான, standing at right

angles; நீர்மட்டத்திற்கு நிறுதிட்டமான, vertical, upright.—*n.* லம்பரேகை, நிறுதிட்டகோடு, a line at right angles to another or to a plane. [L. *per*, inten. + *pendeo*, to hang.]

Per'pen-dic'u-lar'ity, *n.* நிறுதிட்டம், செங்குத்து, being at right angles to a line or a plane.

Per'petrate, *vt.* (துஷ்கிருத்தியம்) செய், குற்றஞ்செய், தவறுசெய், do, commit, be guilty of. [L. *per*, through + *patro*, to finish or perform.]

Per'pe-tra'tion, *n.* (குற்றஞ்) செய்தல், தவறுசெய்தல், perpetrating, commission, doing. [fr. Perpetrate.]

Per'pe-tra'tor, *n.* குற்றஞ்செய்வோன், அக்கிரமம்செய்வோன், the doer (of a wrong act).

Per-pet'ual, *a.* சாசுவதமான, நித்தியமான, everlasting, endless, eternal, permanent, lasting ; இடைவிடாத, ஓயாத, நிரந்தரமான, incessant, unceasing, constant, continual. [L. *per*, through + *peto*, to seek.]

Per-pet'ually, *adv.* சாசுவதமாய், எப்பொழுதும், நித்தியமும், ஓயாமல்.

Per-pet'uate, *vt.* சாசுவதமாயிருக்கும்படிசெய், ஸ்திரப்படுத்து, நிலைநிறுத்து, நீடித்திருக்கச்செய், make perpetual, preserve from extinction or oblivion, eternize, immortalize.—*a.* சாசுவதமான, நித்தியமான.

Per-pet'u-a'tion, *n.* சாசுவதமாயிருக்கும்படி செய்தல், ஸ்திரப்படுத்தல், making perpetual, preservation for ever.

Per'pe-tu'ity, *n.* ஸ்திரம், நித்தியத்துவம், சாசுவதத்துவம், permanence, lastingness, eternity; சாசுவதகாலம், endless time, eternity ; சாசுவதானுபவம்.

Per-plex', *vt.* கலவரப்படுத்து, மலைப்பி, குழப்பு, கலங்கடி, தொந்தரவு செய், சந்தேகத்தில்வை, puzzle, embarrass, bewilder, confuse, confound, distract, nonplus ; சிக்குப்படுத்து, involve, complicate. [L. *per*, inten. + *plecto*, *plexum*, to twist.]

Per-plex'ity, *n.* கலவரம், தடுமாற்றம், குழப்பம், பிரமிப்பு, சந்தேகம், சமுசயம், திகைப்பு, கலக்கம், மலைப்பு, embarrassment, bewilderment, doubt, distraction of mind, quandary, puzzle, nonplus; சிக்கு, complication, intricacy. [fr. Perplex.]

Per'quisite, *n.* சம்பளமல்லாமல் மேல்செலவுக்குக்கொடுத்தது, மேல்வரவு, something in addition to regular wages or salary, an extra allowance. [L. *per*, inten. + *quaero*, to seek.]

Per'ry, *n.* ஒருவித சாராயம்.

Per'secute, *vt.* விடாமல் பாதைப்படுத்து, ஹிம்ஸி, துன்பப்படுத்து, உபத்திரவஞ்செய், இடைஞ்சற்பண்ணு, இடுக்கண்செய், பீடி, harass, afflict, or annoy, persistently, pursue or beset with cruelty and malignity. [F.; L. *per*, inten. + *sequor*, to follow.]

Per′se-cu′tion, *n.* விடாவல் பாதித்தல், பிடித்தல், துன்பப்படுத்தல், ஹிம்சை, உபத்திரவப்படுத்தல், persistent annoyance, cruel treatment, or oppression. [fr. Persecute.]

Per′se-cu′tive, *a.* இடைவிடாமல் பிடிக்கிற, துன்பப்படுத்துகிற, persecuting.

Per′se-cu′tor, *n.* உபத்திரவப்படுத்துகிறவன், துன்பப்படுத்துகிறவன், பிடிக்கிறவன், பாதிக்கிறவன், one who persecutes or harasses, persistent oppressor.

Per′se-cu′trix, *n.* துன்பப்படுத்துகிறவள், ஹிம்ஸிக்கும் ஸ்திரீ.

Per′se-ver′ance, *n.* ஊக்கம், கடைப்பிடிப்பு, விடாமுயற்சி, ஸ்திரம், உறுதிநிலை, தாளாண்மை, indefatigableness, indefatigability, persistence, tenacity, steadfastness, assiduity. [fr. Persevere.]

Per′se-vere′, *vi.* ஒரே பிடியாய்ப்பிடி, உறுதியாய்நில், விடாமற்செய், முயற்சியாயிரு, pursue steadily any course begun, persist resolutely in anything undertaken. [L., *per*, inten. + *severus*, severe, strict.]

Per′se-ver′ing, *a.* விடாப்பிடியான, விடாமுயற்சியான, கடைப்பிடியான, persistent, assiduous.

Per′se-ver′ingly, *adv.* பிரயத்தனம் விடாமல், விடாப்பிடியாய், விடாமுயற்சியாய், சலிப்பற்று.

Per′si′flage′, *n.* கிர்லக்ஷ்யமான கேலி வார்த்தைகள், frivolous & jeering talk.

Per-sist′, *vi.* பிடிவாதமாய்நில், மூர்க்கம்செய், முரண்டாய்நில், பிடித்த பிடிவிடாமலிரு, அடம்செய், insist, be fixed or unmoved ; இன்னும் அப்படியேயிரு, continue. [F.; L. *per*, through + *sisto*, to stand.]

Per-sist′ence, / Per-sist′ency, *n.* மூர்க்கம், மூர்க்கப்பிடி, பிடிவாதம், சாதிப்பு, குரங்குப்பிடி, அடம், obstinacy ; இன்னும் அப்படியேயிருத்தல், continuance. [fr. Persist.]

Per-sist′ent, / Per-sist′ing, / Per-sist′ive, *a.* மூர்க்கப் பிடிவாதமுள்ள, மூர்க்கஞ்செய்கிற, பிடிவிடாத, முரண்டான, அடம்செய்யும், tenacious of purpose, firm and persevering in a course or resolve. [fr. Persist.]

Per′son, *n.* மனிதன், புருஷன், அ-து ஸ்திரீ, ஆள், a man or woman, a human being, an individual; சரீரம், தேகம், body ; உருவம், ரூபம், ஆகாரம், மூர்த்தி, outward appearance, form, shape and looks ; வியக்தி, ஒருவன், புருஷன், individuality ; நாடகத்திலவேஷம், நாடகபாத்திரம், a character or part in a play; (இலக்கணத்தில்) இடம், புருஷம். First, second, third p-s = தன்மை முன்னிலை படர்க்கை இடம். In p. = தானே, சுவயமாய், ஸாக்ஷாத்தாய், இன்னொருவன் மூலமாயல்லாமல், முகஸ்தமாய், நேரே, நேரில். [L. *persona*, a mask used by actors, hence, a character, a person, *per*, through +

sono, to sound : from the actor speaking through the large-mouthed mask.]

Per′sonable, *a.* அழகான, சுந்தரமான, சிறந்தருபமுள்ள, attractive in person, comely, graceful, of a well-formed body.

Per′sonage, *n.* பெரியமனுஷன், பிரபலமானவன், பெரியவன், பிரஸித்தி பெற்றவன், a notable or distinguished person.

Per′sonal, *a.* தன்னைப்பற்றின, தன், ஸ்வகீயமான, relating to, or affecting, an individual ; ஸ்வயமாய்செய்த, தானாய்செய்த, done in person ; சொந்த காரியங்களைக் குறித்த, relating to one's private actions, affairs or concerns; சரீர சம்., bodily, corporeal; மனுஷர் சம்., pert. to human beings. P. property = ஜங்கமரூபமான ஆஸ்தி, ஜங்கமசொத்து, அசையும் பொருள். P. pronoun = இடப்பிரதிப்பெயர், புருஷபோதக ஸர்வநாமம். [fr. Person.]

Per′son-al′ity, *n.* தன்மை, தனிரூபத்வம், ஏகத்துவம், individuality ; தூஷணை பிரஸ்தாபம், disparaging & offensive personal remarks. [fr. Personal.]

Per′sonally, *adv.* ஸ்வயமாய், தானே, ஸாக்ஷாத்தாய், ஸமுகத்தில், in person.

Per′sonate, *vt.* ஒருவனுக்குப் பதிலாய் பிரவர்த்தி, இன்னொருவன் வேஷம் போட்டுக்கொண்டு நடி, இன்னொருவன் ரூபந்தரி, assume the character of, act the part of, represent by a false appearance.

Per′son-a′tion, *n.* இன்னொருவன் ரூபம் தரித்தல், இன்னொருவனுக்குப்பதிலாய்ப் பிரவர்த்தித்தல், personating.

Per′son-a′tor, *n.* இன்னொருவனுக்குப்பதிலாய்ப் பிரவர்த்திக்கிறவன்.

Per-son′ifi-ca′tion, *n.* புருஷாரோபணம், மனுஷகுணாரோபணம், அசேதனங்களுக்கு மனுஷத்தன்மையுரைத்தல், representation of inanimate objects as living beings ; உருவம், ரூபம், உருவந்தரித்தல், embodiment. [fr. Personify].

Per-son′ify, *vt.* மனுஷதர்மங்களை ஆரோபி, சேதனத்வம் சாட்டிச்சொல், உருவகிக்கச்செய், represent as a living being, attribute human qualities to. [L. *persona*, person + *facio*, to make.]

Per-son′nel′, *n.* உத்தியோகஸ்தர்களின் தொகுதி, வேலைக்காரர், staff. [F., fr. *personne*, a person.]

Per-spec′tive, *n.* தூரத்தில் தோன்றுகிற வஸ்துக்களை தத்ரூபமாய் அ-து அவை யுள்ளவாறு எழுதும் சித்திரசாஸ்திரம், the art of representing solid objects on a flat surface; தரிசனம், தோற்றம், காட்சி, view. [F. & L., L. *per*, through + *specio*, to view.]

Per′spi-ca′cious, *a.* சூக்ஷ்மதிருஷ்டியுள்ள, தீக்ஷ்ணதிருஷ்டியுள்ள, கண்கூர்மையுள்ள, quick-sighted, sharp of sight ; நுண்ணறிவுள்ள, தீக்ஷ்ணயறிவுள்ள, of acute discernment, keen. [L. *per*, through + *specio*, to look.]

Per'spi-cac'ity, *n.* குசாக்கிரபுத்தி, தீக்ஷணபுத்தி, கண்கூர்மை, acuteness of sight, keenness of vision; கூர்அறிவு, நுண்ணறிவு, acute discernment or intelligence, penetration. [fr. Perspicacious.]

Per'spi-cu'ity, *n.* ஸ்பஷ்டம், தெளிவு, விளக்கம், விசிதம், clearness, lucidity, plainness, distinctness. [fr. Perspicuous.]

Per-spic'uous, *a.* விசிதமான, ஸ்பஷ்டமான, தெளிவான, மயக்கமற்ற, clear, lucid, plain, distinct. [L. *per,* through + *specio,* to look.]

Per-spir'able, *a.* வியர்வையுருபமாய்ப் போகத்தக்க.

Per'spi-ra'tion, *n.* வியர்வை, ஸ்வேதம், கசிவு, sweat; வியர்த்தல், perspiring. [fr. Perspire.]

Per-spir'ative, *a.* வியர்வை உண்டாகிற, வியர்க்கிற, கசிகிற.

Per-spir'atory, *a.* வியர்வை சம்., வியர்க்கிற, கசிகிற, pert. to or producing perspiration.

Per-spire', *vi.* வியர், கசி, வியர்வை உண்டாகு, sweat. [L. *per,* through + *spiro,* to breathe.]

Per-suad'able, *a.* இசையச்செய்யக்கூடிய, ஒப்பச்செய்யத்தக்க, வசப்படுத்தத்தக்க, உட்படுத்தத்தக்க, capable of being persuaded.

Per-suade', *vt.* போதி, போதித்து உட்படுத்து அ-து சம்மதிக்கச்செய், காரணங்காட்டி இசையச்செய், influence and gain over by argument and advice, convince, prevail on, win over, induce. [L. *per,* effectively + *suadeo,* advise, urge.]

Per-sua'sible, *a.* போதித்து சம்மதிக்கச்செய்யத்தக்க, persuadable.

Per-sua'sion, *n.* சம்மதிக்கச் செய்தல், போதித்தல், போதனை, வசப்படுத்துகை, persuading, convincing; நம்பிக்கை, மதம், கோட்பாடு, கொள்கை, சமயம், conviction, settled opinion, belief, faith, creed. [L.; fr. Persuade.]

Per-sua'sive, *a.* போதிக்கிற, சம்மதிக்கச்செய்கிற, வசப்படுத்துகிற, persuading, convincing.—*n.* சம்மதிக்கச்செய்வது, வசப்படுத்துவது, இழுக்கத்தக்கது, that wh. persuades, inducement, incitement, exhortation. [fr. Persuade.]

Pert, *a.* தலைகொழுத்த, அதிகப்பிரசங்கியான, குறும்புள்ள, மூர்க்கமான, impertinent, saucy, indecorously free or presuming, disrespectfully forward. [OF.]

Per-tain', *vi.* சம்பந்தப்படு, அடு, சார், சேர்ந்திரு, belong, appertain. [L. *per,* inten. + *teneo,* to hold.]

Pertaining, *pa.* சம்பந்தித்த, அடுத்த, சார்ந்த, சம்பந்தமான, belonging.

Per'ti-na'cious, *a.* மூர்க்கப்பிடிவாதமுள்ள, விடாப்பிடியான, பிடிவாதம் செய்கிற, அடமுள்ள, obstinate, stubborn, inflexible, unyielding. [L. *per,* inten. + *teneo,* to hold.]

Per'ti-nac'ity, *n.* மூர்க்கப்பிடிவாதம், விடாப்பிடி, அடம், முஷ்கரம், obstinacy, persistency, stubbornness. [fr. Pertinacious.]

Per'tinence, } *n.* பிரஸ்துத விஷயத்திற்கு சம்பந்தமிருத்தல், பொருத்தம், தகைமை, ஸங்கதம், relevancy. [fr. Pertinent.]
Per'tinency,

Per'tinent, *a.* பிரஸ்துத விஷயத்தோடு சம்பந்தப்பட்ட, யுக்தமான, ஸங்கதமான, பொருத்தமுள்ள, தகுந்த, ஏற்ற, relevant. [*see* Cog. Pertain.]

Pert'ly, *adv.* அவமரியாதையாய், முரட்டுத்தனமாய், indecorously.

Pert'ness, *n.* அவமரியாதையான நடத்தை, முரட்டுத்தனம், impudence, sauciness.

Per-turb', *vt.* அசையச்செய், கலக்கு, disturb, agitate; குழப்பு, கலக்கமுண்டாக்கு, disquiet, confuse, trouble. [L. *per*, inten. + *turbo*, to disturb, fr. *turba*, a crowd.]

Per'tur-ba'tion, *n.* குழப்பமுண்டாக்கல், கலவரப்படுத்தல், perturbing; கலவரம், குழப்பம், கலக்கம், வைகல்யம், agitation of mind. [fr. Perturb.]

Per'uke = Periwig.

Pe-rus'al, *n.* வாசித்தல், படித்தல், பாராயணம், படனம், வாசிப்பு, perusing, reading. [fr. Peruse.]

Pe-ruse', *vt.* வாசி, படி, பாராயணஞ்செய், read carefully or attentively, read through. [Pref. per, inten. + use.]

Per-vade', *vt.* இரந்திரங்கள் வழியாய் பிரவேசி அ-து நுழை, pass or flow through, permeate; வியாபி, நிரம்பு, பரவு, எங்கும் நிறைந்திரு, spread through the whole extent of, be diffused throughout. [L. *per*, through + *vado*, to go.]

Per-va'sion, *n.* எங்கும் வியாபித்தல், பரவுதல், pervading, spreading through every part. [fr. Pervade.]

Per-va'sive, *a.* வியாபிக்கிற, பரவுகிற, நிரம்புகிற, pervading, tending to pervade, thoroughly penetrating or permeating. [fr. Pervade.]

Per-verse', *a.* கோணல் புத்தியுள்ள, விபரீத புத்தியுள்ள, சொற்கேளாத, மூர்க்கமுள்ள, அடமுள்ள, obstinate in the wrong, wayward, stubborn, froward, ungovernable. [L. *perversus*, turned the wrong way, *per*, thoroughly, 'to the bad' + *verto*, to turn.]

Per-verse'ness = Perversity.

Per-ver'sion, *n.* சரியான மார்க்கத்திலிருந்து தப்பிப்போதல், அக்கிரமமான மாறுபாடு, புரட்டு, கேடு, கோணல், a turning to a wrong end or use. [fr. Pervert.]

Per-ver'sity, *n.* கோணலான புத்தி, கெடுதலான மாறுபாடு, விபரீதம், துஷ்டத்தனம், துர்க்குணம், துச்சிலம், wrong-headedness, perverse nature or behavior, perverseness. [fr. Perverse.]

Per-vert', *vt.* நல்லமார்க்கத்திலிருந்து தப்புவி, அக்கிரம ஸ்திதிக்கு மாற்று அ-து திருப்பு, விபரீத

மாறும்படிசெய், புரட்டு, மாற்று, கெடு, turn from the right way or course, alter for the worse, mislead.—Per′vort, n. நல்ல மார்க்கத்திலிருந்து கெட்ட மார்க்கத்திற்கு மாறினவன், one who has turned to error, renegado, apostate. [see Perverse.]

Per-vert′er, n. கெடுக்கிறவன்; நீதத்தை விபரீதமாய்த் திருப்புகிறவன்.

Per′vious, a. உட்புகத்தக்க, நுழையத்தக்க, ஊடுருவக்கூடிய, இரந்திரங்களுள்ள, வியாப்பியமான, penetrable, permeable. [L. per, through + via, a way.]

Pes′si-mism, n. உலக முழுவதும் கெடுதியாயும் கெடுதிக்கு அனுகூலமாயும் இருக்கிறதென்னும் அபிப்பிராயம், the doctrine that everything in nature is ordered for the worst. [L. pessimus, the worst.]

Pes′simist, n. சகலமும் துன்மார்க்கத்திற்கும் கெடுதிக்கும் அனுகூலமாய் ஏற்படுத்தப்பட்டதாயிருக்கிறதென்று தர்க்கிக்கிறவன், உலகத்திலுள்ளவற்றை யெல்லாம் கெடுதியாய் நினைப்பவன், one who believes in pessimism.—a.=Pessimistic. [fr. Pessimism.]

Pes′si-mis′tic, a. சர்வமும் கெடுதிக்கே யிருக்கிறதென்கிற, விசாரத்தோடு கூடியிருக்கிற, pert. to pessimism, gloomy. [fr. Pessimist.]

Pest, n. கொள்ளைநோய், பீடை, மாரி, பெருவாரி, தொத்துவியாதி, pestilence, plague, a fatal epidemic disease; உபத்திரவம், வாதை, தொந்தரவு, a source or cause of vexation, bother or annoyance, nuisance. [F. peste; L. pestis, a plague.]

Pes′ter, vt. தொந்தரவு செய், பீடி, அலட்டு, தொல்லைப்படுத்து, trouble, annoy, disturb. [abbre. fr. 'impestor', ori. to shackle the feet of a horse at pasture.]

Pes′t-house′, n. ரோகிகளின்சாலை.

Pes-tif′erous, a. ஒட்டிக்கொள்ளுகிற, தொத்துவியாதியான, வியாதியுண்டாக்குகிற, ரோகஜனகமான; உபத்திரவகரமான; விஷசகரமான; pestilential.

Pes′tilence, n. ஒட்டுவியாதி, மாரி, கொள்ளைநோய், தொத்துவியாதி, பீடை, any wide-spread and fatal infectious disease, epidemic; பீடை, உபத்திரவம், தொந்தரவு, வாதை, anything destructive of joy or peace. [L., fr. pestis, plague.]

Pes′tilent, } a. ஒட்டுவியாதியான, தொத்துவியாதியான, தொத்து வியாபிக்கும்,
Pes′ti-len′tial, } of the nature of a pestilence or plague, contagious; ரோகஜனகமான, கொள்ளை நோயுண்டாக்குகிற, producing pestilence; துஷ்ட, கெட்ட, ஹானிகரமான, உபத்திரவகரமான, hurtful, noxious, pernicious. [L.; see Pestilence.]

Pes′tle, n. உலக்கை, முஸலம், an instrument for pounding.—vt. குத்து, பொடியாக்கு, pound or pulverize with a p.. [OF. & L.; L. pinso, pistum, to pound. Cog. Piston, Pistil.]

Pet, *n.* அற்பகோபம், a slight fit of peevishness or fretfulness, anger; செல்லப்பிள்ளை, செல்வமாய் வளர்க்கப்பட்டது, a fondling, darling, a loved, cherished, or favorite animal or child.—*vt.* சீராட்டு, செல்வங் காட்டு, செல்வமாய் வளர், fondle, caress, indulge.

Pet'al, *n.* பூவிதழ், மடல், தளம், one of the leaves of a flower. [Gr. *petalon*, a leaf.]

Pet'aled, } *a.* இதழுள்ள, மடலுள்ள, தளங்களுள்ள,
Pet'alous, }
having petals.

Pe-tard', *n.* ஒருவித பீரங்கி.

Pet'iole, *n.* காம்பு, தாள், leaf-stalk, the footstalk of a leaf.

Pe-ti'tion, *n.* மனு, விண்ணப்பம், வேண்டுகோள், பிரார்த்தனை, விஞ்ஞாபனம், prayer, entreaty, request, imploration, supplication; அர்ஜி, மனு, a formal written request or application.—*vt.* பிரார்த்தி, வேண்டு, மன்றாடு, மனுக்கொடு, விண்ணப்பம் செய், solicit, entreat, request, make a prayer to, beg. [L. *petitio*, fr. *peto*, to seek.]

Pe-ti'tionary, *a.* பிரார்த்திக்கும், பிரார்த்தனை ரூபமான, விண்ணப்பம் செய்கிற, supplicatory. [fr. Petition.]

Pe-ti'tioner, *n.* பிரார்த்திக்கிறவன், விண்ணப்பக்காரன், மனுதாரன், one who presents a petition. [fr. Petition.]

Pet'ri-fac'tion, } *n.* கல்லாகுகை; கல்லாக்குகை;
Pet'rifi-ca'tion, }
changing into stone. [fr. Petrify.]

Pet'rify, *vt.* கல்லாக்கு.—*vi.* கல்லாகு. change into stone. [L. *petra*, a stone + *facere*, to make.]

Pe-tro'leum, *n.* சிலாதைலம், கல்மதம், மண்ணெண்ணெய், rock-oil, mineral oil. [L. *petra*, rock + *oleum*, oil.]

Pet'ticoat, *n.* பாவாடை, பெண்களின் ஆடை, a loose under-garment worn by women. [petty, short, small + coat.]

Pet'ti-fog'ger, *n.* அற்பவியாஜ்ஜியங்களைப்பிடிக்கும் வக்கீல், சின்ன வக்கீல், an inferior lawyer.

Pet'ti-fog'gery, *n.* மோசம், தந்திரம், பித்தலாட்டம், disreputable tricks.

Pet'ti-fog'ging, *a.* நீசமான, இழிவான, க்ஷுத்திரமான, paltry, mean. —*n.* மோசம், பித்தலாட்டம், தந்திரம், mean tricks.

Pet'tish, *a.* எளிதில் கோபம்வருகிற, fretful, peevish; கோபமான, கோபமாயிருக்கிற, moody, sullen.

Pet'ty, *a.* சின்ன, சிறிய, சொற்பமான, அற்பமான, little, trifling, inconsiderable, small, insignificant, trivial; நீசமான, இழிவான, low, base. [F. *petit*, little, small.]

Pet'ulance, } *n.* முன்கோபம், கோபகுணம், வெடுவெடுப்பு,
Pet'ulancy, }
temporary peevishness, pettishness, capricious ill-humor, freakish passion. [fr. Petulant.]

Pet'ulant, *a.* முன்கோபியான, எளிதில் கோபப்படுகிற, வெடுவெடுப்பான, peevish, capriciously fretful, irritable, cross, ill-humored, snappish. [L. *petere*, to attack.]

Pew, n. ஒருவித நாற்காலி.

Pe′wit=Lapwing.

Pew′ter, n. கல்லீயம், வெள்ளீயம், an alloy consisting of tin and lead.

Phae′ton, n. ஒருவிதமான நாலுசக்கர குதிரைவண்டி. [after Phaethon of Gr. mytho. who tried to drive the chariot of his father, the Sun.]

Pha-lan′ges, n. *pl.* of Phalanx. விரல் எலும்புகள், அங்குளாஸ்திகள்.

Pha′lanx, n. வியூகம், பந்தி, அணி, any body of troops formed in close array; விரல் எலும்பு, அங்குளாஸ்தி, one of the bones of the fingers or toes, a digital bone. [Gr.]

Phal′lic, a. லிங்க சம்., லிங்கத்திற்குரிய, pert. to phallus.

Phal′lus, n. லிங்கம், ஆண்குறி, the emblem of the generative power in nature. [Gr. *phallos*.]

Phan′tasm, n. பிரமையினால் உண்டாகும் தோற்றம், மாயாரூபம், பூதம், பிசாசு, phantom, a shadowy or airy appearance; பிராந்தி, மனோபாவனை, மானஸகல்பனை, பிரமை, fancy. [Gr. 'to show'.]

Phan-tas′ma-go′ria, n. இந்திரஜாலம், மாயாரூபங்கள் காண்பிக்கும் வித்தை, an optical effect produced by a magic lantern.

Phan′tasy=Fancy.

Phan′tom, n. பூதம், பிசாசு, பேய், apparition, specter, phantasm, sprite, spirit; வெறும்பிரமை, மாயை, மானஸகல்பனை, மனத்தோற்றம், மனக்காட்சி, an ideal image.

Phar′i-sa′ic, Phar′i-sa′ical, a. கள்ளபக்தியுள்ள, கள்ளாசாரமுள்ள, நிஜபக்தியில்லாமல் வெறும் அனுஷ்டானமுள்ள, pert. to, or resembling, the pharisees, making a show of religion, hypocritical, ceremonial.

Phar′isee, n. யூதரில் ஒருவகுப்பான்; கள்ளபக்தியுள்ளவன், கள்ளாசாரக்காரன். [L.& G., fr. He. *parash*, to separate.]

Phar′ma-ceu′tic, Phar′ma-ceu′tical, a. மருந்து செய்யும் வேலை சம்., மருந்து கூட்டும் சாஸ்திரத்தை ஒட்டின, pert. to pharmacy.

Phar′ma-ceu′tics, n. *sing.* மருந்துகள் செய்யும் முறைகளை பற்றின சாஸ்திரம், ஔஷதயோகம், the science of preparing medicines, pharmacy. [Gr. *pharmakon*, a drug.]

Phar′maco-poe′ia, n. மருந்துகள் செய்வதைக்குறித்த கிரந்தம், a book or treatise describing the drugs, preparations &c. used in medicine. [Gr. *pharmakon*, a drug or medicine + *poiein*, to make.]

Phar′macy, n. மருந்துகள் கூட்டும் வேலை, ஔஷதயோகம், the art of preparing and compounding medicines. [F.; Gr. *pharmakon*, medicine.]

Pha′ros = Light-house.

Phar′ynx, n. கப்தபதம்.

Phase, } n. காணப்படும் பாகம்,
Pha'sis, } காண்பிக்கும்பக்கம், தோற்றம், காட்சி, தரிசனம், aspect, appearance; அவஸ்தை, தசை, ஸ்திதி. Phases of the moon = சந்திரகலைகள். [F.; Gr. *phasis*, fr. *phainomai*, to appear.]

Pheas'ant, n. மயில்போன்ற ஒரு பக்ஷி.

Phe'nix, n. செத்து செத்து திரும்பத்திரும்ப பிழைக்குமென்று சொல்லப்படும் கவிகல்பிதமான ஒரு பக்ஷி. [Gr.]

Phe-nom'enal, a. காணப்படுகிற, கோசரமாகிற, outward, apparent.

Phe-nom'enon, n. (*pl.* Phenomena.) தோற்றம், காணப்படுவது, கோசரமானது, an appearance, anything visible or observable; அற்புதம், உத்பாதம், நூதனக்காட்சி, புதுமை, an uncommon or inexplicable fact, marvel, prodigy. [Gr. *phainomai*, to appear, *phaino*, to show.]

Phi'al, n. குப்பி, சீசா, புட்டி, a small bottle, vial. [L. & Gr.]

Phil'an-throp'ic, } a. லோகோ
Phil'an-throp'ical, } பகாரியான, சர்வஜன ஹிதேச்சையுள்ள, தயாளுவான, லோகோபகார (க)மான, l o v i n g or helping mankind, benevolent, humanitarian.

Phi-lan'thropist, n. லோகோபகாரி, தயாளு, சர்வமானிட கோடியை நேசிக்கிறவன், பரோபகாரி, a lover of mankind.

Phi-lan'thropy, n. தயாளுத்வம், சர்வஜன ஹிதேச்சை, சகலமானிட கோடிகளின்பேரில் அன்பு, love towards mankind. [Gr. *philos*, loving + *anthropos*, a man.]

Phi-lip'pic, n. தூஷணபிரசங்கம், an impassioned speech or declamation characterized by bitter or acrimonious invective.

Phil'o-log'ic, } a. பாஷாதத்
Phil'o-log'ical, } துவசம்., pert. to philology.

Phi-lol'ogist, n. சப்த உத்பத்தி சாஸ்திரம் தெரிந்தவன், one versed in philology.

Phi-lol'ogy, n. சப்த உத்பத்தி சாஸ்திரம், பாஷாதத்துவம், linguistic science, linguistics. [Gr. *phileo*, to love + *logos*, a word.]

Phil'omath, n. வித்துவாம்சன், கல்விப்பிரியன், பண்டிதன், a lover of learning, scholar.

Phi-lom'athy, n. வித்தையில் வாஞ்சை, கல்விப்பிரியம், the love of learning or letters.

Phil'omel, } =Nightingale.
Phil'o-me'la, }

Phil'o-pro-gen'itive, a. சந்தான இச்சையுள்ள, சந்ததி உண்டாக வேண்டுமென்னும் ஆசையுள்ள, having the love of off-spring, desirous of children.

Phi-los'opher, n. ஞானி, தத்துவ சாஸ்திரி, தத்துவஞானி, one who is versed in or devoted to, or conforms his life to, the principles of philosophy. P.'s stone= சிந்தாமணி, ஸ்பரிசவேதிமணி

பொன் செய்யுந்துணிகை. [Gr. *philos*, loving + *sophos*, wise.]

Phil'o-soph'ic, } **Phil'o-soph'ical,** } *a.* தத்துவஞான சம்., தத்துவசாஸ்திரத்திற்குரிய, pert. to philosophy; தத்துவஞானியான, நிச்சிந்தைபாவமுள்ள, imbued with the principles of philosophy, wise, temperate, calm, cool, serene, self-restrained, thoughtful, rational. [fr. Philosophy.]

Phi-los'ophize, *vi.* தத்துவம் விசாரி, அ-து பேசு, முதற்காரணங்களை விசாரி, seek ultimate causes and principles, theorize.

Phi-los'ophy, *n.* தத்துவஞானம், தத்துவசாஸ்திரம், தர்க்கம், வேதாந்தம், கலைஞானம், சாஸ்திரம், the knowledge of the ultimate principles, causes and laws; ஞானம், சமபாவம், calm and unexcitable state of mind, equable temper, equanimity, fortitude, stoicism, practical wisdom. [*see* Philosopher.]

Phil'ter, *n.* வசியமருந்து, வசிகரணசூரணம், வசிப்புமருந்து.—*vt.* வசியமருந்துகல, வசிகரணசூரணம்சேர்.

Phiz, *n.* முகாகிருதி, முககாரம்.

Phle-bot'omize, *vt.* சரீரத்திலிருந்து இரத்தம் குத்திவாங்கு.

Phle-bot'omy, *n.* சரீரத்திலிருந்து இரத்தம் குத்தி எடுத்தல், blood-letting.

Phlegm, *n.* கபம், கோழை, சிலேஷ்மம், viscid mucus secreted in the digestive and respiratory passages, bronchial mucus; நிர்லக்ஷியம், indifference; மந்தம், dullness. [Gr. 'a slimy humor', fr. *phlego*, to burn.]

Phleg-mat'ic, } **Phleg-mat'ical,** } *a.* கபமுள்ள, சளியுள்ள; கபகரமான; abounding in, or generating or causing, phlegm; மந்தமான, நிச்சிந்தை பாவமுள்ள, not easily excited, cold, dull, sluggish, heavy. [fr. Phlegm.]

Pho-net'ic, *a.* ஸ்வர சம்., சப்தத்திற்குரிய, pert. to the voice; சப்தத்தை குறிக்கும், representing sounds. [Gr., fr. *phone*, voice, sound.]

Pho-net'ics, } **Phon'ics,** } *n. sing.* ஸ்வரசாஸ்திரம், சப்தசாஸ்திரம், the science of articulate sounds.

Pho'nograph, *n.* சப்தத்தை கிரகித்து மறுபடியும் அதுபோல உச்சரிக்கும் யந்திரம், an instrument for recording and reproducing sounds. [Gr. *phone*, sound + *grapho*, to write.]

Pho-nol'ogy = Phonetics.

Phos'phor-es'cence, *n.* சூடில்லாமல் பிரகாசிக்குந்தன்மை, the property of emitting light without sensible heat.

Phos'phor-es'cent, *a.* சூடில்லாமல் பிரகாசம் மாத்திரமுள்ள, luminous without sensible heat.

Phos'phorus, *n.* காற்றில் வைத்தமாத்திரத்தில் எரியும் ஒரு பதார்த்தம், பாஸ்வரம், கிபாக்கினி. [L.; Gr. *phosphoros*, the morning star, lit. light-bringer, fr. *phos*, light + *phero*, to bring.]

Pho′tograph, *n.* யந்திரத்தினலெடுக்கப்பட்ட ரூபம், சித்திரம், அ-து படம். [Gr. *phos, photos,* light + *grapho,* to draw.]

Pho-tog′rapher, *n.* யந்திரத்தினல் ரூபம் எடுக்கிறவன், one who practices or is skilled in photography. [fr. Photograph.]

Pho-tog′raphy, *n.* யந்திரத்தினல் ரூபம் எடுத்தல்.

Pho′tosphere, *n.* தீப்திகோளம்.

Phrase, *n.* சம்பூர்ணவாக்கியமல்லாத பதகூட்டம், வாக்கியபாகம், தொடர் மொழி, கூட்டுச்சொற்கள்; வாசகப்போக்கு அ-து நடை, சைலி, style.—*vt.* வார்த்தைகளால் சொல்லு, பதங்களில் வை, express in words; பேர்வை, கூப்பிடு, call, style. [Gr. *phrasis.*]

Phra′se-ol′ogy, *n.* வாசகப்போக்கு, சப்தசமுதாயம், manner of expression, diction, style. [Gr. *phrasis,phraseos,* phrase + *logos,* science.]

Phre-net′ic,—cal, *a.* பித்தங்கொண்ட, வெறியுள்ள, mad, frantic.

Phre-nol′ogist, *n.* கபாலபரீக்ஷை தெரிந்தவன், craniologist.

Phre-nol′ogy, *n.* கபாலபரீக்ஷை, கபாலத்தின் வடிவைக்கொண்டு மனிதனுடைய குணசாமர்த்தியங்களைச் சொல்லும்சாஸ்திரம், கபாலலக்ஷணவித்தை, கபாலசாமுத்திரிகம், craniology. [Gr.*phren, phrenos,* the mind + *logos,* discourse.]

Phren′sied, *a.* வெறியுள்ள, உன்மத்தனன, பைத்தியம்பிடித்த, mad.

Phren′sy, *n.* பைத்தியம், உன்மத்தம், சித்தப்பிரமை, ஆவேசம், madness.—*vt.* வெறி அ-து பைத்தியம்பிடிக்கச்செய், render frantic. [*see* Frenzy.]

Phthis′ic, *n.* க்ஷயரோகம், காசம், consumption. [Gr. 'a wasting', *phthio,* to waste away.]
Phthi′sis (தைஸிஸ்), *n.* க்ஷயரோகம், காசம், consumption. [Gr. 'a wasting', *phthio,* to waste away.]

Phthis′ical, *a.* க்ஷயரோகமுள்ள, காசமுள்ள, consumptive.

Phy-lac′tery, *n.* இரக்ஷாபந்தனம், தாயித்து, a charm or amulet.

Phys′ic, *n.* வைத்தியம், சிகிச்சை, the science of medicine, the art of healing; ஔஷதம், மருந்து, a medicine, a remedy for disease; பேதிமருந்து, விரேசனத்திற்கு ஔஷதம், cathartic, a purge.—*vt.* மருந்து கொடு, சிகிச்சைசெய், give medicine to, treat with medicine; நன்றக்கு, சொஸ்தப்படுத்து, heal, cure; பேதிமருந்து கொடு, விரேசனமருந்துகொடு, administer a purge or cathartic to. [Gr. *physikos,* natural, *physis,* nature, *phyo,*to bring forth.Cog. Sk. *bhu,* to be.]

Phys′ical, *a.* ஸ்தூலதிரவியசம்., ஜடமான, இந்திரிய கோசரமாகிற, பிரகிருதி சம்., material, perceived by the senses; சரீர சம்., bodily.[*see* Physic.

Phy-si′cian, *n.* வைத்தியன், சிகிச்சை செய்கிறவன், a doctor of medicine. [*see* Physic.]

Phys′ic-nut′, *n.* (English p.) நேர்வாளம்; (French p.) ஆக்ரோட்டு; (angular-leaved p.) நேர்வாளம்; காட்டு ஆமணக்கு.

Phys'ics, n. sing. பதார்த்தவிஞ்ஞான சாஸ்திரம், பௌதிக சாஸ்திரம், the science or group of sciences treating of the phenomena of matter, natural philosophy. [see Physic.]

Phys'i-og'nomist, n. முகசாமுத்திரிகன், one skilled in physiognomy.

Phys'i-og'nomy, n. முகசாமுத்திரிகம், முகலக்ஷண நிருபணம், முகலக்ஷணங்களினால் குணங்களைத் தெரிந்துகொள்ளும் சாஸ்திரம், the art of reading character by (the features of) the face; முகாகிருதி, the face or features as revealing character or disposition, form or expression of countenance, face. [Gr. physis, nature + gnomon, one who knows.]

Phys'io-log'ical, a. ஜந்துதேகதர்ம சாஸ்திர சம்., pert. to physiology or the functions of living organisms. [சாஸ்திரி.

Phys'i-ol'ogist, n. ஜந்துதேஹதர்ம

Phys'i-ol'ogy, n. ஜந்துதேஹ தர்ம சாஸ்திரம், the branch of biology wh. treats of the phenomena of living organisms. [F.; Gr. physis, nature + logos, discourse.]

Phy-sique', n. தேகதத்துவம், ஒருவன் தேகஸ்திதி அ-து குணம், தேகக்கூறு, the natural constitution or physical structure of a person. [F.; see Physic.]

Pi'al, n. திண்ணை.

Pi-a'no, Pi-an'o-for'te, } n. சங்கீத பெட்டி, வாத்தியப்பெட்டி, a percussive stringed musical instrument. [It. piano, soft, smooth, (L. planus, plain) + forte (L. fortis), strong: from producing both soft & loud effects.]

Pi-az'za, n. நடை மண்டபம், சாலை, உட்பிராகாரம்.

Pi'ca, n. ஒருவித அச்செழுத்து. [L. pix, picis, pitch: ori. 'a great black letter.'] [கள்ளன். [Sp.]

Pic'a-roon', n. கப்பல்கள்ளன், கடற்

Pice, n. பைசா, தம்பிடி, காசு, துட்டு. [In.]

Pick, vt. கொத்து, peck at, prick; கொத்தியெடு, குத்தியெடு, எடுத்துக்கொள், separate by means of a sharp point; (பூ-மு.வை) கிள்ளிசேர், கொய், pluck, gather, cull; தெரிந்தெடு, பொறுக்கு, select, choose. P. a pocket = ஜேபியிலிருப்பதைத் திருடு. P. a quarrel = சண்டை உண்டாக்கிக்கொள். P. a hole in one's coat = ஒருவன்மேல் தப்பு பிடி.—vi. கொஞ்சம் கொஞ்சம் தின், eat slowly, nibble; திருட்டுத்தனஞ்செய், கள்ளத்தனம் பண்ணு, steal, pilfer.—n. கூரான கருவி அ-து சாதனம், a sharp pointed tool for picking, as, a tooth-p.; இஷ்டமானதை தெரிந்தெடுத்துக்கொள்ளல், choice, right of selection; தெரிந்தெடுத்துக் கொள்ளப்பட்டது, சிரேஷ்ட பாகம், what has been picked for excellence, the best. [AS.]

Pick'-axe, n. பிக்காசு, கட்டப்பாரை, இருதலைக் குந்தாலி.

Pick'er, n. கூரானகருவி; சண்டை உண்டாக்கிக்கொள்ளுகிறவன்.

Pick′et, n. கூராய்ச் செதுக்கினமரம், கொடிக்கோல், a pointed stick or post, a pole ; கூரான மரத்தின் மேல் நிறுத்தும் சிகைகூடி, கழு, கழுவேற்றும் தண்டனை.—vt.சுற்றிலும் கொடிக்கோல் நாட்டு, inclose or fence with p-s. [F.]

Pick′ing, n. தெரிந்தெடுத்துகொள்ளல், பொறுக்குதல் ; திருடுதல்.

Pic′kle, n. ஊறுகாய்போடும் நீர், a preserving and flavoring liquid; ஊறுகாய், அடைகாய், an article of food preserved in p. ; போக்கிரி;தொந்தரவு.—vt.உப்பில்போடு, ஊறவைத்து கெட்டுப் போகாமலிருக்கச்செய், ஊறுகாய்போடு, preserve or season in p., make p. of. [Du. ' brine'.]

Pick′-lock, n. சாவியில்லாமல் பூட்டைத்திறக்கும் சாதனம், கள்ளத்திறப்பு,கள்ளசாவி, an instrument for opening a lock without the regular key, a false key ; பூட்டுகளைத்திறந்து திருடுகிறவன், a person who picks locks, burglar.

Pick′-pock′et, n. ஜேபிலிருந்து வஸ்துக்களை திருடுவோன், முடிச்சுமாறி, முடிச்சவிழ்ப்போன், மடிபறி கள்ளன், one who steals articles from pockets.

Pick′-purse′, n. பணப்பை திருடுவோன், one who steals purses (or money from them.)

Pick′-wick′, n. தீபவர்த்தி தூண்டும்கோல் அ-து குச்சி.

Pic′nic, n. வனபோஜனம், an outdoor pleasure party, usually held in the woods.—vi. வனபோஜனஞ்செய், dine at a p..

Picota, n. ஏற்றம், ஏற்றமரம், a water-raising device or water-lift. [Hi.]

Pic-to′rial, a. சித்திரசம்.; படத்திற்குரிய; சித்திரங்கள் எழுதியிருக்கிற, சித்திரங்களால் நிறைந்த, pert. to, or illustrated by, pictures. [L. *pictor*, a painter.]

Pic′tural, a. சித்திர சம்., படத்திற்குரிய, pert. to pictures.

Pict′ure, n. சித்திரம், படம், பிரதிமை, பொம்மை, போலி, போலியது, any surface representation, image, likeness, drawing, portrait, painting, sketch.—vt. சித்திரமெழுது, படமெழுது, draw or paint a resemblance or likeness of, portray; வர்ணி, depict; தெளிவாய் உருவத்தை ஞாபகத்திற்கு வரவழைத்துக்கொள், bring before the mind's eye, form a mental image of,imagine,image. [L. *pictura*, fr. *pingo*, *pictum*, to paint.]

Pic′tur-esque′, a. சித்திரசமானமான, சித்திரம்போன்ற, படம்போன்ற, படமெழுதத்தக்க, forming or fitted to form a good or pleasing picture; சுந்தரமான,அழகான,சிருங்காரமான, beautiful, rich in design, relief, & color; ஸ்பஷ்டமாய் வர்ணிக்கப்பட்ட, graphic, vivid. [It. & F.]

Pid′dle, vi. மூத்திரம்பெய்.

Pid′dling, a. அற்பமான.

Pie, n. சுகியம், பஜ்ஜி, மு.மாப்பண்டம், an article of food consisting of paste baked with something in it ; தம்பிடி, பைசா.[C.]

Pie′bald, *a.* நானாவர்ணமான, பலநிறமுள்ள, mottled. [pie, magpie + bald, spotted with white.]

Piece, *n.* துண்டு, கண்டம், பத்தை, சக்கை, சிராய், part, portion, fragment, bit; துணித்தான், a definite quantity of cloth in one length; பதாவது ஒரு வஸ்து, an individual article. Of a p.= ஒரேமாதிரியான. A fowling p.= வேட்டைத்துப்பாக்கி. A field p. = சின்னபீரங்கி. A p. of water= நீர்நிலை, ஏரி, ஜலாசயம்.—*vt.* துண்டு போட்டிணைத்து பெரிதாய்ச்செய் அ-து நன்றாக்கு, இணை, ஒட்டுப்போடு, add or attach a p. or p-s to for enlargement or repair, join as one.—*vi.* இணை, கூடு, சேர், join, fit together. [F., fr. Low L. *petium.*]

Piece′-goods, *n. pl.* தான்களாய்விற்கப்படும் துணிச்சரக்குகள், goods generally sold by pieces or fixed portions.

Piece′less, *a.* ஒன்றான, அகண்டமான, அபின்னமான, துண்டுகள் சேர்த்ததல்லாத, entire.

Piece′meal′, *adv.* துண்டு துண்டாய், சின்னாபின்னமாய், in pieces, piece by piece.—*a.* துண்டுகள் சேர்த்துச்செய்த, துண்டுதுண்டான, made up of pieces, fragmentary; வேறான, single, separate. [piece + AS. *mæl,* a portion, *mælum,* by parts.]

Pied, பலவர்ணமான, party-colored.

Piep, *n.* வாத்துக்குஞ்சுச்சத்தம்.

Pier, *n.* வாராவதித்தம்பம், பாலத்தூண், one of the supports of the arches of a bridge; கடலில் கொஞ்சம்தூரம் வரையில் கட்டின வாராவதி, கப்பற்துறைவாராவதி, a mole or jetty carried into the sea, a projecting wharf. [OF., L., & Gr. 'a stone'.]

Pierce, *vt.* குத்து, பாய்ச்சு, உட்செலுத்து, குற்று, penetrate with a pointed instrument or thrust it into, stab, prick; உட்செல், குத்திநுழை, enter, pass through.—*vi.* ஊடுருவு, நுழை, enter, penetrate. [F.] [ருசி ; பரமா.

Pier′cer, *n.* தமர்செய்யும் கருவி, தம

Pier′cing, *a.* கூரான, தீக்ஷணமான, சுருக்கான, penetrating, keen.

Pi′etism, *n.* பக்தி, கடும்பக்தி, strict devotion; கள்ளபக்தி, affectation of devotion.

Pi′etist, *n.* கள்ளபக்தியுள்ளவன், one who makes a display of strong religious feeling.

Pi′ety, *n.* தேவபக்தி, தைவபக்தி, தர்மநிஷ்டாபரத்துவம், veneration & reverence of the Supreme Being, devotion, godliness, devoutness, religiousness; பக்தி, விசுவாஸம், குருத்வம், reverence, respect. [L. *pietas,* fr. *pius,* pious.]

Pig, *n.* பன்றிக்குட்டி, a young swine or hog; பன்றி, a swine, hog; இரும்பு மு-வற்றின் பாளம், மாழை, an oblong mass of cast iron &c..—*vi.* (பன்றி) குட்டிகள் போடு, பன்றியீனு, bring forth (pigs); பன்றிக்குட்டிகள்போல்

படுத்துக்கொள், huddle or lie together. [AS.]

Pi′geon, *n.* புறு, மாடப்புறு, கபோதம், dove. [F., fr. L. *pipio*, to peep or chirp.]

Pi′geon-heart′ed, *a.* பிரிக்இயான, கோழைநெஞ்சமுள்ள, chicken-hearted, timid.

Pi′geon-hole′, *n.* புறுக்கூட்டின் துவாரம்; பெட்டியில் காகிதங்கள் வைத்துக்கொள்ளும் அறை.—*vt.* மேசை அறையில் போட்டுவை; பெட்டி. அறையில் வைத்து மறந்துபோ.

Pig′eon-pea, *n.* துவரைவிதை, the seed of *Cajunus Indicus*.

Pig′-head′ed, *a.* மூர்க்கனான, பிடிவாதமுள்ள, அடங்காத, சண்டியான, stupidly obstinate, stubborn, perverse.

Pig′-i′ron, *n.* பாள இரும்பு, cast iron in pigs or oblong blocks or [bars.

Pig-me′an=Pygmean.

Pig′ment, *n.* வர்ணம், சாயம், வர்ணமை, வர்ணப்பசை, any coloring material, paint, dye; தேன் கலந்த சாராயம். [L., fr. *pingo*, [to paint.]

Pig′my=Pygmy.

Pig′nut, *n.* வேர்க்கடலை, ground-[nut.

Pig′sty′, *n.* பன்றிக்கூடு.

Pig′tail, *n.* பின்தொங்கும் மயிர்ப் பின்னல், ஜடை.

Pike, *n.* ஈட்டி, வல்லையம், வேல்; ஒருவகைமீன். [F. *pique*.]

Pike′man, *n.* ஈட்டி சிப்பாய்.

Pi-las′ter, *n.* மூன்றுபாகம் சுவரோடு கலந்தாற்போல் கட்டின ஸ்தம்பம் அ-து தூண்.

Pile, *n.* குவியல், அடுக்கு, இராசி, போர், heap; சிறுமயிர்; மயிர்.—*vt.* குவி, குவியலாக்கு, அடுக்கு, சேர், heap, up, accumulate, amass. [AS. & F.]

Piles, *n. pl.* மூலவியாதி, hemorrhoids. [L. *pila*, a ball.]

Pil′fer, *vt.* & *vi.* அற்பகளவுசெய், திருடு, கிமிண்டு, steal, filch, practice petty theft. [OF., fr. *pelfre*, goods, spoil, booty. Cog. Pelf.] [a petty thief.

Pil′ferer, *n.* அற்பகளவுசெய்கிறவன்,

Pil′grim, *n.* யாத்திரிகன், தீர்த்தயாத்திரைசெய்கிறவன், புண்ணியஸ்தலத்திற்குப் போகிறவன், தீர்த்தவாஸி, one who travels far to visit a holy place or shrine as a devotee; பிரயாணி, தேசாந்தரி, பரதேசி, traveler. [Du. & Da., fr. L. *peregrinus*, a traveller, *per*, through + *ager*, land.]

Pil′grimage, *n.* தீர்த்தயாத்திரை, a journey to a shrine or other sacred place. A place of p.= புண்ணியக்ஷேத்திரம் அ-து ஸ்தலம், யாத்திரை ஸ்தலம், தீர்த்தம். [fr. Pilgrim.]

Pill, *n.* மாத்திரை, குளிகை, உருண்டை, a little ball of medicine. [L. *pilula*, dim. of *pila*, a ball.]

Pil′lage, *n.* கொள்ளை, சூறை, plunder; கொள்ளையடித்த பொருள் அ-து சொத்து, plunder, spoil, booty. —*vt.* கொள்ளையடி, சூறையாடு, plunder, despoil, rob opelny and with violence. [F., fr. *piller*, to plunder.]

Pil′lager, *n.* கொள்ளையடிப்போன், கொள்ளைக்காரன், plunderer.

Pil′lar, *n.* ஸ்தம்பம், தூண், column, post, pier; ஆதாரம், support, prop. [F., fr. L. *pila*, a column.]

Pil′lared, *a.* ஸ்தம்பங்களால் சுமக்கப்பட்டிருக்கிற அ-து தாங்கப்பட்ட; தூண்களுள்ள; supported by or on, or having, pillars.

Pil′lory, *n.* & *vt.* ஒருவிததண்டனைப் பலகை; அப்படிப்பட்ட பலகையிலே சிக்ஷைசெய். [F.]

Pil′low, *n.* தலையணை, திண்டு, a cushion used as a head-rest.—*vt.* தலையணைமேல்வை அ-து சாய், rest or lay upon a p. [L. *pulvinus*.]

Pil′low-case′, *n.* தலையணையுறை.

Pi-lose′, *a.* மயிரால் மூடப்பட்டிருக்கிற, hairy. [L. *pilosus*, *pilus*, hair.]

Pi-los′ity, *n.* மயிருண்டாயிருத்தல், hairiness.

Pi′lot, *n.* கப்பல்சுக்கான் திருப்புகிறவன், கப்பலோட்டி, மாலுமி, helmsman, steersman.—*vt.* செலுத்து, நடத்து, சரியானவழியில் கொண்டுபோ, steer, g u i d e in sailing. [F.; Du. 'p l u m m e t', 'sounding lead'; lit. 'the lead man i. e. he who throws the lead'.]

Pi′lotage, *n.* கப்பலை சரியான வழியில் நடத்துதல், s t e e r ing; கப்பலோட்டுங்கூலி, மாலுமியின் சம்பளம், the remuneration of a pilot.

Pil′otry, *n.* கப்பலோட்டுதல், steering.

Pil′ule, *n.* சிறுமாத்திரை, a little pill, pellet. [dim. of Pill.]

Pi-mon′ta, *n.* ஒருவிதமிளகு.

Pimp, *n.* கூட்டிக்கொடுப்போன் அ-து கொடுப்பவள், படவா, procurer or procuress.—*vi.* கூட்டிக்கொடு, கூட்டிவிடு, procure, pander.

Pim′ple, *n.* பரு, சினப்பு, வேர்க்குரு, a small excrescence on the skin. [nasalized form of L. *papula*.]

Pimpled, } *a.* பருவுள்ள, சினப்புள்ள, வேர்க்குருவுள்ள, having pimples.
Pim′ply, }

Pin, *n.* குண்டூசி; மரஆணி, முளை, குச்சு, peg.—*vt.* குண்டூசியினால் குத்திசேர் அ-து சேர்த்துக்கட்டு, fasten with a p., join. [AS.; L. *pinna*, feather, pen.]

Pin′cers, *n. pl.* சாவணம், சிராவணம்; குறடு, இடுக்கி; pinchers, nippers. [F. *pincer*, to pinch.]

Pinch, *vt.* கிள்ளு; இடுக்கு; நுள்ளு, பற்று; விரல்நுனிகளினிடையில் இடுக்கு, அடக்கு; press hard or squeeze bet. the ends of the fingers or the like, nip; வருத்தப்படுத்து, வாதி, distress.—*n.* கிள்ளு, நுள்ளு, a close compression bet. the fingers, a nip; சிட்டிகை, விரல்கள் நுனிக்கிடையில் பிடித்துவாங்கும் அளவு, சிறுக்கு, as much as may be taken bet. a finger & the thumb; சங்கடம், கஷ்டம், a gripe, a pang, distress, difficulty. [F. *pincer*, to pinch.]

Pinch′beck, *n.* பதினொருபாகம் செம்பும் மூன்றுபாகம் துத்தநாகமும்

சேர்ந்துக்கலந்த லோகம். [From the name of the inventor, a London watch-maker.]

Pinch′ers, *n.pl.* சாவணம், சிராவணம்; குறடு, இடுக்கி; pincers, nippers.

Pin′-cush′ion, *n.* குண்டூசி குத்திவைப்பதற்கு சிறுதிண்டுபோன்றது.

Pine, *n.* [L. *p i n u s.*] தேவதாரு மரம்.—*vi.* [AS.] துக்கம் பயம் வாஞ்சை மு-வற்றினுல்சோர், கூடி, உலர், மெலி, இளை, languish, waste away, as from grief or longing for something.

Pine′-ap′ple, *n.* அன்னுசிப்பழம்; அன்னுசிமரம்.

Pin′fold, *n.* தொழு, தொழுவம், an inclosure for animals, penfold, (cattle) pound.

Pin′ion, *n.* பக்ஷிசிறகு, wing; இலகு, feather, wing-quill; யந்திரங்களிலிருக்கும் பற்களுள்ள சிறுசக்கரம், a small toothed wheel, a small cogwheel or gear-wheel.—*vt.* இறகை மடக்கி அசையாமல் கட்டு, bind the arms or wings of; சங்கிலிபோடு, அசையாமற்செய், shackle, bind. [OF. *pignon*; L. *pinna.*]

Pink, *n.* ஒருவகைப்புஷ்பம்; பன்னீர்ப்பூவின்வர்ணம், இளஞ்சிவப்பு, குலாபிநிறம், a pale rose color, very light red.—*a.* இளஞ்சிவப்பான, நீர்க்காவிவர்ணமான.—*vt.* தொளையிடு, குத்து; நீர்க்காவிவர்ணம்போடு அ-து தோய்.

Pres'to, adv. விரைவாய், அகஸ்மாத்

Pre-sum'able, a. எண்ணத்தக்க, நினைக்கத்தக்க, நம்பத்தக்க, ஊஹிக்கத்தக்க, wh. may be presumed, or supposed, to be true, fit to be assumed as true.

Pre-sume', vt. எண்ணு, நினை, வெகு

சாய் ஆகுமென்று நம்பு, ஊஹி, பாவி, assume, take or suppose to be true, take for granted.—*vi.* எண்ணிக்கொள், நினைத்துக் கொள், நம்பு, suppose or assume something to be true, believe in anticipation of grounds or evidence; கர்வத்துடன் நடந்து கொள், அஹங்காரப்படு, கர்வப்படு, செருக்குக்கொள், behave arrogantly or without proper respect. [L. *prae*, before + *sumo*, I take]. [gant.

Presuming, *a.* கர்வப்படுகிற, arro-

Pre-sump′tion, *n.* வெகுசாய் ஆகுமென்று நம்புதல், நம்பிக்கை, presuming, assuming, believing upon probable evidence; நம்பப்பட்டவிஷயம் அ-து சங்கதி, that wh. is presumed or assumed; கர்வம், அஹங்காரம், செருக்கு, arrogance, presumptuousness. [F. & L.; see Presume.]

Pre-sump′tive, *a.* ஊஹிக்கப்பட்ட, வெகுசாய் நிஜமென்றுநம்பப்பட்ட, based on presumption or probability, grounded on probable evidence, probable.

Pre-sump′tuous, *a.* கர்வமுள்ள, அஹங்காரமுள்ள, செருக்குள்ள, arrogant, insolent, taking liberties unduly, assuming too much, audacious; அதி அ-து அமித தைரியம் (நம்பிக்கை) உள்ள, over-confident, foolhardy, rash. [see Presume.]

Pre′sup-pose′, *vt.* முந்தி ஊஹி அ-து எண்ணு, suppose beforehand, imply as antecedent, involve or require as a necessary condition. Knowledge p-s diligence = சிரத்தையாய் கஷ்டப்படுகிறதினாலேயே அறிவுண்டாகும்.

Pre-sup′po-si′tion, *n.* முந்தியூஹித்தல், முன்னெண்ணம், a previous supposition, an antecedent implication.

Pre-tence′ = Pretense.

Pre-tend′, *vt.* & *vi.* கபடமாய்நட, பாசாங்குகாட்டு, வேஷம்போடு, நடி, டக்குசெய், feign, simulate, affect, make false representation or appearance, hold out or allege falsely; தனக்கு ஹக்கு அ-து பாத்தியதை உண்டென்று (பொய்யாய்) வாதி அ-து வழக்காடு, lay a claim to, allege a title to. [L. *prae*, before + *tendere*, to reach or stretch.]

Pre-tend′ed, *a.* கபடமான, பாசாங்குள்ள, கள்ளத்தனமான, டக்கான, வியாஜமான, உண்டாக்கிக்கொண்ட, false, unreal.

Pre-tend′er, *n.* நடிக்கிறவன், கபடி, டக்குசெய்கிறவன், பாசாங்கன், டக்காளி, one who pretends or feigns, dissembler, hypocrite; தனக்கு ஹக்கு அ-து உரிமை உண்டென்று பொய்யாய் வாதிக்கிறவன், a false claimant.

Pretending, *a.* மாயவேஷம் போட்டுக்கொண்ட, நடிக்கிற, பாசாங்கு செய்கிற.

Pre-tense′, *n.* நடிப்பு, கபடப்பிரவர்த்தனை அ-து நடை, டக்கு, வேஷம், pretension, affectation, show,

mask, dissimulation ; சாக்கு, போக்கு, வியாஜம், கிபம், pretext, feint, excuse; பொய்யாய் உரிமைக் காக வாதித்தல், claiming falsely. [see Pretend.]

Pre-ten'sion, *n.* பாசாங்கு, நடிப்பு, டக்கு, வியாஜம், pretending, affectation, false appearance, dissimulation; பொய்யுரிமைக்காக வாதம், claiming falsely; டம்பம், ஜம்பம், பெருமை, boast. [fr. Pretend.]

Pre-ten'tious, *a.* கர்வமுள்ள, அஹங் காரங்கொண்ட, டம்பமாய்ப் பேசு கிற, ஜம்பமடிக்கிற, பெருமை பாராட்டுகிற, full of pretension, claiming more than one's due, presuming, assuming, conceited. [see Pretend.]

Pret'erit, } *a.* கடந்த, சென்ற, இறந்த
Pret'erite, } தகாலத்து.—*n.* இறந்த காலம். [L. 'gone by', *praeter*, beyond + *ire*, to go.] [போ.

Pre'ter-mit', *vt.* விட்டுவிடு, கடந்து

Pre'ter-nat'ural, *a.* சுபாவந்தப்பின, இயல்புக்கு விரோதமான, விபரீத மான, abnormal, uncommon, strange, unnatural. [L. *praeter*, beyond + natural.]

Pre'ter-per'fect, *a.* நடந்தேறிய.

Pre'text, *n.* சாக்கு, போக்கு, வியா ஜம், கிபம், pretense, excuse, ostensible reason. [F.; L.; L. *prae*, before + *texere*, to weave.]

Pret'tily, *adv.* சொகுசாய், நேர்த்தி யாய், சிறப்பாய், அழகாய், மனோ ஹரமாய், முச்சட்டையாய், handsomely, pleasingly.

Pret'tiness, *n.* சொகுசு, சிறப்பு, சிருங்காரம், மனோஹரம், நேர்த்தி, அழகு, அலங்காரம், handsomeness, neatness.

Pret'ty, *a.* சொகுசான, சுந்தரமான, சிறப்பான, நேர்த்தியான, அழகான, முச்சட்டையான, pleasing, handsome, somewhat beautiful, neat, elegant, fine.—*adv.* கொஞ் சம், கொஞ்சமாய், ஒருவாறு, in some degree, moderately, rather, tolerably.

Pre-vail', *vi.* பரவியிரு, வியாபித்தி ரு, சாதாரணமாயிரு, செல்லு, be current or in force, obtain ; மே ற்கொள், ஜயங்கொள், கெலி, வெல் லு, பிரபலமாகு, செல்லு, succeed, prove superior, have the upper hand, triumph. P. upon = சம்ம திக்கச்செய், இணக்கு, வசியப்படு த்து, ஒப்பச்செய், persuade, induce. [F.; L. *prae*, before + *valere*, to be strong.]

Pre-vail'ing, *a.* வியாபித்திருக்கிற, சாதாரணமாயிருக்கிற, பரவியிருக் கும், prevalent, most general, predominant, current ; பிரபலமா ன, சொல்லும், efficacious, powerful.

Prev'alence, } *n.* வியாபித்திருத்தல்,
Prev'alency, } சாதாரணமாயிருத்த ல், விஸ்தாரமாய்உண்டாயிருத்தல், பரவியிருத்தல், general existence, occurence or acceptance; பிரபல ம், செல்லுதல், பலத்தில்மிஞ்சியிரு த்தல், superior strength, force or influence. [F. & L.; fr. Prevail.]

Prev'alent, *a.* வியாபித்திருக்கும், வி ஸ்தாரமாயிருக்கும், சாதாரணமாயி ருக்கிற, பரவியிருக்கும், prevailing,

wide-spread, general, common, current, most generally received; பிரபலமான, பலத்திலமிஞ்சின, successful, predominant. [L.; fr. Prevail.]

Pre-var′icate, *vi.* நிஜம்சொல்லாமல் தப்பித்துக்கொள், மெய்பேசாமல் தப்பித்துக்கொள், இரண்டர்த்தமாகும்படிசொல், evade, equivocate, shuffle, quibble. [L. 'to straddle', 'to swerve', *prae*, before + *varicare*, to straddle, *varus*, bent.]

Pre-var′i-ca′tion, *n.* இரண்டர்த்தமாகும்படி சொல்லல் அ-து பேசுதல், மெய்சொல்லுவதினின்று தப்பித்துக்கொள்ளல், shuffling, quibbling, evasion. [fr. Prevaricate.]

Pre-var′i-ca′tor, *n.* இரண்டர்த்தம்கொள்ளும்படி பேசுவோன் அ-து சொல்லுவோன்.

Pre-ven′ient, *a.* முன்னேபோகிற.

Pre-vent′, *vt.* தடு, தடைசெய், தடைப்படுத்து, விலக்கு, நீக்கு, தவிர், நிறுத்து, hinder, stop, thwart, obstruct, ward off, preclude, obviate. [L. *prae*, before + *venio*, I come.]

Pre-ven′tion, *n.* தடை செய்தல் அ-து படுத்தல், preventing, obstruction; தடை, தடங்கல், இடையூறு, அப்பியந்தரம், that wh. prevents, hindrance, obstruction, restraint, obstacle. [fr. Prevent.]

Pre-vent′ive, *a.* தடைச்செய்யும், வராமல் தடுக்கும், உண்டாகாதபடிச்செய்கிற, preventing or tending to prevent, obviating.—*n.* தடங்கல் ஹேது, தடைப்படுத்தும்காரணம், that wh. prevents, a means of preventing; நோய்வராமல் முன்னால் உட்கொள்ளும் மருந்து, a means to prevent disease; முன்ஜாக்கிரதையாய் செய்யும் காரியம் அ-து உபாயம், a precautionary measure. [fr. Prevent.]

Pre′vious, *a.* முந்தின, சென்ற, பூர்வத்து, existing or happening before something else, preceding, antecedent, prior, foregoing. [L. *prae*, before + *viâ*, the way.]

Pre′viously, *adv.* முந்தி, முன்னால், முன்னே, பூர்வம், beforehand, antecedently.

Pre′vi′sion, *n.* முன்னோக்கம், முன்னுணர்ச்சி, பூர்வதிருஷ்டி, foresight, foreknowledge. [Pref. pre + vision.]

Pre-warn′, *vt.* முன்னெச்சரி, முன்ஜாக்கிரதைசொல்.

Prey, *n.* பலாத்காரமாய்ப்பிடித்துக்கொள்ளப்பட்டது, இரை, ஆஹாரம், that wh. is seized (by an animal) to be devoured, any animal seized by another for food, quarry, victim; கொள்ளை (ப்பொருள்), சூறைப்பொருள், கொள்ளையடிக்கப்பட்டது, booty, spoil. A beast of p. = மற்ற ஜந்துக்களைக் கொன்றுதின்கும் ஜெந்து, குரூரஜெந்து. — *vi.* கொள்ளையடி, ravage. P. on or upon = கொன்றுதின்; மெலியச்செய், cause to waste or pine away. [OF., fr. L. *preda*, plunder.]

Price, *n.* விலை, கிரயம், value, worth, cost; பிரதிபலம், வெகுமதி, கைம்மாறு, recompense, reward.—*vt.* விலைமதி, கிரயம்போடு, set a p. on, value. [OF. *pris*; F. *prix*; L. *pretium*. Cog. Praise, Prize, *v.*]

Priced, *a.* (ஒரு) விலையுள்ள, valued, costing.

Price′less, *a.* விலையற்ற, விலைமதிக்கக்கூடாத, அமூலியமான, invaluable, of inestimable worth, beyond price or valuation; உதவாத.

Prick, *vt.* குத்து, புடை, pierce, drive a sharp point into; நோவுண்டாக்கு, pain, sting; தொளையுண்டாக்கு, puncture; நேராய் நிறுத்து, உயர்த்து, raise, erect; சவாரிசெய்யும்போது குதிரையின் பக்கத்தில் காலால் குத்து அ-து புடை, spur, goad.—*vi.* புளிப்பாகு; குதிரையின் மேல்போ.—*n.* கூரானது, குத்துவது, தைப்பது, முள், கூர், that wh. p-s, any sharp-pointed thing, a thorn, prickle; நோவு, a sharp stinging pain; பச்சாத்தாபம், அனுதாபம், remorse; குத்தியுண்டாக்கிய குறி அ-து குறிப்பு, a mark made by pricking; தொளை, இரந்திரம், a puncture. [AS.]

Prik′er, *n.* குத்துவதற்கு அ-து புடைப்பதற்கு கூரான கருவி; குதிரைச்சவாரி செய்பவன்.

Pric′kle, *n.* சிறுமுள் அ-து ஊசிபோன்றது, a little prick, a small sharp point.

Prick′ly, *a.* முள்ளுள்ள, full of or covered with prickles; குத்துகிற, தைக்கும், நோவுண்டாக்குகிற stinging.

Prickly-heat, *n.* வேர்க்குரு.

Prickly-pear, *n.* சதுரக்கள்ளி, நாகதாளி. [sharp.

Prick′y, *a.* கூரான, முட்போன்ற,

Pride, *n.* கர்வம், அஹங்காரம், அஹம்பாவம், மதம், அகந்தை, இறுமாப்பு, செருக்கு, conceit, self-conceit, inordinate self-esteem, vanity, haughtiness; அஹங்காரகாரணம், ஒருவன் கர்வமடைவதற்குக் காரணமாயிருப்பது, that of wh. one is proud; ஆடம்பரம், show, ostentation.—*vt.* (used *reflexively*) கர்வப்படு, அகந்தை கொள், indulge in p., plume. [AS.]

Priest, *n.* குரு, ஆசாரியன், புரோஹிதன், clergyman, minister; அர்ச்சகன், one who officiates at the altar. [AS., fr. L. *presbyter*, elder.]

Priest′craft′, *n.* மதாசாரியர்கள் தங்கள் பிரயோஜனத்திற்காகச் செய்யும் மாயம் அ-து தந்திரம், priestly policy, the policy of a priesthood, intrigue and imposition as practiced by priests.

Priest′ess, *n.* அர்ச்சகஸ்திரீ, a woman who exercises priestly functions.

Priest′hood, *n.* குருத்தொழில், புரோஹிதத்துவம், the office or character of a priest; குருக்கள், புரோஹிதர், priests (collectively), the order of priests, priestly order.

Priest′ly, *a.* மதாசாரியர் சம்., pert. to a priest, sacerdotal. [fr. Priest.]

Priest′-rid′den, *a.* குருக்கள் கைக்குட்பட்ட, புரோஹிதாதீனமான, completely under the influence or domination of priests.

Prig, *n.* கர்வி, அகங்காரி, வீம்பன், பிலுக்கன், a pert. conceited fellow.

Prim, *a.* சொகுசான, டம்பமான, பிலுக்கான, affectedly neat or nice, precise, formal.—*vt.* அலங்கரி, சொகுசாய்முஸ்திபுசெய், அழகாய்த்திருத்து, deck with great nicety. [OF. 'first', 's h a r p', fr. L. *primus*, first.]

Pri′mal, *a.* முதலான, ஆதியான, first, primary, original; பிரதானமான, முக்கியமான, chief. [L. *primus*, first.]

Pri′marily, *adv.* முதலாவது, முதலில், in the first place, originally; பிரதானமாய், முக்கியமாய், chiefly.

Pri′mary, *a.* முதலான, பிரதம, ஆரம்பமான, first, original, primitive, fundamental; பிரதானமான, முதன்மையான, முக்கியமான, chief, principal. [L. *primarius*, fr. *primus*, first.]

Pri′mate, *n.* பிரதாஞசாரியன், பிரதானகுரு, archbishop. [F., fr. L. *primus*, first.]

Prime, *a.* முதல், பிரதம, ஆதி, first, original, primeval, primitive, primary; பிரதானமான, principal, chief; மேன்மையான, excellent. P. cost=கொண்டவிலை. P. number=எந்த எண்ணினாலும் வகுக்கப்படாதஎண்.—*n.* பிரதமபாகம், ஆரம்பம், தொடக்கம், ஆதி, மூலம், the first part, the earliest stage, the beginning; யௌவனம், வாலிபம், பருவம், youth, full health & strength, the spring of life; பரிபூர்ணதசை அ-து ஸ்திதி, perfection; சிரேஷ்டபாகம், மேலானபாகம், the best part.—*vt.* துப்பாக்கிப் பற்றுவாயில்மருந்திடு, apply priming to. [L. *primus*, first, superl. of *prior*, former.]

Prim′er, *n.* பிரதமபாடபுஸ்தகம், பாலபோதபுஸ்தகம், முதல்பாடபுஸ்தகம், a small elementary book; ஒருவித அச்சுஎழுத்து. [F. *primaire*, elementary, fr. L. *primus*, first.]

Pri-me′val, *a.* ஆதியான, முதல்முதலான, ஆதியிலிருந்த, original, primitive, pristine, primary, aboriginal. [L. *primus*, first + *aevum*, age.]

Prim′ing, *n.* துப்பாக்கிபற்றுவாய் மருந்து, the powder used to ignite the charge; முதல்வர்ணப்பூச்சு, the first layer or coating of paint.

Prim′itive, *a.* ஆதியான, முதலான, original, primeval, first; பிராசீனமான, பூர்வ, பழைய, தொன்றுதொட்ட, ancient; உற்பத்தி சம்., pert. to the beginning or origin.—*n.* மூலபதம், பகாப்பதம், பிராதிபதிக (சப்த)ம், an original or primary word. [L. *primitivus*, earliest of its kind, *primus*, first.]

Prim′ly, *adv.* சொகுசாய், அழகாய்.

Prim′ness, *n.* அழகு, அந்தம்.

Pri'mo-ge'nial, *a.* முன்பிறந்த, ஜேஷ்டனை.

Pri'mo-gen'itor, *n.* வமிசத்தின் ஆதிபுருஷன், கோத்திரபிதா. [L. *primus*, first + *genitor*, father.]

Pri'mo-gen'iture, *n.* ஜேஷ்டத்துவம், அக்கிரஜத்துவம், முதல்பிறப்பு, seniority by birth, being the first-born child of the same parents; ஜேஷ்டபுத்திரனுக்குவாரஸத்துவம், ஜேஷ்ட புத்திரனுக்குள்ள உரிமை அ-து பாத்தியதை, the right of the eldest son to inherit the real estate of the father. [L. *primus*, first + *genitura*, birth, fr. *genere*, to beget.]

Pri-mor'dial, *a.* ஆதியான, சிருஷ்டிப்பில் முதலாவதான, ஆரம்பமான, first, primary, original. [L. *primus*, first + *ordiri*, to begin.]

Prim'rose', *n.* ஆனைநெருஞ்சிபோன்ற ஒரு பூ. [F. *primerole*, fr. L. *primus*, first : as the first flower of spring.]

Prince, *n.* ராஜகுமாரன், இளவரசன், the son of a king or emperor, a male descendant of a royal house or family; அரசன், இராஜன், மன்னன், king, sovereign, monarch. [F.;L. *princeps*, *principis*, *primus*, first + *capio*, I take.]

Prince'dom, *n.* ராஜகுமாரத்துவம் அ-து ராஜத்துவம்; இராஜ்ஜியம், அரசாட்சி; the state, rank, or jurisdiction, of a prince.

Prince'liness, *n.* இராஜகுமாரத்துவம், ராஜகுமாரகுணம் அ-து சுபாவம், princely nature.

Prince'ly, *a.* ராஜகுமார சம்., pert. to a prince; ராஜயோக்கியமான, அரசனுக்குரிய அ-து தகுந்த, regal, royal, suitable for or becoming to a prince; கனமான, மகத்துவமான, மாட்சிமையான, grand, magnificent, august; உதாரமுள்ள, munificent.—*adv.* இராஜனுக்குத்தகுந்தபடி, in a p.manner. [fr. Prince.]

Prin'cess, *n.* இராஜகுமாரி, ராஜகுமாரத்தி, அரசன்மகள், the daughter of a sovereign, a female member of a royal family; அரசன்மனைவி, இராணி, the consort of a prince; இராஜ்ஜியம் ஆளுமிராணி, a queen or a female ruler or sovereign. [fem. of Prince.]

Prin'cipal, *a.* முக்கியமான, பிரதானமான, முக்கியனான, தலைவனான, முக்கியரான, chief, main, most considerable or important.—*n.* முக்கியன், தலைவன், பிரதான உத்தியோகஸ்தன், leader, chief, head; பிரதான உபாத்தியாயர், the head teacher or master of a school; முதல், மூலதனம், அஸல், a capital sum of money lent on interest. [L. *principalis*, fr. *princeps*, first in time or order, a chief.]

Prin'ci-pal'ity, *n.* ஆதிபத்தியம், பிரபுத்துவம், supreme power; ராஜ்ஜியம், the territory or jurisdiction of a prince. [F.; see Principal.]

Prin'cipally, *adv.* முக்கியமாய், chiefly.

Prin'ciple, *n.* மூலம், பீஜம், மூலகாரணம், fundamental or primordial substance, ultimate element or cause; சூத்திரம், நீதிசூத்திரம், விதி, a fundamental or general truth, law, doctrine, an elementary proposition, maxim; நியமம், பத்ததி, ஒழுக்கம், rule of action or conduct; சாரம், சத்து, essence; ரீதி, பத்ததி, மார்க்கம், வழி, rule, method, way. [F. *principe*; L. *principium*, beginning, foundation.]

Prin'cipled, *a.* ஏதேனும் நியமங்களை அ-து முறைமைகளை அனுசரிக்கும், நீதியுள்ள, தர்மமான, holding, or based on, certain principles.

Print, *vt.* முத்திரைப்போடு, பதி, impress, stamp, make a mark or marks upon; அச்சுப்போடு, take or strike off an impression from type.—*n.* முத்திரை, பதிப்பு, stamp, mark; அச்சு, the impression taken from type; சமாசாரப் பத்திரிகை, newspaper; சீட்டித்துணி, a printed cloth, a fabric figured by stamping. [shortened from 'Imprint'; see Impress.]

Print'er, *n.* அச்சடிக்கிறவன், அச்சுப் போடுகிறவன், one who prints books &c., pressman. [fr. Print, *v.*]

Print'ing, *n.* அச்சடித்தல், அச்சுப் போடுதல், typography, presswork.

Print'ing-press', *n.* அச்சுயந்திரம், a press for printing books &c.

Pri'or, *a.* மற்றொன்றுக்கு முன்னுகும், முன்நடந்த, முந்தின, preceding in time, antecedent, previous, earlier.—*n.* சந்நியாசிகளின் மடாதிபதி, a monk or monastic officer next in rank below an abbot. [L. compa. 'former', 'better'.]

Pri'oress, *n.* சந்நியாசஸ்திரீகளின் மடத்தலைவி, a nun next in rank below an abbess. [fem. of Prior, *n.*]

Prior'ity, *n.* மற்றொன்றுக்கு முன்னுகுதல், முன்னுயிருத்தல், பூர்வம், antecedence, precedence; மற்றொருவனுக்கு மேலாயிருத்தல், ஆதிக்கம், சிரேஷ்டத்துவம், முதன்மை, superior rank. [fr. Prior, *a.*]

Pri'ory, *n.* சன்னியாசிமடம், a religious or monastic house next in dignity below an abbey. [fr. Prior, *n.*]

Prism, *n.* சமமான பக்கங்களுள்ள கோல். [L. & Gr. *prisma*, lit. 'a sawn piece', fr. *prizo*, to saw.]

Pris-mat'ic, *a.* சமமான பக்கங்களுள்ள கோல் சம். [fr. Prism.]

Pris'on, *n.* சிறைச்சாலை, காவல்வீடு, காராகிருகம், பந்தேகானு, jail, penitentiary, a place of confinement.—*vt.* சிறைச்சாலையிலடை. [F. *prison*, fr. L. *prehensio*, a seizing.]

Pris'oner, *n.* சிறைசாலையில் இடப்பட்டவன், காவலில் போடப்பட்ட

வன், கைதி; பிடிக்கபட்டவன்; one who is confined in a prison or a person under arrest or in custody. [F.; see Prison.]

Pris'tine, *a.* ஆதியான, முதலான, புராதன, பூர்வமான, primitive, original, primeval. [OF. fr. L. *pristinus*, ancient, former.]

Prith'ee, cor. of 'praythee' உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன் அ-து பிரார்த்திக்கிறேன்.

Pri'vacy, *n.* இரஹசியம், அந்தரங்கம், குப்தம், மறைப்பு, concealment, secrecy, seclusion from company or observation; ஏகாந்த (ஸ்தல)ம், retirement, solitude. [see Private.]

Pri'vate, *a.* சொந்தகாரிய சம்., ஸ்வகீயமான, மற்றவர்களுடன் சம்பந்தமில்லாத, சர்வஜனவிஷயமல்லாத, one's own, personal, not public or general, unconnected with others; ஏகாந்தமான, தனிமையான, lonely, solitary, secluded; இரஹசியமான, secret. In p.= இரஹசியமாய், தனியாய்.—*n.* சேனையில்சிப்பாய், படைசேவகன், a common soldier, a soldier in the ranks. [L. *privatus*, fr. *privo*, to separate, *privus*, separate.]

Pri'va-teer', *n.* சத்துருக்களின் வியாபாரக் கப்பல்களைப் பிடிப்பதற்கு அனுப்பப்படும் போர்க் கப்பல். [fr. Private.]

Pri'vately, *adv.* இரஹசியமாய், ஏகாந்தமாய், அந்தரங்கமாய், தனியே, குப்தமாய்; சொந்த காரியமாய் அ-து காரியத்தில்.

Pri-va'tion, *n.* இன்மை, அபாவம், குறைவு, absence, negation, want; ஆஹாரம் முதலியவையின்மை, கஷ்டம், சங்கடம், destitution, need, want, want of the common comforts of life. [L. *privatio*, fr. *privo*, to bereave.]

Priv'ative, *a.* இல்லாமல் செய்கிற, குறைவுண்டாக்கும், depriving; அபாவார்த்தகமான, அபாவத்தை தெரிவிக்கும், இன்மைக்காட்டும், negative.—*n.* அபாவார்த்தகபதம் அ-து உபசர்க்கம். [see Privation.]

Priv'ilege, *n.* விசேஷாதிகாரம், உரிமை, சலக்கரணை, right, prerogative. — *vt.* விசேஷாதிகாரங் கொடு, grant some particular right or exemption to, authorize. [L. *privus*, private + *lex*, *legis*, law.]

Priv'ileged, *a.* விசேஷாதிகாரங்கொடுக்கப்பட்ட, ஆதிக்கமுள்ள, invested with a privilege, enjoying a peculiar right, advantage or immunity. [fr. Privilege.]

Priv'ily, *adv.* இரஹசியமாய், privately, secretly.

Priv'ity, *n.* இரஹசியம், அந்தரங்கம், privacy, secrecy, confidence; இரஹசியத்தைஅறிந்திருத்தல், உடன்பாடு, private knowledge, joint knowledge, with anothr, of a private concern; இரஹசிய (விஷய)ம், a private matter or business, a secret; p-ties, *pl.* மர்மஸ்தானங்கள், the private parts, the genitals. [fr. Privy, *a.*]

Priv′y, *a.* சொந்த, ஸ்வகீயமான, private, personal; இரகசியமான, ஏகாந்தமான, அந்தரங்கமான, குப்தமான, மறைவான, secret, clandestine; இரகசியமறிந்த, சகசாரியான, உடந்தையான, privately knowing, secretly aware.—*n.* கொல்லை, சௌசஸ்தலம், latrine. [F. *privé* ; L. *privatus*.]

Prize, *n.* வெகுமானம், வெகுமதி, பேறு, பந்தயம், reward ; லாபம், பேறு, gain ; கொள்ளைப்பொருள், கொள்ளை (சொத்து), that wh. is taken from another by violence, something captured or taken from an enemy.—*vt.* விலைமதி, விலைபோடு, appraise ; பெரிதாயெண்ணு, மதி, வெகுமானி, value highly, esteem. [F. *prise*, a seizing, L. *prehendo*, to seize. Cog. Prison. —F. *priser*, to value, fr. L. *pretium*, price.]

Prize-fight, *n.* பந்தயப்போர் அ-து குஸ்தி, மல்லயுத்தம், மற்போர், a fight between professional pugilists for a wager or prize.

Prize-fighter, *n.* மல்லன், மற்போர் செய்வோன், a professional boxer or pugilist, one who fights publicly for a reward.

Priz′er, *n.* விலைமதிக்கிறவன்.

Pro, *a Latin prep.* அநுகூலபக்ஷமாய். P. and con (*pro et contra*) =அநுகூலமாயும்பிரதிகூலமாயும், for and against. P-s and cons= அநுகூலபிரதிகூல பக்ஷமான வாதஙகள் அ-து ஹேதுக்கள்.

Prob,a-bil′ity, *n.* வெகுசாய் நடக்கும் என்றுச் சொல்லத்தக்கின ஸ்திதி, சம்பவிக்கக்கூடிய தன்மை, likelihood, chance. [fr. Probable.]

Prob′able, *a.* வெகுசாய் ஆகத்தக்க, நடக்ககூடிய, நம்பக்கூடிய, likely. [F., fr. L. *probabilis*, wh. may be proved, provable, *probare*, to prove.]

Prob′ably, *adv.* வெகுசாய், வெகுவாய், அநேகமாய், likely, in all probability or likelihood, as is probable.

Pro′bate, *n.* மரணசாதன பிரமாணம் அ-து ருஜு. [L. *probare*, to prove.]

Pro-ba′tion, *n.* பரிசோதனை, பரீக்ஷை, அருகத்துவவிசாரணை, trial, test ; பரிசோதனைகாலம், அருகம் அ-து தகுதி நிச்சயிப்பதற்கு காலம், the period of trial. [L., fr. *probare*, to try, prove.]

Pro-ba′tional, } *a.* பரீக்ஷிக்கிற, தகுதிநிச்சயிக்கிற,
Pro-ba′tionary, } serving or intended for trial.

Pro-ba′tioner, *n.* பரீக்ஷிக்கப்படுகிறவன், புதுசீடன், புதிதாய் வேலை கற்றுக்கொள்ளுகிறவன், one who is undergoing probation or is on trial, novitiate. [fr. Probation.]

Pro′bative, *a.* யோக்கியதை நிச்சயிப்பதற்கான, பரீக்ஷை சம்., serving, or intended, for trial or proof.

Probe, *n.* புண் காயம் மு-வைகளை உள்ளே சோதிக்கிறதற்கு இரணவைத்திய சலாகை, நாராசம், a smooth slender rod for examining an ulcer, wound &c. —*vt.* புண் மு-வைகளைச்சோதி, சலாகையி

ஞற் சோதி, examine with a p.; பரீக்ஷி, பூர்த்தியாய் சோதி, நிரவி சாரி, நிர்க்காலோசனைசெய், search to the bottom, scrutinize or examine thoroughly. [L. *probare*, to try or examine.]

Prob′ity, *n.* சத்தியபிரவர்த்தனை, நியாயபுத்தி, உண்மை, நாணயம், நேர்மை, யதார்த்தம், சத்தியம், ஸன்மார்க்கம், virtue or integrity tested & confirmed, honesty, rectitude, uprightness, integrity. [F.; L. *probitas*, fr. *probus*, good, proper, honest.]

Prob′lem, *n.* பிரசினை, ஆலோசிக்க வேண்டிய அம்சம், ருஜுசெய்ய வேண்டிய விஷயம், உபபாத்தியம், a question proposed for solution, a matter for examination or proof; கடினவிஷயம், a matter difficult of solution or settlement; ஸந்தேகவிஷயம், சமுசயாம்சம், a doubtful case, a question involving doubt. [F., L. & Gr. 'anything thrown forward', Gr. *pro*, before, forward + *ballein*, to throw.]

Prob′lem-at′ic, } *a.* ஐயப்பாடான,
Prob′lem-at′ical, } அநிச்சயமான, சந்தேகமான, uncertain, unsettled, doubtful. [fr. Problem.]

Pro-bos′cis, *n.* துதிக்கை, தும்பிக்கை, தொண்டலம், trunk; மிருகத்தின் மூக்கு, மூஞ்சி, snout. [L.; Gr. *pro*, before + *boskein*, to feed.]

Pro-ce′dure, *n.* நடக்கல், நடத்தல், நடப்பித்தல், proceeding, moving forward, progress, process, operation, conduct; காரியம், வேலை, பிரவர்த்தனை, நடை, விவகாரம், a proceeding, a step taken, an act performed; ரீதி, கிரமம், பத்ததி, the methods or forms of conducting a business. [F.; fr. Proceed.]

Pro-ceed′, *vi.* செல், நட, போ, go forward or onward, move, pass, advance, go on, continue; வெளிப்படு, புறப்படு, issue, emanate; ஆரம்பி, தொடங்கு, begin.—Pro′-ceed, *n.* (used chiefly in the *pl.*) வருமானம், விளைவு, விற்பதினால் வரும் பணம் அ-து ஊதியம், yield, the sum accruing from a sale &c., result, product. [L. *pro*, forward + *cedere*, to move.]

Pro-ceed′ing, *n.* பிரவர்த்தனை, நடத்தை, procedure, conduct; விவகாரம், காரியம், an act or course of action, measure, step, transaction; ரீதி, விதம், வகை, manner; p-s, *pl.* ஒரு சபை மு. வற்றில் நடந்த காரியங்களைத் தெரிவிக்கும் கிரந்தம், a record or report of the transactions of a society &c.. [fr. Proceed.]

Proc′ess, *n.* போக்கு, நடத்தல், கதி, கமனம், progress, advance; கிரமம், பத்ததி, மார்க்கம், course, way, procedure; வேலை, காரியம், operation. In p. of time = காலக் கிரமமாய், நாளாவட்டத்தில். [F. & L.; see Proceed.]

Pro-ces′sion, *n.* கூட்டமாயும் வரிசையாயும் போகும் ஜனம், a train

of persons advancing in order ; ஊர்கோலம், பவனி, உற்சவம், an orderly and ceremonial progress of persons through a street or streets. [F. & L.; see Proceed.]

Pro-claim′, *vt.* பிரகடனஞ்செய், வெளிப்படையாய்த்தெரியச்செய், சாற்று, பயிரங்கப்படுத்து, announce, declare, promulgate, publish. [L. *pro*, before + *clamare*, to call or cry out.]

Proc′la-ma′tion, *n.* சாற்றுதல், பிரகடனே, வெளிப்படையாய்த் தெரியப்படுத்தல், proclaiming, publication; சாற்றப்பட்ட அ-து பிரகடித்தவிஷயம், that wh. is proclaimed ; announcement. [fr. Proclaim.]

Pro-cliv′ity, *n.* இஷ்டம், மனச்சாய்வு, சீலம், inclination, propensity, tendency, proneness. [L. *pro*, forward + *clivus*, a slope.]

Pro-cras′tinate, *vt.* & *vi.* ஆலசியஞ்செய், காலம்போக்கு, மற்றொருநாளைக்கென்று தள்ளிவை, நாளைக்கு நாளைக்கென்றுகாலத்தைவீண்போக்கு அ-து கழி, put off, postpone, defer, delay. [L. *pro*, off + *cras*, to-morrow + *tenus*, stretching: lit. 'to put off till the morrow'.]

Pro-cras′ti-na′tion, *n.* ஆலசியம், காலஹரணம், காலம்கழித்தல் அ-து போக்குதல், மற்றொருநாளைக்கென்று நிறுத்திவைத்தல், dealy, dilatoriness. [fr. Procrastinate.]

Pro′create, *vt.* பெறு, பிறப்பி, ஜெனிப்பி, உற்பத்திசெய், beget, generate, produce, engender. [L. *pro*, forth + *creare*, to create.]

Procre-a′tion, *n.* பிள்ளைகளைப்பெறுதல், பிரஜோத்பத்திசெய்தல், begetting, generation, production of young. [fr. Procreate.]

Pro′cre-a′tive, *a.* பிள்ளைகளைப்பெறும் சக்தியுள்ள, having the power to beget, generative. [fr. Procreate.]

Pro′cre-a′tor, *n.* பெற்றவன், தந்தை, one who begets, generator, father.

Proc′tor, *n.* பிரதிநிதி, அதிகாரி, குமஸ்தா. [cont. fr. Procurator.]

Pro-cum′bent, *a.* குப்புறபடுத்திருக்கும அ-து கிடக்கும்.

Pro-cur′able, *a.* சம்பாதிக்கக்கூடிய, obtainable.

Proc′u-ra′tion, *n.* சம்பாதித்தல், obtaining; பிறர்காரியம் பார்த்தல்.

Proc′u-ra′tor, *n.* பிறர்காரியங்கள் செய்கிறவன்.

Pro-cure′, *vt.* சம்பாதி, பெறு, சேகரி, get, obtain; உண்டாக்கு, சம்பவிக்கச்செய், bring about, effect, cause.—*vi.* கூட்டிவை, இணக்கு, கூட்டிக்கொடு, pimp, pander. [F.; L. *pro*, for + *curarer*, to take care, *cura*, care.]

Pro-cure′ment, *n.* சம்பாதித்தல், சேகரித்தல், பெறுதல், ஈட்டல், obtainment ; உண்டாக்குதல், சம்பவிக்கச் செய்தல், bringing about.

Pro-cur′er, *n.* சம்பாதிக்கிறவன், one who obtains; கூட்டிவைக்கிறவன், கூட்டிக் கொடுப்போன், pimp, pander.

Pro-cur′ess, *n.* கூட்டிவைப்பவள், குட்டினி, a female pimp.

Prod, *n.* குத்தும் அ-து புடைக்கும் ஆயுதம்.

Prod′igal, *a.* அதிவிரயம் செய்கிற, வீண்செலவு செய்கிற, ஆராதூரியான, அழிக்கிற, அழிப்பாளியான, squandering, extravagant, wasteful, lavish.—*n.* தூர்விரயஞ் செய்கிறவன், ஆராதூரி, செலவாளி, அழிப்பாளி, spendthrift, a waster. [L. *pro*, away + *agere*, to drive : lit. 'driving away'.]

Prod′i-gal′ity, *n.* ஆராதூரித்தனம், தூர்விரயம், வீண்செலவு, அதிவிரயம், extravagance in expenditure, wastefulness, lavishness. [fr. Prodigal.]

Prod′igally, *adv.* அமிதமாய், தூர்விரயமாய், ஆராதூரியாய், lavishly, wastefully.

Pro-di′gious, *a.* அற்புதமான, விபரீதமான, அதிசயமான, உற்பாதமான, extraordinary, marvelous, monstrous, enormous, portentous; மகாபெரிய, பிரமாண்டமான, huge, immense. [L.; see Prodigy.]

Prod′igy, *n.* அற்புதம், அதிசயம், உற்பாதம், விபரீதம், wonder, marvel, miracle, portent, monster. [L. *prodigium*.]

Pro-duce′, *vt.* உண்டாக்கு, உற்பத்திசெய், பிறப்பி, create, bring about, cause, make, give rise to, lead to ; விளைவி, grow ; கொடு, yield; பெறு, பிரஸவி, ஈன், bring forth, give birth to, bear ; முன்வை, காட்டு, ஹாஜர்செய், exhibit, show, bring forward, present ; நீட்டு, நீளமாக்கு, தீர்க்கம்செய், extend.—Prod′uce, *n.* விளைவு, பயிர், பலன், உற்பத்திசெய்யப்பட்டது, that wh. is produced, product, production, yield, proceeds. [L. *pro*, forward + *ducere*, to lead or bring.]

Pro-du′cible, *a.* காண்பிக்கத்தக்க ; உண்டாக்கத்தக்க ; wh. can be produced.

Prod′uct, *n.* பலன், விளைவு, உற்பத்திசெய்யப்பட்டது, உற்பவம், produce, production, fruit, result, effect ; பெருக்குவதால் வரும் தொகை. [L. *productus*, pp. of *producere*. see Produce.]

Pro-duc′tion, *n.* உற்பத்திசெய்தல், பிறப்பித்தல், செய்தல், producing, making, creating; உற்பத்தி, உண்டாகுதல், coming into existence, creation; பலன், பயன், fruit, result; எழுதப்பட்டது, கிரந்தம், work காண்பித்தல், காட்டல், exhibiting to view, presentation. [fr. Produce, *v.*]

Pro-duc′tive, *a.* உண்டாக்கும், உற்பத்திசெய்யும், விளையும், producing, yielding ; செழிப்பான, பலனுள்ள, பலகரமான, fertile ; லாபகரமான, profitable. [F. &L., see Produce.]

Pro′em, *n.* பீடிகை, பாயிரம், முகவுரை, preface. [F. & L.; Gr. *pro*, before + *oimos*, way.]

Prof′a-na′tion, *n.* அபவித்திரம்செய்தல், பரிசுத்தமானவைகளை அசுசியாக்குதல், desecration ; தெய்வதூஷணை, அபசாரம், அவமதிப்பு, abusive or irreverent treatment of sacred things. [fr. Profane.]

Pro-fane′, *a.* அபவித்திரமான,அசுத்தமான,பாவனமாகாத,not sacred or holy, unholy; தெய்வதூஷணையான,அபசாரமான,அவமதிப்பான, irreverent, impious, blasphemous; லௌகிகமான, secular.—*vt.* அபவித்திரம்செய்,அசுத்தப்படுத்து, violate,desecrate, pollute; தூஷி, நிந்தி, அவமதி, treat with irreverence. [F.; L. *pro* + *fanum*, temple, 'before i. e. without the temple'.]

Pro-fan′ity, *n.* தெய்வநிந்தை, அபசாரம், அவமதிப்பு, irreverence, blasphemy; அபவித்திரம், அசுசி, unholiness. [fr. Profane.]

Pro-fess′, *vt.* பஹிரங்கமாய் அ-து வெளிப்படையாய்ச் சொல்லு, avow, acknowledge; தனக்குத் தெரியுமென்று சொல், pretend to know. [L. *pro*, forward + *fateri*, to avow.]

Pro-fessed′, *a.* பஹிரங்கமாய் அ-து வெளிப்படையாய் ஒப்புக்கொண்ட அ-து சொன்ன, openly declared, avowed, acknowledged.

Pro-fess′edly, *adv.* பஹிரங்கமாய் சொல்லிக்கொண்டு, வெளிப்படையாய், by open profession, avowedly.

Pro-fes′sion, *n.* பஹிரங்கமாய் அ-து வெளிப்படையாய் சொல்லிக்கொள்ளல் அ-து ஒப்புக்கொள்ளல்,open or public avowl or acknowledgment; தொழில்,வேலை, வியாபாரம், ஜீவனோபாயம், உத்தியோகம், விருத்தி,occupation, calling, employment, vocation;ஒரு தொழில் செய்பவர்களின் கூட்டம், the collective body of persons engaged in any calling. [fr. Profess.]

Pro-fes′sional, *a.* விருத்தி அ-து தொழில் சம்., அந்தந்ததொழிலுக்கடுத்த;ஒருவிருத்தியையனுசரித்த; pert. to,conforming to the rules of, or following, a profession.

Pro-fess′or, *n.* பண்டிதன், சாஸ்திரி; உபாத்தியாயன். [fr. Profess.]

Pro′fes-so′rial, *a.* பண்டிதன் சம்., pert. to a professor.

Pro-fess′orship, *n.* பண்டித ஸ்தானம், the office or position of a professor.

Prof′fer, *vt.* கொடுக்கப்போ, கொடுப்பதற்குக்காட்டு, இந்தாவென்.—*n.* கொடுக்க நீட்டுதல்,கொடுக்கப்போகுதல்; கொடுக்கவந்தது. offer, tender. [L. *pro*, forward + *ferre*, to bring.]

Pro-fi′cience, } *n.* தேர்ச்சி, நிபுண(த்துவ)ம், பாண்டித்தியம், ஞானம், knowledge, skill, acquirements, attainments.
Pro-fi′ciency, } [fr. Proficient.]

Pro-fi′cient, *a.* நிபுணமுள்ள, தேர்ச்சியுள்ள, பாண்டித்யமுள்ள, well skilled,versed.—*n.* பிரவீணன், நிபுணன்,பண்டிதன், தேறினவன், தேர்ந்தவன், adept, expert. [L. *pro*, forward + *facere*, to make: 'advancing'.]

Pro′file, *n.* ஆகாரம், ஆகிருதி, outline, contour; ஒருபக்க முகச்சாயல், அரைமுகங்காட்டும் படம், a human head represented sidewise, the side-face or half-face. [F. & It., fr. L. *pro*, before + *filum*, a thread, line.]

Prof′it, *n.* லாபம், ஆதாயம், பேறு, gain; பலன், பிரயோஜனம், உபயோகம், பயன், benefit, advantage, improvement, good.—*vt.* லாபமுண்டாக்கு; பிரயோஜனமுண்டாக்கு, நன்மை அ-து மேல் செய்; be of profit, benefit, or advantage, to, benefit.—*vi.* பலனடை, மேல் அ-து லாபம் அனுபவி, gain, improve; பலி, உபயோகமாகு, bring benefit or good. [F.; L. *profectus*, advance, progress. see Cog. Proficient.]

Prof′itable, *a.* லாபகரமான, ஆதாயமான, lucrative, paying, gainful; உபயோககரமான, பிரயோஜனமான, பலன்கொடுக்கும், சார்த்தகமான, beneficial, advantageous, useful. [F.; fr. Profit.]

Prof′itably, *adv.* லாபகரமாய்; பிரயோஜனமாய், உபயோககரமாய்.

Prof′itless, *a.* லாபமில்லாத; நிஷ்பலமான உபயோகமில்லாத; unprofitable, useless.

Prof′ligacy, *n.* கெட்டநடத்தை, போக்கிரித்தனம், துஷ்டபிரவர்த்தனே, dissoluteness, corruptness of morals. [fr. Profligate.]

Prof′ligate, *a.* துஷ்டபிரவர்த்தனையுள்ள, போக்கிரியான, சீர்கெட்ட, நெறியிழந்த, விஷயசுகியான, dissolute, depraved, corrupt, abandoned, vicious.—*n.* துஷ்டன், துன்மார்க்கன், போக்கிரி, நெறிகெட்டவன், a dissolute, abandoned, or depraved person. [L. *pro*, inten. + *fligere*, to strike: lit. 'dashed down'.]

Pro-found′, *a.* ஆழமான, அகாதமான, deep; கம்பீரமான, கூடமான, மறைபொருளுள்ள, deepin meaning, requiring deep study, abstruse; அதிகமான, அத்தியந்தமான, மிகுந்த, intense, sound; மறைபொருள் அறிந்துகொண்ட, விற்பன்னனுன, thorough.—*n.* ஆழம், அகாதம், an abyss; சமுத்திரம், கடல், the deep, the sea. [L. *pro*, far + *fundus*, bottom.]

Pro-fun′dity, *n.* ஆழம், அகாதம்; கம்பீரம்; ஆழமான ஞானம்; depth. [fr. Profound.]

Pro-fuse′, *a.* விஸ்தாரமான, அதிகமான, abundant, copious, exuberant; தாராளமான, அமிதமாய்க் கொடுக்கிற, ஆராதூரியான, lavish, prodigal. [L. *pro*, forth + *fundere*, to pour: lit. 'pouring forth lavishly.']

Pro-fuse′ly, *adv.* அமிதமாய், அதிகமாய், விஸ்தாரமாய், ஆராதூரியாய்.

Pro-fu′sion, *n.* அதிகம், அபரிமிதம், தாராளம், சொரிவு, மிகுதி, நிறைவு, abundance, plenty, lavish supply; அதிகவிரயம், ஆராதூரித்தனம், அழிப்பு, lavishing. [L.; fr. Profuse.]

Pro-gen′itor, *n.* பூர்வீகன், முற்பிதா, முன்னோன், ancestor, forefather. [L. *pro*, before + *genitor*, a parent. see Progeny.]

Prog′eny, *n.* சந்தானம், சந்ததி, வமிசம், offspring, children, descendants. [F.; L. *pro*, forth + *gignere*, to beget.]

Prog-nos′tic, *a.* முற்குறிகாட்டுகிற

முன் சூசகமான, fore-showing, betokening something in the future.—*n.* சகுனம், முன்சூசனை, omen, presage, foretoken; சின்னம், அடையாளம், சூசனை, sign, indication. [L. *pro*, before + *gignosko*, I know.]

Prog-nos′ti-cate, *vt.* முன்சூசி, முற்குறிகாட்டு, foreshow, foretoken, forebode, presage; முன்னறிவி, சின்னங்களைப்பார்த்து இனிவரப்போகிறதைச்சொல், foretell, prophesy, predict. [see Prognostic.]

Prog-nos′ti-ca′tion, *n.* இனிவரப்போவதை முன்சூசித்தல் அ-து முன்னறிவித்தல், foretokening or foretelling; முன்சூசனை, முற்குறி, முன்னடையாளம், சின்னம், foretoken. [fr. Prognosticate.]

Prog-nos′ti-ca′tor, *n.* இனிவரப்போவதை சின்னங்கள்பார்த்து முன் சொல்லுவோன், குறிசொல்லுவோன், foreteller.

Pro′gram, } *n.* ஒருகாரியம்நடக்
Pro′gramme, } கப்போகும் வரிசை விவரம், காரியக்கிரமபிரகடனை, a pre-arranged plan or course of proceedings. [F. & L.; Gr. *pro*, before + *graphein*, to write.]

Prog′ress, *n.* கமனம், கதி, முன்செல்லுதல், நடை, onward movement, advance; அபிவிருத்தி, வளர்ச்சி, தேர்ச்சி, improvement, advancement.—Pro-gress′, *vi.* முன்நட, செல்லு, move or pass onward, go forward, advance; விருத்தியாகு, அபிவிருத்தியடை, improve, advance, rise. [L. *pro*, forward + *gradi*, o step, go.]

Pro-gres′sion, *n.* முன்சொல்லல், முன்போகுதல், நடத்தல், கதி, கமனம், progressing, moving forward, advance; விருத்தியடைதல், improvement; (Math.) சிரேணி, சிரேடி. [fr. Progress, *v.*]

Pro-gres′sional, *a.* விருத்தியடைகிற; விருத்தியடையத்தக்க.

Pro-gress′ive, *a.* முன் செல்லுகிற, moving forward; விருத்தியடைகிற, வளரும், அதிகமாகிற, advancing, improving. [fr. Progress.]

Pro-hib′it, *vt.* நிஷேதி, கூடாதென், forbid, interdict; தடு, மறி, விலக்கு, hinder, debar, preclude. [L. *pro*, before + *habere*, to have or hold: lit. 'to hold in front'.]

Pro′hi-bi′tion, *n.* நிஷேதம், கூடாதெனல், forbidding, interdiction; தடை, விலக்கு, மறியல், prevention. [fr. Prohibit.]

Pro-hib′itive } *a.* நிஷேதிக்கிற,
Pro-hib′itory, } நிஷேதகமான, prohibiting; தடுக்கிற, விலக்குகிற, மறிக்கிற, preventing. [fr. Prohibit.]

Pro-ject′, *vt.* போடு, எறி, வெளியேவிடு, throw, cast, shoot forth; நீட்டு, extend forward; யோசி, யுக்திசெய், உபாயஞ்செய், scheme, devise, plan, contrive; சாயை அ-து ஆகாரமெழுது, draw, delineate.—*vi.* முன்னுக்குவந்திரு, பிதுங்கியிரு, jut out, be prominent, extend beyond something else. —Proj′ect, *n.* யோசனை, யுக்தி, உபாயம், எத்தனம், scheme, design, plan. [OF.; L. *pro*, forward + *jacere*, to throw.]

Pro-ject′ile, *a.* முன்னெறிகிற, impell-

ing forward.—n. எறியப்பட்டது, செலுத்தப்பட்டது, போடப்பட்டது, a body projected or impelled forward. [see Project.]

Pro-jec'tion, n. முன்எறிதல், முன்போடல், throwing forward; முன்னுக்குவந்திருத்தல், பிதுங்கிஇருத்தல், jutting out; பிதுக்கம், புடைப்பு, a prominence, a part jutting out, protuberance ; யோசனை, யுக்தி, உபாயஞ்செய்தல், scheming, planning, contrivance; சாயை, ஆகாரம், ஆகிருதி. delineation, plan. [fr. Project, v.]

Pro-ject'or, n. உபாயஞ் செய்வோன், யோசனையாளி, யுக்திசெய்வோன், one who forms a scheme.

Pro-jec'ture, n. பிதுக்கம், புடைப்பு.

Pro-lapse', } n. குடல் மு. அங்கங்கள் நிலைதவறி விழுகை.
Pro-lap'sus, }

Prol'e-ta'riat, n. சாமானியபிரஜை.

Prol'icide, n. கர்ப்பத்திலாவது பிறந்த பிறகாவது சிசுவைக் கொல்லல்.

Prol-if'ic, a. பிள்ளைகள் பெறுகிற, மலடி அல்லாத, producing young; கனிகொடுக்கிற, செழிப்பான, விஸ்தாரமாய் பலிக்கிற, fruitful, productive. [F.;L. *proles*, offspring +*facere*, to make.]

Pro-lif'i-ca'tion, n. பிள்ளைகள்பெறுதல்.

Pro-lix', a. தீர்க்கமான, விஸ்தாரமான, விரிந்த, வெறுப்புண்டாக்குகிற, unnecessarily long, diffuse, tedious, tiresome, wearisome. [L. *pro*, forward + *liqui*, to flow: 'extended'.]

Pro-lix'ity, n. தீர்க்கம், விரிவு, விஸ்தாரம், விரித்துரைவு, great length, minuteness of detail, verbosity. [fr. Prolix.]

Pro-lix'ly, adv. தீர்க்கமாய், விஸ்தாரமாய், விரித்துரைவாய்.

Prol'o-cu'tor, n. அக்கிராசனாதிபதி.

Pro'logue, n. நாடகாரம்பத்தில் பிரஸ்தாவனை, பூர்வரங்கம், நாந்தி, ஆரம்பம், பாயிரம், முகவுரை, preface, introduction. [F. & L.; Gr. *pro*, before + *logein*, to speak.]

Pro-long', vt. நீட்டு, தீர்கம்செய், வளர், நீளமாக்கு, விருத்திசெய், lengthen, continue, draw out ; தாமதப்படுத்து, இன்னொருவேளைக்கு நிறுத்திவை, postpone. [F.; L. *pro*, forth + *longus*, long.]

Pro'lon-ga'tion, n. தீர்க்கம்செய்தல், நீட்டல், நீளமாக்கல், நீடிப்பு, நீட்சி, விருத்தி, வளர்ச்சி, lengthening, extension, protraction. [fr. Prolong.]

Prom'e-nade', n. உலா, உல்லாசத்திற்காகநடத்தல், விஹாரம், a walk for pleasure; உலாவுஞ்சாலை அ-து ஸ்தலம், a place for walking.—vi. விலாஸார்த்தம் திரி, நட, உலாவு, விஹரி, walk for pleasure. [F.; L. *pro*, forward + *minare*, to drive.]

Prom'inence, } n. பிதுக்கம், புடைப்பு, உயரமான பாகம், a jutting or standing out from the surface of something, a protuberance; முக்கியமாய்க் காணப்படல், பிரதானியம், மேன்மை, முக்கியம், உன்னதம், conspicuousness, distinction. [fr. Prominent.]
Prom'inency, }

Prom'inent, *a.* பிதுங்கின, புடைப்பான, உன்னதமான, உயர்ந்த, standing out or projecting beyond something, jutting, protuberant; ஸ்பஷ்டமாய்காணப்படுகிற, முக்கியமாய் காணப்படுகிற, conspicuous; பிரதானமான, முக்கியமான, மேன்மையான, eminent, distinguished above others. [L. *pro*, forward + *minere*, to jut, project.]

Prom'inently, *adv.* மற்றதைப்பார்க்கிலும் உன்னதமாய் அ-து உயரமாய்; ஸ்பஷ்டமாய்; பிரதானமாய், முக்கியமாய்.

Pro'mis-cu'ity, *n.* சங்கரம், கலப்பு, அபேதமாய்க் கலக்கல், indiscriminateness, confusion, mixing or mingling without order. [fr. Promiscuous.]

Pro-mis'cuous, *a.* சங்கரமான, மிசிரமான, அபேதமாய்க்கலந்துபோன, குழப்பமான, mingled, mixed, confused, indiscriminate. [L. *pro*, inten. + *misceo*, I mix.]

Prom'ise, *n.* வாக்குதத்தம், பிரதிக்கினை, கரார், உறுதிப்பாடு, சொன்ன சொல், engagement, assurance, undertaking, a binding declaration. A youth of great p. = அபிவிருத்திக்கு வரத்தக்க இளைஞன்.—*vt.* & *vi.* வாக்குதத்தம்செய், கரார்செய், உறுதிச்சொல்லு, சொற்கொடு, assure, engage to do, covenant, undertake; ஆசைகொண்டிருப்பதற்கு அ-து காத்திருப்பதற்கு இடங்கொடு, afford hopes or expectations. [F.; L. *pro*, forward + *mittere*, to send.]

Promise-breach, *n.* வார்த்தைதவறுதல்.

Promise-breaker, *n.* வார்த்தை தவறுகிறவன், சொல்தவறுகிறவன்.

Prom'is-ee', *n.* எவனுக்குவாக்குத்தத்தம் செய்யப்படுமோ அவன், வாக்குதத்தமளிக்கப்பெற்றவன் one to whom a promise is made.

Prom'iser, *n.* வாக்குத்தத்தம் செய்வோன், one who promises.

Prom'ising, *a.* முன்னுக்கு வரத்தக்க, சித்தியடையத்தக்க, தேர்ச்சியடையுந்தோற்றமுள்ள, விருத்திக்குவரத்தக்க, நன்றாகவேண்டிய, affording hope, likely to turn out well or be successful.

Prom'isor, *n.* உடன்படிக்கைச்செய்துகொடுத்தவன், one who engages or undertakes, promiser.

Prom'issory, *a.* வாக்குத்தத்தம் செய்கிற, கரார்செய்கிற அ-து தெரிவிக்கிற, containing a promise. P. note = கடன்பத்திரம். [fr. Promise.]

Prom'ontory, *n.* சமுத்திரத்தில் நுழைந்திருக்கும் உன்னதமானபூமியின் முனை அ-து அக்கிரம், கடலுட்பாய்ந்தமுனை, a high cape, headland. [L. *pro*, forward + *mons*, *montis*, mountain.]

Pro-mote', *vt.* அதிகப்படுத்து, உயர்த்து, விருத்திசெய், advance, further, forward, foster; உன்னதஸ்திதிக்கொடு, உயர்ந்த உத்தியோகங்கொடு, raise, elevate, advance. [L. *pro*, forward + *movere*, to move.]

Pro-mot'er, *n.* விருத்திசெய்கிறவன், அதிகமாக்கிறவன், encourager.

Pro-mo′tion, *n.* விருத்தி செய்தல், உயர்த்தல், அதிகமாக்கல், அபிவிருத்தி, வளர்ச்சி, promoting, advancing, encouraging, furthering; உன்னதஸ்திதி யுண்டாக்கல், elevation, preferment. [L.; fr. Promote.]

Pro-mo′tive, *a.* அபிவிருத்திகரமான, furthering, advancing. [fr. Promote.]

Prompt, *a.* தட்சணமேசெய்கிற, சுறுக்கான, தாமதியாத, ஜாக்கிரதையுள்ள, ready and quick to act, not slow or dilatory; உடனேசெய்யப்பட்ட, ஆயத்தமாய் செய்யப்பட்ட, அஜலசியமான, done readily or quickly, immediate.—*vt.* ஏவு, எழுப்பு, தூண்டு, உற்சாகப்படுத்து, instigate, incite; கினைப்பூட்டு, மறந்துபோன பதங்களைச் சொல்லிக்கொடு அ-து எடுத்துக்கொடு, remind of words forgotten. [F.; L. *promptus*, brought out, ready, *pro*, forth + *emo*, I take.]

Prompt′er, *n.* ஏவுகிறவன், தூண்டுகிறவன், எழுப்புகிறவன்; ஞாபகப்படுத்துகிறவன், நாடகர்களுக்கு மறந்துபோன வாக்கியங்களை நினைப்பூட்டுகிறவன் அ-து எடுத்துக்கொடுக்கிறவன்.

Prompt′itude, *n.* வேகம், உற்சாகம், சுறுக்கு, துரிதம், promptness, readiness, alacrity. [F. & L.; see Prompt.]

Prompt′ly, *adv.* தட்சணம், அஜலசியமாய், சீக்கிரமாய், at once, readily; உற்சாகத்துடன், சந்தோஷத்துடன், willingly, cheerfully.

Pro-mul′gate, *vt.* பிரகடனஞ்செய், பிரஸித்தம்செய், பிரசுரம்செய், கூறு, அறிவி, தெரிவி, பரவச்செய், proclaim, publish, announce, declare. [L.]

Pro′mul-ga′tion, *n.* பிரசித்தப்படுத்தல், பிரசுரம், பிரகடனம், சாற்றுதல், publication, declaration, announcement, proclamation. [fr. Promulgate.]

Pro′mul-ga′tor, *n.* பிரசுரம்செய்கிறவன், பிரஸித்தப் படுத்துகிறவன், சாற்றுவிப்போன், one who promulgates. [தல்.

Pro-na′tion, *n.* உள்ளங்கை கவிழ்த்

Prone, *a.* முன்சரிந்த, சாய்வான, சாய்ந்த, முன்சாய்ந்திருக்கும், bending forward, inclined; இஷ்டமுள்ள, மனச்சார்புள்ள, விருப்பமுள்ள, disposed, inclined, propense, apt; குப்புறக்கிடக்கும், lying with the face down: opp. to Supine. [L. *pronus*, fr. *pro*, forward. Cog. Sk. *pravana*, inclined.]

Prone′ness, *n.* சாய்ந்திருத்தல், முன்னுக்கு சரிந்திருத்தல், bending forward; சுபாவமான இஷ்டம், சீலம், இயற்கையாயுள்ள இஷ்டம், propensity, aptness; குப்புறவிழுந்திருத்தல் அ-து கிடத்தல், lying with the face down.

Prong, *n.* முட்கொம்பு, சூலம், a sharp-pointed instrument.

Pronged, *a.* முனையில் சூலம்போல் முள்ளுள்ள.

Pro-nom′inal, *a.* பிரதிப்பெயர் சம்., of the nature of a pronoun. [L., fr. *pronomen*, a pronoun.]

Pro'noun (ப்ரோனௌன்), *n.* பிரதிப்பெயர். [Prof. pro, for + noun.]

Pro-nounce', *vt.* உச்சரி, சொல்லு, ஒலி, utter; கூறு, தீர்மானமாய்ச் சொல், நிச்சயித்துச்சொல், declare, affirm, utter solemnly; விதி, deliver as a decree or sentence. [L. *pro*, forth + *nunciare*, to declare.]

Pro-nounce'able, *a.* உச்சரிக்கத்தக்க, சொல்லத்தக்க, ஒலிக்கத்தக்க, that can be pronounced.

Pro-nounce'ment, *n.* தீர்மானமாய்ச் சொல்லுதல், declaration. [fr. Pronounce.]

Pro-nun'cial, *a.* உச்சாரணை சம்.

Pro-nun'ci-a'tion, *n.* உச்சாரணம், உச்சரிப்பு, ஒலித்தல், uttering with articulation, utterance. [F. &L.; fr. Pronounce.]

Pro-nun'ciative, } *a.* உச்சாரணை
Pro-nun'ciatory, } சம்., pert. to pronunciation.

Proof, *n.* நிதரிசனம், பிரமாணம், ருஜு, திருஷ்டாந்தம், மெய்ப்பித்தல், proving, demonstration, argument, reason; சாக்ஷியம், evidence, testimony; சோதனை, பரீக்ஷை, test, trial; உள்நுழைவதற்கியலாமை, resisting power, impenetrability; உள் நுழைவதற்கியலாதது, உட்படாதது, அசைக்கக்கூடாதது, ஜெயிக்கக்கூடாதது, that wh. is impenetrable or cannot be shaken or overcome ;=proof-sheet.—*a.* கெட்டியான, நுழைந்து செல்லக்கூடாத, உட்படாத, அசையாத, firm, successful in resisting, impenetrable, as, to be p. against temptations. [F. *preuve*; L. *proba*, fr. *probare*, to prove.]

Proof'less, *a.* சாக்ஷியமில்லாத, ருஜுவில்லாத, not proved, unproved, lacking evidence.

Proof-sheet, *n.* அச்சுசேர்ப்பதில் தப்புகளை திருத்துவதற்காக முன்னால் அச்சிட்டகாகிதம்.

Prop, *vt.* முட்டுக்கொடு, ஆதாரம்கொடு, அணைகொடு, ஆசிரியங்கொடு, support, prevent from falling, sustain.—*n.* ஆதாரம், ஆசிரயம், முட்டு, ஊன்றுகோல், முட்டுக்கால், தாங்கி, அணை, சகாயம், support, stay.

Prop'agable, *a.* விருத்தியாகத்தக்க, that can be propagated, continued or multiplied; வியாபிக்க அ-து பரவச்செய்யத்தக்க, that can be propagated or spread.

Prop'a-gan'da, *n.* ஏதாவது மதம் மு-வற்றை வியாபிக்கச்செய்வதற்கான ஏற்பாடு, any organization or plan for propagating or spreading a doctrine &c. [Abbre. fr. '*congregatio de propaganda fide*' = association for propagating the faith.]

Prop'a-gan'dism, *n.* மதத்தை போதித்து வியாபிக்கச்செய்தல், propagation of a doctrine &c., proselytism.

Prop'a-gan'dist, *n.* மதம்போதித்து வியாபிக்கச்செய்கிறவன், one who propagates a doctrine &c..

Prop'agate, *vt.* பெறு, உண்டாக்கு, பெற்று விருத்திசெய், beget, procreate, increase, multiply; வியா

பிக்கச்செய், விஸ்தரிக்கச்செய், பரவச்செய், spread, extend, disseminate.—*vi.* பிள்ளைகள் பெறு, விருத்தியடை, have young or issue; பிற, உற்பத்தியாகு, be produced or multiplied by generation; விஸ்தரி, வியாபி, பரவு, spread. [L. *pro*, forward + *pango*, I fasten.]

Prop′a-ga′tion, *n.* விருத்தி, பெருக்கம், வளர்ச்சி, increase, multiplication; உற்பத்தியாதல், generation, production; வியாபித்தல், பரவுதல்; வியாபிக்கச்செய்தல், விஸ்தரிக்கச்செய்தல், பரவச்செய்தல்; spreading, diffusion, dissemination. [fr. Propagate.]

Prop′agative, *a.* விருத்திசெய்கிற, வியாபிக்கச்செய்கிற, propagating.

Prop′a-ga′tor, *n.* விருத்திசெய்கிறவன், வியாபிக்கச்செய்கிறவன், one who propagates.

Pro-pel′, *vt.* முன்னுக்குத்தள்ளு, ஓட்டு, செலுத்து, தள்ளு, press, urge, drive, or move onward or forward. [L. *pro*, forward + *pellere*, to drive.]

Pro-pel′ler, *n.* முன்னுக்குத் தள்ளுகிறவன்; முன்னுக்குத்தள்ளும் சாதனம் அ-து யந்திரம்; one who or that wh. propels.

Pro-pend′ency, *n.* சாய்வு; இஷ்டம்.

Pro-pense′, *a.* இஷ்டமுள்ள, மனதுள்ள, இச்சையுள்ள, inclined, disposed, prone.

Pro-pen′sity, *n.* மனதுண்டாயிருத்தல், இஷ்டம், சாய்வு, சுபாவம், குணம், சீலம், disposition, inclination, bent, proneness, bias, tendency, proclivity. [L. *pro*, forward + *pendere*, to hang.]

Prop′er, *a.* யுக்தமான, கிரமமான, சரியான, யோக்கியமான, தகுந்த, முறைமையான, தகைமையான, suitable, fit, right, appropriate, becoming; ஸ்வகீயமான, சொந்தமான, belonging to one's self, one's own, individual. [F. *propre*, L. *proprius*, one's own.]

Prop′erly, *adv.* தகுந்தபடி, யுக்தமாய், கிரமமாய், நியாயமாய், நன்றாய், சரியாய், ஏற்றப்படி, நேராய், in a proper manner, with propriety, suitably, fitly, rightly, justly, correctly.

Prop′erty, *n.* சுபாவம், குணம், லக்ஷணம், இயல்பு, ஸ்வதர்மம், quality, attribute, characteristic; ஆஸ்தி, உடைமை, சொத்து, பொருள், estate, possessions; உரிமை, உடைமை, ஸ்வாமியம், ownership, title. [F.; L. *proprius*, one's own.]

Proph′ecy, *n.* வருமுன்சொல்லல், வருங்காரியமுரைத்தல், குறிசொல்லல், foretelling; தீர்க்கதரிசனம், தீர்க்கதிருஷ்டியினால் சொல்லப்பட்டது, what is predicted; prediction. [OF. & L.; Gr. *pro*, before + *phemi*, to tell.]

Proph′e-si′er, *n.* தீர்க்கதரிசி, வருங்காரிய முரைப்போன், prophet.

Proph′esy, *vt.* & *vi.* வருமுன்உரை, வருங்காரியமுரை, முனனறிவி, தீர்க்கதரிசனமாய்ச் சொல்லு, குறிசொல்லு, foretell, predict. [see Prophecy.]

Proph′et, *n.* திர்க்கதரிசி, வருங்காரிய முரைப்போன், குறிசொல்லுகிற வன், foreteller, predictor; தேவனால் ஏவப்பட்டுரைப்போன், தேவாவேசமுள்ளவன், one inspired by God and instructed to announce future events. [L. & Gr.; see Prophecy.]

Proph′etess, *n.* திர்க்கதரிசனம் சொல்லும் ஸ்திரீ, இனிவரப்போவதை சொல்லும் ஸ்திரீ, a female prophet.

Pro-phet′ic, **Pro-phet′ical**, } *a.* திர்க்கத்தரிசனம் அ-து வரப்போவதை சொல்லுகிற அ-து தெரிவிக்கிற, containing prophecy, foretelling events. [fr. Prophet.]

Proph′y-lac′tic, *n.* நோய்வராமல் தடுக்கும் மருந்து, preventive. [Gr. *pro*, before + *phylassein*, to guard.]

Pro-pin′quity, *n.* ஸ்தலத்தில் காலத்தில் அ-து உறவுமுறையில் சமீபம், இரத்தசம்பந்தம்.

Pro-pi′tiate, *vt.* சாந்திசெய், சந்தோஷமுண்டாக்கு, ஒப்புரவாக்கு, பிரியப்படுத்து, சமாதானப்படுத்து, அனுக்கிரக முண்டாகச் செய், appease, render favorable, make propitious, conciliate, please. [L.; see Propitious.]

Pro-pi′ti-a′tion, *n.* சாந்திசெய்தல், பிரியப்படுத்தல், அனுக்கிரஹம் உண்டாக்கிக்கொள்ளல், கோபந்தணித்தல், appeasing the wrath of one who is offended, conciliating; சாந்தி, பிராயச்சித்தம், பாவநிவாரணம், atonement, atoning sacrifice. [fr. Propitiate.]

Pro-pi′tiatory, *a.* சாந்திகரமான, கோபமடக்கும்பொருட்டான, அனுக்கிரஹ முண்டாக்குகிற, conciliatory, serving to make propitious; பிராயச்சித்த நிமித்தமான, பாவநிவாரணகரமான, expiatory.

Pro-pi′tious, *a.* அனுக்கிரஹமுள்ள, கிருபையுள்ள, பிரசன்னமான, kind, gracious, merciful; மங்களகரமான, சுபமான, அனுகூலமான, auspicious, favourable, convenient. [L. *pro*, forward + *peto*, to fly: perhaps referring to the flight of birds as an augury.]

Pro-po′nent, *a.* யோசனைசொல்லுகிற.—*n.* யோசனைசொல்லுகிறவன்.

Pro-por′tion, *n.* பங்கு, பாகம், portion, part, share; பாகங்களின் பரஸ்பரசம்பந்தம், relation bet. parts; பாகங்களின் அனுகுணியம் அ-து சமலக்ஷணம், symmetry; விகிதம், ratio; விகிதசமானம் அ-து ஸமத்துவம், equality of ratios. —*vt.* பங்கு சரியாய்வகு, பாகங்கள் ஒன்றுக்கொன்று பொருந்தச் செய், லக்ஷணமாய்பொருத்து, adjust in a suitable p.or with symmetry. [L. *pro*, before + *portio*, share or part.]

Pro-por′tionable, *a.* சரிப்படுத்தத்தக்க, proportionately adjustable.

Pro-por′tional, *a.* தகுந்த, யுக்தபாகமான, பொருத்தமான, having a due proportion or relation, suitable, of a situable proportion or degree, proportionate; விகிதசமானமான, having the same ratio. —*n.* விகிதசமானத்தில் ஓர் இராசி.

Pro-por'tionally, *adv.* பொருத்தமாய், யுக்தபாகமாய், பிரமாணமாய், அளவாய், in due proportion or degree.

Pro-por'tionate, *a.* பொருத்தமான, தகுந்த, யுக்தமான, யுக்தபாகமான, அளவான, being in due proportion, suitable, proportional. —*vt.* பாகம் சரிசெய், இசையச்செய், தகுதியாக்கு, make proportional, adjust proportionately.

Pro-por'tionately, *adv.* தகுந்தபடி, பாகம் சரியாகும்படி, அளவாய், proportionally, with due proportion.

Pro-por'tionless, *a.* பாகங்கள் சரியல்லாத, பங்குசரியாகாத, without proportion, unsymmetrical.

Pro-por'tionment, *n.* பாகங்கள் செய்தல், பங்குபோடுதல், dividing proportionally.

Pro-pos'al, *n.* ஆலோசனைக்கு எடுத்து வைத்தசங்கதி, கேள்வி, what is proposed, proposition ; இஷ்டத்தை அ-து அபிப்பிராயத்தைத் தெரிவித்தல், offer, overture, tender ; யோசனை, எத்தனம், scheme, design. [fr. Propose.]

Pro-pose', *vt.* ஆலோசிப்பதற்குமுன் வை, சொல், bring forward or offer for consideration; உத்தேசி, purpose, intend; இஷ்டம்தெரிவி, express as a desire, offer. [F. *pro*, before + *poser*, to place.]

Prop'o-si'tion, *n.* ஆலோசிக்கும்பொருட்டு முன்வைக்கப்பட்ட சங்கதி, proposal; வாக்கியம், a complete sentence; பிரதிஞ்ஞை, statement, declaration. [F. & L.; see Propose.]

Pro-pound', *vt.* சொல்லு, முன்வை, யோசனைக்குக் கொண்டுவா, பிரதிபாதி, state formally for consideration or solution, propose, exhibit. [L. *pro*, before + *ponere*, to put.]

Pro-pri'etary, *a.* யஜமானன் சம்., pert. to a proprietor ; யஜமானனுக்குச் சொந்தமாயுள்ள, ஒரு யஜமானனுக்குச்சேரும், belonging to a proprietor, owned, considered as property.—*n.* சொந்தக்காரன், யஜமானன், ஸ்வாமி, உரித்தானவன். [F.; see Property.]

Pro-pri'etor, *n.* சொந்தக்காரன், எஜமானன், ஸ்வாமி, உரித்தாளி, owner, master. [see Property.]

Pro-pri'etress, } *n.* சொந்தக்காரி, எஜமானி, உரித்தானவள்,
Pro-pri'etrix, } a female proprietor or owner.

Pro-pri'ety, *n.* யுக்தம், நியாயம், சரி, கிரமம், ஒழுங்கு, முறை, தகுதி, மரியாதை, உசிதம், fitness, becomingness, appropriateness, correctness, rightness. [L. *proprius*, one's own, proper.]' [இப்போன்.

Pro-pugn'er, *n.* ஒரு பக்ஷத்தில் வா

Pro-pul'sion, *n.* முன்னுக்குத்தள்ளுதல், ஓட்டுதல், செலுத்துதல், propelling, driving forward. [F.; see Propel.]

Pro-pul'sive, *a.* முன்னுக்குத்தள்ளுகிற, ஓட்டுகிற, செலுத்துகிற, propelling, driving forward, urging on.

Pro′ro-ga′tion, *n.* கொஞ்ச காலம் வரைக்கும் தள்ளிவைத்தல் அ-து நிறுத்திவைத்தல், adjournment. [fr. Prorogue.]

Pro-rogue′, *vt.* கொஞ்சகாலம்வரைக்கும் நிறுத்திவை அ-து தள்ளிவை, adjourn, postpone, delay, defer. [F.; L. *pro*, forward + *rogare*, to ask.]

Pro-rup′tion, *n.* உடைதல், பிளவா[தல்.

Pro-sa′ic, } *a.* வசனரூபமான,
Pro-sa′ical, } வாசக நடையான, செய்யுள் ஆகாத, in the form of prose; விரசமான, சிருங்காரமில்லாத, சாதாரணமான, ரசமில்லாத, dull, uninteresting, unimaginative, p r o s y, unpoetical. [fr. Prose.]

Pro′saist, *n.* உரைவாசகம் அ-து வசனகாவியம் எழுதினவன்.

Pro-scribe′, *vt.* பகிஷ்கரி, தேசத்தினின்று துரத்து, outlaw, exile; கூடாதென்று விதி, நிஷேதி, prohibit, interdict. [L. *pro*, before, openly + *scribere*, to write.]

Pro′script, *n.* நிஷேதம்; பகிஷ்காரம்; சிக்ஷிக்கப்பட்டவன்.

Pro-scrip′tion, *n.* பகிஷ்காரம், தேசத்தினின்று துரத்தல், outlawry; நிஷேதம், prohibition. [fr. Proscribe.]

Pro-scrip′tive, *a.* பகிஷ்கரிக்கிற, தேசத்தினின்று துரத்துகிற, proscribing.

Prose, *n.* வசனகாவியம், உரைவாசகம், வாசகம்.—*a.* வாசகரூபமான, சிருங்கார வீனமான.—*vt.* & *vi.* வாசகமெழுது. [F.; L. *prosa*, fr. *prosus*, straight on, *pro*, forward + *versus*, pp. of *vertere*, to turn.]

Pros′ecute, *vt.* விடாமற்செய் அ-து நடத்து, நடப்பி, தொடர், continue, carry on; குற்றம்சாற்று, வழக்குத்தொடர், நியாயாதிபதி முன்வை, பிராதுசெய், accuse of some crime, proceed against judicially. [L. *pro*, onwards + *sequor*, to follow.]

Pros′e-cu′tion, *n.* நடத்தல், நடப்பித்தல், continuing, continuation; பிராதுசெய்தல், வியாச்சியம், வழக்கு, the institution and continuance of a criminal suit. [fr. Prosecute.]

Pros′e-cu′tor, *n.* பிரியாதி, வாதி, பிராது செய்தவன், the person who institutes & carries on proceedings in a court of justice; நடப்பிப்போன், நடத்துவோன்.

Pros′e-cu′trix, *n.* வியாச்சியம் தொடுத்தவள், பிராதுக்காரி; நடத்துகிறவள்.

Pros′elyte, *n.* அன்னியமதத்தில் பிரவேசித்தவன், a new convert to a religion.—*vt.* வேறுமதத்தில் பிரவேசிக்கச்செய். [F.; Gr. 'one newly come'.]

Pros′elytism, *n.* அன்னியமதத்தில் பிரவேசிக்கச்செய்தல், conversion to a different religion.

Pros′elytize, *vt.* அன்னியமதத்தில் சேரும்படிசெய், c o n v e r t to a different religion.

Pros′er, *n.* வசனகாவிய மெழுதுவோன்; வாசிப்போருக்கு வெறுப்புண்டாகும்படி எழுதுவோன்.

Pros'i-met'rical, *a.* வாசகமும் செய்யுளும் கலந்த.

Pro-so'dial, **Pro-sod'ical**, } *a.* யாப்பிலக்கண சம்., pert. to prosody; யாப்பிலக்கணத்தை யனுசரித்த, according to the rules of prosody.

Pro-so'dian, **Pros'odist**, } *n.* யாப்பிலக்கணசாஸ்திரி.

Pros'ody, *n.* யாப்பிலக்கணம், யாப்பதிகாரம், the part of grammar wh. treats of the laws of versification. [L. & Gr. *prosodia*, a song sung to music, Gr. *pros*, to + *odo*, a song.]

Pros'pect, *n.* ஒரேகாலத்தில் கண்ணுக்கெட்டிய அ-து பார்க்கக்கூடிய பிரதேசம், தரிசனம், கண்ணிற்குத் தென்படும் யாவத்து பிரதேசம், the region within the reach of the eye or view at one time, view, sight, scene, outlook; ஆசை, நம்பிக்கை, எதிர்பார்க்கப்பட்டது, expectation, hope.—*vt.* & *vi.* உலோஹத்திற்காக அ-து கனிகளுக்காக (பூமியை) பரிசோதி, search or explore for metals or mines. [L. *pro*, forward + *specio*, I see.]

Pro-spec'tion, *n.* வேண்டியவற்றை முன்னதாய் ஜாக்கிரதைசெய்துக் கொள்ளல்.

Pro-spec'tive, *a.* எதிர்கால சம்பந்தமான, இனிவரப்போவதைக் குறித்த, relating to the future; உண்டாகப்போகிற, ஆகும், சம்பவிக்கப்போகிற, எதிர்பார்க்கப்பட்ட, in prospect or expectation, expected; எதிர்பார்க்கிற, தூரதிருஷ்டியுள்ள, looking forward, expecting, acting with foresight. [see Prospect.]

Pro-spec'tus, *n.* வெளிப்படுத்தப்போகிற அ-து பிரசுரிக்கப்போகும் கிரந்தம் மு-வற்றைக் குறித்த பிரகடனை அ-து விளம்பரம், [L., 'a prospect', 'sight', 'view'.]

Pros'per, *vi.* வாழ், செழி, வளர், நன்றாகு, விருத்தியடை, முன்னுக்கு வா, thrive, be successful, succeed, flourish.—*vt.* வளரச்செய், விருத்தியடையச்செய். [L. *pro*, according to + *spes*, hope. Compare 'Despair'.]

Pros-per'ity, *n.* வாழ்வு, செல்வம், செழிப்பு, அபிவிருத்தி, க்ஷேமம், சுபம், சம்பத்து, பாக்கியம், சிரேயசு, well-being, thrift, good fortune, weal, welfare; சித்தி, அனுகூலம், ஸாபல்யம், success. [F. & L.; fr. Prosperous.]

Pros'perous, *a.* விருத்தியடைகிற, செழிப்பான, க்ஷேமமான, சிரேயசான, thriving, flourishing, fortunate; சுபமான, அனுகூலமான, நல்ல, auspicious; ஜெயமான, ஸாபல்லியமான, சித்தியுள்ள, successful. [L.; see Prosper.]

Pros'perously, *adv.* க்ஷேமமாய், அபிவிருத்தியாய்; ஜெயமாய்; fortunately, successfully.

Pros'titute, *n.* விலைமகள், வேசி, பொதுப்பெண், பட்டி, கூத்தியார், strumpet, harlot, whore; நீசன், பணத்திற்காக நீசவேலைகளுக்கு ஒப்புக்கொள்வோன், a base

hireling, a mercenary.—*a.* விபசாரியான, openly given up to lewdness.—*vt.* விபசாரம் செய்வி, வேசித்தொழிலில்வை, give up to lewdness for hire, offer for lewd purposes; நிந்த்யமான காரியத்தில் உபயோகி அ-து பிரயோகி, துஷ்டவினியோகஞ்செய், apply to base or vile purposes, abuse. [L. *pro*, openly + *statuere*, to place: lit. 'to expose openly'.]

Pros′ti-tu′tion, *n.* விபசாரம், வேசித்தொழில், harlotry; துஷ்டவினியோகம், abuse, base or vile use. [fr. Prostitute.]

Pros′ti-tu′tor, *n.* ஈனவேலைசெய்வோன், நிந்தையான காரியங்களைச் செய்பவன்.

Pros′trate, *vt.* குப்புறவிழச்செய், பணியச்செய், lay flat; கீழ்விழத்தள்ளு, throw down, level, fell; அழி, நாசஞ்செய், கும்கச்செய், overthrow, demolish, destroy, ruin; பலத்தைப்போக்கு, deprive of strength or efficiency, unnerve, paralyze; (used *reflexively*) சாஷ்டாங்க (மாய்) நமஸ்காரம் செய், தண்டம் சமர்ப்பி, fall or bow down in humility or adoration.—*a.* சாஷ்டாங்கமாய் விழுந்த, குப்புற விழ்ந்திருக்கும், lying at length or with the body extended on the ground; தாழ்ந்தஸ்திதியில் கிடந்திருக்கிற அ-து கிடக்கும், முற்றிலும் பல தைரியங்கள் கெட்ட, prostrated, wholly overcome or subdued, deprived of all strength, unnerved, paralyzed. [L. 'lay flat', *pro*, forward + *sternere*, to spread out.]

Pros-tra′tion, *n.* குப்புறவீழ்தல், சாஷ்டாங்க நமஸ்காரம், falling down or bowing in humility or adoration; விசாரத்தினால் மனது குங்குதல் அ-து தளர்தல், great depression or dejection. [fr. Prostrate.]

Pros′y, *a.* வசனகாவியம் போன்ற, ரஸஹீனமான, prosaic. [fr. Prose.]

Pro′tean, *a.* காமரூபியான, சீக்கிரத்தில் பலஉருவங்கள் அ-து ரூபங்கள் எடுக்கிற, readily assuming different shapes or forms. [Pert. to Proteus, a Grecian marine deity who could assume different shapes.]

Pro-tect′, *vt.* ரக்ஷி, காப்பாற்று, ஆதரி, guard, preserve, shelter, shield, defend; போஷி, தாங்கு, காப்பாற்று, maintain, support. [L. lit. 'to cover in front', *pro*, before + *tegere*, to cover.]

Pro-tec′tion, *n.* இரட்சணை, காப்பு, காவல், பாதுகாப்பு, காப்பாற்றுதல், guarding, preservation, defense; போஷணை, ஆதரித்தல், maintenance, support; ஆதாரம், சரணம், அடைக்கலம், refuge, shelter, shield. [fr. Protect.]

Pro-tect′ive, *a.* இரக்ஷகமான, காப்பாற்றுகிற, இரக்ஷிக்கிற, protecting, defensive. [fr. Protect.]

Pro-tect′or, *n.* இரக்ஷிக்கிறவன், காப்பாற்றுவோன், இரக்ஷகன், guardian, supporter, defender. [fr. Protect.]

Pro-tect′ress, *n.* இரக்ஷிக்கும் ஸ்திரீ, a woman who protects.

Pro′te′ge′ (*m*) } (ப்ரொரடேழே), *n.*
Pro′te′gee′ (*f*) }
ஒருவன் சம்ரக்ஷணையிலிருப்போன், —லிருக்கிறவள், one who is under the care, protection and patronage of another. [F.; see Protect.]

Pro′teid, *n.* மாம்சமுண்டாக்குவது, ஊன் செய்வது, albuminoid.

Pro-test′, *vi.* & *vt.* உறுதியாய்ச் சொல், கண்டிப்பாய் விரோதாபிப்பிராயம் தெரிவி, affirm or declare solemnly or formally in opposition, assert, asseverate, aver.—Pro′—, *n.* உறுதியாய்ச்சொல்லல், a solemn or formal declaration of opinion; எதிருரை, மறுத்துரைத்தல், விரோதமான அ-து வேறுபாடான அபிப்பிராயம், அசம்மதி, a formal declaration of dissent. [L. *pro*, before + *testari*, to be a witness, to affirm.]

Prot′estant, *a.* எதிருரைக்கிற, வேறுபாடான அபிப்பிராயம் சொல்லுகிற, protesting, objecting; உரோமன் காதோலிக்கு மதத்திற்கு விரோதமான அ-து வேறுபாடான. —*n.* விருத்தமான அபிப்பிராயம் சொல்வோன், one who protests or objects ; உரோமன்கதோலிக்கு மதத்திற்கு விருத்தமான அ-து வேறுபாடான மதத்தை அனுசரிப்பவன். [fr. Protest.]

Prot′estantism, *n.* உரோமன்கதோலிக்கு மதத்திற்கு வேறுபாடான மதம்.

Prot′es-ta′tion, *n.* உறுதியாய்ச் சொல்லல், a formal declaration, public avowal ; வேறுபாடான அபிப்பிராயம் தெரிவித்தல், a solemn declaration of dissent. [fr. Protest.]

Pro′teus, *n.* காமரூபியான ஒருஜலதேவதை; சபலநடத்தையுள்ளவன்.

Pro′tocol, *n.* மூலப்பிரதி, தாயேடு, முதலில் எழுதப்பட்டது.

Pro′to-mar′tyr, *n.* மதத்திற்காக முதலில் தன்பிராணங்கொடுத்தவன்.

Pro′to-type, *n.* மாதிரி, நமூனா, மோஸ்தர், original, model, pattern, exemplar, archetype. [Gr. *protos*, first + *typos*, type.]

Pro-tract′, *vt.* நீர்க்கம்செய், வளர், lengthen, prolong, draw out, continue; ஆலசியம்செய், பின்போடு, தாமதப்படுத்து, நிறுத்திவை, நீட்டு, delay, defer, put off. [L. *pro*, forward + *trahere*, to draw.]

Pro-trac′tion, *n.* நீர்க்கம் செய்தல், வளர்த்தல், lengthening, prolongation, cotinuance ; ஆலசியம் செய்தல், தாமதித்தல், நீட்டல், delay. [fr. Protract.]

Pro-tract′ive, *a.* நீர்க்கம்செய்கிற, வளர்க்கும், prolonging, continuing, lengthening ; ஆலசியஞ்செய்கிற, தாமதிக்கும், delaying.

Pro-tract′or, *n.* ஆலசியம் செய்வோன்; ஆலசியத்திற்குஹேது; one who or that wh. protracts ; கோணங்களை யளக்கும்கருவி.

Pro-trude′, *vt.* முன்னுக்குத்தள்ளு, முன்னுக்குவரும்படிசெய், பிதுக்கு,

thrust out or forward, push out.—*vi.* பிதுங்கு, முன்தள்ளி யிரு, முன்னுக்குவந்திரு, project, stand out prominently, bulge out. [L. *pro*, forward + *trudere*, to thrust.]

Pro-tru'sion, *n.* முன்னுக்குத்தள்ளு தல் அ-து முன்னுக்குவந்திருத் தல், thrusting, or being thrust, forward ; முன்னுக்குவந்திருப் பது, பிதுங்கிவந்திருப்பது, a protruded part or object, prominence, portuberance. [fr. Protrude.]

Pro-tru'sive, *a.* முன்னுக்குத் தள் ளும், protruding.

Pro-tu'berance, } *n.* பிதுக்கம், உயர
Pro-tu'berancy, } மாயிருக்கும் பா கம், a prominence, an elevation, projection; வீக்கம், அதைப்பு, கட் டி, a swelling or tumor. [see Protuberant.]

Pro-tu'berant, *a.* புடைத்திருக்கிற, எழும்பியிருக்கும், சுற்றியிருக்கும் பாகத்தைப் பார்க்கிலும் உயர்ந் திருக்கிற,முன்னுக்கு வந்திருக்கும், bulging, swelling, prominent. [L. *pro*, forward + *tuber*, a hump.]

Pro-tu'berate, *vi.* புடை, பிதுங்கு, எழு, வீங்கு, அதை, முன்னுக்குவந் திரு, bulge out, swell, be prominent.

Pro-tu'ber-a'tion, *n.* புடைத்தல், பிதுக்கம், எழும்பியிருத்தல், bulging out.

Proud, *a.* கர்வமுள்ள, அகங்காரமுள் ள, இடம்பமுள்ள,conceited, haughty, arrogant, presumptuous,overweening, self-conceited; மானவந்தனான, மரியாதையுள்ள, பெருந்தன்மையுள்ள,having high self-respect, self- respecting ; கனமான, பெரிய, ஆடம்பரமான, grand, splendid, magnificent, ostentatious. [AS.] [மாய்.

Proud'ly, *adv.* கர்வமாய் ; ஆடம்பர

Prov'able, *a.* ருஜு செய்யத்தக்க, ருஜுபடுத்தத்தக்க,ருபிக்கக்கூடிய, demonstrable.

Prove, *vt.* ருஜுபடுத்து, ருஜுசெய், நிதரிசனங்காட்டு,ரூபி,மெய்ப்பி, உண்மைப்படுத்து, நிஜப்படுத்து, demonstrate, show, establish, verify ; பரீக்ஷி, சோதி, try, test. —*vi.* ஏற்படு, ஆகு, ஆயிதீர், turn out to be, be found to be. The report p-d to be true=அந்தவர் த்தமானம் மெய்யாயிற்று. [F.; L. *probare*, to try or test, fr.*probus*, good.]

Prov'ender, *n.* காய்ந்தபுல் வைக் கோல் மு. பசுக்களின்உணவு அ-து தீனி, dry food for domestic animals, as hay, feed. [F.]

Prov'erb, *n.* பழமொழி, முதுரை, வ ழக்கச்சொல், நீதிமொழி, adage, saw, maxim, a common saying. [L. *pro*, before, in public + *verbum*, a word.]

Pro-ver'bial,*a.*பழமொழியான, லோ கபிரசித்தமான,பெயர்பெற்ற, used as a proverb, commonly known, well known, (கெட்டவிஷயத்தில்) notorious. [F.&L.; fr. Proverb.]

Pro-ver'bially, *adv.* பழமொழியாய்

லோகபிரசித்தமாய், வழக்கமாய், by way of proverb, commonly, universally.

Pro-vide′, *vt.* சம்பாதி, ஜாக்கிரதை செய், சேகரி, சித்தப்படுத்து, get, collect, or make ready, for, future use; கொடு, அமர்த்து, supply, furnish; நிபந்தனையாய் அ-து ஷரத்தாய் ஏற்பாடுசெய், arrange or secure as a previous condition, stipulate.—*vi.* முன் ஜாக்கிரதை செய்து வைத்துக்கொள், ஏற்பாடுசெய்துவை, procure supplies or means in advance, take measures before-hand; நிபந்தனைசெய்துகொள், ஷரத்து செய்துக்கொள், stipulate previously, condition. [L. *pro*, before + *videre*, to see.]

Pro-vid′ed, *conj.* நிபந்தனையின்பேரில், ஷரத்தின்மேல், ஆல், இல், ஆகில், on condition, with the understanding, if.

Prov′idence, *n.* முன் ஜாக்கிரதை, தூரதிர்ஷ்டி, பூர்வவிவேகம், foresight, prudence; விதி, தைவம், ஈசுவரன், God. [see Provide.]

Prov′ident, *a.* முன்ஜாக்கிரதையுள்ள, பூர்வவிவேகமுள்ள, தீர்க்கதிருஷ்டியுள்ள, முன்யோசனையுள்ள, வியர்த்தமாகாமல் ஜாக்கிரதைப்படுகிற, prudent, cautious, economical. [L.; *see* Provide.]

Prov′i-den′tial, *a.* தெய்வச்செயலான, தெய்வாதீனமான, effected by, or referable to, divine direction or superintendence. [fr. Providence.]

Prov′ince, *n.* ராஜதானிக்குத் தூரமாயிருக்கும் ஜில்லா, a portion of an empire remote from the capital; தேசபாகம், இராஜ்ஜியபாகம், தாலூக்கா, a division of a country, a district; ஒருவன் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசம், a region under the supervision of a person, jurisdiction; வேலே, ஜோலி, இலாக்கா, உட்பட்டது, தருமம், sphere, duty, function, office, charge, business, department. [F., fr. L. *provincia*, *pro*, before + *vincere*, to conquer.]

Pro-vin′cial, *a.* இராஜதானிக்குத் தூரமாயிருக்கும் பிரதேச சம்., pert. to a province; முரட்டுத்தனமான, நாட்டுப்புறத்து, நாகரிகமற்ற, கிராமத்து, rustic, rude. [fr. Province.]

Pro-vin′cialism, *n.* கிராமபாஷை, கிராம்யம், தேசியம், a word or phrase peculiar to an out-lying district.

Pro-vi′sion, *n.* முன்னதாய் ஜாக்கிரதைசெய்தல், சித்தப்படுத்துதல், providing or preparing previously; முன்னதாய்ச்செய்த ஏற்பாடு, an arrangement for the future, preparation; சித்தப்படுத்தின சாமான், a store of things requisite for some purpose; (usu. in the *pl.*) சேர்த்துவைக்கப்பட்ட போஜன பதார்த்தங்கள், சம்பாரம், a stock or supply of food, victuals; உடன்படிக்கை, நிபந்தனை, ஷரத்து, stipulation, condition; தற்காலத்திற்கு மாத்தி

ரம்செய்த ஏற்பாடு, a temporary arrangement.—*vt.*போஜனசாமக்கிரி அ-து சாமான் கொடு, supply with food, victual. [F. & L.; fr. Provide.]

Pro-vi′sional, } *a.* தற்காலத்திற்கு
Pro-vi′sionary, } மாத்திரம் ஏற்பாடு செய்யப்பட்ட, தற்காலத்து, temporary, adopted tentatively or for the time being. [fr. Provision.]

Pro-vi′so, *n.* நிபந்தனை, ஷரத்து, விலக்கு, ஷரத்தை அ-து விலக்கைத்தெரிவிக்கும்வாக்கியம், an article or clause introducing a condition or exception. [L. lit. 'it being provided'.]

Prov′o-ca′tion, *n.* கோபமூட்டுதல், provoking; கோபத்திற்குகாரணம், a cause of anger. [F. & L.; fr. Provoke.]

Pro-vo′cative, *a.* கோபமூட்டுகிற, தூண்டுகிற, எழுப்புகிற, provoking.—*n.*கோபமூட்டுவது, தூண்டுவது, that wh. provokes. [OF. & L.; fr. Provoke.]

Pro-vo′catory, *a.* கோபமூட்டுகிற, எழுப்புகிற, தூண்டுகிற, provocative. [fr. Provoke.]

Pro-vok′able, *a.*கோபமூட்டத்தக்க, that may be provoked.

Pro-voke′, *vt.* கோபமூட்டு, தூண்டு எழுப்பு, irritate, offend, anger, displease, exasperate, incense; எழுப்பு, தூண்டு, arouse, excite, stir up, incite. [L. *pro*, forth + *vocare*, to call: lit. 'challenge', 'excite'.]

Pro-vok′ing, *a.* கோபமுண்டாக்குகிற, irritating, annoying.

Pro-vok′ingly, *adv.*கோபமுண்டாக்கும்படி.

Prov′ost, *n.* ஒரு அதிகாரி. [OF.]

Prow (ப்ரௌ), *n.* கப்பலின் முற்பாகம் அ-து முன் பக்கம், முன்னணியம், the fore part of a ship, the bow, the stem. [F. *proue*; L. & Gr. *prora*.]

Prow′ess, *n.* பராக்கிரமம், வீரியம், சௌரியம், வீரம், bravery, valor, intrepidity, fearlessness, gallantry. [F. *prouesse*.]

Prowl, *vt.* & *vi.* ஆஹாரத்திற்காவது கொள்ளையிடுவதற்காவது திரி, rove, roam, or wander, stealthily in search of prey or plunder.

Prox′imate, *a.* சமீபமான, அடுத்த, கிட்டிய, அயலான, nearest, next, closest, immediate, direct. [L., fr. *proximare*, to come near, *proximus*, the nearest.]

Prox-im′ity, *n.* சமீபம், அயல், அருகு, அண்டை, immediate nearness. [L.; see Proximate.]

Prox′imo, *adv.* அடுத்தமாதத்தில், in the next month after the present. [L. 'on the next': ablative of *proximus*, next.]

Prox′y, *n.* பதில், the agency or authority to act for another; பதிலாயிருப்பவன், பிரதிகாரியஸ்தன், பிரதிநிதி, வக்கீல், குமஸ்தா, a deputy, substitute, representative; பதிலாய் நடக்க அ-து வியவகரிக்க அதிகாரபத்திரம். [contr. fr. 'Procuracy.']

Prude, *n.* வெகுநாணமுள்ளவள்போல் நடிக்கும் ஸ்திரீ, நாணக்காரி, a woman of affected or excessive modesty, reserve, or coyness. [F.; ori. 'discreet', 'modest'.]

Pru'dence, *n.* விவேகம், யோசனை, முன் ஜாக்கிரதை, புத்தி, ஆலோசனையுண்டாயிருத்தல், wisdom, providence, caution, circumspection, carefulness, foresight, forethought; மட்டானசெலவு, மிதவிரயம், frugality, economy. [F. & L.; see Prudent.]

Pru'dent, *a.* விவேகமுள்ள, புத்தியுள்ள, முன்யோசனையுள்ள, ஆராய்வான, கெடுதியாவது நஷ்டமாவது வருவதற்கிடங்கொடாமல் ஜாக்கிரதையாய் நடக்கிற, முன்னாலோசனையுள்ள, wise, provident, cautious, wary, circumspect, careful; மட்டாய் செலவிடுகிற, மிதவிரயம் செய்கிற, frugal, economical. [L. *prudens, prudentis*, cont. fr. *providens*. see Provident & Provide.]

Pru-den'tial, *a.* விவேகத்தோடுசெய்யப்பட்ட, முன்ஜாக்கிரதை பொருட்டான, நஷ்டமுண்டாவதற்கிடங்கொடுக்காத, proceeding from or dictated by prudence, prudent. [fr. Prudence.]

Pru'dently, *adv.* விவேகமாய், புத்தியுடன், முன்யோசனையாய், ஆலோசனையுடன், முன்ஜாக்கிரதையுடன், நஷ்டமாவது கெடுதியாவது சம்பவிப்பதற்கு இடங்கொடாமல், wisely.

Prud'ery, *n.* வெகுநாணமுள்ளவள்போல் நடிப்பு, affected or excessive modesty, reserve, or coyness, an undue and false display of delicacy. [F.; fr. Prude.]

Prud'ish, *a.* வெகுநாணங்காட்டும், affecting excessive modesty or virtue, coy, reserved. [fr. Prude.]

Prune, *vt.* கிளைநறுக்கு அ-து கழி, lop or cut off the branches of; உதவாததைக்கழி, சரிப்படுத்து, திருத்து, clear of useless parts, trim.—*n.* உலரவைத்த இலந்தைப்பழம், a dried plum. [F.]

Prun'er, *n.* அவசியமில்லாததைத் தள்ளுவோன் அ-து கழிப்பவன்.

Pru'ning-hook', *n.* செடிகளின் கிளைகளை நறுக்குங்கத்தி.

Pru'rience, Pru'riency, *n.* தினவு, சொறி, an itching; அதிகவாஞ்சை, மிகுஆவல், விசேஷகோரிக்கை, an excessive desire or craving for anything, a lascivious uneasiness or curiosity, sensuality. [fr. Prurient.]

Pru'rient, *a.* தினவுள்ள, சொறியெடுக்கிற, itching; அதிகஆசையுள்ள, மிகு வாஞ்சையுள்ள, அதிகோரிக்கையுள்ள, uneasy with desire, having a lascivious curiosity or propensity, lustful. [L., fr. *prurire*, to itch.]

Pry, *vi.* மூடப்பட்டிருப்பதை ஒட்டிப்பார், புகுந்துபார், நன்றாய்காணப்படாததை பார்ப்பதற்குமுயல், peep, peer.—*n.* தனக்கு அவசியமில்லாததைப் பார்த்தல். [a modification of 'pire', the old form of 'peer', *v.*]

Pry′ing, *a.* சமீபமாய் அ-து அவமரியாதையாய்ப்பார்க்கிற, தெரிந்துகொள்வதற்கு ஆபேட்சையுள்ள, inspecting closely or improperly, inquisitive, curious.

Pry′ingly, *adv.* கிட்டப்பார்த்துக்கொண்டு, தெரிந்துகொள்வதற்கு அதி அபேட்சையுடன், inquisitively.

Pryth′ee= Prithee.

Psalm (ஸாம்), *n.* பஜனைகீர்த்தனை, பக்திகீதம், a sacred song or hymn. [L. *psalmus*; Gr. *psalmos*, a twitching or twanging the strings of a harp: compare Sk. *sama*.]

Psalm′ist, *n.* பஜனைகீர்த்தனை இயற்றுவோன், a maker or composer of psalms. [fr. Psalm.]

Psalm′istry, Psal′mody, } *n.* பக்திகீர்த்தனைகள் பாடுதல், the singing of psalms.

Psal′ter, *n.* பக்திகீர்த்தனைபுஸ்தகம், the book of psalms.

Pseu′do, *pref.* பொய்யான, கபட, கள்ளமான, false, counterfeit, pretended, spurious, as, p.-clergy.

Pseu-dog′raphy, *n.* கள்ளவெழுத்து, பொய்லிகிதம். [தல்.

Pseu-dol′ogy, *n.* பொய்ச்சொல்லு

Pseu′do-me-tal′lic, *a.* லோஹத்தைப்போல் காணப்படுகிற.

Pseu′donym, *n.* கள்ளப்பெயர், பொய்ப்பெயர், மாறுபெயர், a fictitious, feigned, or false name assumed by a writer. [Gr. *pseudos*, falsehood + *onoma*, a name.]

Pseu-don′ymous, *a.* மாறுபெயரினால் பிரசுரிக்கப்பட்ட, மாறுபெயருள்ள, bearing a false or fictitious name or signature.

Pshaw, *interj.* சீச்சீ ! pooh !—*vi.* சீயென், pooh-pooh, pish.

Psy′chical, *a.* மனது சம்., ஆத்ம சம்., pert. to the mind or soul, mental. [Gr. *psyche*, the soul.]

Psy-chol′ogist, *n.* ஆத்மதத்துவ பண்டிதன், one versed in psychology.

Psy-chol′ogy, *n.* ஆத்மதத்துவநூல், மனதைப்பற்றினசாஸ்திரம், ஆத்மவிசாரம், the science of the human soul, mind, or consciousness. [Gr. *psyche*, the soul + *logos*, discourse.]

Pty′alin, *n.* சர்க்கரிகம்.

Pu′beral, *a.* யௌவனம் அ-து வாலிபப்பருவ சம்., pert. to puberty.

Pu′berty, *n.* வாலிபதசை, யௌவனவஸ்தை, சந்தானமுண்டாவதற்கு அ-து அடைவதற்கு உற்ற வயது, the age at wh. persons are capable of begetting or bearing children. [F.; L., fr. *puber*, adult, *pubes*, the signs of mature age, hair.]

Pu′bes (ப்யூபீz), *n.* அடி வயிற்றின் கீழுண்டாகும் சுணை அ-து மயிர்.

Pu-bes′cence=Puberty.

Pu-bes′cent, *a.* வாலிபமடைந்த, யௌவன மடைந்த, arrived at puberty.

Pub′lic, *a.* ஜன சம்., pert. to the people at large or the community; இராஜ்ஜிய சம்., ராஜகீய

மான, இராஜாங்கத்தைச் சேர்ந்த, pert. to the state; இரகசியமல்லாத, மறைவில்லாத, பகிரங்கமான, பிரசித்தமான, வெளிப்படையான, not private or secret, open to the knowledge or view of all, general, common. P. spirit= லோகஹிதம், ஜனஹிதேச்சை, தேசஹிதம், லோகோபகாரஞ் செய்யுங் குணம்.—n. உலகத்தார், ஜனங்கள், the people. [F.; L. *publicus*, *poplicus*, fr. *populus*, people.]

Pub′lican, n. சத்திரம் அ-து பணத்திற்கு சாப்பாடுபோடும் வீடு வைத்திருப்பவன், the keeper of an inn or public house; சாராயக்கடைக்காரன், a seller of intoxicating liquors. [L.]

Pub′li-ca′tion, n. பிரகடனை, பிரசுரம், விளம்பரம், publishing, promulgation; பிரசுரிக்கப்பட்டது, கிரந்தம், a published book or work. [L. *publicare*, to make public.]

Public-house, n. சத்திரம், பணத்திற்கு சாப்பாடுபோடும் வீடு, inn, hotel; சாராயக்கடை, a shop for the retail of liquors; tavern.

Pub-lic′ity, n. பஹிரங்கம், பிரசித்தம், வெளிப்படை, சர்வஜனங்களுக்குந் தெரிதல், openness, exposure to the view or knowledge of the public. [fr. Public.]

Pub′licly, *adv.* பகிரங்கமாய், வெளிப்படையாய், பிரசித்தமாய், இரகசியமில்லாமல், openly, without concealment, in public.

Pub′lic-spir′ited, *a.* லோகோபகாரியான, லோகஹிதனுன, influenced by a regard for the public welfare or good.

Pub′lish, *vt.* சாற்று, பிரகடனைசெய், விளம்பரம்செய், proclaim, announce, promulgate; பிரசுரி, பிரசுரம்செய், print & issue from the press; வெளிப்படைசெய், வெளிப்படுத்து, பிரசித்தம்பண்ணு, பகிரங்கப்படுத்து, make public, disclose, divulge, reveal. [L. *publicare*, to make public.]

Pub′lisher, n. புஸ்தகம் அ-து புஸ்தகங்கள் பிரசுரிப்போன், புஸ்தகங்கள் விற்போன், one who publishes a book or books; சாற்றுவோன், வெளிப்படுத்துவோன், பகிரங்கப்படுத்துவோன், one who announces or divulges.

Puce, n. ஒருவிதநீலவர்ணம்.

Puck′er, *vt.* மடிப்புவை, குச்சுவை, மடிப்பு விழும்படிசெய், gather into small folds or wrinkles, corrugate.—n. மடிப்பு, சுருக்கு, a fold, a wrinkle. [fr. 'poke', a small bag.] [பக்ஷணம்.

Pud′ding, n. மாப்பண்டம், பலகாரம்,

Pud′dle, n. சிறுபள்ளத்தில் நிற்கும் சேற்றுநீர், a small pool of dirty water, a muddy plash.—*vt.* சேறுச்கு, கலக்கு, make foul or muddy.

Pud′dly, *a.* சேறுயிருக்கிற, சகதியான.

Pu′dency, n. நாணம், மானம், கூச்சம், லஜ்ஜை, natural delicacy or shame, modesty, bashfulness. [L. *pudens*, pr. p. of *pudere*, to be ashamed.]

Pu-den′da, *pl.* } n. உபஸ்தம்,
Pu-den′dum, *sing.* } யோனி.

Pudg′y, *a.* குட்டையான.

Pu-dic′ity, *n.* நாணம், மானம், கூச்சம், அடக்கம், வினயம், modesty; பதிவிரதா தர்மம், chastity. [F. & L.; see Pudency.]

Pu′erile, *a.* பாலிய, சிறுபிள்ளைத்தனமான, பாலியசேஷ்டையான, boyish, childish, juvenile, youthful; அவிவேகமான, அற்ப, சொற்ப, silly, trifling. [L., fr. *puer*, a child.]

Pu′er-il′ity, *n.* குழந்தைப்புத்தி, சிறுபிள்ளைத்தனம், childishness; அவிவேகம், அற்பபுத்தி, foolishness, silliness. [fr. Puerile.]

Pu-er′peral, *a.* பிரசவ சம்.. [L. *puer*, child + *parere*, to bear.]

Puff, *n.* ஊதுதல், a breath emitted suddenly from the mouth, whiff; காற்றினால் நிரப்பப்பட்டது, that wh. is puffed up, anything filled with air; காற்றுவீச்சு, a slight gust of wind.—*vi.* காற்றினால் நிரம்பு, உப்பு, விம்மு, swell with air, be dilated or inflated; பெருமூச்சுவிடு, breathe quick & hard.—*vt.* ஊதிப்பறக்கடி, drive with a p.; காற்றினால் நிரப்பு, inflate; அமித ஸ்தோத்திரம்செய், முகஸ்துதிசெய், praise excessively, flatter; கர்வமுண்டாக்கு, inflate with pride or vanity. [Imi.]

Puff′-ball′, *n.* காளான், ஆம்பி, புற்றிற்பூ.

Puff′ery, *n.* முகஸ்துதி செய்தல், அமிதஸ்தோத்திரம்செய்தல்.

Puf′fin, *n.* ஒருவித நீர்பக்ஷி.

Puff′y, *a.* காற்றால் நிரப்பப்பட்ட, உப்பின, filled or swelled with air, bloated.

Pug, *n.* சிறுநாய்; குரங்கு. [a form of Puck, the fairy or hobgoblin.]

Pug′-faced′, *a.* குரங்கு முகமுள்ள, monkey-faced.

Pugh, *interj.* சீ!

Pu′gil, *n.* முதல் மூன்று விரல்களால் எடுக்கக்கூடிய அளவு.

Pu′gilism, *n.* மல்யுத்தம், முஷ்டியுத்தம், குத்துசண்டை, boxing or fighting with the fists.

Pu′gilist, *n.* குத்துசண்டை செய்வோன், மல்லன், a boxer, a professional prize-fighter. [L. 'a handful', akin to *pugnus*, the fist.]

Pu′gil-is′tic, *a.* முஷ்டியுத்தம் சம்., மல்லயுத்த சம்., pert. to boxers.

Pug-na′cious, *a.* கலகப்பிரியனான, போராடுகிற, quarrelsome, addicted to fighting, combative. [L. fr. *pugna*, a fight, *pugnus*, a fist.]

Pug-nac′ity, *n.* கலகப்பிரியம், சண்டைபோடுங்குணம், quarrelsomeness, combativeness, contentiousness.

Pug′nose′, *n.* சப்பைமூக்கு, தட்டைமூக்கு, a short thick nose, a snubnose.

Puis′ne (ப்யூனி), *a.* சின்ன, கீழான, உத்தியோகத்தில் தாழ்ந்த.—*n.* கீழ் உத்தியோகஸ்தன்; கீழ் நியாயாதிபதி. [see Cog. Puny.]

Pu′issance, *n.* பலம், சக்தி; அதிகாரம்; strength, might, force, potency, power. [fr. Puissant.]

Pu′issant, *a.* பலமுள்ள, சக்தி

யுள்ள ; அதிகாரமுள்ள ; strong, mighty, powerful. [F.; L. *posse*, to be able.]

Puke, *vt.* & *vi.* வாந்தி எடு.—*n.* வாந்திமருந்து.—*a.* ஒருவித வர்ண முள்ள. [வாந்தி எடுப்போன்.

Puk′er, *n.* வாந்தியுண்டாக்குவது ;

Puk′ka, *a.* கெட்டியான, ஸ்திரமான, நிலைவரமான. [Hi.]

Pul′chritude, *n.* அழகு, சௌந்தரியம், சிறப்பு, மனோகரம், beauty; சுகுணம், moral excellence. [L., fr. *pulcher*, beautiful.] [போல் சத்தமிடு.

Pule, *vi.* சிணுங்கு ; கோழிக்குஞ்சு

Pull, *vt.* & *vi.* இழு, வாங்கு, வலி, draw, drag, haul, tug ; பிடுங்கு, pluck ; கிழி, draw apart, tear, rend.—*n.* இழுத்தல், இழுப்பு, வலிப்பு. [AS.]

Pull′back′, *n.* பின்னுக்கு இழுப்பது, முன்னுக்கு போகாமற் செய்வது, பிரதிபந்தம்.

Pul′let, *n.* சிறுபெட்டைக்கோழி.

Pul′ley, *n.* கப்பி. [F. *poulie* ; L. *pullus*, young animal.]

Pul′monary, } *a.* நுரைஈரல் சம்.,
Pul-mon′ic, } pert. to the lungs. [L., fr. *pulmo*, *pulmonis*, a lung.]

Pulp, *n.* கனியின்சதை, பழம்மு-வற்றின்மெதுவானபாகம், the soft succulent part of fruit; மிருதுவான ஈரமுத்தை, கூழ்போன்றது, any soft moist mass.—*vt.* கூழ்போலாக்கு, முத்தையாய்ச்செய், reduce to p.; கனியின்சதைவாங்கு, deprive of the p.. [F. & L.]

Pul′pit, *n.* குருபீடம், பிரசங்கபீடம், கிறிஸ்தவர்கள் கோவிலில் போதகன் நிற்கும் உன்னதஸ்தானம், an elevated place or inclosed stage in a church, in wh. the clergyman stands while preaching. [L. *pulpitum*, a scaffold, a stage, desk.]

Pulp′ous, } *a.* சதையுள்ள (பழம்
Pulp′y, } மு.து), containing pulp, fleshy, succulent ; கனியின்சதைபோல் மிருதுவாயுள்ள, like pulp, soft. [fr. Pulp.]

Pul′sate, *vi.* (நாடி மு-வை) ஆடு, ஓடு, அடித்துக்கொள், துடி, throb, beat. [L. *pulsare*, to beat.]

Pul-sa′tion, *n.* (நாடி) ஆடுதல், ஓடுதல், அடித்துக்கொள்ளல், throbbing, beating ; நாடி, தாது, the pluse ; நாடியடி, a beat of the pulse. [fr. Pulsate.]

Pul′sative, } *a.* ஆடுகிற, அடித்துக்
Pul′satory, } கொள்ளும் (நாடி மு-வை), beating, throbbing.

Pulse, *n.* நாடி அ-து தாது (அடித்தல்), இருதயம் அ-து இரக்தநாடிகள் அடித்தல், நாடித்துடிப்பு, the beating or throbbing of the heart or bloodvessels ; ஆடுதல், அடித்துக்கொள்ளல், அசைதல், vibration, oscillation ; காய்த்தானியங்கள், பயறு, leguminous plants or their seeds. Split p.=பருப்பு. [L. *pulsus*, a beating.—L. *puls*, porridge.]

Pul-sim′eter, *n.* நாடியின் வேகத்தைத் தெரிவிக்கும் கருவி. [தக்க.

Pul′verable, *a.* சூரணஞ் செய்யத்

Pul′veri-za′tion, *n.* பொடிசெய்தல், சூரணம் செப்தல், reducing to powder.

Pul'verize, *vt.* பொடிசெய், சூரணம் செய், தூளாக்கு, reduce to powder, crush, triturate, comminute, powder.—*vi.* பொடியாகு, பொடியாய் உதிர்ந்துபோ, be reduced to powder, fall to dust. [L. *pulvis*, powder.] [பொடியான, powdery.

Pul'verous, *a.* சூரணமாயிருக்கும்,

Pu'ma, *n.* ஒருவகைபுலி.

Pum'mel = Pommel.

Pump, *n.* நீர் மு. வற்றை மொள்ளும் யந்திரம், a device for raising or transferring fluids.—*vt.* யந்திரத்தினால் (தண்ணீர்) இறை அ-து மொள்ளு, raise with a p.; நீர் மு-வற்றை இறைத்துக் காலிசெய், draw water or the like from, free from water &c. by a p.; (யுக்தியாய்) வெளிப்படுத்து, draw out, obtain, as, to p. out secrets. [Origin unknown.]

Pump'ion, Pump'kin, } *n.* பூசணிக்காய், கூஷ்மாண்டம்; பூசணிச் செடி. White p.. = சொரைக்காய். [Gr. lit. 'cooked by the sun' or thoroughly ripened: because it is not eaten till ripe.]

Pun, *n.* சிலேஷை (or டை), இரண்டர்த்தமுள்ள சப்தபிரயோகம், a play on words.—*vi.* சிலேஷைபேசு, play upon words, quibble. [AS. *punian*, to pound or beat: lit. 'to beat words into new senses'.]

Punch, *n.* ஹாஸியக்காரன், விகடகவி, buffoon, harlequin; ஸ்தூலித்த குட்டையன், a short fat fellow; தொளையிடும் இரும்புக் கருவி, a tool for perforating or indenting; ஒருவிதபானகம்.—*vt.* தொளையிடு, perforate. [L. *pungo*, I prick.]

Punch'eon, Punch'er, } *n.* தொளையிடும் உருக்குஅ-துஎஃகுக்கருவி.

Punc-til'io, *n.* சூட்சமவிஷயம், நடத்தையிலாவது மரியாதையிலாவது நுட்பாம்சம், a nice point in conduct, ceremony or procedure, particularity or exactness in forms. [Sp. & It., fr. L. *punctum*, a point.]

Punc-til'ious, *a.* மரியாதையில் மிகவும் நுட்பங்களைப்பார்க்கிற, attentive to punctilios, very nice or exact in the forms of behavior, etiquette &c., precise, exact in the smallest particulars. [see Punctilio.]

Punc'tual, *a.* சரியாய் நியமித்தகாலத்திலான, done exactly at the appointed time, exact to the time agreed on; நியமித்தகாலம்தப்பாத, observant of the exact time appointed. [F., fr. L. *punctum*, a point.]

Punc'tu-al'ity, *n.* சரியாய் நியமித்தகாலத்திற்செய்தல், சொன்னகாலம் தப்பாமல் காப்பாற்றுதல், adherence to or careful observance of the exact time of appointment or engagement. [fr. Punctual.]

Punc'tually, *adv.* சமயத்திற்குச்சரியாய், குறித்தகாலம் தப்பாமல், exactly at the time, with careful observance of the exact time of engagement.

Punc'tuate, *vt.* வாசிப்பதில் நிறுத்தும் ஸ்தானங்களில் சரியானகுறி

களை வ, insert marks of punctuation in, mark with points or stops. [see Punctual.]

Punc'tu-a'tion, n. எழுதினதில் நிறுத்திவாசிக்கும் ஸ்தானங்களில் குறிகளிடல், the use of points or stops in a writing. [fr. Punctuate.]

Punc'ture, n. இரந்திரம், a small hole; தொளையிடல், perforating. —vt. இரந்திரஞ்செய், make a p. in, prick. [L. *punctura*, fr. *pungere*, to prick.]

Pun'dit, n. பண்டிதன். [Sk *pandita*.]

Pun'gence, } n. உறைப்பு, காரம்,
Pun'gency, } piquancy, acridness, sharpness, heat or sharpness on the tongue or to the smell, raciness, causticity. [fr. Pungent.]

Pun'gent, a. காரமான, உறைப்பான, தீக்ஷணமான, acrid, sharp, piquant, racy; நோவுண்டாக்கிற, மனதைநோகச்செய்யும், painful, poignant, severe, caustic. [L., fr. *pungere*, to prick.]

Pu'nic, a. விசுவாச காதகமான.

Pun'ish, vt. சிக்ஷி, தண்டி, chastise, inflict or impose a penalty on, castigate. [L. *punire*, to punish, *poena*, punishment.]

Pun'ishable, a. சிக்ஷிக்கத்தக்க, தண்டிக்கத்தக்க, சிக்ஷைக்குத்தகுந்த, சிக்ஷாருகமான, deserving punishment.

Pun'ishment, n. சிக்ஷை, தண்டனை, pain inflicted or penalty imposed for a crime, offense, or transgression of law, chastisement, castigation; சிக்ஷித்தல், punishing. [fr. Punish.]

Pu'nitive, } a. சிக்ஷை சம்., சிக்ஷை
Pu'nitory, } விதிக்கிற, pert. to or involving or inflicting punishment. [see Punish.]

Pun'ka, n. (தூங்கு)விசிறி, பங்கா, சிவிறி. [Hi. 'fan'.]

Pun'ster, n. சிலேடைபேசுவதில் திறமையுள்ளவன், one who puns or is skilled in punning, quibbler. [fr. Pun.]

Punt, n. சிறுபடவு அ-து தெப்பம்.

Pu'ny, a. சின்ன, அற்பரூபியான, பலஹீனமான, small & feeble, imperfectly developed in size or vigor. [F. *puisne*, lit. 'younger or later born'.]

Pup, n. நாய்க்குட்டி, a young dog, puppy.—vi. (நாய்) குட்டிபோடு, bring forth young, whelp. [abbre. of Puppy.]

Pu'pil, n. கண்மணி, தாரகை, கண்கருவிழிமத்தியி லிருக்கும் இரந்திரம், the apple or black of the eye, the aperture in the middle of the iris; சிஷ்யன், சீடன், மாணாக்கன், வித்தியார்த்தி, scholar, learner, disciple; ஒருவன் சம்ரக்ஷணையிலிருப்பவன், ward, a young person under the care of a guardian, minor. [L. *pupilla*, the p. of the eye.—L. *pupilla*, dim. fo *pupus*, boy & *pupa*, girl.]

Pu'pilage, n. சிஷ்யத்துவம், சீடனாகவிருக்கும் நிலைமை, the state of being a pupil; ஒருவன் சம்ரக்ஷணையிலிருத்தல், wardship, minority. [fr. Pupil.]

Pu'pilary, *a.* சிடன்சம்., pert. to a pupil or ward; கண்மணி சம்., pert. to the pupil of the eye. [L., fr. Pupil.]

Pup'pet, *n.* பாவை, பொம்மை, பிரதிமை, பதுமை, doll; மற்றொருவனிஷ்டப்படிக்குத் திருப்பப்படும் புத்தியீனன், one controlled in his actions by the will of another, a tool. [L. *pupa*, doll.]

Pup'petish, *a.* பொம்மைபோன்ற, பாவைபோன்ற, like a puppet.

Puppet-player, *n.* பொம்மைகளாட்டுகிறவன், one who manages the motions of puppets.

Pup'petry, *n.* பொம்மலாட்டுபோன்றது, பாவைக்கூத்துபோன்றது, mere show, affectation.

Puppet-show, *n.* பொம்மைகூத்து, பாவைக்கூத்து, பொம்மலாட்டு, a mock drama performed by puppets moved by wires.

Pup'py, *n.* நாய்க்குட்டி, a young dog, pup; நீசன்.—*vi.* (நாய்) குட்டிபோடு, give birth to puppies. [F. *poupee*, doll.]

Pur, *vi.* பூனைபோல்கத்து.—*n.* பூனைக்கத்து. [Imi.]

Pu-ra'na, *n.* புராணம். [Sk., fr. *puran*, old, ancient.]

Pu-ran'ic, *a.* புராண சம்..

Pur'blind', *a.* மந்தமான திருஷ்டியுள்ள, நன்றாய்க்கண்தெரியாத, dim-sighted, near-sighted, seeing obscurely. [For 'pure-blind', i.e. wholly blind.]

Pur'chasable, *a.* (விலைக்கு) வாங்கத் [தக்க.

Pur'chase, *vt.* (விலைக்கு) வாங்கு, buy. —*n.* (விலைக்கு) வாங்கப்பட்டது, what is purchased; (விலைக்கு) வாங்குதல், வாங்கல், purchasing. P. money = வாங்கினவிலை, கொள்விலை, கொண்டவிலை. [F. *pour*, for + *chasser*, to chase: lit. seek eagerly.]

Pur'chaser, *n.* (விலைக்கு) கொள்வோன், வாங்கினவன், buyer, vendee.

Pure, *a.* சுத்தமான, நிர்மலமான, களங்கமற்ற, சுவச்சமான, clean, clear, spotless, untarnished, stainless; பரிசுத்த இருதயமுள்ள, பாவமில்லாத, பாபரகிதனான, uncorrupted, incorrupt, unsullied, chaste, sinless, holy, immaculate, innocent, guiltless, guileless, undefiled, unpolluted; மிசிரமில்லாத, கலப்பற்ற, கேவலமான, unmixed, simple, unadulterated, real, true, genuine. [F. *pur*; L. *purus*; allied to Sk. *pu*, to purify.]

Pure'ly, *adv.* சுத்தமாய், நிர்மலமாய், cleanly; கலப்பில்லாமல், மிசிரமின்றி, without admixture; மாத்திரம், கேவலம், முற்றிலும், பூர்த்தியாய், merely, completely, totally, absolutely.

Pur-ga'tion, *n.* விரேசனம், பேதி, purging; பரிசுத்தமாக்குதல், நின்மலமாக்குதல், purifying. [L.; see Purge.]

Pur'gative, *a.* விரேசனகரமான, பேதியுண்டாக்கும்.—*n.* பேதிமருந்து, a purging midicine. cathartic. [F.; see Purge.]

Pur'gatory, *a.* பாவம்நீக்குகிற, தோஷம் போக்கடிக்கிற, cleansing,

expiatory. — *n.* பாபவிமோசன லோகம், an intermediate state or place where souls are purified & made fit for heaven. [L.; see Purge.]

Purge, *vt.* பரிசுத்தம் செய், cleanse, purify, clear or free from impurities; பேதியாகும்படி செய், operate on by a cathartic, evacuate (the bowels); தோஷம்நீக்கு, பாப பரிஹாரஞ்செய், clear from guilt or moral or ceremonial defilement; நிர்தோஷியென்று நிச்சயி, குற்றமில்லை என நிச்சயி, clear from accusation.—*vi.* விரேசனமாகு, பேதியாகு, have evacuations from the intestines.—*n.* விரேசனம், பேதி, evacuation of the intestines, motion; பேதிமருந்து, cathartic, physic. [F.; L. *purgare*, *purus*, pure + *agere*, to make.] [rhea.

Pur′ging, *n.* விரேசனம், பேதி, diar-

Pu′rifi-ca′tion, *n.* பரிசுத்தப்படுத்தல்; பவித்திரமாக்குதல்; purifying, cleansing. [fr. Purify.]

Pu-rif′ica-tive = —tory.

Pu′rifi-ca′tor, *n.* பரிசுத்தப்படுத்துவோன், பாவனஞ் செய்வோன், purifier.

Pu-rif′icatory, *a.* பரிசுத்தப்படுத்துகிற, பாவனகரமான, purifying. [fr. Purify.]

Pu′ri-fi′er, *n.* பரிசுத்தப்படுத்துவோன் அ-து படுத்துவது, one who or that wh. purifies or cleanses, cleanser, refiner.

Pu′rify, *vt.* (பரி) சுத்தம்செய், பரிசுத்தப்படுத்து, make pure or clear, cleanse; பாவனஞ்செய், பவித்திரஞ்செய், தோஷரகிதனுக்கு, free from defilement of sin.—*vi.* பாவனமாகு, சுத்தமாகு, become pure or clear. [L. *purus*, pure + *facere*, to make.]

Pur′ist, *n.* அதிகபரிசுத்தம் விரும்புவோன், one who aims at excessive purity or nicety.

Pu′ritan, *n.* கிறிஸ்துமதத்தில் ஒரு வகுப்பான். [L. *puritas*, purity.]

Pu′ritanism, *n.* கிறிஸ்துமார்க்கத்தில் ஒருவகுப்பு.

Pu′rity, *n.* சுத்தம், நின்மலம், சுத்தி, புனிதம், cleanness, freedom from foulness or dirt; பவித்திரம், பாவனம், பாபரஹிதம், நிர்தோஷம், freedom from defilement of sin or guilt, innocence, chastity. [L. *puritas*; fr. Pure.]

Purl, *n.* ஒருவித சாராயம்; தண்ணீரின் சலசலவென்ற தொனி; குச்சு அ-து சுருக்குவைத்துத் தைத்த சரிகையோரம்.—*vi.* வேகமாய்ப் பாய், பிரவாகி; சலசலவென்ற தொனிசெய். [கரை.

Pur′lieu, *n.* எல்லை, பிராந்தம், ஓரம்,

Purl′ing, *n.* நீர்ஊற்றின் சலசல வென்றதொனி.

Pur-loin′, *vt.* திருடு, அபகரி, steal, filch. [OF. lit. 'to carry away far', *pur*, for + *loin*, long, far; L. *prolongo*.]

Pur′ple, *a.* சிகப்பும் நீலமுங்கலந்த நிறமுள்ள, தாமிரவர்ணமுள்ள, ரக்த வர்ணமான, சிகப்பான, blood-red; இராஜ சம்., imperial, regal.

—*n.* தூமிரவர்ணம்,a color formed by a combination of red & blue. —*vt.* தூமிரவர்ணம்போடு, சிவப்பாக்கு, make p.. [L. *purpura*, fr. Gr. *porphyra*, a kind of shell-fish yielding the dye.]

Pur′plish, *a.* கொஞ்சம் தூமிரவர்ணமான, somewhat purple. [fr. Purple.]

Pur′port, *n.* முக்கியார்த்தம், தாற்பரியம், meaning, import.—*vt.* உத்தேசி, intend; அர்த்தங்கொடு,தெரியச்செய், mean,signify. [F.*pour*, for + *porter*, to bear : lit. what is conveyed.]

Pur′portless, *a.* அர்த்தமில்லாத, without purport or meaning.

Pur′pose, *n.* உத்தேசம், அபிப்பிராயம், யோசனை, சங்கற்(orல்)பம், object, end, aim, design, view, intention, plan; உபயோகம், வேலை, காரியம், practical advantage or result, consequence,use; நிச்சயம், settled resolution, determination; எண்ணம்,ஹேது, motive. On p. = உத்தேசபூர்வமாய், நோக்கத்துடன், intentionally. To no p. = வியர்த்தமாய், வீணாய்.—*vt.* & *vi.* உத்தேசி, யோசி, நிச்சயி, கருது, intend, design, resolve, determine upon, propose to one's self, wish. [OF. *pourpos*, fr. L. *pro*, before + *ponere*, to place.]

Pur′posedly, *adv.* உத்தேசமாய், வேண்டுமென்று, purposely.

Pur′poseless, *a.* வியர்த்தமான, காரியமில்லாத, உத்தேசமில்லாத, having no purpose, objectless.

Pur′posely, *adv.* முன் நிச்சயித்துக் கொண்டு, வேண்டுமென்று, உத்தேசப் பூர்வமாய், with purpose or design, intentionally, designedly. [fr. Purpose.]

Purr=Pur.

Purse, *n.* பணப்பை, a small bag or pouch used to carry money in.—*vt.* பணப்பையில்போடு ; மடிப்புவிழும்படிசெய், pucker. [OF. *borse*, L. L. *bursa*, fr. Gr. *byrsa*, a skin or hide.]

Purse′ful, *n.*பணப்பை நிறையுமளவு, பைகொண்ட அளவு, enough to fill a purse.

Purse-pride, *n.* பணச்செருக்கு, தனகர்வம், தனமதம், arrogance or pride due to the possession of wealth.

Purse′-proud′, *a.* பணச்செருக்குள்ள, தனகர்வமுள்ள, proud of one's wealth. [கீரை.

Purs′lain, *n.* ஒருவிதகீரை, கோழிக்

Pur-su′able, *a.* பின்தொடரத்தக்க, அனுசரிக்கத்தக்க, that can be pursued.

Pur-su′ance, *n.* அனுசரணை, நடத்தல், பிரவர்த்தித்தல், pursuing, prosecuting,prosecution, following out. In p. of= அனுசரித்து, பிரகாரம், படிக்கு. [fr. Pursue.]

Pur-su′ant, *a.* அனுசரிக்கிற, ஒத்த, இசைந்த, pursuing, following, according, agreeable, conformable, done in accordance(with). —*adv.* அனுசரித்து, பிரகாரம், படிக்கு, in accordance, agreeably, conformably. P. to the

order=உத்தரவு பிரகாரம், கட்டளைப்படிக்கு. [fr. Pursue.]

Pur-su′antly, *adv.*= Pursuant.

Pur-sue′, *vt.* பின்றொடர், பின்றுரத்து, பிடிக்கப்போ, follow eagerly or with haste, follow to overtake, chase, hunt; அநுசரி, proceed along, follow, go in, adopt; நடத்து, நடப்பி, continue, prosecute. [F.; L. *pro*, forward +*sequi*, to follow.]

Pur-su′er, *n.* பின்றொடருகிறவன், பின்றுரத்துகிறவன், one who pursues.

Pur-suit′, *n.* பின்தொடர்தல், பின்செல்லுதல், பின்றுரத்தல், chase; அநுசரணை, following, adoption; பிரயத்தனம், ஏதேனும் அடைவதற்கு செய்யும் முயற்சி, endeavor to attain or gain; வியாபாரம், விருத்தி, வேலை, தொழில், occupation, employment. [F.; see Pursue.]

Pur′suivant, *n.* தூதன், செய்திகொண்டுபோவோன் அ-து வருவோன், அர்க்காரி.

Pur′sy, *a.* உப்பின, பொருமின; குட்டையும் தடிப்புமான.

Pu′rulence, *n.* சீழ்பிடித்தல், the generation of pus; சீழ், pus. [fr. Purulent.

Pu′rulent, *a.* சீழ்பிடித்த, attended with suppuration or formation of pus; சீழ்போன்ற, of the nature of pus. [L., fr. *pus*, *puris*, pus, matter.]

Pur-vey′, *vt.* சாமக்கிரிகொடு, உபகரணங்கள் அமர்த்திக்கொடு, furnish supplies for, provide with necessaries; சம்பாதி, சங்கிரகி, procure. [F. *pourvoir*, fr. L. *providere*, to foresee.]

Pur-vey′ance, *n.* போஜன சாமக்கிரி, ஸம்பாரம், ஆஹாரம், provisions, food.

Pur-vey′or, *n.* போஜன சாமக்கிரி சேகரிக்கிறவன், ஆஹாரச்சாமான் தயார்செய்கிறவன், சம்பாரம் சித்தப்படுத்துவோன், one who provides victuals, victualer, caterer. [fr. Purvey.]

Pur′view, *n.* உத்தேசிக்கப்பட்ட விஷயம் சகலமும், அவகாசம், scope, extent.

Pus, *n.* சீழ், the result of suppuration, purulence. [L. *pus*, matter.]

Push, *vt.* தள்ளு, நெட்டு, செலுத்து, drive or press forward, propel, impel, shove; கொம்பு மு. வற்றால் முட்டு, தாக்கு, strike or gore with the horns or the like, thrust.—*vi.* பெலத்துடன் முன்னுக்குப்போ press one's self onward, force, one's way; தள்ளு, குத்து, make a thrust.—*n.* குத்துதல், தள்ளு, இடி, a thrust, a shove, impulse; மேல்விழுதல், தாக்குதல், attack, assault. [F. *pousser*, fr. L. *pellere*, *pulsum*, to drive.]

Push′ing, *a.* சாகசமுள்ள, துணிவுள்ள, தைரியமுள்ள, ஊக்கமுள்ள, pressing forward in business, enterprising, energetic.

Pu′silla-nim′ity, *n.* கோழைத்தனம், தைரியமின்மை, timidity,

cowardliness, cowardice. [fr. Pusillanimous.]

Pu'sil-lan'imous, *a.* கோழையான, பயப்படுகிற, தைரியமற்ற, timid, cowardly, dastardly. [L. *pusillus*, very little, (dim. of *pusus*, little) + *animus*, mind.]

Puss, Puss'y, *n.* பூனை, cat : இது பூனைக்கு செல்லப்பெயர்.

Pus'tular, Pus'tulate, *a.* கொப்புளங்களுள்ள, முத்துக்களுள்ள, covered with pustules. [fr. Pustule.]

Pus'tule, *n.* கொப்புளம், முத்து, a vesicle or an elevation of the cuticle containing pus. [F. & L.]

Pus'tulous, *a.* கொப்புளமுள்ள, முத்துக்களுள்ள, pustular. [fr. Pustule.]

Put, *vt.* வை, போடு, இடு, place, lay, set. P. away = விலக்கு, விட்டுவிடு. P. by = மீத்துவை, சேர்த்துவை, store up. P. down = அடக்கு, நீக்கு, suppress, abolish. P. forth = நீட்டு, extend, thrust out. The tree p. forth leaves = அந்தமரம் துளிர்த்தது. P. off = ஆலசியஞ்செய், இன்னொரு சமயத்திற்கு நிறுத்திவை, postpone, defer. P. on = அணி, தரி, தொடு, invest one's self with, wear, assume. P. out = அவி, அணை, இழக்கச்செய், நசிக்கச்செய், extinguish; கலக்கு, தடுமாறப்பண்ணு, confuse, disconcert. P. to a stand = நிறுத்து, தடைசெய். P. to death = P. to the sword = கொல்லு.—*vi.* சுக்கான் திருப்பு, கப்பல் நடத்து, steer. P. about = கப்பல்போகும் திக்கு மாற்று. The ship p. to sea = கப்பல் புறப்பட்டது. P. up = தங்கு, வாசம்பண்ணு, குடியிரு, lodge. P. up with = பொறுத்திரு, சகித்துக்கொள், overlook, endure, bear, suffer. [AS.]

Pu'tage, *n.* வேசியின்தொழில், வேசியாவிருத்தி, prostitution. [OF.]

Pu'tative, *a.* பிரசித்தமான, எல்லாருக்குந்தெரிந்த, reputed, supposed, as, the p. father of a child. [F.; L. *puto*, I suppose.]

Put-chuck', *n.* மருந்திற் குபயோகப்படும் ஓர்வகைப் பச்சிலை.

Put'-off', *n.* தப்பித்துக்கொள்ளுதல், evasion ; தாமதஞ்செய்வதற்கு சாக்கு அ-து உபாயம், an excuse or shift for delay.

Pu'tre-fac'tion, *n.* அழுகுதல், putrefying, decomposition, rotting. [fr. Putrefy.]

Pu'tre-fac'tive, *a.* அழுகிப்போகும்படிச்செய்கிற, causing putrefaction.

Pu'trefy, *vt.* அழுகவை, அழுகச்செய், render putrid, cause to rot or be decomposed.—*vi.* அழுகு, become putrid or fetid, decay, rot. [L. *putris*, putrid + *facere*, to make.]

Pu-tres'cence, *n.* அழுகுதல், putrid state. [fr. Putrescent.]

Pu-tres'cent, *a.* அழுகுகிற, ஊசும், becoming putrid or rotten. [L., fr. *putrescere*, to rot.]

Pu'trid, *a.* அழுகின, ஊழ்த்த, ஊசின, decomposed, rotten, in a state of decay, corrupt. [F.; L.

putris, fr. *putrere*, to rot, *putere*, to stink.]

Pu-trid′ity, *n.* அழுகினஸ்திதி, putrefaction, rottenness. [fr. Putrid.]

Put′ty (பட்டி), *n.* கண்ணாடி முதலியவற்றை சட்டங்களில் ஒட்டும் லப்பம் அ-து பசை, பற்று, a kind of cement used in fastening glass in sashes &c.—*vt.* லப்பத்தால் ஒட்டு, cement with p.. [F.]

Puz′zle, *vt.* குழப்பு, கலவரப்படுத்து, ஒன்றுந் தோன்றாம லிருக்கச் செய், perplex, bewilder, confuse, confound, embarrass, nonplus. —*vi.* கலவரப்படு, ஒன்றுந்தோன்றாமலிரு, be perplexed.—*n.* சிக்கு, கலவரப்படுத்துவது, something wh. perplexes, a thing difficult to understand or solve, a riddle, problem, an intricacy; கலவரம், குழப்பம், தடுமாற்றம், மலைவு, திக்பிரமம், perplexity, confusion, bewilderment, embarrassment. [freq. of Pose, to perplex with a question.]

Pyal=Pial.

Pyg-me′an, *a.* மிகவும் சின்னரூபமுள்ள, சிற்றுருவான, குள்ளமான, dwarfish, very small. [fr. Pygmy.]

Pyg′my, *n.* குள்ளன், மிகவும் சின்ன மனிதன், வாமனன், dwarf. [F.; L.; Gr., fr. *pygme*, the measure of the fist, the distance from the elbow to the knuckles, 13½ inches.]

Py-lo′rus, *n.* ஆந்திரமுகம், இரைப்பையிலிருந்து ஆஹாரம் குடற்குச் செல்லும் துவாரம்.

Pyr′amid, *n.* கூர்மையான சாய்வுள்ள திப்பை அ-து திடர்; கூரான முனையுள்ள ஸ்தம்பம். [F. & L.; Egyptian word.]

Py-ram′idal, } *a.* கூரான சாய்வுள்ள திப்பைபோன்ற அ-து ஆகாரமுள்ள, in the
Pyr′a-mid′ical, } form of a pyramid. [fr. Pyramid.]

Pyre, *n.* சவத்தை தகனம் செய்வதற்கு விறகுக்குப்பல், ஈமக்குவியல், காஷ்டம், a funeral pile, a combustible heap on wh. the dead are burned. [L.; Gr., fr. *pyr*, fire.]

Py-ret′ic, *a.* சுர சம்., காய்ச்சல் சம்., pert. to fever, febrile.—*n.* சுரத்திற்கு மருந்து, a remedy for fever, febrifuge. [Gr. *pyr*, fire.]

Py-ri′tes, *n.* அக்கினிக்கல், தீக்கல், சுவர்ணமாக்ஷிகம்.

Pyr′o-man′cy, *n.* நெருப்பினால் சகுனம்பார்த்தல். [கருவி.

Py-rom′eter, *n.* உஷ்ணமளக்குங்

Pyr′o-tech′nical, *a.* பாணவேடிக்கை சம்., pert. to fireworks or their manufacture. [Gr. *pyr*, *pyros*, fire + *techne*, art.]

Pyr′o-tech′nics, *n.* *sing.* பாணம் செய்யும் வித்தை, the art of making fireworks.

Pyr′o-tech′nist, *n.* பாணம்செய்கிறவன், one who makes fireworks.

Pyr′o-techny=Pyrotechnics.

Pyr′rhonism, *n.* ஸர்வசமுசயமதம், எல்லாவற்றையும் சமுசயிக்கும் மதம். [பாம்பு.

Py′thon, *n.* விஷமில்லாத ஒருவித

Pyx, *n.* கிறிஸ்தவர்கள் பிரசாதம் வைக்கும் சம்புடம் அ-து பாத்திரம்.

Q

Quack, *n.* மூடவைத்தியன், சாஸ்திரம் தெரியாமலே வைத்தியம்செய்பவன், a pretender to medical skill, ignorant medical practitioner, empiric; தனக்கு திறமையுண்டென்று டம்பம்பேசுவோன், charlatan, pretender, impostor; வாத்துச்சத்தம், the cry of the duck.—*a.* மூடவைத்தியஞ் செய்கிற, சாஸ்திரபிரகாரமல்லாத, empiric. empirical.—*vi.* வாத்தைப் போல் சத்தமிடு, cry like the duck. [Imi.]

Quack'ery, *n.* மூடவைத்தியம், சாஸ்திரம்தெரியாமலேசெய்யும்மோசவைத்தியம், empiricism, ignorant or fraudulent practise of medicine, charlatanry. [fr. Quack.]

Quack'ish, *a.* மூடவைத்தியன் போன்ற, டம்பம்பாராட்டுகிற, like a quack. [வைக்கும் ஈயக்கட்டி.

Quad, *n.* அச்செழுத்திற் கிடையில்

Quad'rago-na'rious, *a.* நாற்பதான, consisting of forty; நாற்பதுவயதுள்ள, forty years old.

Quad'ran'gle, *n.* நாற்கோணம், சதுர்க்கோணம், சதுர்புஜம், quadrilateral; நான்குபக்கத்திலும் வீடுகளுக்கு மத்தியிலுள்ள காலியிடம், அங்கணம், முற்றம், a quadrangular space or court surrounded by buildings. [L. *quadrus*, four + *angulus*, angle.]

Quad-ran'gular, *a.* நாற்கோணமான, சதுர்க்கோணமான, நாலுபக்கங்களுள்ள, having four angles, tetragonal.

Quad'rant, *n.* வட்டத்தில் நாலிலொருபாகம், the quarter of a circle.

Quad'rate, *a.* சதுரமான, square; தகுந்த, பொருத்தமான, suited.—*n.* சதுரம், square.—*vi.* சரிப்படு, பொருந்து, இணங்கு, தகுந்திரு, இசை, suit, correspond: foll. by *with*.

Quad-rat'ic, *a.* சம சதுர்கோண சம். Q. equation = வர்க்கசமீகரணம்.

Quad'rature, *n.* சதுரம்; வட்டம் மு. வளைக்கோட்டுருவங்களுக்குச் சமமான சதுரளவைக்கண்டுபிடித்தல்.

Quad-ren'nial, *a.* நான்குவருஷத்திற்கொருமுறையான, occurring once in four years.

Quad'rige-na'rious, *a.* நானூறுள்ள, consisting of four hundred.

Quad'ri-lat'eral, *a.* நான்குபக்கமுடைய.—*n.* சதுர்ப்புஜம், four-sided (figure). [L. *quadrus*, four + *latus*, *lateris*, side.]

Qua-drille', *n.* ஒருவிதசீட்டாட்டம்; ஒருவிதநாட்டியம். [F.]

Quad-ril'lion, *n.* ஒன்றும் இருபத்திநாலு சுன்னங்களுமுள்ள ஓர் எண், நிதி. [கிக்கப்பட்டிருக்கிற.

Quad-rip'artite, *a.* நான்காய் விபா

Quad'ri-syl'lable, *n.* நான்கு அசைகளுள்ளவார்த்தை, a word of four syllables.

Quad-riv'ial, *a.* நான்குவழிகள் ஓரிடத்தில் கூடுகிற, நாற்சந்தியான.

Quad'rumane, *n.* குரங்குஜாதி (ஜெந்து), கைகள்போன்ற நான்கு காலுள்ள ஜெந்து.

Quad-ru'manous, *a.* நான்குகைகளுள்ள, four-handed.

Quad′ruped, *a.* நான்குகால்களுள்ள.—*n.* நாற்கால்மிருகம், சதுஷ்பாத ஜந்து. four-footed (animal). [L. *quadrus*, four + *pes*, *pedis*, foot.]

Quad′ruple, *a.* & *n.* நான்மடங்கு, four times the sum or number, fourfold.—*vt.* நான்கால்பெருக்கு, நான் மடங்குசெய்.—*vi.* நான்மடங்கு (அதிகம்) ஆகு. increase, four times or fourfold. [F.; L. *quadrus*, four + *plicare*, to fold.]

Quaff, *vt.* & *vi.* அதிகமாய்குடி.

Quaff′er, *n.* அதிகமாய்க்குடிப்பவன்.

Quag′gy, *a.* சதுப்பான, சேறுன, boggy.

Quag′mire′, *n.* சதுப்புநிலம், சேற்றுநிலம், சகதிநிலம், morass, bog, swamp, marsh. [quake + mire: lit. a mire or bog that quakes or shakes.]

Quail, *vi.* பயத்தினால்லொங்கு, பதங்கு, வாடு, நடுங்கு, பயப்படு, தைரியம் விடு, lose heart or courage, sink, quake, tremble, flinch, cower.—*n.* காடை, குறும்பூழ். [AS. 'to die'.]

Quaint, *a.* விசித்திரமான, விந்தையான, சாதாரணமல்லாத, odd, queer, antique, whimsical, fanciful, curious; சமத்காரமான. [lit. 'known', 'remarkable', L. *cognitus*, known.]

Quake, *vi.* நடுங்கு, பயம் மு-வற்றால் அசை அ-து கம்பி, shake with fear &c., shudder, tremble, quiver, shiver.—*n.* நடுக்கம், கம்பம், அதிர்ச்சி, a shudder, quivering.

Quak′er, *n.* கிறிஸ்தவர்களில் ஒரு வகுப்பான். [fr. Quake.]

Quak′y, *a.* அசைகிற, ஆடுகிற, நடுங்குகிற, shaky, tremulous. [fr. Quake.]

Qual′i-fi′able, *a.* தணிக்கக்கூடிய, உபசாந்தி செய்யத்தக்க, abatable.

Qual′ifi-ca′tion, *n.* யோக்கியதை, பாத்திரம், அருகம், தகைமை, fitness, suitability, worthiness, competency, capacity, தகுதியாகும்படி செய்யும் குணம், சாமர்த்தியம் மு-து, a quality, acquirement &c. making one fit (for a purpose); விலக்காய்ச் சொல்லப்பட்டது, modification, restriction, exception; சொல்லப்பட்ட விஷயத்தின் பலத்தை தணிப்பது, a limiting statement, abatement, diminution. [fr. Qualify.]

Qual′ificative, *a.* குணத்தைத்தெரிவிக்கும் அ-து மட்டுப்படுத்துகிற, serving to qualify or limit.—*n.* குணத்தைத்தெரிவிக்கும் வார்த்தை அ-து வாக்கியம், விசேஷணம், a qualifying term or statement.

Qual′ified, *pa.* தகுந்த, யோக்கியதையுள்ள, அருகமான, அருகனுன, competent, fitted, adapted; மட்டுப்படுத்தப்பட்ட, modified, limited.

Qual′ify, *vt.* தகுதியாக்கு, யோக்கியதை யுண்டாக்கு, (வேண்டிய) சமர்த்துண்டாக்கு, fit, make competent, prepare, adapt, capacitate; மட்டுப்படுத்து, மிதப்படுத்து, தணி, modify, limit, restrict; பலத்தைக் குறை, soften, abate, diminish, temper; குணத்தைத்தெரிவி, விசேஷணமாயிரு, attribute a quality to.—*vi.* அருகனுகு, தகைமைபெறு, வேண்டியயோக்கியதை யுண்டாக்

Re-sume′, *vt.* திரும்ப எடுத்துக்கொள், take back; மறுபடிஆரம்பி, திரும்பத்தொடங்கு, begin or take up again, recommence.—(ரேசுமே), *n.* சங்கிரகம். [L. *re*, back + *sumo*, I take.]

Re-sump′tion, *n.* மறுபடி யெடுத்துக்கொளல், resuming, taking back. [F. & L.; see Resume.]

Re-sump′tive, *a.* திரும்பயெடுத்துக்கொள்கிற, resuming.

Res′ur-rec′tion, *n.* திரும்ப எழுதல், புனருத்தானம், rising again; மரித்தோர்உயிர்த்தெழும்புகை; rising again from the dead, resumption of life by the dead. [F.; L. *re*, again + *surgere*, to arise.]

Re-sus′citate, *vt.* திரும்ப உயிர்ப்பி, பிழைப்பி, திரும்ப ஜீவிப்பி, revivify, reanimate. — *vi.* திரும்ப

பிழை அ-ய ஜீவி, come to life again, revive. [L. *re*, again + *sub*, from beneath + *cito*, I summon.]

Re-sus'ci-ta'tion, *n.* திரும்பப் பிழைத்தல், போன பிராணம் வருதல், reanimation, revival. [fr. Resuscitate.]

Re-sus'citative, *a.* திரும்ப உயிர்ப்பிக்கிற, reviving, revivifying.

Re'tail, *vt.* சில்லறையாய்வில், வாங்கிவில், sell in small quantities (directly to the consumer).—*n.* சில்லறைவிற்பனை, வாங்கிவிற்றல், the sale of goods in small quantities.—*a.* சில்லறையாய் விற்கிற, selling in small quantities. [F. *re*, again + *tailler*, to cut: lit. to sell by pieces cut off.]

Re-tail'er, *n.* சில்லறைக் கடைக்காரன், one who retails, a retail dealer.

Re-tail'ment, *n.* சில்லறைவிக்கிரயம், retailing.

Re-tain', *vt.* வைத்துக்கொள், கொடாமல் வைத்துக்கொள், நிறுத்திவை, பிடித்துவை, continue to hold, keep (in possession), not to leave or part with. [F.; L. *re*, back + *tenere*, to hold.]

Re-tain'er, *n.* சேவகன், கையாள், attendant. A body of r-s = பரிவாரம்.

Re-tain'ment, *n.* வைத்துக்கொள்ளல், retention. [fr. Retain.]

Re-take', *vt.* திரும்ப எடுத்துக்கொள், take or receive again; மறுபடி பிடித்துக்கொள், recapture.

Re-tal'iate, *vt.* & *vi.* பிரதிகாரஞ் செய், நன்மைக்கு நன்மை தீமைக்குத் தீமைசெய், சரிக்குச் சரிசெய், பதில் செய், return like for like, repay or requite by an act of the same kind, return evil for evil. [L. *re*, in return + *talio*, like for like, fr. *talis*, such.]

Re-tal'i-a'tion, *n.* பிரதிகாரம், சரிக்குச் சரிசெய்தல், பதில்செய்தல், returning like for like, the return of evil for evil, requital, revenge. [fr. Retaliate.]

Re-tal'iative, } *a.* பிரதிகாரஞ்செய்கிற; பதிலாய்செய்யப்பட்ட; returning evil for evil.
Re-tal'iatory, }

Re-tard', *vt.* ஆலசியமாகும்படி செய், வேகம் குறை, தடு, தாமதம் பண்ணு, impede, hinder, clog, obstruct, delay, detain. [L. *re*, inten. + *tardare*, to delay, *tardus*, slow.]

Re'tar-da'tion, *n.* வேகம் குறைத்தல், lessening of velocity or progress; பிரதிபந்தம், தடை, obstacle. [fr. Retard.]

Retch, *vi.* ஓக்காளி, உவட்டு, குமட்டு, வமனஞ்செய், make an effort to vomit, strain as in vomiting. [AS.]

Re-ten'tion, *n.* வைத்து வைத்தல், வைத்துக்கொள்ளல், பிடிமானம், retaining, keeping; மனதில் வைத்துக்கொளல், தாரணை, ஞாபகசக்தி, retentiveness, memory, remembrance. [L.; see Retain.]

Re-ten'tive, *a.* பிடிக்கிற, வைத்துக்கொள்ளும்; தாரணைசக்தியுள்ள;

retaining, as a r. memory. [F.; see Retain.]

Re-ten′tiveness, *n.* தாரணைசக்தி, ஞாபகசக்தி, retention, memory, the preservative function of memory.

Ret′icence, } *n.* மௌனம், பேசாமலிருத்தல்,மனதிலேயேவைத்துக்கொளல், reserve in speech, uncommunicativeness, holding one's tongue. [L.; see Reticent.]
Ret′icency, }

Ret′icent, *a.* மௌனமாயிருக்கிற,தாராளமாய்ப் பேசாத, inclined to keep silent, reserved, uncommunicative. [L. *re*, again + *tacere*, to be silent.]

Ret′icle, *n.* சிறுவலை, a small net.

Re-tic′ular, } *a.* வலைபோன்ற,வலைபோல் பின்னப்பட்ட, netlike, retiform, formed with interstices. [fr. Reticule.]
Re-tic′ulate,—ted, }

Re-tic′u-la′tion, *n.* வலைபோல் பின்னல், network.

Ret′icule, *n.* சிறு வலைப்பை, a little bag of network. [F.;L.*reticulum*, dim. of *rete*, a net.]

Ret′iform, *a.* வலைபோல் செய்யப்பட்ட,வலைவடிவுள்ள,netlike,reticular.

Ret′ina, *n.* திருஷ்டிக்கு முக்கியமான கண்ணுக்குள்ளிருக்குமோர் ஜவ்வு. [L. *rete*, a net.]

Ret′inal, *a.* fr. Retina.

Ret′inue, *n.* பரிஜனம்,பரிவாரம்,ஒரு பெரிய மனுஷனோடு கூடப்போகுஞ்ஜனம், a train of attendants, suite, the body of retainers following a distinguished person, escort. [OF., fr. *retenir*, to retain, engage.]

Re-tire′, *vi.* பின்னுக்குப் போ, go or draw back, keep aloof, withdraw, retreat; விட்டுப்போ,உத்தியோகம்விவஹாரம் மு.வைகளை விட்டுப்போ, withdraw from a public position, business &c.; ஏகாந்தத்திற்குப்போ, go into privacy or seclusion; படுக்கைக்குப்போ, நித்திரைக்குப்போ, go to bed. —*vt.* உத்தியோகத்திலிருந்து நிறுத்து அ-து விடச்செய், cause to retire, withdraw from active service. [F. *re*, back + *tirer*, to draw.]

Re-tired′, *pa.* ஏகாந்தத்திற்குப் போன; நிர்ஜனமான,ஏகாந்தமான, தனிமையான; private, secluded; உத்தியோகம் வியாபாரம் மு.வை விட்டு விட்ட, withdrawn from public service or business. [fr. Retire.]

Re-tired′ly, *adv.* ஏகாந்தமாய்.

Re-tire′ment, *n.* உத்தியோகம் மு. வை விட்டுவிட்டுப் போதல், retiring or withdrawing from public service or business; ஏகாந்தத்திற்குபோதல், going into seclusion or solitude; ஏகாந்தஸ்தலம், ஏகாந்தம்,solitude, retreat; ஏகாந்தமாயிருத்தல், துறவு, ஏகாந்தம், seclusion, privacy. [fr. Retire.]

Re-tir′ing, *a.* அதிகமாய் மற்றவர்களோடு சேராத, கூச்சமான, கலந்திருக்காத, reserved, shy, not forward or obtrusive.

Re-tort′, *vt.* பின்னுக்குவளை, bend or curve back; பின்னுக்கடி, throw back; பதில்கொடுப்போடு, பதில்வாதஞ்செய், return, as a censure, argument &c., say in sharp spiteful rejoinder.—*vi.* பிரதி ஆக்ஷேபஞ்சொல்லு, கடினஉவாபுசொல், return an argument or a charge, make a severe reply.—*n.* பிரதிக்கதை, பதில் அவமானம், கடினவாபு, எதிருரை, a retaliatory speech or act, a keen or sharp rejoinder or witty repartee; வளோக்குமுல் அ-து கருத்துள்ளபுட்டி, வக்கிற கண்டி. [L. *re*, back + *torqueo*, *tortum*, to twist.]

Re-tor′tion, *n.* பின்வளைதல், a bending, turning, or twisting, back. [fr. Retort.]

Re-touch′, *vt.* திருத்து, correct or improve by new touches, revise. —*n.* திருத்துதல், revisal, correction, improvement. [re + touch.]

Re-trace′, *vt.* வந்தவழியேபோ, trace back, go back in or over, go over again in a reverse direction. [re + trace.]

Re-tract′, *vt.* பின்னுக்குத் திருப்பிக்கொள், தான்முன்சொன்னதைஅழி, recall, withdraw, revoke, recant, unsay, take back. [F.; L. *re*, back + *trahere*, to draw.]

Re-trac′tion, *n.* பின்னுக்குத்திருப்பிக்கொள்ளுகை, தான் முன்சொன்னதை அழித்தல் அ-து அல்லவென்று விட்டு விடல், recalling, recantation. [fr. Retract.]

Re-treat′, *n.* பின்னுக்குப்போதல், ஓடிப்போதல், பலாயனம், retiring, withdrawing or departure (before an enemy); ஓடிப்போய் ஒளிக்கும்ஸ்தலம், ஒதுக்கிடம், மறைவு, refuge, asylum, shelter; ஏகாந்தஸ்தலம், seclusion, solitude, retirement.—*vi.* பின்னுக்குப்போ, ஓடிப்போ, go back or backward, retire before an enemy. [F.; L. *re*, back + *trahere*, to draw.]

Re-trench′, *vt.* குறை, சுருக்கு, பிடி, lessen, curtail, cut off. [OF. *re*, back + *trencher*, to cut.]

Re-trench′ment, *n.* குறைத்தல், சுருக்கல், அனுவசியமானதை விலக்கல், lessening, curtailment, reduction. [fr. Retrench.]

Re-trib′ute, *vt.* பிரதிபலங்கொடு. [L. *re*, back + *tribuere*, to assign, to pay.]

Ret′ri-bu′tion, *n.* பிரதிபலம், சிட்சையாவது வெகுமானமாவது, repayment, requital. [fr. Retribute.]

Re-trib′utive, } **Re-trib′utory**, } *a.* பிரதிபலங்கொடுக்கிற; சிக்ஷைசெய்கிற; making retribution.

Re-triev′able, *a.* திரும்ப அடையத்தக்க, மறுபடியும் சம்பாதிக்கத்தக்க, recoverable.

Re-triev′al, *n.* மறுபடியும் சம்பாதித்தல், recovery, restoration.

Re-trieve′, *vt.* மறுபடிசம்பாதி, திரும்பஅடை, recover, regain, restore; திருத்து, சீராக்கு, repair. [F. *re*, again + *trouver*, to find.]

Re′trocede, *vt.* திரும்பக் கொடுத்துவிடு, cede or yield back.—*vi.* பின்னுக்குப்போ, go back, recede.

Re'tro-ces'sion, *n.* திரும்பக்கொடுத்துவிடல், giving back.

Re'trograde, *vi.* பின்னுக்குப்போ அ-து நட, move backward or in a reverse direction, recede; தாழ்ந்த ஸ்திதிக்குப்போ, கெடு, deteriorate, decline.—*a.* பின்னுக்குப்போகிற, பின்பக்கமான, பின்நோக்கான, moving backward or in a reverse direction, backward, reversed. [L. *retro*, back + *gradi*, to step.]

Re'tro-gres'sion, *n.* பின்னுக்குப் போகல் அ-து நடத்தல், பின்போக்கு, அபரகதி, backward movement. [F.&L.; see Retrograde.]

Re'tro-gres'sive, *a.* பின்னிடுகிற, பின்னுக்குப்போகிற, பின்போக்கான, moving backward; க்ஷீணஸ்திதியடைகிற, declining.

Re'trospect, *n.* பின்னோக்கம், கடந்ததை யாலோசித்தல், சென்றதை நோக்கல், கதாவலோகனம், a looking back, view or contemplation of something past.—*vt.* பின்னுக்குப்பார், பின்னோக்கு, look backward. [L. *retro*, back + *specere*, *spectum*, to look.]

Re'tro-spec'tion, *n.* பின்னோக்கம், கடந்ததை ஆலோசித்தல், சென்றதைநோக்கல், looking back on things past. [fr. Retrospect.]

Re'tro-spec'tive, *a.* பின்னோக்குகிற, கடந்ததை ஆலோசிக்கிற, கழிந்ததைக்குறித்த, looking backward, contemplating, affecting, or concerning, things past. [fr. Retrospect.]

Re-tund', *vt.* (கூர்) மழுக்கு, blunt.

Re-turn', *vi.* திரும்பவா, come back, come again, reappear, recur; திரும்பப்போ, திரும்பு, go back, revert, go again; பிரதியுத்தரங்கொடு, பதில்சொல், speak in answer, reply, retort.—*vt.* திரும்பக்கொடுத்துவிடு, give back, restore, repay; பதில்செய், பிரதிகாரம்செய், requite, repay; உத்தரம்சொல், பதில்சொல், say or give in reply or answer.—*n.* திரும்ப வருதல் அ-து போதல், திரும்புதல், coming or going back; திரும்பக்கொடுத்தல், giving back, restoration, restitution; திரும்பசெலுத்தல், repayment; பிரதிகாரம், பதில், requital; பலன், லாபம், ஆதாயம், profit, advantage. [F. *re*, back + *tourner*, to turn.]

Re-un'ion, *n.* திரும்ப ஐக்கியப்படுகை, திரும்ப கலந்துகொள்ளுதல், புணர்சம்யோகம், திரும்ப இணங்குகை, reuniting, a second union, union after separation or discord.

Re'u-nite', *vt.* திரும்பப்பொருத்து, மறுதரமிணக்கு.—*vi.* திரும்பக்கலமறுபடிசேர்ந்துகொள். unite again, join after separation, rejoin.

Re-veal', *vt.* வெளிப்படுத்து, தெரியப்படுத்து, பஹிரங்கம்செய், கருகலானதை அ-து இரகசியமானதை தெளிவி, make known, disclose, divulge. [F.; L. 'unveil', *re*, back + *velare*, to veil.]

Rev'el, *n.* குடித்துத்துள்ளுதல், வெறியாட்டம், a riotous festivity or

merry-making, carousal.—*vi.* குடித்துக்கூளரு, feast in a riotous manner, make merry. carouse. [OF. *reveler*, L. *rebellare*, to rebel.]

Rev'o-lu'tion, *n.* பரிரங்கம்செய்தல் ரஹஸியத்தைத் தெரியப்படுத்தல், revealing, disclosing; வெளிப்படுத்தப்பட்ட விஷயம், disclosure, divulgence; சுருதி, வேதம், what is revealed by God to man, divine truth. [F. & L.; see Reveal.]

Rev'eler, Rev'eller, *n.* குடித்துக்கூளுகிற வன், one who revels.

Rev'el-rout', Rev'elry, *n.* குடித்துத் துள்ளுதல், engaging in a revel, reveling, noisy or riotous festivity, carousal. [fr. Revel.]

Re-venge', *vt.* பழிவாங்கு, பகைசாதி, சலஞ்சாதி, பிரதிதீமைசெய், inflict injury or evil in return or retaliation for, avenge, take r. for.—*n.* பழிவாங்கல், பகைதீர்த்தல், பிரதியபகாரம், returning of evil for evil, vengeance, retaliation; பகை,துவேஷம்,desire for vengeance, vindictiveness. [OF. *re*, in return + *vengier*, to avenge, fr. L. *vindicare*, to vindicate.]

Re-venge'ful, *a.* பகையுள்ள, துவேஷமுள்ள, பழிவாங்குகிற, vindictive, resentful, vengeful, malicious.

Rev'enue, *n.* வரும்படி, income; தீர்வை, வரி, அரசிறை, the total current income of a government. [F.; L. *re*, back + *venire*, to come.]

Re-ver'berant, *a.* பிரதிதொனி கொடுக்கிற, எதிரொலிக்கிற, reverberating.

Re-ver'berate, *vt.* & *vi.* பிரதிதொனியிடு அ-து கொடு, எதிரொலி, echo, re-echo, reflect, resound. [L. *re*, back + *verberare*, to beat.]

Re-ver'ber-a'tion, *n.* பிரதிதொனி, எதிரொலி, echo, resound; பிரதிபலிக்கச்செய்தல், reflection. [fr. Reverberate.]

Re-ver'berative, *a.* பிரதிதொனியிடுகிற, echoing; பிரதிபலிக்கச் செய்கிற, reflecting.

Re-vere', *vt.* பக்திவை, கௌரவி, பூஜி, மேன்மைப் படுத்து, கனம் பண்ணு, மதி, வணங்கு, வந்தி, reverence, venerate, adore, worship. [L. *re*, inten. + *vereri*, to fear.]

Rev'erence, *n.* பக்தி, பூஜை, வந்தனம், வழிபாடு, மதிப்பு,அர்ச்சனை, உபசாரம், வணக்கம், veneration, adoration, worship.—*vt.* பக்தி செய் அ-து வை, வணங்கு, பணி, பூஜி, வந்தி, மதி, ஆசரி, உபசரி, venerate, revere. [OF. & L.; see Revere.]

Rev'erend, *a.* பூஜிக்கத்தக்க, வந்திக்கத்தக்க, பூஜாருசனை, worthy of reverence, venerated, venerable. [L. *reverendus*, to be revered. see Revere.]

Re'verent, Rev'er-en'tial, *a.* பக்தியுள்ள, தாழ்மையுள்ள, வணக்கமுள்ள, proceeding from or

expressing reverence, humble, respectful, submissive. [see Revere.]

Rev'erie, n. மனோராஜ்யம், மனோரதியம், வீணெண்ணம், a loose or irregular train of thoughts, day-dream, a waking dream. [F. *rever*, to dream; akin to Rave.]

Re-ver'sal, n. முன்பின்னுக்குதல், reversing, causing to move or face in an opposite direction; தள்ளுதல், மாற்றுதல், அடித்துப்போடல், setting aside, annulling, overthrow. [fr. Reverse.]

Re-verse', vt. திருப்பிப்போடு, தலைகீழாக்கு, விபரீதம்செய், முன் பின்னுக்கு, cause to face in a contrary direction, turn back, turn upside down, invert; தள்ளு, அழித்துவிடு, மாற்று, annul, set aside, overthrow—n. பின்பக்கம், the back, rear, inferior or secondary side, the side opposite to the front or principal side; விபரீதம், விருத்தபக்ஷம், எதிர், that wh. is contrary or opposite, a contrary, an opposite; மாற்றிப்போடல், மாற்றுதல், complete change, reversal; ஆபத்து, துரதிர்ஷ்டம், கஷ்டம், misfortune, calamity, vicissitude; அபஜயம், தோல்வி, defeat.—a. தலைகீழாய் திருப்பப்பட்ட, மேல்கீழாக்கப்பட்ட, முன்பின்னுக்கப்பட்ட, turned backward or upside down; விரோதமான, எதிரான, contrary, opposite. [OF.; L. *reversus*, pp. of *revertere*. see Revert.]

Re-vers'ible, a. திருப்பிப் போடத்தக்க, wh. can be reversed.

Re-ver'sion, n. கொடுத்தவனுக்காவது அ-து அவனுடைய வாரிசுதாரர்களுக்காவது ஆஸ்தி திரும்பப் போதல்; உத்தராதிகாரம், பராவிருத்தி. [see Revert.]

Re-ver'sioner, n. உத்தராதிகாரி, திருப்பிப்பெறும் பாத்தியமுள்ளவன்.

Re-vert', vt. முன்பின்னாய் திருப்பு, மாற்று, reverse.—vi. மறுபடிவா அ-து போ, return, come or go back. [L. *re*, back + *vertere*, to turn.]

Rev'ery = Reverie.

Re-vest', vt. திரும்ப உடுப்புப்போடு, திரும்ப உடுத்து அ-து தரிப்பி.

Re-view', n. புனர்விமரிசை, மறுபடி பரீக்ஷித்தல் அ-து பார்த்தல், a second or repeated view, re-examination, revision, retrospective survey; பரீக்ஷை, குணதோஷ விவேசனம், ஒரு கிரந்தத்தின் குணதோஷங்களை விசாரிக்கும் இன்னொரு கிரந்தம், கிருதிவிமரிசனம், a critical examination, criticism, critique.—vt. திரும்பப் பார், திரும்ப பரீக்ஷைசெய், revise, reconsider; குணதோஷ விமரிசனஞ்செய், write a critical notice of. [re, again + view.]

Re-view'er, n. ஒரு கிரந்தத்தின் குணதோஷங்களை விசாரிப்போன், கிரந்த விமரிசை செய்வோன் அ-து விமரிசகன்.

Re-vile', vt. திட்டு, தூஷி, நிந்தி, vilify, calumniate, slander, abuse, reproach, traduce.

[pref. re+OF. *aviler*, to make vile or cheap, depreciate, fr. *vil* (L. *vilis*), cheap.]

Re-vil'er, *n.* தூஷகன், திட்டுகிறவன், slanderer, traducer.

Re-vil'ing, *n.* தூஷணை, திட்டு, abuse, vilification, reproach.

Re-vis'al = Revision.

Re-vise', *vt.* மறுபடிபார், சரிபார், தப்புகளை திருத்துவதற்கு இன்னொருதரம்பார், re-examine, review, look over or examine for the correction of errors or making amendments. [F. *reviser*; L. *re*, again + *videre*, *visum*, to see.]

Re-vi'sion, *n.* புனர்விமர்சை, தப்புகள் திருத்துவதற்கு மறுபடிபார்த்தல், திரும்பவாசித்தல், re-examination, review, revisal. [F. & L. see Revise.]

Re-vi'sory, *a.* புனர்விமரிசை செய்கிற, திரும்பப்பார்த்துத்திருத்துகிற, revising.

Re-viv'al, *n.* திரும்பப்பிழைத்தல் அ-து உயிர்ப்பித்தல், திரும்பஜீவித்தல் அ-து ஜீவிப்பித்தல், re-animation, recovery from apparent death, resuscitation; திரும்ப எழும்புதல் அ-து விருத்தியடைதல், புனருத்தாரணம், renewed activity, interest or attention. [fr. Revive.]

Re-vive', *vt.* திரும்பப்பிழைப்பி, மறுபடி பிராணங்கொடு அ-து உயிர்ப்பி, திரும்ப ஜீவிப்பி, re-animate, restore or bring again to life, resuscitate, give new life to; மறுபடி விருத்தி யடையச்செய், recover from a state of neglect or disuse.—*vi.* திரும்பப் பிழை, மறுபடிஜீவி, return or come back to life, become re-animated; மறுபடிவிருத்தியடை, become popular or current, or rise, once more. [F.; L. *re*, again + *vivere*, to live.]

Re-viv'ify, *vt.* மறுபடி பிராணன் வரும்படிசெய், ஜீவிப்பி, உயிர்ப்பி, recall to life.

Rev'i-vis'cent, *a.* திரும்பப்பிழைக்கக் கூடிய அ-து ஜீவிக்கத்தக்க, able to revive.

Rev'ocable, *a.* ரத்துசெய்யத்தக்க, தவிர்க்கத்தக்க, நீக்கத்தக்க, capable of being revoked.

Rev'o-ca'tion, *n.* அடித்துப்போடல், மாறுபடுத்துகை, தள்ளிப்போடல், ரத்துசெய்தல், revoking, repeal, reversal; பின்னுக்கு அழைத்துக் கொள்ளல், recall. [L.; see Revoke.]

Rev'ocatory, *a.* அடித்துப்போடுகிற, தள்ளிப்போடுகிற, revoking.

Re-voke', *vt.* அடித்துப்போடு, தள்ளிப்போடு, தப்புவி, ரத்துசெய், தவிர், மாற்று, repeal, annul, cancel, reverse, abrogate, rescind, countermand. [L. *re*, back + *vocare*, to call.]

Re-volt', *n.* எதிர்த்தல், அடங்காமை, rebellion, insurrection, an uprising against authority.—*vi.* எதிர், எதிர்த்தெழும்பு அ-து நில், அதிகாரிகள்மேல் விரோதி, rebel, refuse obedience, mutiny, rise

(against); அருவரு,மனஞ்சுருங்கு, be disgusted, shocked, or grossly offended, turn away with a sense of abhorrence.—*vt.* அருவருப்புண்டாக்கு, cause to shrink or recoil with abhorrence or aversion, shock, repel. [F., fr. It. *re*, back + *volte*, *volta*, a volt, bounding, fr. L. *volvo*, *volutum*, to roll.]

Re-volt′ing, *a.* அருவருப்பான, causing abhorrence, shocking, loathsome.

Rev′o-lu′tion, *n.* சுற்றிவருதல், சுற்றுதல், சுழற்சி, பரிவர்த்தனம், சக்கரத்தைப்போல் சுழல்தல், பிரமணம், revolving, turning round on an axis or a center, rotation; காலசக்கரம், a cycle of successive changes or events; இராஜ்யத்தில் சகலமும் சமூலமாய் மாறுதல், toal, radical, or fundamental change in political organization or government. [F. & L.; see Revolve.]

Rev′o-lu′tionary, *a.* மூலத்திலிருந்து மாறுதல்செய்கிற, causing, producing, or of the nature of, a revolution. [fr. Revolution.]

Rev′o-lu′tionize, *vt.* சகலமுமாற்று, முற்றிலுமாற்று, சமூலமாய்மாறுதல் செய், produce a revolution in, effect a radical or entire change in, change completely. [Revolution + -ize]

Re-volve′, *vi.* சுற்றிவா, பரிவர்த்தி, move in a curved path round a center; வட்டமாய் சக்கரம்போல் திரும்பு, rotate.—*vt.* சக்கரத்தைப் போல் திருப்பு, cause to turn as on an axis, rotate; மறுபடி மறுபடி ஆலோசி அ-து சிந்தி, turn over & over in the mind, reflect repeatedly upon, consider from many points of view, meditate on. [L. *re*, again + *volvo*, I roll.]

Re-volv′er, *n.* உடனுக்குடனே அநேக குண்டுகள் சுடத்தக்க துப்பாக்கி, a fire-arm that can be fired several times without reloading, repeater.

Re-vul′sion, *n.* பின்வாங்கல், விராகம், அசங்கியம், அருவருப்பு, விரக்தி. [L. *re*, again + *vello*, I pull.]

Re-ward′, *vt.* பிரதிபலன்கொடு, வெகுமானம்கொடு, requite, repay, compensate, remunerate.—*n.* பிரதிபலன், வெகுமானம், வெகுமதி, கைம்மாறு, requital, remuneration, compensation, recompense. [OF. lit. 'regard', hence 'regard as worthy'.]

Re-write′, *vt.* திரும்ப எழுது, write again.

Rhap-sod′ical, *a.* சம்பந்தமில்லாத, கலக்கமான, அன்வயமில்லாத, pert. to, or consisting of, rhapsody, unconnected, confused.

Rhap′sodist, *n.* மயங்கிசைச்செய்யுளெழுதுவோன், one who writes a rhapsody.

Rhap′sody, *n.* சம்பந்தம் சரியாயில்லாத செய்யுள், மயங்கிசைச்செய்யுள், a disconnected or rambling composition. [F.; Gr. lit. 'a

stringing together of songs', *rhapto*, to sew + *odo*, a song.]

Rhet'oric, *n.* அலங்காரசாஸ்திரம், அணியிலக்கணம், the art of composition; வாக்குசாதுரியம், வாக்கலங்காரம், the art of speaking with elegance and force, artificial eloquence. [F. & L.; Gr. *rhetor*, a public speaker, *rheo*, to speak.]

Rhe-tor'ical, *a.* அலங்காரசாஸ்திர சம்., அணியிலக்கண சம்., pert. to rhetoric; வாக்கலங்காரமான, figurative; வாக்குசாதுரியமுள்ள, oratorical. [fr. Rhetoric.]

Rhet'o-ri'cian, *n.* அலங்காரசாஸ்திரி, அணியிலக்கண வித்துவான், one versed in rhetoric; வாசாலசன், மிகவும் சாதுரியமாய்ப் பேசுகிறவன், orator, declaimer. [see Rhetoric.]

Rheum, *n.* கபம், வாதநீர், சிலேஷ்மம், a serous or mucous discharge. [Gr. *rheuma*, a flowing, *rheo*, to flow.]

Rheu-mat'ic, *a.* வாதரோக சம்., pert. to rheumatism.—*n.* வாதரோகி, one affected with rheumatism. [L.; see Rheum.]

Rheu'matism, *n.* வாதரோகம், வாயுரோகம், திமிர்வாயு, சந்திவாதம், சூலைவாதம், painful inflammation of the muscles & joints of the body. [Gr. & L.; see Rheum the ancients supposing the disease as due to a defluxion of humors.]

Rheum'y, *a.* கபம் சம்.; கபகரமான, கபமுண்டாக்கும்; கபத்தோடு கூடிய.; pert. to, causing, or affected with, rheum.

Rhi-noc'eros, *n.* காண்டாமிருகம், கண்டகம், கட்கமிருகம். [L., fr. Gr. *rhis*, *rhinos*, the nose + *keras*, horn.]

Rhodo'-mon-tade'=Rodo—.

Rhu'barb, *n.* ரேவல்சின்னி, மஞ்சட்சீனக்கிழங்கு. [F. & Gr.; L. *Rha*, the river Volga, on whose banks it grew + *barbarus*, foreign.]

Rhyme, *n.* பாட்டின்சரணுந்தங்களில் பதயுச்சாரண போலிகை, அந்தியபிராஸம்; யமகம்; correspondence of sound in the terminating words of two or more lines or verses; செய்யுள், poetry.—*vi.* செய்யுள் செய், make r-s or verses, versify; உச்சாரணத்தில் ஒரேவிதமாயிரு, accord in r. or sound. [AS. *rim*, number the 'h' is a mistaken insertion by the influence of L. *rhythmus*.]

Rhyme'less, *a.* அந்தியபிராஸமில்லாத; யமகமில்லாத; காதுக்கின்பமில்லாத; destitute of rhyme, not having consonance of sound.

Rhym'er, Rhyme'ster, Rhym'ist } *n.* செய்யுள்செய்வோன், கவிஞன்; அற்பகவிஞன்; versifier, a poor poet, poetaster.

Rhythm, *n.* தாளம், லயைப்பிரமாணம், சீர்ப்பிரமாணம், the measure of time or movement, measured beat, harmonious recurrence of stress, accent, sound, impulse &c. [F.; L. *rhymus*, fr. Gr. *rhythmos*,

measured or regularly recurring motion, fr. *rheo*, to flow.]

Rhyth′mic,—cal, *a.* லயை சம். ; தாளபத்தமான, தாளத்திற்குட்பட்ட; relating to or characterised by rhythm, keeping time. [fr. Rhythm.]

Rib, *n.* விலாவெலும்பு, பழுவெலும்பு, one of the curved bones supporting the lateral walls of the thorax and encircling the body-cavity. [AS.]

Rib′ald, *n.* போக்கிரி, நீசன், துஷ்டன், a low, vulgar, foul-mouthed fellow, a lewd wretch.—*a.* போக்கிரியான, நீசமான, இழிவான, low, filthy, obscene. [OF. 'lecherous'; OHG. *hriba*, a prostitute.]

Rib′aldry, *n.* கெட்டபேச்சு, அசப்பியம், தூஷணப்பேச்சு, low vulgar language, indecency, obscenity, vulgarity, lewdness. [fr. Ribald.]

Rib′and, Rib′bon, } *n.* நாடா, fillet, a narrow strip of silk &c. [OF.]

Rice, *n.* அரிசி, சாலி, தண்டுலம் ; தானியம் ; (Boiled—) அன்னம், சோறு, சாதம். Malted r. = புழுங்கலரிசி. [F. & Pe.]

Rice-milk, *n.* பாயசம், பரமான்னம்.

Rich, *a.* தனவந்தனான, ஐசுவரியமுள்ள, தனமுள்ள, திரவியவந்தனான, wealthy, opulent, affluent ; திரளான, ஏராளமான, abundant, copious ; செழிப்பான, fertile, productive, fruitful; அதிகவிலையுள்ள, விலையேறின, costly, valuable, precious, sumptuous. [AS.; akin to L. *rex*, *regis*, king.]

Rich′es, *n. pl.* தனம், பாக்கியம், திரவியம், சம்பத்து, செல்வம், ஐசுவரியம், wealth, affluence, opulence, abundance, plenty. [F.; see Rich.]

Rich′ly, *adv.* மிகுதியாய், அதிகமாய், நிறைவாய், யதேஷ்டமாய், திரளாய், ஏராளமாய், abundantly.

Rich′ness, *n.* செல்வமுடைமை, ஐசுவரியம், சம்பத்து, பாக்கியம், wealthiness ; அதிகம், ஏராளம், திரள், abundance ; செழிப்பு, fertility, productiveness.

Rick, *n.* தானியம் வைக்கோல் மு.வற்றின்குவியல், போர் அ-து பட்டடை, a stack or pile of grain, hay, &c.

Rick′ets, *n. pl.* பிள்ளைகளுக்குவரும் ஒருவிதநோய், கணைநோய், a disease of early childhood.

Rick′ety, *a.* நோய்கொண்ட, கணை (or ணை) நோய்கொண்ட, நோயுள்ள, affected with rickets; துர்பலமான, பலவீனமான, weak, feeble, shaky.

Rid, *vt.* விடுவி, விடுதலையாக்கு, விமுக்திசெய், பிரி, நீக்கு, தவிர், தப்புவி, free, clear, deliver, disencumber. Get r. of = தப்பித்துகொள், நிவர்த்திசெய்துகொள், free one's self from or of. [AS.]

Rid′dance, *n.* தப்புவித்தல், விடுவித்தல், விமோசனம், நிவாரணம், நீக்குகை, விலக்குகை, ridding, freeing, deliverance. [fr. Rid.]

Rid′den, *pp.* of Ride.

Rid′dle, *n.* ஜல்லடை, அரிபெட்டி, a coarse sieve ; விடுகதை, சித்திரப்பேச்சு; கடினக்கேள்வி; an enigma,

a puzzling question, conundrum, paradox, problem, puzzle. —*vt.* அரி, இல்லடையில் அரித்து வேறுசெய், separate with a r.; கதைவிடுவி, தெரிந்துகொள், solve, explain, unriddle.—*vi.* மர்மமாய்ப் பேசு, speak ambiguously or enigmatically. [AS. 'a fan for winnowing'.—AS. 'to read', 'guess'.]

Ride, *vi.* குதிரைவண்டி மு. வற்றின் மேல்போ, சவாரிசெய், travel or be carried or borne on the back of an animal or in a carriage or the like.—*vt.* மேலே உட்காரு, sit on, be supported on & borne along by.—*n.* குதிரைமேலாவது வண்டிமேலாவது போதல், சவாரி, சாரி, பவனி, an excursion on horseback or in a vehicle. [AS.]

Rid′er, *n.* ஏறிப்போகிறவன், சவாரி செய்கிறவன், one who rides; உபஇரந்தம், an addition or amendment to a writing; உபபிரசினை, a subsidiary problem. [fr. Ride.]

Ridge, *n.* மலைவரிசை, a range of hills or mountains; அணை, வரம்பு, a raised line or strip of earth in a garden or field thrown up by a plough &c.; முகடு, வீட்டுக்கூரையின் உச்சி, the highest part, or the upper horizontal edge, of the roof of a building.—*vt.* வரம்புசெய், make into a r.. [AS.]

Ridg′y, *a.* அணைபோன்ற, rising in a ridge; மலை வரிசைகளுள்ள, having ridges.

Rid′icule, *n.* கேலி, பரிகாசம், நையாண்டி, அகடியம், derision, mockery, jesting, raillery, gibe, jeer, sneer, irony, sarcasm, satire.—*vt.* கேலிபண்ணு, பரிஹாஸஞ்செய், deride, mock, laugh at, scoff at, satirize, make fun or sport of, banter. [F.; L. *ridiculus*, laughable, fr. *ridere*, to laugh.]

Ri-dic′ulous, *a.* நகைக்கத்தக்க, கேலிசெய்யத்தக்க, பரிஹாஸாஸ்பதமான, பரியாசத்திற்கிடமான, fitted to excite ridicule, absurd and laughable, preposterous. [L.; see Ridicule.]

Rife, *a.* எங்குமிருக்கிற, வியாபித்திருக்கிற, விஸ்தாரமாயிருக்கிற, பரம்புகிற, நிறைவாயிருக்கிற, prevailing, prevalent, current, abounding, abundant, plentiful; நிறையப்பட்ட, filled, full, containing abundance. [AS.]

Riff′raff′, *n.* கீழ்மக்கள், அற்பஜனம், ஈனப்பிரஜை, rabble. [OF.]

Ri′fle, *n.* ஒருமாதிரி துப்பாக்கி, a kind of gun.—*vt.* பலவந்தமாய்ப் பிடித்துக் கொண்டுபோ, seize and bear away by force; கொள்ளையிடு, சூறையாடு, plunder. [Da. 'a groove'.]

Rift, *n.* பிளவு, பிளப்பு, கிழிவு, an opening made by riving or splitting; ஆற்றின் ஆழக்குறைவான இடம், துறை, a shallow place in a stream, fording-place.—*vt.* பிள, கிழி, rive, split.

Rig, *n.* உடுப்பு; விந்தையான உடுப்பு.—*vt.* உடுப்புப்போடு; சேர், பொருத்து.

Rig′ging, *n.* உடுப்பு; சாமான்; கப்

பல் ஸ்தம்பங்களுக்கு கட்டும் பெருங்கயிறுகள் மு.வை, the ropes that support the masts &c. of a vessel, the entire cordage system of a ship, tackle. [origin doubtful.]

Right (ரைட்), *a.* நேரான, சரியான, straight, direct, not crooked; இரமமான, நியாயமான, யுக்தமான, just, equitable, proper; தகுந்த, fit, suitable; நிஜமான, சரியான, தப்பில்லாத, true, correct, not erroneous; வலது, வலப்பக்கமான, opposite to the left. R. angle = சமகோணம்.—*adv.* நேராய், சரியாய், directly, straight; நியாயமாய், நிஜமாய், justly, properly; மிகவும், அதிகமாய், very, highly, in a great degree.—*n.* நியாயம், இரமம், ஒழுக்கம், முறை, justice, propriety; சரி, தப்பின்மை, correctness; அதிகாரம், legal power authority, privilege; உரிமை, அக்கு, சுதந்தரம், claim, title, ownership; வலதுபக்கம், the side opposite to the left.—*vt.* நேராக்கு, சரிசெய், செம்மைபடுத்து, bring or restore to the natural position, setr., correct; நியாயஞ்செய், do justice to, relieve from wrong. —*vi.* நேராகு, சீராகு, recover the natural condition, resume or regain an upright position. [AS. *riht*; akin to L. *rectus*, Sk. *riju*, straight, right.]

Right'eous (ரைசஸ்), *a.* நீதியுள்ள, நியாயபுத்தியுள்ள, தர்மமுள்ள, சத்தியவந்தனான, நியாயமுள்ள, virtuous, godly, holy, just, upright, incorrupt, guiltless, blameless. [AS. *riht*, right + *wis*, wise, prudent.]

Right'eousness, *n.* தர்மம், நியாயம், நீதி, புண்ணியம், holiness, godliness, uprightness, integrity, virtue.

Right'ful, *a.* நியாயமான, இரமமான, உரிமையுள்ள, just, lawful, proper, equitable.

Right'-hand', *a.* வலது (கைப்பக்கத்திலுள்ள), being or situated on the right.

Right-handed, *a.* வலதுகை வாடிக்கையுள்ள அ-து பழக்கமுள்ள, using the right hand habitually.

Right'ly, *adv.* சரியாய், correctly; நியாயமாய், justly, honestly, uprightly; யுக்தமாய், இரமமாய், properly, fitly, suitably. [ள்ள.

Right'-mind'ed, *a.* நியாயபுத்தியு

Right'ward, *adv.* வலதுபக்கத்திற்கு, toward the right.

Rig'id, *a.* செட்டியான, கடினமான, வளையாத, stiff, not pliant or flexible; கடினமனதுள்ள, கண்டிப்பான, இரக்கமில்லாத, severe, strict, unyielding, stern, not lax or indulgent, rigorous. [F.; L., fr. *rigere*, Sk. *rij*, to be stiff.]

Ri-gid'ity, *n.* கடினம், கண்டிதம், முரண், வளையாமை, stiffness, rigidness, inflexibility. [fr. Rigid.]

Rig'marole, *n.* அர்த்தமில்லாத வார்த்தைகள், புத்தியில்லாப்பேச்சு, foolish talk, nonsense, incoherent talk or writing. [cor. of

'ragman-roll' a certain ancient document with a long list of names.]

Rig'or, n. கடினம், கிஷ்டூரம், கண்டிதம், கடுமை, இரக்கமின்மை, severity, sternness, harshness, strictness, inflexibility. [L., fr. *rigere*, to be stiff.]

Rig'orous, a. கடினமான, கடூரமான, குரூரமான, severe, stern, harsh, stiff, strict, inflexible, unyielding, rigid; கச்சிதமான, கண்டிதமான, மிகவும் சரியான, accurate, exact, strict. [fr. Rigor.]

Rig'our = Rigor.

Rill, Rill'et, } n. சிற்றாறு, சிற்றோடை, brooklet, streamlet, rivulet. [L. G.]

Rim, n. ஓரம், விளிம்பு, அருகு, கரை, edge, margin.—vt. கரைவை, furnish with a r., border. [AS.]

Rime, n. உறைந்தபனி, white frost, hoarfrost, congealed dew or vapor; ஏலாப்படி. [AS.]

Rim'ple, n. மடி, மடிப்பு, a fold or wrinkle.

Rind, n. காய், பழம், மு. வற்றின் தோல், the external covering or coat of a fruit &c.; மரப்பட்டை, bark; மேலோடு, shell; peel, skin. [AS.]

Ring, n. வட்டம், வருத்தம், வளையம், circle, a circular line or hoop; மோதிரம் மு. நகை, a circlet of gold or other metal worn as an ornament; மணிச்சத்தம், the sound produced by a bell; தொனி, நாதம், continued or reverberated sound, any resounding noise.—vt. சுற்றிக்கொள், encircle; மோதிரம்போடு அ-து இடு, fit, provide, or decorate, with a r. or r-s; நாதமெழுப்பு, அடி, மணி இழுக்கு, cause to give forth a resonant sound.—vi. ஒலி, தொனி, கணீர்கணீரென், கிண்கிணென், sound, resound. [AS.]

Ring'-dove' = Wood-pigeon.

Ring-finger, n. இடதுகையின் நான்காம்விரல், அணிவிரல், மோதிரவிரல், the third finger of the left hand, on wh. the wedding-ring is placed.

Ring'lead'er, n. முதல்வன், கலகத்தலைவன், குழப்பத்திற்குத்தலைவன், the leader of a body of men engaged in the violation of law or an illegal enterprise.

Ring'let, n. சுருள், வட்டம், a little ring or circle; மயிர்ச்சுருள், a curl of hair. [dim. of Ring.]

Ring'worm', n. படர்தாமரை, தேமல்.

Rinse, vt. அலம்பு, அலசு, தண்ணீர் விட்டுக்கழுவு, cleanse by flooding with, or immersing in, a liquid, wash. [OF.]

Ri'ot, n. கலகம், குழப்பம், கலாதி, tumult, uproar, fray.—vi. கலகம் பண்ணு, engage in a r., disturb the peace, raise an uproar; தின்று குடித்துத்திரி, revel, act in an unrestrained or wanton manner; உத்ரேகி, உத்ரேகங்கொள், be in an excited state, go to excess. [OF.]

Ri′oter, *n.* கலகத்தில் சேர்ந்தவன், குழப்பக்காரன், கலாதிக்காரன், one who engages in a riot.

Ri′otous, *a.* குழப்பமுண்டாக்குகிற, கலஹம்செய்கிற, guilty of riot; கலஹமுள்ள, கலாதியான, tumultuous, wanton, unrestrained. [fr. Riot.]

Rip, *vt.* பீறு, பிய், பிள, கீறு, கிழி, tear, cut open. [AS.]

Ri-pa′rian, *a.* ஆற்றுக்கரை சம்., நதீதீரம் சம்., pert. to the bank of a river. [L., fr. *ripa*, a bank.]

Ripe, *a.* பழுத்த, கனித்த, பக்குவமான, mature; பரிபூரணமான, தீர்ந்த, complete, finished, perfected. [AS.; allied to Reap.]

Rip′en, *vi.* பழு, கனி, முதிர், பக்குவமாகு, grow ripe, become mature. —*vt.* பழுப்பி, பாகம்பண்ணு, பக்குவமாக்கு, பழுக்கவை, கனியவை, make ripe, mature, bring to perfection, develop fully. [fr. Ripe.]

Ripe′ness, *n.* கனிவு, முதிர்வு, பக்குவம், பரிபாகம், maturity, perfection.

Rip′ple, *n.* சிறுஅலை, திரை, அலைப்புரட்சி, a little wave or undulation, wavelet.—*vi.* சிறுஅலையுண்டாகு, சிறுஅலையாய்அசை, be covered with r-s or small waves, become slightly agitated, fretted, or dimpled, on the surface. [cor. of Rimple, Rumple.]

Rip′pling, *n.* சிறு அலைகள்.

Rise, *vi.* எழும்பு, கிளம்பு, assume an upright position, become erect, stand up, get up; ஏறு, உயர், ascend, mount up; நித்திரை எழும்பு, நித்திரைதெளி அ-து விழி, get out of bed, awake, get up; உதி, தோன்று, appear above the horizon; உண்டாகு, உற்பவி, பிற, originate, issue, come into existence, spring; வளர், பெருகு, வர்த்தி, improve, progress, thrive, prosper; அதிகரி, அதிகமாகு, increase, advance; உத்ரேகி, உத்ரேகங்கொள், increase in fury; எழுந்துபோ, நிறுத்திவை, terminate an official sitting, adjourn. —*n.* எழும்பல், எழுச்சி, getting up; ஏற்றம், ஏறுதல், ascent; உதயம், உதித்தல், தோன்றல், appearance above the horizon; அதிகமாகுதல், வளர்ச்சி, பெருக்கம், increasing, advance; அதிகம், increase, enhancement; அபிவிருத்தி, improvement, progress; ஏற்றம், ascent, elevation; ஆரம்பம், commencement, beginning; உற்பத்திஸ்தலம், source. [AS.]

Ris′i-bil′ity, *n.* நகைக்கும்சக்தி, the faculty or power of laughing.

Ris′ible, *a.* நகைக்கும் சக்தியுள்ள, having the faculty or power of laughing; நகைக்கத்தக்க, ஆசியாஸ்பதமான, exciting laughter, laughable, ludicrous, amusing. [F.; L. *risibilis*, fr. *ridere*, *risum*, to laugh.]

Ris′ing, *a.* உதிக்கிற; விருத்தியடைகிற, வளருகிற.—*n.* எழும்பல், எழுச்சி; விருத்தி.

Risk, *n.* அபாயம், ஹானி, கண்டம், நஷ்டம், மோசம், danger, jeopardy,

exposure to loss, injury &c.—*vt.* அபாயத்திலிடு, சாகசம் செய், தைவாதீனம்செய், அனி, expose to r., endanger, imperil, jeopard, jeopardize, venture, hazard, peril. [F. *risque*, fr. Sp. *risco*, a steep rock, L. *resecare*, to cut off.]

Risk'y, *a.* அபாயமான, சமுசயமான, சாகஸமான, தைவாதீனமான, full of risk, dangerous, hazardous, perilous. [fr. Risk.]

Rite, *n.* ஆசாரகருமம், கிரியை, சடங்கு, ceremony, observance, a formal act of religion or other solemn duty. [F.; L. *ritus*. Akin to Sk. *riti*, way, manner.]

Rit'ual, *a.* ஆசாரகர்மசம்.; ஆசாரக்கிரியைகள் நியமிக்கிற; port. to or prescribing rites.—*n.* ஆசாரக்காண்டம், சடங்குமுறை, ஆசாரகர்மநியமகிரந்தம், கர்மகாண்டம், a form or system of rites or code of ceremonies to be observed, ceremonial. [L. *ritualis*, fr. *ritus*, a rite.]

Rit'ualism, *n.* சடங்குகள்பிரதானமெனும்நம்பிக்கை, adherence to a ritual.

Rit'ualist, *n.* ஆசார சடங்குகள் முக்கியமாய் அனுசரிப்போன், one who advocates ritualism or attaches great importance to rites & ceremonies. [fr. Ritual.]

Rit'ual-is'tic, *a.* ஆசாரவிதிப்பிரகாரமான, in accordance with a ritual.

Ri'val, *n.* போட்டிக்காரன், போட்டிசெய்கிறவன், எதிரி, இகலன், ஏகபலாபேக்ஷையுள்ளவன், one who is in pursuit of the same object as another, competitor, antagonist, emulator.—*a.* போட்டியான, போட்டிசெய்கிற, எதிரியாயிருக்கிற, ஏகபலாபேக்ஷையுள்ள, competing, standing in competition.—*vt.* போட்டிசெய், எதிரிடைகட்டு, மிஞ்சுவதற்குப் பிரயத்தனஞ்செய், compete with, stand in competition with, vie with. [F., fr. L. *rivalis*, pert. to a brook, *rivus*, a brook, *rivales*, those who use the same brook, hence, competitors.]

Ri'valry, *n.* போட்டி, எதிரிடை, போரித்தனம், ஏகபலாபேக்ஷை, competition; சமானமாவதற்காவது மிஞ்சுவதற்காவது கோரல், emulation. [fr. Rival.]

Rive, *vt.* பிள, பிய், பீறு, கிழி, split, cleave.—*vi.* விள, உடை, வெடி, be split or rent asunder. [Ic.]

Riv'en, *pp.* of Rive.

Riv'er, *n.* ஆறு, நதி, a large stream of water. [F., fr. LL. *riparia*, fr. L. *ripa*, bank.]

Riv'et, *n.* இரும்பாணி, கடையாணி, a pin or bolt headed or clinched at both ends.—*vt.* ஆணியடித்து இறுக்கு, fasten with a r. or r-s; ஆணியடித்து முனைவளை, spread out the end or point of; கெட்டியாக்கு, ஸ்திரப்படுத்து, make firm or immovable. [F.]

Riv'ulet, *n.* சிற்றாறு, a small stream or river, streamlet, brook. [L. *rivulus*, dim. of *rivus*, a river or brook.]

Roach, *n.* ஒருவிதமீன்.

Road, *n.* வழி, பாதை, சாலை, ராஜ வீதி, மார்க்கம், way, highway, street, pathway, route, passage, course; (often in the *pl.*) கடலில் கப்பல்கள் நங்கூரம் போடுமிடம், a place where ships may ride at anchor at some distance from the shore, anchorage, roadstead. [AS. *rad*, a riding, fr. *ridan*, to ride : lit. 'that on wh. one rides or travels'.]

Road-metal, *n.* பாதைகெட்டியாகும் படி போடும் கல்துண்டுகள் அ-து சிறுகற்கள், the broken stone used in macadamizing roads.

Road′stead, *n.* கப்பல் நங்கூரம் போடுமிடம், துறைமுகம், ரேவு, anchorage.

Road′ster, *n.* நங்கூரம்போட்ட கப்பல்; பிரயாணக்குதிரை.

Road′way, *n.* பாதையில் வண்டிகள் மு. வை போகும் பாகம், ராஜ பாட்டை.

Roam, *vi.* திரி, அலைந்து திரி, wander, rove, stroll.—*n.* சஞ்சாரம், அலைந்துதிரிதல், a wandering, ramble. [doubtful.] [வர்ணமுள்ள.

Roan, *n.* & *a.* ஒருவிதவர்ணம்;—

Roar, *vi.* முழங்கு, இரை, கர்ஜி, சீறு, ஓலமிடு, ஆர்ப்பரி, cry with a full loud sound, make a loud confused sound, bawl, peal.—*n.* முழக்கம், இரைச்சல், கர்ச்சிப்பு, ஆரவாரம், பேரொலி, a full deep prolonged cry, a loud, continuous, confused sound, howl, bellow, scream, shout, shriek, yell. [AS.]

Roar′ing, *n.* முழக்கம், இரைச்சல், கர்ச்சிப்பு, பேரொலி.

Roast, *vt.* சுடு, கருக்கு, பொரி, வறு, தீய், dry and parch by exposure to heat, cook by exposure to fire.—*vi.* கருகு, பொரி, வறு, be roasted.—*n.* வறுத்தபதார்த்தம்.—*a.* வறுக்கப்பட்ட. [OF.]

Rob, *vt.* கொள்ளையிடு, திருடு, பறி, கவர், சூறையாடு, steal something from, strip by stealing or by force or violence, plunder. [OF.]

Rob′ber, *n.* திருடன், கள்ளன், சோரன், கொள்ளைக்காரன், one who robs, thief, plunderer, depredator. [fr. Rob.]

Rob′bery, *n.* கொள்ளை, திருட்டு, களவு, சோரம், பறிப்பு, robbing, theft, plunder, spoliation, larceny. [fr. Robber.]

Robe, *n.* அங்கி, நிலையங்கி, போர்வை, a long, loose, flowing garment; கனமானஉடுப்பு, a dress of a rich flowing & elegant style; கௌரவத்திற்கு அடையாளமான உடுப்பு, a dress of state, rank or office; gown.—*vt.* உடுப்புப்போடு, invest with a r. or r-s, dress, array. [F., fr. LL. *rauba*, spoil, booty,] wh. in primitive times consisted chiefly of garments. Cog. Rob.]

Rob′in = Redbreast. [a famliar form or pet name for Robert.]

Ro-bust′, *a.* பலமுள்ள, பலிஷ்டமான, திறமான, திண்மையான, strong, sinewy, muscular, sturdy, vigorous, lusty. [L. *robustus*, oaken, hard, fr. *robur*, a very

hard kind of oak, hence, strength.]

Rock, *n.* பெரியகல், கன்மலை, பாறை, a large fixed stone or crag.—*vt.* ஆட்டு, ஊஞ்சலாட்டு, move backward & forward, swing; ஊஞ்சலாட்டித் தூங்கச்செய், ஆராட்டு, தாராட்டு, ஓலாட்டு, put to sleep (by r-ing), quiet, lull.—*vi.* ஆடு, ஊஞ்சலாடு, move backward and forward, swing. [OF. *roke*; AS *rocc.*—AS.]

Rock′et, *n.* பாணம், ஆகாசபாணம், a firework that ascends to a height. [It., fr. *rocca*, a distaff: from its shape.]

Rock′ing-chair′, *n.* ஆடு நாற்காலி.

Rock-oil = Petroleum.

Rock-pigeon, *n.* மலைப்புறா. [because it builds its nest in rocks.]

Rock-salt, *n.* கல்லுப்பு, கனியுப்பு, இந்துப்பு. [From occurring in rock-like masses in mines.]

Rock′y, *a.* கற்பாறையுள்ள, பாறையான, கல் சம்., full of, abounding in, or consisting of, rocks; கற்பாறைபோன்ற, கடினமான, like a rock, hard, stony. [fr. Rock.]

Rod, *n.* தடி, கோல், கம்பு, a straight slender stick; அடிக்கும் பிரம்பு; அதிகாரியின் அடையாளம், தண்டம்; அதிகாரம்; அளவு. [AS.; allied to L. *rudis*, a wand. Cog. [Rood.]

Rode, *pt.* of Ride.

Ro′dent, *a.* எலிபோல் கடித்து அ-து கொரித்து தின்கிற, gnawing.—*n.* எலிஜாதி, an animal that gnaws. [L., fr. *rodere*, to gnaw.]

Rod′omont, *a.* வீம்புபேசுகிற, டம்பம் பேசுகிற, bragging.—*n.* வீம்புபேசுவோன், braggart, vain boaster. [F. & It., fr. *Rodomonte*, a boasting hero of a certain novel: lit. 'rolling away mountains', It. *rodare* + *monte*.]

Rod′omon-tade′, *n.* டம்பம், வீம்பு, vain boasting, empty bluster, vaunting, rant.

Roe, *n.* பெண்மான், the female of any species of deer; மீன்சினை. [AS.]

Roe′buck, *n.* ஒருஜாதிமான்.

Rogue (ரோக்), *n.* மோசக்காரன், வஞ்சகன், துஷ்டன், கள்ளன், knave, cheat, rascal, vagabond. [F. 'proud', 'haughty'.]

Rogu′ery, *n.* மோசம், வஞ்சனை, கள்ளத்தனம், dishonest practices, knavish tricks, cheating, knavery, fraud. [fr. Rogue.]

Rogu′ish, *a.* மோசஞ்செய்கிற, வஞ்சகமான, துஷ்ட, கள்ளனுடைய, knavish, dishonest, fraudulent. [fr. Rogue.]

Roil, *vt.* அடியிலிருக்கும் வண்டல் [கலக்கு.

Roist′er, *vi.* டம்பமாய்பேசு, வீம்பு பேசு, டம்பம் சொல்லிக்கொள், swagger.

Roist′erer, *n.* வீம்புபேசுவோன், டம்பாசாரி, a blustering fellow.

Role, *n.* நாடகத்தில் ஒவ்வொருவேஷத்தின் கிரியைகள், a part or character performed or represented by an actor or stage-player;

ஒருவன் செய்யும்வேலை, தொழில், a part or function taken or assumed by any one. [F. lit. 'a roll', 'scroll', fr. L. *rotula*, a little wheel.]

Roll, *vt.* வட்டமாய்த் திருப்பு, cause to revolve or rotate; உருட்டு, புரட்டு, cause to progress or move onward by turning over and over upon a surface; சுருட்டு, wrap round on itself or upon an axis.—*vi.* வட்டமாய்த்திரும்பு, சுற்றித்திரும்பி வா, rotate, move circularly; உருளு, சுழலு, உழலு, move along a surface by revolving; சக்கரங்களின் மேல்போ, move or run on wheels; கப்பலைப்போல் ஆடு, அசை, incline first to one side then to the other, rock; புரளு, wallow; சுற்றிக்கொள், be wound or formed into a cylinder or ball.—*n.* சுற்றுதல், rolling; ஆடுதல், அசைதல், rocking; சுருட்டு, சுருள், anything rolled or wound up into a cylindrical form; ஜாபிதா, பட்டி, டாப்பு, list, catalogue, register. [OF., fr. LL. *rotulare*, to revolve, *rotula*, a little wheel. Akin to Sk. *ratha*, car.]

Roll-call, *n.* ஜாபிதாப்பிரகாரம் பேர் கூப்பிடல், calling over a list of names.

Roll′er, *n.* உருளை, உருள்வது, புரள்வது, cylinder; பால்குருவி.

Roll′ing-pin′, *n.* மரக்குழவி, குழவி.

Ro′man, *a.* ரோமதேசத்து. R. letters=சாதாரணமான செங்குத்து அச்சு அக்ஷரங்கள்.—*n.* ரோமப் பட்டணத்தான்.

Ro-mance′, *n.* அற்புதமான கல்பிதக் கதை, a tale of extravagant adventures, a fictitious & wonderful tale, novel. [LL. *Romanice*, in the Roman language, hence, a fictitious composition in that tongue.]

Ro-man′cer, *n.* அற்புதக் கதைகள் எழுதுவோன், a writer of romance, novelist.

Ro-man′tic, *a.* கல்பிதமான, fictitious; அற்புதமான, ஆச்சரியகரமான, like romance, wonderful, marvelous, extravagant, fanciful, imaginary. [F.; see Romance.]

Rom′ish, *a.* ரோமப்பட்டண சம்.; ரோமன்கத்தோலிக் மத சம்..

Romp, *n.* கும்மாளம், சந்தடியாட்டம், rude, boisterous play or frolic; அதிக சந்தடியாய்விளையாடும் முரட்டுப்பெண், a rude girl indulging in boisterous play.—*vi.* குதித்து விளையாடு, கும்மாளங்கொட்டு, அதிகசந்தடியாய் விளையாடு, play rudely and boisterously, leap and frisk about with rough or rude playfulness.

Rood, *n.* ஒரு ஏக்கராவில் நான்காம் பாகம். [AS.]

Roof, *n.* வீட்டுமேற்கூரை, the cover of a house or building.—*vt.* வீட்டுமேற்கூரைபோடு, cover with a r. [AS.]

Roof′ing, *n.* வீட்டுமேற்கூரை போடல், covering with a roof; வீட்டு மேற்கூரை, roof; வீட்டுக்கூரைகாகப்போடும் ஓலை, வைக்கோல் மு. வை., the materials of wh. a

roof is composed, material with wh. roofs are made or repaired.

Roof'less, *a.* மேற்கூரையில்லாத, having no roof; வீடில்லாத, having no house or home, homeless, shelterless.

Rook, *n.* [AS.] காகம்போன்ற ஒருபறவை; [Po & A] சதுரங்கத்தில்யானை. —*vt.* & *vi.* மோசஞ்செய், cheat.

Rook'ery, *n.* காகங்கள் கூடுகட்டின ஸ்தலம்.

Room, *n.* அறை, an apartment in a house, chamber; இடம், ஸ்தலம், ஸ்தானம், space, place; வசதி, அவகாசம், scope, latitude, compass; சமயம், opportunity, fit occasion. Give r. = எழுந்துபோய் மற்றவர்களுக் கிடங்கொடு. Make r. = வழிகொடு; ஸ்தலமுண்டாக்கு. [AS.]

Room'y, *a.* விசாலமான, இடமுள்ள, இடங்கொண்ட, having ample room, spacious, large, commodious.

Roost, *n.* பறவைகள் நித்திரைசெய்யும்கழி அ-து கோல், the pole or other support on wh. fowls rest at night; நித்திரைசெய்யும் பறவைக்கூட்டம், a collection of fowls roosting together.—*vi.* கம்புமரம் மு.வற்றின்மேலிறங்கி உட்காரு அ-து நித்திரைசெய், sit, rest, or sleep, on a pole or the like, perch; குடியிரு, தங்கு, lodge. [AS.]

Root, *n.* வேர், மூலம், கிழங்கு, the underground part of a plant; மூலபதம், an ultimate form or element from wh. a word or words are derived, radix, radical, etymon; காரணம், ஏது, cause, occasion, source; அடிப்பாகம், foundation, base, bottom; (mathe.) மூலம். Take r. = வேர்பற்று, வேரூன்று, வேர்பிடி; ஸ்திரப்படு.—*vi.* வேர் பற்று, வேரூன்று, take r.; ஸ்திரமாகு, be firmly fixed or established.—*vt.* ஆழமாய் நாட்டு, நடு அ-து புதை, plant deeply in the earth; அழுத்து, பதி, ஸ்திரம்செய், fix or implant firmly; (with *up*, *out*, or *away*) நிர்மூலம்செய், வேரோடு பிடுங்கு, நாசஞ்செய், eradicate, extirpate, tear up by the r.. [Ic.; akin to L. *radix*.]

Root'-stock', *n.* நிலத்து நீளப்பாயும் வேர்.

Rope, *n.* கயிறு, வடம், தாம்பு, a large or stout cord. [AS.]

Rope'-dan'cer, *n.* கழாயன், கழைக்கூத்தன், கயிற்றின்மேல் நடக்கிற தொம்பன், one who walks, dances, or performs acrobatic feats, on a rope at some height from the ground, rope-walker.

Rope-ladder, *n.* கயிற்றேணி, a ladder made of ropes.

Rop'ery, Rope'walk', } *n.* கயிறு திரிக்குமிடம், a place where ropes are made.

Rope'-walk'er, *n.* கயிற்றின்மேல் நடக்கிறவன், rope-dancer.

Rop'ish, Rop'y, } *a.* கயிறுபோல் இழுக்கத்தக்க, பிசின்போன்ற, that may be drawn into a thread, stringy, viscous, glutinous.

Ro'sary, *n.* ஜெபமாலை, தாவளம், chaplet, garland; ரோசாதோட்டம், ரோசாப்பாத்தி, a garden or bed of roses. [LL.]

Rose, *n.* ரோசாச்செடி, பன்னீர்ச்செடி; ரோசாப்பூ; ரோசா நிறம், pink. [AS.; L. *rosa.*]

Ro'seate, *a.* ரோசாப்பூவர்ணமுள்ள, rosy. [L. *roseus*, rosy.]

Rose'bay', *n.* ஒருவகைப்பூச்செடி.

Rose'-cut', *a.* பட்டைதீர்க்காத சாணைபிடித்த (ரத்தினம்).

Rose'mary, *n.* தவனம் போன்ற ஒரு பூண்டு அ-து செடி. [L. *ros*, dew + *marinus*, marine: from growing usually on the sea-coast.]

Ro-sette', *n.* ரோசாப்பூவைப்போல் செய்தது; சிவப்புநிறம். [F. dim. of 'rose'.]

Rose'-wa'ter *n.* பன்னீர்.

Rose'-wood, *n.* ஒருவிதமரம்.

Ros'ied, *a.* ரோசாப்பூ வர்ணம்போட்ட, made rosy.

Ros'in *n.* குங்கிலியம். [ano. fo. of 'resin'.]

Ros'ter *n.* பட்டாளத்து உத்தியோகஸ்தர் பேர் ஜாபிதா, a list of military officers.

Ros'trum, *n.* பக்ஷியினலகு.

Ros'y, *a.* ரோசாப்பூப்போன்ற, சிவப்பான, resembling a rose, red; சுந்தரமான, யௌவனமான, blooming. [fr. Rose.]

Rot, *vi.* ஊழ், கெடு, decay.—*vt.* ஊழ்க்கச்செய், பதமழி, make putrid, decompose, currupt, spoil, putrefy.—*n.* ஊழ்ப்பு, பதமழிதல், rotting, putrefaction, decay. [AS.]

Ro'tary, *a.* சக்கரம்போல் சுழலுகிற, rotatory, turning round. [L., fr. *rota*, a wheel; allied to Sk. *ratha*, chariot.]

Ro'tate, *vi.* சக்கரம்போல் சுழலு, turn round an axis, revolve.—*vt.* சக்கரம்போல் திருப்பு, சுழற்று, cause to turn round or revolve. [L. *rotare*, to turn round, fr. *rota*, wheel.]

Ro-ta'tion, *n.* சக்கரம்போல் சுழல்தல், சுழற்சி, உழற்சி, rotating, turning round an axis; ஒருவன்பின் ஒருவன் முறைப்பிரகாரம் வருதல். [L.; fr. Rotate.]

Ro'tatory, *a.* சுழலுகிற, உருளுகிற, சக்கரம்போல் புரளுகிற, rotary. [F.; see Rotate.]

Rote, *n.* வாய்ப்பாடம், அர்த்தம்தெரியாமல் ஒப்புவித்தல், the repetition of words or sounds with little attention to their meaning, as, to learn by r.. [OF. 'road', 'path'. Cog. Route, Routine.]

Ro'tiform, *a.* சக்கரம் போன்ற ரூபமுள்ள, wheel-shaped.

Rot'ten, *a.* ஊழ்த்த, கெட்டுப்போன, பதமழிந்த, நாற்றமடிக்கிற, having rotted, putrid, decayed, putrefied, carious, decomposed.

Ro-tund', *a.* வட்டமான, round, circular; கோளாகாரமான, உருண்டையான, உண்டையான, spherical. [L. *rotundus*, fr. *rota*, a wheel.]

Ro-tund'ity, *n.* வட்டம், roundness, circularity; கோளாகாரம், உருண்டை, உண்டை, sphericalness, sphericity.

Rough (ரஃ), *a.* சொறியான, மழமழப்பல்லாத, கரடான, not smooth; மேடுபள்ளமுள்ள, கரடுமுரடான, not level, uneven, rugged; மெதுவில்லாத, மெல்லிய இல்லாத, coarse; முரடான, நாகரிகமில்லாத, rude, uncivil, unpolished, unrefined; கடினமான, குரூரமான, harsh, hard, severe, violent; கேட்பதற்கு கஷ்டமான அ-து இன்பமில்லாத, harsh, grating; பூர்த்திசெய்யப்படாத, நகலாய் எழுதின, incomplete, hastily done, wanting finish; பெரிய அலைகள் அடிக்கிற, tossed in waves, boisterous, high, as a r. sea; புசலாயிருக்கிற, stormy, tempestuous, as a r. weather. A r. estimate=கொஞ்சம் ஏறக்குறையமதிப்பு. A r. draft =முதலில் நகலாக எழுதியது.—*n.* முரடன், a rude fellow; சண்டைக்காரன், rowdy. [AS.]

Rough′cast′, *vt.* கொஞ்சம் ஏறக்குறைய உருவம் ஏற்படுத்து, form or mark out in a preliminary or incomplete manner, mold roughly, rough-hew.—*n.* சுமாரான அ-து ரமாரமியான ஆகாரம், a rude model, the form of a thing in its first rough stage.

Rough′draw′, *vt.* சுமாராய்சித்திரி, ஏறக்குறைய சித்திரம் எழுது, பருமட்டாய் சித்திரி, draw or delineate hastily and roughly, or by way of a first sketch.

Rough′en, *vt.* மழமழப்டைப் போக்கடி, கரடாக்கு; முரடாக்கு; make rough.

Rough′-hew′, *vt.* சுமாராய் ஆகாரம் ஏற்படுத்து, கொஞ்சம்ஏறக்குறைய உருவ மேற்படுத்து, give the first form or shape to, form rudely or approximately, roughcast.

Rough′ly, *adv.* கரடாய், சொறியாய், மழமழப்பில்லாமல்; மெதுவில்லாமல்; முரடாய், முரட்டுத்தனமாய்; கொஞ்சம் ஏறக்குறைய, சுமாராய், ரமாரமியாய்; in a rough manner.

Rough′ness, *n.* மழமழப்பின்மை, கரடு, want of smoothness; மேடுபள்ளம், கரடு முரடு, unevenness, ruggedness; மெதுவின்மை, நாசுக்கின்மை, coarseness; முரட்டுத்தனம், அநாகரீகம், கொடுமை, rudeness.

Rough′-rid′er, *n.* அசுவசிக்ஷகன், குதிரைபழக்குகிறவன், one who breaks horses, horse-breaker; அதிகத் துணிகரமாய் சவாரிசெய்கிறவன், one who rides recklessly.

Rough′shod′, *a.* முள்லாடங்கள் அடிக்கப்பட்ட அ-து கட்டப்பட்ட, shod with rough shoes. Ride r. = மற்றவர்களுக்குண்டாகும் (மன) நோவை விசாரியாமல் நடந்துகொள் அ-து பிரவர்த்தி.

Round, *a.* வட்டமான, circular; கோளாகாரமான, உருண்டையான, spherical, globular; உருண்டைஸ்தம்பரூபமான, cylindrical; நிறைந்த, பூர்த்தியான, full, complete. A r. number= சில்லறையில்லாத பூரண எண், முழுஎண். A good r. sum = பெரியமொத்தம்.—*n.* உருண்டையானது, வட்டம், something that is r.; ஏணியின் படி, a step or rung of a ladder; சுற்றிலும்

காவல்திரிதல், a walk or circuit performed by a guard or an officer ; கழற்சி, வட்டமாய்த் திரிதல், circular motion, periodical revolution, a cycle ; மாமூல், நியமித்தகாரியம் அ-து வேலை,routine; பலர் முறைப்பிரகாரம் ஒருவன்பின் ஒருவன் செய்யும் வேலை, a course of action performed by persons in turn or one after another.—*adv.* எல்லாப் பக்கங்களிலும், சுற்றிலும், on all sides, around; வட்டமாய், சுற்றிலும்திரிந்து,circularly.—*prep.* சுற்றிலும், on every side of, around, about.—*vt.* உருண்டையாக்கு, வட்டமாக்கு, make r.; முடி, தீர், make full or complete.—*vi.* பருமனாகு, புஷ்டியாகு, வளர்,grow r. or full; சுற்றித்திரி, சுழலு, go or turn r., wheel about. [F., fr. L. *rotundus*, fr. *rota*, wheel.]

Round′a-bout′, *a.* நேரில்லாத, சுற்றான, circuitous, indirect, not straight-forward.

Round′house′, *n.* நியாயாதிபதியிடத்திற்குக் கொண்டுபோகுமட்டும் தப்பிதம்செய்தவனை வைக்கும் சிறுகாவலறை.

Round′ish, *a.* கொஞ்சம் ஏறக்குறைய வட்டமான அ-து உருண்டையான, somewhat round. [circle.

Round′let, *n.* சிறுவட்டம், a little

Round′ly, *adv.* உருண்டையாய்,வட்டமாய் ; பூர்த்தியாய்; ஸ்பஷ்டமாய், openly, plainly, boldly.

Round′ness,*n.* வட்டம்,circularity; உருண்டை, globularity, sphericity, rotundity; நிறைவு, பூர்த்தி; ஸ்பஷ்டம்.

Rouse, *vt.* நித்திரை எழுப்பு, எழுப்பு, wake (from sleep), awake; சோம்பல்போக்கடி, அசைவுண்டாக்கு, சுறுசுறுப்புண்டாக்கு, இயக்கு, excite to vigorous action, stir up ; அசை, கலக்கு,ஆட்டு, agitate, excite ; எழுப்பு, தூண்டு, ஏவு, provoke.—*vi.* எழும்பு, நித்திரை தெளி, awake; இயங்கு, அசை, be excited. [AS.]

Scar'let, *n.* & *a.* பிரகாசமான சிவப்பு; —சிவப்புள்ள; (of) a vivid or bright red color. [OF. *escarlate*, fr. Pe. *sakirlat*.]

Scate=Skate.

Scath, *n.* கெடுதி, அபாயம், கேடு, injury.—*vt.* கெடு, அழி, injure, damage, harm, hurt. [AS.]

Scathe, *vt.*=Scath.

Scath'ful, *a.* கெடுதியான, கேடு உண்டாக்குகிற, harmful. [ed.

Scath'less, *a.* அபாயமின்றி, unharm-

Scat'ter, *vt.* சிதறு, தூவு, throw loosely about, strew, sprinkle

around, spread; சிதறடி, disperse; பங்கப்படுத்து, frustrate, overthrow, disappoint.—*vi.* சிதறிப்போ, be dispersed, disperse, separate. [AS.; cog. Shatter.]

Scav′enge, *vt.* பெருக்கிச் சுத்தம் பண்ணு, remove filth & rubbish from, cleanse from filth. [see Scavenger.]

Scav′enger, *n.* தெரு கொல்லை முதலியவை பெருக்குபவன், தோட்டி, குப்பைக்காரன், one who removes dirt from streets and vaults. [OE. ori. *scavager*, an inspector of goods for sale and of streets, AS. *sceawian*, to inspect.]

Scene, *n.* நாடகசாலை, அரங்கம், stage; நாடகசாலையை அலங்கரிக்கும் திரை முதலியவை., a painted canvas screen or curtain and other decorations and fittings of a stage; நாடக அங்கத்திலொரு பாகம், ரங்கம், a subdivision of an act of a play comprising what passes at one time and place; பிரதேசக்காட்சி, தோற்றம், landscape, view, scenery; காட்சி, spectacle; ஒருகாரியம் நடந்தஸ்தலம், the place in wh. anything occurs; பிறருக்கெதிரில் கோபம் சண்டை முதலியது, an exhibition or display of excited or strong feeling in the presence of others. [F.; L.; Gr. *skene*, a sheltered place; Sk. *sku*, to cover.]

Scen′ery, *n.* பிரதேசதோற்றம், காணப்படும் பிரதேசம், the general appearance or aspect of a place, landscape, view. [fr. Scene: 'assemblage or sum of scenes or views'. L. *scenarius*, pert. to a scene.]

Scen′ic, } *a.* அரங்க சம்., நாடக
Scen′ical, } சம்., pert. to the stage, theatrical, dramatic; கண் பார்வைக்கெட்டியப் பிரதேச சம்., pert. to scenery or landscape. [fr. Scene.]

Scent, *n.* மணம், வாசனை, கந்தம், பரிமளம், odor, smell; வாசனையறியும் சக்தி, நாற்றப்புலன், the sense of smell; வாசனைதிரவியம், a fluid essence or preparation from flowers &c., perfume; ஓர் ஜெந்து போனவழியிலுண்டாகும் அதின் வாசனை, the effluvium or odor left by an animal on the ground in passing over it; வாசனையால் ஜாடைபிடித்தல், a keen & delicate power of tracing by the sense of smell.—*vt.* வாசனையால் ஜாடை தெரிந்துகொள், கந்தமறி, perceive or trace by the sense of smell, follow by s.; பரிமளமுண்டாகச்செய், வாசனையூட்டு, வாசனையேற்று, imbue or fill with odor, perfume. [ori. 'sent', fr. F. *sentir*, to feel, to smell.]

Scep′ter, *n.* செங்கோல், a staff or baton borne by a sovereign, the badge or emblem of sovereignty; இராசாதிகாரம், kingly office or power.—*vt.* இராசாதிகாரங்கொடு, invest with royal authority.

[F.; L.; Gr. *skeptron*, a staff to lean on, *skepto*, to lean.]

Scep′tic, *n.* சந்தேகிக்கிறவன், சமுசயவாதி, one who doubts, doubter; ஈசுவரனிருப்பதாக நிச்சயமில்லாதவன், one who doubts the existence of God.—*a.* சமுசயிக்கிற, சந்தேகிக்கிற, நம்பிக்கையற்ற, doubting, disposed to doubt, incredulous. [F., fr. Gr. *skepsis*, speculation, doubt.]

Scep′tical, *a.* Sceptic.

Scep′ticism, *n.* சந்தேகம், சமுசயம், doubt, uncertainty, incredulity; ஈசுவரனிருப்பைசந்தேகித்தல், doubting the existence of God.

Scep′tre = Scepter.

Sched′ule, *n.* பட்டி, ஜாப்பிதா, டாப்பு, list, inventory.—*vt.* பட்டியாய் எழுது அ-து பட்டியில்சேர், form into, or place in, a s., [OF., fr. L. dim. of *scheda*, a scroll.]

Scheme, *n.* உபாயம், யோசனை, யுக்தி, கற்பனை, தந்திரம், சூழ்ச்சி, plan, design, project, contrivance; சதி, துராலோசனை, plot.—*vt.* உபாயம்செய், யோசி, கற்பனைசெய், யுக்திபண்ணு, சூழ், contrive, project, plan, design; துராலோசனைசெய், சதிசெய், plot. [F.; L. *schema*, a shape, figure; Gr. *schein*, to hold.]

Schem′ing, *pa.* துராலோசனைபண்ணுகிற, சதியோசனைசெய்கிற, எப்பொழுதும் கெட்ட ஆலோசனைகள் செய்துக்கொண்டிருக்கும், given to forming schemes, intriguing, designing.

Schism (ஸிஸம்), *n.* பேதம், கலகம், ஒற்றுமையின்மை, தங்களுக்குள் சச்சரவும் வேறுபாடும், a split or division in a community, breach of unity; சமயபேதம், மதபேதம், a division in a religion or church. [L.; Gr. *schizo*, to divide; akin to Sk. *chid*.]

Schis-mat′ic, *a.* உட்கலக சம்.; தங்களுக்குள் வேறுபாட்டிற்குக்காரணமான; relating or tending to schism.—*n.* அபிப்பிராயபேதத்தினால் மதத்திலிருந்து வேறுபடுகிறவன் அ-து பிரிகிறவன், one who separates from an established church or religion.

Schis-mat′ical, *a.* = Schismatic.

Schol′ar, *n.* வித்தியார்த்தி, கற்போன், வாசிப்போன், மாணாக்கன், சீடன், pupil, student, disciple; பண்டிதன், வித்துவாம்ஸன், புலவன், a learned or erudite person, a man of erudition, savant; வேதனம் அ-து சம்பளம் கொடுக்கப்படும் வித்தியார்த்தி, the holder of a scholarship. [L. *scholaris*, belonging to a school.]

Schol′arly, *a.* பாண்டித்தியத்தைத் தெரிவிக்கும், புலமை யுணர்த்தும், indicative of scholarship; பண்டிதனான; learned.

Schol′arship, *n.* பாண்டித்தியம், கல்வி, வித்தை, படிப்பு, learning, erudition; வித்தியார்த்தி அ-து மாணாக்கனுக்குக்கொடுக்கும் வேதனம் அ-து சம்பளம், maintenance for a scholar.

Scho-las′tic, } *a.* பாடசாலை சம்.;
Scho-las′tical, } பாண்டித்திய சம்.;

pert. to a school or a scholar. [L. & Gr.; see School.]

Scho′liast, n. வியாக்கியானம் அ-து உரைசெய்வோன் அ-து எழுதுவோன், வியாக்கியாதா, commentator, annotator. [Gr.]

Scho′lium, n. வியாக்கியானம், உரை, an annotation. [Gr. 'leisure', 'lucubration'.]

School, n. பாடசாலை, பள்ளி, பள்ளிக்கூடம், வித்தியாலயம், an educational institution, an institution for the instruction of children; மாணாக்கர்கூட்டம், சிடர்பிருந்தம், n. body of pupils.—vt. பாடசாலையில் கல்விகற்பி, educate at a s., teach; புத்திசொல், கோபி, கண்டி, chide & admonish, reprove. [AS.; L. *schola*; Gr. *schole*, leisure: lit. 'that in wh. leisure is employed', 'discussion,' 'disputation,' 'lecture'.]

School′-boy′, n. பள்ளிக்கூடத்துபையன் அ-து பிள்ளை, a boy attending a school.

School′-fel′low, n. கூடவாசித்தவன், schoolmate, an associate in school.

School′-girl′, n. பள்ளிக்கூடத்தில் வாசிக்கும்சிறுமி அ-து பெண், a girl attending a school.

School′-house′, n. பள்ளிக்கூடம் இருக்கும்வீடு.

School′ing, n. படிப்பு சொல்லுதல், சிக்ஷை, வித்தியாப்பியாசம், tuition; கண்டித்தல், கோபப்படுதல், reproof; பள்ளிக்கூட சம்பளம், compensation for instruction.

School′man, n. தார்க்கிகன், தர்க்க சாஸ்திரி.

School′-mas′ter, n. உபாத்தியாயன், ஆசாரியன், ஆசான், குரு, a teacher of a school, instructor, pedagogue.

School′-mate′, n. தான்வாசித்த பள்ளிக்கூடத்திலேயே வாசித்தவன், school-fellow.

School′-mis′tress, n. உபாத்தியாயி, வாத்திச்சி, a woman who teaches a school, a female teacher.

Schoon′er, n. இரண்டுபாய்மரங்களுள்ள சிறுகப்பல், a small vessel with two masts. [ori. 'making ducks and drakes.']

Sci-at′ic, a. கடி அ-து இடுப்புப் பிரதேச சம்., pert. to the hip.—n. = Sciatica.

Sci-at′ica, n. இடுப்பு வலி அ-து நோவு, neuralgia of the hip and thigh.

Sci′ence, n. சாஸ்திரம், வித்தை, knowledge systematized and formulated with reference to general truths and principles. [F.; L. *scientia*, knowledge, fr. *scio*, I know.]

Sci′en-tif′ic, Sci′en-tif′ical, } a. சாஸ்திர சம்., pert. to science; சாஸ்திரோக்தமான, தார்க்கிகமான, காரணமுள்ள, யுக்தியுள்ள, சாஸ்திரானுசாரமான, நியாயமான, agreeing with the rules or principles of science, systematic, accurate, logical, reasonable; சாஸ்திரந்தெரிந்த, well versed in science. [F.; L. *scientia*, knowledge + *facere*, to make.]

Sci'entist, *n.* சாஸ்திரந்தெரிந்தவன், சாஸ்திரி, one learned in science, one devoted to scientific study, savant. [fr. Science.]

Scim'itar, } (ஸிமிடர்) *n.* மிகவும் Scim'iter, } பின்னுக்குவளைந்தநுனியுள்ள பட்டாகத்தி, a saber or sword with a much curved blade, having the edge on the convex side. [F.; cor. fr. Pe. *shimshir.*]

Scin'tillant, *a.* தீப்பொறிகளைச் சொரிகிற அ-து விடுகிற, emitting sparks; தளதளப்புள்ள, sparkling.

Scin'tillate (ஸி-), *vi.* தீப்பொறிகளைச்சொரி அ-து விடு, emit sparks or fine igneous particles; பிரகாசி, தளதளப்பாய் மின்னு, sparkle.

Scin'til-la'tion, *n.* தளதளப்பான பிரகாசம், மினுக்குதல், sparkling; தீப்பொறிகளைச் சொரிதல், பொறி பறத்தல், emitting sparks. [L. *scintillare*, fr. *scintilla*, a spark.]

Sci'olism, *n.* சிற்றறிவு, அல்ப ஞானம், superficial knowledge.

Sci'olist, *n.* சிற்றறிவாளன், அல்பஞ்ஞன், one who has a smattering of knowledge or superficial knowledge, smatterer. [L. *sciolus*, dim. of *scius*, knowing, *scio*, I know.]

Sci-om'achy, *n.* நிழலோடுசண்டை, வீண்சண்டை, a fighting with a shadow, a futile combat. [Gr. *skia*, a shadow + *mache*, a battle.]

Sci'on, *n.* முளை, a shoot or sprout of a plant; ஓர்செடியின் சிறு கொம்பு, a piece cut from a twig for grafting, a cutting; வமிசத்திற் பிறந்தவன், a descendant, an heir. [F., fr. L. *secare*, to cut.]

Scir'rhus, *n.* தடித்தகிரந்தி.

Scis'sion, *n.* வெட்டல், கத்தரித்தல், cutting.

Scis'sor, *vt.* கத்தரி, cut with scissors or shears.

Scis'sors, *n. pl.* கத்தரி, கத்தரிக்கோல், a cutting instrument consisting of two blades movable on a pin. [Formerly 'cisors'; OF., fr. L. *caedere*, to cut.]

Scis'sure, *n.* வெட்டு, வெடிப்பு, பிளப்பு.

Scle-rot'ic, *a.* கெட்டியான, உரமான, hard, firm.—*n.* கண்மேலிருக்கும் கெட்டியான வெள்ளைத்தோல்அ-து புரை, the firm white membrane wh. forms the outer coating of the eye, the white of the eye.

Scoff, *vi.* & *vt.* திரஸ்கரி, பரிகாசம் பண்ணு, தூஷி, இகழ், sneer, mock, jeer, gibe.—*n.* திரஸ்காரம், தூஷணை, நகைப்பு, ridicule, derision, mockery.

Scoff'er, *n.* தூஷகன், பகிடிகாரன், கேலிசெய்வோன், பரிகாசம் பண்ணுவோன், one who scoffs, mocker.

Scoff'ery, *n.* திரஸ்காரம், தூஷணை, பரிகாசம், scoffing, mockery.

Scoff'ingly, *adv.* பரிகாசமாய், தூஷணையாய், derisively.

Scold, *vi.* (with *at*) & *vt.* அதட்டு, கண்டி, கோபி, chide, rate, rebuke, rail at.—*n.* அதட்டுதல், கண்டித்தல், கோபித்தல், a scolding;

பஜாரி, அசங்கவார்த்தை யாடு வோன், a noisy foul-mouthed person.

Scol'lop, n. ஒருவிதவிளிஞ்சல், கருக்குவாயிப்பி. [பூச்சி.

Scol'o-pen'dra, n. பலகால் விஷப்

Sconce, n. கோட்டை, கொத்தளம், fortification; லாந்தர் மு. வைகளுக்கு சுற்றிலும் வைக்கும் சட்டம்.

Scoop, n. பெரியகாண்டி அ-து அகப்பை, a large ladle; குழி, பள்ளம், a hollow, a basin-like cavity.—vt. தோண்டு, take out with a s., lade out; தோண்டிவெறுமையாக்கு, empty by lading; அகழ்ந்து பள்ளம்பண்ணு,dig out,excavate, hollow out. [Akin to D. *schop*, a shovel.]

Scope, n. உத்தேசம், அபிப்பிராயம், கருத்து, நோக்கம், intention, object, aim, drift; இடம், விசாலம், அவகாசம், range, room, opportunity, reach. [It. *scopo*, L. *scopos*, a mark, aim.]

Scorch, vt. சுடு, வாட்டு, வறு, கருக்கு, தீச்சு, burn superficially, parch the surface of; எரி, தகி, burn, destroy by fire.—vi. எரி, கந்து, தீய், be burnt on the surface or parched. [OF. *escorcher*, to skin; L. *ex*, from + *cortex*, bark.]

Score, n. வெட்டு, கீறு, a notch, incision; கணக்குக்காக இடும் குறி வரி, a mark or line made for the purpose of account; பாடக்குறி, a tally mark; கொடுக்கல் வாங்கல் கணக்கு, account; கடன், பாக்கி, account of dues, amount owing, bill, debt, indebtedness; காரணம், நிமித்தம், ஏது, reason, ground, motive, account, sake, behalf; இருபது, twenty.—vt. வெட்டு, கீறு, notch; குறிவரியிடு, mark with notches or lines for keeping an account or record; கணக்கெழுது, keep record or account of; வெலித்துக்கொள், சம்பாதி, win to one's account or credit, get credit for; அடி, ரத்துசெய், obliterate, remove, as, to s. out words with a pen. [AS.]

Sco'ria, n. உலோகத்தின் கிட்டம், களிம்பு, dross, slag, recrement.

Scorn, n. திரஸ்காரம், இகழ்ச்சி, ஏளனம்,contempt,disdain.—vt. திரஸ்கரி, இகழ், எள்ளு, நிந்தி, despise, disdain, contemn, hold in contempt.[OF.; It. 'to break off the h o r n s'; L. *ex*, out+*cornua*, horns.]

Scorn'ful, a. திரஸ்காரமுள்ள, திரஸ்கரிக்கிற, திருணீகாரம்செய்கிற, இகழ்ச்சியான, full of scorn or contempt,contemptuous,disdainful.

Scorn'fully, adv. திரஸ்காரமாய், இகழ்ச்சியாய்.

Scor'pio, } n. தேள், விருச்சிகம்;
Scor'pion, } விருச்சிகராசி. [L. *scorpio*.]

Scot, n. வரி, tax; சந்தா, contribution; அபராதம், தண்டம், mulct, fine; ஸ்காட்லண்ட்தேசஸ்தன்.

Scotch, a. ஸ்காட்லண்ட்தேசத்திற்குரிய.—vt. கீறு, வெட்டு.—n.கீறல், வெட்டல்.

Scot′-free′, *a.* நிர்வைகொடாத, இறையில்லாத, free from payment of scot, untaxed; கெடுதியற்ற, ஹானியடையாத, unhurt, unharmed, unpunished, safe.

Scot′ograph, *n.* குருடர் எழுதவும் இருட்டில்எழுதவும்பாராமல் எழுதவும் ஒருகருவி, an instrument designed to assist the blind in writing, or to facilitate writing in the dark or without seeing.

Scot′omy, *n.* தலைமயக்கம்,தலைச்சுற்றல்.

Sco′toscope, *n.* இருட்டில்பொருட்களை பார்க்கயந்திரம்,an apparatus to aid in discerning objects in the dark, night-glass.

Scoun′drel, *n.* துஷ்டன், போக்கிரி, துர்ச்சனன், நீசன், a man without principle, honor or virtue, a mean worthless fellow,rascal,villain.—*a.* துஷ்ட, நீச, துன்மார்க்கமுள்ள, low, base,mean, rascally. [AS. 'one to be shunned', *scunian*, to shun.]

Scoun′drelism, *n.* போக்கிரித்தனம், துஷ்டத்தனம், துன்மார்க்கம், rascality, baseness, wickedness.

Scour, *vt.* & *vi.* தேய், துடை, சுத்தப்படுத்து, rub hard with something rough, clean by friction; துடைத்தெடு, தேய்த்தளடு, remove by rubbing and cleansing; வேகமாய்ஓடிப்போ, run swiftly; எல்லாவிடத்திலுஞ் சுற்று அ-து திரி, traverse thoroughly, go over or through every part of. [OF.; L. *ex*, intens. + *curare*, to care for or clean.]

Scourge, *n.* சவுக்கு, சாட்டி, whip, lash, a strap or cord; சிக்ஷை, தண்டனை, punishment,infliction; உபத்திரவம், தொந்திரவு, பீடனம், affliction, suffering.—*vt.* சாட்டியாலடி, whip, lash; தண்டி, சிக்ஷி, punish, chastise; உபத்திரவி, ஹிம்சி, பாதி, harass, afflict. [F. L. *ex*, intens. + *corrigia*, a thong.]

Scout, *n.* வேவுகாரன், ஒற்றன், a person sent out to observe and get information of the movements of an enemy in war.—*vt.* வேவு பார், ஒற்று, watch or observe carefully, note the movements of; ஒருவர்க்கும் தெரியாமல் எதிரிகளின் சமாசாரங்களைத் தெரிந்துகொள்ளுகிறதற்கு சுற்று, traverse for purposes of noticing or learning the movements of an enemy; திரஸ்கரி, ஹேளனஞ்செய், sneer at, treat with contempt or ridicule, reject with disdain, flout. [OF., fr. L. *auscultare*, to hear with attention.—Ic. *skuta*, a taunt.]

Scowl, *n.* புருவநெறிந்துப் பார்த்தல், குறும்பார்வை, கோபமுகம், a wrinkling and lowering of the brows, a sullen or threatening expression of countenance, frown.—*vi.* கோபத்துடன்பார், முகத்தைச்சுளி, wrinkle & lower the brows in anger, frown; பயங்கரமாய்த்தோன்று, look gloomy and threatening, lower [Da.]

Scrab′ble = Scribble.

Scrag′ged, Scrag′gy, } *a.* முரடான, rough, rugged; மெலிந்த, lean.

Scram'ble, *vi.* தொற்றியேறு, தவழ்ந்தேறு, clamber with hands and knees; ஏதேனுமெடுக்க அன்னியருடன் போராடி விழுந்துபோ, struggle eagerly with others for something thrown upon the ground, go down upon all fours to seize something.—*n.* தவழ்ந்து போதல், clambering; எனக்கு எனக்கு என்று போராட்டம், jostling and pushing for something desired, eager and unceremonious struggle, strife, contest.

Scrap, *n.* துண்டு, கண்டம், a small piece, bit, fragment.

Scrape, *vt.* சுரண்டு, சீவு, துருவு, scratch with a sharp or rough instrument; சுரண்டிஎடு, erase; கொஞ்சம் கொஞ்சமாய் சேர், collect by scraping, gather in small portions by laborious effort.—*n.* சுரண்டுதல், துருவல், scraping; சங்கடம், தொந்திரவு, சிக்கு, a disagreeable or embarrassing situation, a difficulty, perplexity. [துத்தன், miser.

Scrape'-pen'ny, *n.* உலோபி, இடுக்கி,

Scrap'er, *n.* சுரண்டும் கருவி, துருவும் கருவி, துருவாமணை, a scraping instrument; உலோபி, miser.

Scrap'ing, *n.* சுரண்டியெடுத்தது, துருவியெடுத்தது, matter scraped off, that wh. is collected by scraping.

Scratch, *vt.* கீறு, பிறாண்டு, சொறி, tear or mark the surface of with something sharp or ragged; துடை, சுரண்டிஎடு, erase, obliterate.—*n.* கீறு, கீறல், பிறாண்டு, பிறாண்டல், a mark, incision, or furrow, made by scratching.

Scrawl, *vt.* & *vi.* கிறுக்கு, அசிரத்தையாய் எழுது, write or draw carelessly and awkwardly.—*n.* கிறுக்குதல், அசிரத்தையான எழுத்து, careless and awkward writing, scribble.

Scream, } *vi.* கத்து, வீரிடு, கதறு,
Screech, } கீச்சிடு, வீரிட்டுஅழு.—*n.* கதறுதல், பெரியகூச்சல், a loud, shrill, prolonged cry, shriek. [Imi.] [அ-து ஆந்தை.

Screech-owl, *n.* ஒருவகை கூகை

Screen, *n.* மறைவு, திரை, படுதா, தடுப்புப்படல், that wh. hides or conceals, curtain; கெடுதிவராமல் காப்பது, ஹானியிலிருந்து காப்பாற்றுவது, that wh. shelters or protects, protection, shield; பெரியசல்லடை, a large coarse sieve.—*vt.* மறை, மூடு, தெரியாமல்செய், conceal, hide; கா, காப்பாற்று, இரக்ஷி, protect, shelter; ஜல்லி, தெள்ளு, pass through a s. or sieve, sift. [OF.]

Screen'ings, *n. pl.* சலித்து மீந்த கழிவு அ-து குப்பை, the refuse left after sifting.

Screw, *n.* திருகாணி, மறையாணி, முறுக்காணி.—*vt.* முறுக்காணியிடு, திருகாணிபோட்டு முடுக்கு, fasten by a s. or s-s; அழுத்து, நெருக்கு, press, squeeze; பலாத்காரமாய் வாங்கு, extort, force, exact. [OF. & G.; L. *scrobis*, a ditch;

LL. 'the hole made by swine in rooting'.] [ment).

Screw-key, *n.*=Wrench (instru-

Scrib'ble, *vt.* & *vi.* கிறுக்கு, அவசரமாய்எழுது, அசிரத்தையாய் எழுது, write carelessly and awkwardly.—*n.* கிறுக்குதல், அசிரத்தையான எழுத்து, careless and awkward writing. scrawl. [fr. Scribe.]

Scrib'bler, *n.* கிறுக்கிறவன், one who scribbles; அற்பகிரந்தகர்த்தா, a petty author, a literary hack.

Scribe, *n.* எழுத்துக்காரன், இலேககன், a writer, a copyist. [L. *scriba*, fr. *scribere*, to write.]

Scrip, *n.* எழுதிய சிறுகாகிதம், a scrap of paper containing writing; சிறுபை, கைச்சோளி.

Script, *n.* கையெழுத்து மாதிரியிருக்கும் சிறு அச்செழுத்து, type made in imitation of handwriting. [L. *scriptum*, something written.]

Scrip'tural, *a.* வேதத்திலுள்ள, வேதத்திற்குரிய, contained in, or according to, the scriptures, biblical.

Scrip'ture, *n.* வேதம், a sacred writing, the Bible; எழுத்து, லிபி, a writing. [L. *scriptura*, fr. *scribo*, I write.]

Scrive'ner, *n.* எழுத்துக்காரன், இலேககன், a professional writer; வட்டிக்குப் பணங்கொடுப்போன், money-lender.

Scrof'ula, *n.* கண்டமாலையுடன் கூடிய ஓர் நோய், கண்டசூலை, a constitutional disease attended with glandular tumors, King's evil. [L.]

Scrof'ulous, *a.* கண்டமாலையுள்ள அ-து சம்., affected with or of the nature of scrofula.

Scroll, *n.* சுருட்டு, சுருள், a roll of paper or the like; ஜாபிதா, list. [OF. & LL.]

Scro'tum, *n.* அண்டகோசம், the bag or pouch wh. contains the testicles. [L.]

Scrub, *vt.* தேய், பலமாய்த்துடை, rub hard, cleanse by hard rubbing.—*n.* அற்பன், நீசன், ஈனன், a mean stingy fellow.—*a.* அழுக்கான, dirty; நீசமான, mean. [லாத.

Scrub'by, *a.* குறுகின, வளர்ச்சியில்

Scru'ple, *n.* நியாயாந்நியாயசமுசயம், சந்தேகம், சங்கை, doubt or uncertainty regarding a question of moral right or duty, hesitation to act from a doubt as to the rightness or propriety; லேசம், கொஞ்சம், a very small quantity; இருபதுநெல்லெடை. Make s.=நியாயமல்லவென்று பின்வாங்கு.—*vi.* சந்தேகி, சமுசயி, அநியாயமென்று பயப்படு, hesitate from a doubt or uncertainty of the rightness or propriety. [L. *scrupulus*, dim. of *scrupus*, a rough sharp stone, uneasiness, anxiety, doubt.]

Scru'pu-los'ity, *n.* நியாயாந்நியாய நிச்சயத்தில் மிகவும் ஸந்தேகிக்கும் குணம், மனசாட்சியுடைமை, conscientiousness.

Scru′pulous, *a.* சம்சயிக்கும், மிகவும் நியாயபுத்தியுடைய, கூர்மையான மனச்சாட்சியுடைய, conscientious; சூட்சுமங்களைப் பார்க்கிற அ-து லட்சிக்கிற, nice, exact. [L.; fr. Scruplo.]

Scru′pulously, *adv.* சுன்னிதமான நியாயபுத்தியுடன்; அற்பங்களையும் விடாமல், சரியாய், கராராய்.

Scru′ti-neer′, *n.* பரிசோதிக்கிறவன், scrutinizer.

Scru′tinize, *vt.* & *vi.* பரிசோதி, நன்றாய்ப்பரிக்ஷி, சமீபத்திலிருந்து பார், examine closely, minutely or critically, regard or observe narrowly.

Scru′tinous, *a.* அற்பங்களையும் பரிசோதிக்கும், closely examining, critical.

Scru′tiny, *n.* பரிசோதனை, சூட்சும பரீக்ஷை, நன்றாய் ஆராய்தல், close examination, critical or minute inspection or observation. [L. *scrutari*, to search carefully, ori. to search even to the rags, fr. *scruta*, trash.]

Scud, *vi.* வேகமாய் ஓடிப்போ, move, run, or fly, swiftly.—*n.* ஓடிப்போதல், running swiftly.

Scuf′fle, *n.* கைகலந்த சண்டை, a disorderly wrestling at close quarters; குழப்ப யுத்தம், a confused contest or fight.—*vi.* கைகலந்து சண்டைசெய், strive or struggle with a close grapple, struggle tumultuously. [freq. of AS. *scufan*, to shove.]

Scull, *n.* சிறுபடகு, a small boat; சிறுபடகுதண்டு, a short oar.

Scul′lery, *n.* சமையலறையுடன் சேர்ந்த பாத்திரங்கள் மு-வை தேய்க்கிற அறை, a room attached to a kitchen where cleaning utensils and other similar work is done, a back kitchen.

Scul′lion, *n.* பாத்திரங்கள் தேய்க்கிறது மு-வேலைகள் செய்கிறவன், a servant who cleans pots and does other menial work of the scullery. [OF.]

Sculp′tor, *n.* விக்கிரஹங்களை செதுக்கும் சில்பி, தக்ஷகன், one who sculptures, an artist who carves statues &c. [L.; see Sculpture.]

Sculp′tress, *n.* விக்கிரஹங்களை செதுக்கும் ஸ்திரீ, a female sculptor.

Sculp′tural, *a.* விக்கிரஹங்கள் மு-வை செதுக்கும் சில்பவித்தை சம்., pert. to sculpture.

Sculp′ture, *n.* விக்கிரஹங்கள் மு-வை செதுக்கும் சில்பவித்தை, கொத்து வித்தை, தக்ஷணம், the art of carving, cutting or hewing wood, stone or other materials into figures or images; பிரதிமை, விக்கிரம், a figure cut in stone or other substance, carved work.—*vt.* செதுக்கு, கொத்து, carve, engrave, form with the chisel. [L., fr. *sculpere*, *sculptum*, to carve.]

Scum, *n.* மேலுக்கு வருகிற அ-து மிதக்கும் மஷ்டு அ-து கல்மஷம், impure matter that rises to and collects upon the surface of liquids, refuse, recrement, dross, scoria.—*vt.* மஷ்டு

எடு, மிதக்கிற அழுக்கு முதலிய எடு, take the s. from, remove the impurities from the surface of, skim. [ண்டி.

Scum'mer, n. மஷ்டு எடுக்கும் கரண்டி.

Scup'per, n. மரக்கலத்தில் ஜலதாரை.

Scurf, n. தேகத்தின்மேலிருந்து உதிர்கிற செதிள்கள், thin dry scabs or scales upon the body; தலைச்சுண்டு, dandruff.

Scurf'y, a. சுண்டுபிடித்த, covered with scurf.

Scur'rile=Scurrilous.

Scur-ril'ity, n. தூஷணை, திட்டுகை, துர்ப்பாஷை, கெட்டசொல், foul or obscene language, vulgar railing or abuse; தூஷணைசெய்தல், low or vile abusiveness, indecency.

Scur'rilous, a. திட்டுகிற, தூஷணைசெய்யும், துர்ப்பாஷைபேசுகிற, using low and indecent language, foul-mouthed; துர்ப்பாஷையான, கெட்ட, foul, obscene, indecent, low, vile, opprobrious, abusive. [L., fr. *scurra*, a jester.]

Scur'vy, n. லவணரக்தம் எனும் வியாதி, சொறிகரப்பன்.—a. நீசமான, vile, mean. [ளின்வால்.

Scut, n. குறுவாலுள்ள ஜெந்துக்க

Scutch'eon, n. வம்சமுத்திரை கொத்திய பரிசை, escutcheon, emblazoned shield. [cont. of Escutcheon.]

Scu'tiform, a. பரிசை ஆகாரமுள்ள, shield-shaped, thyroid.

Scut'tle, n. பெரியமூங்கில் கூடை, a broad shallow basket; கப்பல்மேல் தட்டில் இருக்கும் சிறு துவாரம், a small opening or hatchway in the deck of a ship; எடுப்பான துரிதநடை, an affected gait.—vi. எடுப்பாய் துரிதமாய் நட, walk or run with affected precipitation.—vt. கப்பலினடித்தளத்தில் அ-து பக்கத்தில் துவாரஞ்செய், cut holes in the bottom or sides of a ship. [AS.]

Scym'eter=Scimiter.

Scythe, n. அரிவாள், a cutting instrument with a concave blade for mowing, reaping &c. [AS.]

Scythe'-man, n. அரிவாட்காரன், one who uses a scythe, mower.

Sea, n. கடல், சமுத்திரம், சாகரம், the great body of salt water covering the larger portion of the earth's surface. [AS.]

Sea'-beach', n. சமுத்திரதீரம், கடற்கரை, கடலோரம், the beach of the sea.

Sea'-board', a. சமுத்திரதீரத்திலுள்ள, bordering upon the sea, seaside, seacoast.

Sea'-born', a. கடலிற்பிறந்த, born of or produced by the sea.

Sea'-boy', n. கப்பலிலிருக்கும்வேலைக்காரன், a boy employed on shipboard.

Sea'-breeze', n. கடற்காற்று, a breeze wh. blows from the sea upon the land.

Sea'-coast', n. கடற்கரை, the shore or border of the land adjacent to the sea or ocean.—a. சமுத்திரதீரத்துள்ள.

Sea′-far′er, *n.* சமுத்திர சஞ்சாரி, நாவிகன், கப்பலோட்டி, mariner, sailor, seaman.

Sea′-far′ing, *a.* நாவிகன் தொழிலுள்ள, following the calling of a seaman or mariner. ['faring or deriving support from the sea'.]

Sea′-fight′, *n.* கடற்சண்டை, a naval battle.

Sea′-fowl′, *n.* கடற்பட்சி, sea-bird.

Sea′-girt′, *a.* கடலால் சூழ்ந்த, surrounded by the sea.

Sea′-god′, *n.* சமுத்திரதேவதை, a marine deity.

Sea′-green′, *n.* & *a.* கடற்பச்சை;—யுள்ள; (having) the bluish green color of sea water.

Sea′-gull′, *n.* கடற்காகம்.

Seal, *n.* முத்திரை, an engraved stamp used for making an impression in wax, or an impression made with it; கடலிலிருக்கும் ஓர் குரூர ஜெந்து, a marine carnivorous mammal. —*vt.* முத்திரையிடு,—பதி, முத்திரி, set or affix a s. to; ஸ்திரப்படுத்து, confirm, ratify, authenticate; நன்றாய் மூடு, கெட்டியாய்மூடு, fasten up or enclose securely, close tightly. [OF., fr. L. *sigillum*, dim. of *signum*, a mark.—AS.]

Sea′-lan′guage, *n.* நாவிகருடைய பேச்சு, the phraseology of seamen, sailors' cant.

Sea′-legs′, *n. pl.* அசையும் கப்பலில் சரியாய்நிற்க வழக்கப்பட்ட கால்கள்; கப்பல் மேல் சரியாய் நடக்க சக்தி.

Sea′-lev′el, *n.* கடல்மட்டம், ஸமுத்திரமட்டம், the level of the surface of the sea (at mean tide.)

Seal′ing-wax′, / **Seal-wax,** *n.* முத்திரை அரக்கு, lac.

Seam, *n.* தையல், பொருத்து, சேர்ப்பு, the fold or line formed in sewing together two pieces of cloth &c., a line of junction, joint, suture; கத்தியடி முதலியவை ஆறினபிறகு இருக்கும் நீண்டவடிவு, scar, cicatrix.—*vt.* பொருத்தித்தை, join by sewing together, unite; நீண்டவடிவிருக்கும்படி செய், inflict a cut or furrow upon, scar. [AS.]

Sea′man, *n.* நாவிகன், கப்பலோட்டி, mariner, sailor.

Sea′-mark′, *n.* கப்பல்களுக்கு தெரியும்படி தரையில் உள்ள உயரமான அடையாள விடம், any elevated object on land serving as a guide to mariners, a landmark visible from the sea.

Seam′less, *a.* தையலில்லாத, without a seam.

Seam′ster, *n.* தையற்காரன், one whose occupation is to sew. [AS.]

Seam′stress, *n.* தையற்காரி, a woman whose occupation is sewing. [AS.]

Seam′y, *a.* தையலுள்ள, having or showing seams; லோபங்களுள்ள, குறைவுகளுள்ள.

Sea′-port′, *n.* கப்பற்றுறை, கடற்றுறை, கப்பல் தங்குமிடம், a city or town on the sea coast or near the sea.

Sea'poy, *n.* சிப்பாய், போர்ச்சேவகன். [Pe.]

Sear, *vt.* சுடு, கருக்கு, scorch, dry up.—*a.* காய்ந்த, உலர்ந்த, dry, withered. [AS.]

Search, *vt.* தேடு, ஆராய், பரீக்ஷி, examine, explore.—*vi.* எதற்காகவாவது தேடு, seek, look for something, enquire(after), hunt. S. out=தேடி கண்டுபிடி.—*n.* தேடுதல், அன்வேஷணம், seeking, quest, pursuit, inquiry; பரீக்ஷை, சோதனை, தனிக்கை, examination, scrutiny, investigation, exploration. [L. *circare*, to go about, fr. *circus*, a circle.]

Search'less, *a.* சோதிக்கக்கூடாத, inscrutable.

Search-light, *n.* மின்சாரத்தினுல் செய்யப்பட்ட மிகப்பிரகாசமுள்ள விளக்கு, a powerful electric light.

Sear'cloth'=Cerecloth.

Sea'-room', *n.* அபாயமின்றி கப்பல் போகக்கூடிய சமுத்திரவிஸ்தீரணம், sufficient offing or room for a vessel to make any required movement.

Sea'-salt', *n.* கடலுப்பு, salt made by the evaporation of sea-water.

Sea'-shore', *n.* கடற்கரை, கடலோரம், the land adjacent to or bordering on the sea or ocean, the coast or shore of the sea.

Sea'-sick', *a.* கப்பல் அல்லாட்டத்தினுல்வாந்தி அ-து வயிற்றுபிரட்டல் உண்டான, affected with or suffering from nausea and vomiting produced by the rolling motion of a ship.

Sea'sick-ness', *n.* கப்பல் அல்லாட்டத்தினுண்டான வமனம் அ-து வயிறுபிரட்டல், nausea and vomiting produced by the rolling or pitching of a vessel at sea.

Sea'-side', *n.* சமுத்திரதீரப்பிரதேசம், சமுத்திர பிராந்தியம், sea-shore.

Sea'son, *n.* ருது, பருவம், a division of the year marked by a peculiar state of temperature &c.; நல்ல சமயம், யுக்தகாலம், தருணம், a suitable or convenient time, proper conjuncture; சிலகாலம், கொஞ்சகாலம், a period of time not very long, a while, a time. In s. = யுக்தகாலத்தில், உரிய காலத்தில், in good time, sufficiently early. Out of s.=அகாலமாய், அகாலத்தில், சமயந்தப்பி, out of the proper time.—*vt.* தாளி, தாளிதஞ்செய், ருசிப்படுத்து, சம்பாரம்போட்டு சுவைப்படுத்து, increase the relish or savor of by adding something pungent or pleasant, as salt or a spice, spice; உபயோகப்படும்படி செய், பதப்படுத்து, prepare, fit. [F. *saison*, lit. sowing time, fr. L. *satio*, a sowing.]

Sea'sonable, *a.* சமயோசிதமான, யுக்த காலத்திலான, காலானுரூபமான, timely, opportune.

Sea'sonal, *a.* ருது சம்., பருவ சம்., pert. to the seasons.

Sea'soning, *n.* தாளித்தல்; சம்பாரவஸ்துக்கள், that wh. is added to give higher relish, as salt, spices &c., a condiment.

Seat, *n.* ஆசனம், பீடம், a thing upon wh. one sits, a piece of furniture for sitting in or on; உட்காருமிடம், the place where one sits; இருப்பிடம், வாசஸ்தானம், abode, station, post, situation, site.—*vt.* ஆசனங்கொடு,உட்காரச்செய், cause to sit down, place on a s.; இருத்து, வை, locate,station, settle, place; ஸ்திரப்படுத்து, fix, set firm. [AS.; see Sit.]

Sea′-term, *n.* நாவிகருடைய பேச்சு, a nautical term or word.

Sea′ward, *a.* & *adv.* கடல்பக்கமாய், toward the sea.

Sea′-weed′, *n.* கடற்பாசி, சைவலம், any marine plant, any plant growing in the sea.

Sea′-wor′thy, *a.*சமுத்திரத்தில் போவதற்கு தகுந்தஸ்திதியிலுள்ள, fit for a voyage, as, a s. ship.

Se-ba′ceous, *a.* கொழுப்புசம்., கொழுப்புள்ள, கொழுப்பை உற்பத்தி செய்யும், pert. to or secreting fat, composed of fat, fatty, oily. [L. *sebum*, tallow.]

Se-bes′ten, *n.* நறுவிளி.

Se-cede′, *vi.* விட்டுப்போ, பிரி, பின்னிடு, அகலு, withdraw from union or association, separate (one's self), draw off, retire. [L. *se-*, apart + *cedere*, to go.]

Se-ces′sion, *n.* பிரிவு, விட்டுப்போதல், அகல்வு, பேதம், வேறுகுதல், seceding,separation,withdrawal. [L.; see Secede.]

Se-clude′, *vt.* இதரரிடத்திலிருந்து பிரி,வேறுபடுத்து, தனிமையாயிருக்கச்செய், remove and keep apart, separate from society, place in solitude.[L. *se-*, aside + *claudere*, to shut.]

Se-clu′sion, *n.* தனிமை, ஏகாந்தம், separation from society, solitude, retirement, privacy. [see Seclude.]

Sec′ond, *a.* இரண்டாம், துவிதீயமான, immediately following the first; கீழான, secondary, subordinate, inferior; பின்வரும், பின்னான, following; வேறொரு, மற்றொரு, another, other.—*n.*இரண்டாவதவன், துவிதியன், the one next after the first; பின்வருபவன், பின்னுள்ளவன், one who or that wh. follows or comes after; சகாயன், துணைவன், an assistant; நிமிஷம், the sixtieth part of a minute.—*vt.* சகாயஞ்செய், பலப்படுத்து, அநுவதி, support, back, assist, forward. [F.; L. *secundus*, following, fr. *sequi*, to follow.]

Sec′ondary, *a.* இரண்டாவதான, of second place; கீழான, உப, முக்கிய மல்லாத, not primary, subordinate, inferior. [L.; fr. Second.]

Sec′ond-hand′, *a.* புதிதல்லாத, உபயோகிக்கப்பட்ட, not new, previously used by another; இதரன் மூலமாய் வந்த,not coming directly from the original source.—*n.* கடியாரத்தில் நிமிஷங்கள் காட்டும் முள், நிமிஷகாட்டி.

Sec′ondly, *adv.* பிற்பாடு, பிறகு, அப்புறம்; இரண்டாவதாய், இரண்டாம் ஸ்தானத்தில்; இரண்டா முறையாய், இரண்டாந்தடவையாய்; in the second place.

Sec′ond-rate′, *a.* இரண்டாந்தரமான, மத்தியமமான, சிரேஷ்டமல்லாத, மேலல்லாத, of the second quality or value, inferior.—*n.* இரண்டாந்தரம்.

Sec′ond-sight′, *n.* திவ்யதிர்ஷ்டி, ஞானதிர்ஷ்டி, prophetic vision.

Se′crecy, *n.* இரகசியம், அந்தரங்கம், concealment; இரகசியத்தை வெளியிடாமை, ரகசியபாலனம், ரகசியம் வைத்தல், faithfulness or tenacity in keeping secrets, fidelity to a secret, secretiveness; இரகசியஸ்தலம், ஏகாந்தம், privacy, solitude. [fr. Secret.]

Se′cret, *a.* இரகசியமான, அந்தரங்கமான, கோப்பியமான, concealed, hidden, private; ஏகாந்தமான, நிர்ஜனமான, secluded, retired.—*n.* ரகசியம், மர்மம், எல்லோருக்கும் தெரியாத விஷயம், a thing kept or hidden from general knowledge or observation, something concealed; ரகசியகாரணம், முக்கியகாரணம், வாஸ்தவமான காரணம், an underlying reason, key, mystery; s-s, உபஸ்தம், the genitals. [F., fr. L. *secretus*, pp. of *secernere*, to separate.]

Sec′re-ta′riat,—ate, *n.* காரியதரிசியினுடைய கச்சேரி, the office of a secretary. [F.]

Sec′retary, *n.* காரியதரிசி, குமாஸ்தா, an officer who does another's correspondence & other similar work. [F.; LL. *secretarius*, ori. a confidant, one intrusted with secrets.]

Se-crete′ (ஸிக்ரீட்), *vt.* மறை, ஒளி, புதை, conceal, hide; இரத்தத்திலிருந்து பிரித்துவடியும்படி செய், separate or elaborate from blood into a new product & emit as a secretion. [L. *secretus*, pp. of *secernere*, to separate, hide.]

Se-cre′tion, *n.* வடிதல், சிரவித்தல், secreting; வடிந்த வஸ்து, ஸ்ராவம், any substance or fluid secreted; மறைத்தல், ஒளித்தல், புதைத்தல், concealing, hiding. [fr. Secrete.]

Se-cret′ive, *a.* இரகசியமாய் வைக்கிற, keeping secret or private; வடியச்செய்யும், ஸ்ரவிக்கச்செய்யும், secreting.

Se′cretly, *adv.* இரகசியமாய், மறைவாய், மர்மமாய், privately, not openly, without the knowledge of others. [secreting.

Se-cre′tory, *a.* வடியும், சிரவிக்கும்,

Sect, *n.* வகுப்பு, பிரிவு, சாகை, மதபேதம், மதாந்தரபேதம், a denomination. [F. *secte*, fr. L. *secare*, *sectum*, to cut, or *sequi*, to follow.]

Sec-ta′rian, *a.* மதபேத சம்., ஒரு மதத்தில் வெவ்வேறு வகுப்பைக் குறித்து போராடுகிற, pert. to, or bigottedly attached to, a sect.—*n.* ஒருவகுப்பன், ஒருசாகைக்காரன், a member of a sect. [fr. Sect.]

Sec-ta′rianism, *n.* மதப்பிரிவுகளின் போராட்டம், undue denominationalism. [பன், sectarian.

Sec′tary, *n.* ஒருமதத்தில் ஒருவகுப்

Sec′tion, *n.* பாகம், பகுதி, division, portion; பிரகரணம், பரிச்சேதம், அதிகாரம், chapter; அறுத்தல், பாகித்தல், கண்டித்தல், cutting, dividing. [L., fr. *secare, sectum,* to cut.]

Sec′ular, *a.* லௌகிக, இஹாார்த்த, பிராபஞ்சிக, லோக (உலக) சம்., worldly, temporal; யுக சம்., pert. to an age or a long period of time. [L., fr. *saeculum,* an age or generation, the times, the world.]

Sec′ularism, Sec′u-lar′ity, *n.* இஹிகத்துவம், உலகாசை, a secular spirit, worldliness.

Sec′ularize, *vt.* லௌகிக விவகாரத்திற்குட்படுத்து, convert from spiritual to secular or common use, make unspiritual or worldly.

Sec′undine, Sec′undines, = Afterbirth.

Se-cure′, *vt.* பத்திரப்படுத்து, ஜாக்கிரதைசெய், சுரக்ஷிதமாய் வை, make safe, guard, protect; ஓடிப்போகாமல்செய், confine effectually; சம்பாதி, சேகரி, சுவாதீனப்படுத்திக்கொள், acquire, get possession of.—*a.* நிர்பயமாயிருக்கிற, பயமற்ற, தைரியமாயிருக்கிற, free from fear, apprehension, or anxiety, confident of safety, assured; பத்திரமான, பத்திரமாயுள்ள, உறுதியான, கவலையற்ற, அபாயமில்லாத, safe, not exposed to danger. [L. *se* (for *sine*) apart, without + *cura,* care.]

Se-cure′ly, *adv.* பயமில்லாமல், அஞ்சாமல், without fear or apprehension; பத்திரமாய், ஜாக்கிரதையாய், க்ஷேமமாய், safely.

Se-cu′rity, *n.* பயமின்மை, நிர்பயத்துவம், அபாயமில்லையென்று அஜாக்கிரதையாயிருக்கை, confidence of safety, assurance; பத்திரம், சுரக்ஷிதம், ரக்ஷணம், க்ஷேமம், safety, freedom from risk or danger; பிணை, ஈடு, pledge; உத்தரவாதம், ஜாமீன், surety; கடன் பத்திரம், bond. [fr. Secure, *a.*]

Se-dan′, *n.* நாற்காலிபோன்ற ஒரு விதப் பல்லக்கு, டாஞ்சான். [From Sedan in France, where it was first made.]

Se-date′, *a.* சாந்தமான, அமைவான, அமரிக்கையான, calm, tranquil, composed, quiet, serene, unruffled. [L. *sedare, sedatum,* to allay, causative of *sedere,* to sit.]

Sed′ative, *a.* சாந்தமாக்குகிற, உபசமனம்செய்கிற, கலக்கம் அ-து நோய் மு.வை போக்கடிக்கிற, having a tranquilizing or soothing tendency, assuaging pain, allaying irritation.—*n.* உபசமன மருந்து, a medicine or remedy wh. allays irritation & irritability. [F.; see Sedate.]

Sed′entary, *a.* எப்பொழுதும் உட்காருகிற, அதிககாலம் உட்கார்ந்து வேலைசெய்கிற, accustomed to sit much or long; அதிககாலம் உட்

கார்ந்து செய்யவேண்டிய, requiring much sitting. [L., fr. *sedere*, to sit.]

Sedge, *n.* கோரைப்புல். [AS.]

Sedge-bird, *n.* பாடும் ஒருகுருவி.

Sedg′y, *a.* கோரைப்புல்லடர்ந்த, overgrown with sedge.

Sed′iment, *n.* வண்டல், மண்டி, ஜல மு.வற்றின் அடியில் படியும் அழுக்கு அ-து மஷ்டு, matter wh. subsides or settles to the bottom of a liquid, settlings, dregs, lees. [F.; L. *sedimentum*, a settling, fr. *sedere*, to sit, settle.]

Sed′i-men′tary, *a.* அழுக்காய்தங்கின, formed by sediment.

Se-di′tion, *n.* இராஜதுரோகம், நியாயமான அதிகாரிகளின் மேல் விரோதமூட்டுதல், excitement of discontent against the government and resistance to lawful authority; கலக்கம், கலகம். [F.; L. *sed*, aside + *itio*, going, *ire*, to go.]

Se-di′tionary, *n.* கலகக்காரன், அதிகாரிகளின் மேல் விரோதத்தை மூட்டுகிறவன், an inciter or promoter of sedition.

Se-di′tious, *a.* இராஜாங்கத்திற்கு விரோதமாய் ஜனங்கள் திரும்பும்படி செய்கிற, of the nature of sedition, tending to excite discontent against the Government. [see Sedition.]

Se-duce′, *vt.* துர்போதனஞ்செய், துக்காரியத்தில் பிரவேசிக்கச்செய், கெடு, மயக்கிக்கொள், entice to evil, lead astray, tempt, allure, mislead, decoy. [L. *se*, aside + *ducere*, to lead.]

Se-duce′ment, *n.* துன்மார்க்கத்திற்கு திருப்புதல், துர்போதனம், மயக்கிக்கொள்ளுதல், seducing, seduction.

Se-du′cer, *n.* துர்போதகன், மயக்கிக்கொள்ளுகிறவன், எத்தன், one who seduces.

Se-duc′tion, *n.* துர்புத்தி உண்டாக்குதல், துர்போதனம், கெட்டவழியில் பிரவேசிக்கச்செய்தல், கெடுத்தல், seducing, enticement to evil. [fr. Seduce.]

Se-duc′tive, *a.* துர்புத்தி சொல்லுகிற, மனோவசியம் செய்கிற, கெடுக்கிற, மயக்குகிற, tempting, alluring, enticing, misleading. [fr. Seduce.]

Se-du′lity, *n.* அக்கரையோடு முயற்சி, சிரத்தையுடன் பாடுபடுதல், ஜாக்கிறதையானமுயற்சி, diligent and assiduous application, constant attention, unremitting industry.

Sed′ulous, *a.* சிரத்தையோடு பாடுபடும், விடாமுயற்சியுள்ள, constant in application or attention, diligent, persevering, aissiduous. [L. *sedulus*, fr. *sedere*, to sit.]

See, *vt.* & *vi.* பார், காண், perceive by the eye, behold, descry, view, observe, look at; கிரகி, அறி, தெரிந்துக்கொள், understand, apprehend, comprehend, discern; அனுபவத்தினால்தெரிந்துக்கொள், feel, experience; பரீக்ஷி, examine;

தரிசி, பார், visit, call upon, pay a visit to, have an interview with; பார்த்துக்கொண்டிரு, காவலாயிரு, watch, look after.—n. கிறைஸ்தவர்களில் பிஷப்பின் அ-து போப்பின் ஸ்தானம், a bishop's or pope's office, a diocese or the jurisdiction of a bishop. [AS.—L. *sedes*, a seat.]

Seed, *n.* விதை, விரை, வித்து, பீஜம், கொட்டை, a ripened or matured ovule; மூலம், ஆதி, source, germ; இந்திரியம், விந்து, ரேதஸ், semen; சந்தானம், சந்ததி, progeny, offspring, descendents, children.—*vi.* முதிர்ந்து விதைபிடி அ-து வித்துண்டாகு, grow to maturity and produce seed.—*vt.* விதை சொரி, விரை நடு, sow, sprinkle with seed, plant seeds in. [AS., fr. *sawan*, to sow.]

Seed'-lac', *n.* அரக்கரிசி, அவலரக்கு, granular lac.

Seed'ling, *n.* முளை, மரக்கன்று, நாற்று, அங்குரம், a plant raised or grown from a seed.

Seed'-plat, Seed'-plot, *n.* விதைப்பாத்தி, நாற்றுவிடும்புலம், a plot of ground in wh. seeds are sown, nursery, hot-bed.

Seed-pod, *n.* காய்.

Seeds'-man, *n.* விதை விற்போன், one who deals in seeds.

Seed'-time, *n.* விதைப்புக்காலம், the proper season for sowing seed.

Seed'y, *a.* முதிர்ந்து விரைப்பிடித்த, having run to seeds, going or running to seed; விதையுள்ள, abounding with seeds; அலஙிய மாய் காணப்படுகிற, பலவீனமாயிருக்கிற, க்ஷீணமாயிருக்கிற, shabby-looking, exhausted, worn-out, spiritless.

See'ing, *conj.* ஆலோசிக்கையில், ஆலோசித்தால், ஆலோசிக்குமளவில், considering, in view of the fact, since, because, inasmuch as, taking into account.

Seek, *vt.* தேடு, ஆராய், look for, search for, go in search of; கோரு, அபேக்ஷி, கேள், ask or appeal for, solicit, beseech; அடைய பிரயத்தினி, சம்பாதிக்கயத்தினி, அடையதற்குமுயல், try to acquire or gain, strive after, aim at.—*vi.* தேடு, make search; பிரயத்தினி, முயல், try, endeavor. [AS.]

Seel, *vt.* (இராஜாளிமு.வைகளை) கண்ரெப்பைதைய்த்து மூடு.

Seem, *vi.* காணப்படு, தோன்று, தென்படு, appear, appear to be, look. It s-s=ஆம். [AS. *seman*, to conciliate, to adjust; Ic. 'to honor'.]

Seem'ing, *pa.* வெளிக்கு தோன்றுகிற அ-து காணப்படுகிற, தென்படுகிற, appearing, apparent, having a semblance or appearance; யுக்தமாய் தோன்றுகிற, specious, plausible; நிஜம் அல்லாத, கபடமான, வியாஜமான, கிருத்திரமமான, false, unreal.—*n.* காணப்படும் ரீதி அ-து விதம், appearance, show, semblance; காணப்படுதல், appearing.

Seem′ingly, *adv.* தோற்றத்திற்கு, வெளிக்கு, in appearance, apparently, ostensibly, in semblance.

Seem′ly, *a.* யுக்தமான, தகுந்த, உரிமையான, suitable, fit; இன்பமான, comely; மரியாதையான, decorous, proper, meet, becoming.—*adv.* யுக்தமாய்; மரியாதையாய்; suitably, properly, becomingly. [see Seem.]

Seen, *pp.* of See.

Se′er (ஸீர் or ஸியர்), *n.* காண்கிறவன், பார்க்கிறவன், one who sees; தீர்க்கதரிசி, ஞானதிருஷ்டியுள்ளவன், prophet; ஒருவகை மீன்; (ஸேர்), சேர் என்ற அளவும் எடையும்.

Seer′fish′, *n.* விஞ்சிரம் என்றமீன்.

See′saw′, *n.* நடுவில் முட்டுகொடுத்த நீளமானபலகையின் இரண்டு கோடியிலேயும் குழந்தைகள் உட்கார்ந்து மேலும் கீழும் ஊஞ்சலாடுகிற ஆட்டம், அ-து இப்படி ஆடும் பலகை, தூலம் மு-து.—*vi.* மேலும் கீழும் ஆடு.—*a.* மேலும் கீழும் ஆடுகிற. [reduplication of 'saw': the motion resembling the act of sawing.]

Seethe, *vt.* அவி, புழுக்கு, சமை.—*vi.* அவி, புழுங்கு. boil. [AS.]

Seeth′er, *n.* வேக வைக்கும் பாண்டம், கொப்பரை, a pot or utensil for boiling things, a boiler.

Seg′ment, *n.* கண்டம், பாகம், துண்டு, section, portion, a part cut off; விருத்தகண்டம், வட்டப்பங்கு, [L. *segmentum*, fr. *seco*, I cut.]

Seg′regate, *vt.* பிரி, நீக்கு, விலக்கு, தனியாய்வை, separate from others, isolate, place apart. [L. *se*, apart + *grex*, *gregis*, a flock.]

Seg′re-ga′tion, *n.* பிரிவு, நீக்கல்; வேறுகுதல், separation, isolation. [fr. Segregate.]

Seign′ior, *n.* பிரபு, துரை, a lord. [OF.]

Seign′iorage, *n.* வரி, இலாபத்தில் [பாகம், royalty.

Seine, *n.* பெரியவலை, a large net.

Sei′smograph, *n.* பூகம்பத்தின் வேகம் மு-வை அறியும் யந்திரம். [Gr.]

Seis-mol′ogy, *n.* பூகம்பங்களைக் குறித்தசாஸ்திரம்.

Seize, *vt.* பலாத்காரமாய் பிடி அ-து பிடித்துக்கொள், அகஸ்மாத்தாய் பிடி அ-து கிரகி, catch or take hold of suddenly and forcibly, grasp, clutch; பலாத்காரமாய் சுவாதீனப் படுத்திக்கொள், take possession of by force; கட்டியாய் அ-து உறுதியாய் பிடித்துக் கொள், hold firmly, gripe. [F. *saisir*.]

Sei′zin, *n.* சுவாதீனம், possession.

Sei′zure, *n.* பலாத்காரமாய் பிடித்துக்கொளல், sudden and violent grasp or gripe, a taking hold forcibly; ஆக்கிரமித்தல், சுவாதீனம்செய்துக்கொள்ளல், a taking possession forcibly; பிடிப்பு, பிடித்தல், holding firmly, hold, gripe. [fr. Seize.]

Sel′dom, *adv.* அரிதாய், அபூர்வமாய், சகிருத்தாய், rarely, not often or frequently, infrequently, at widely separated intervals. [AS.]

Se-lect′, *vt.* பொறுக்கு, எண்ணு, தெரி, pick out, cull; தெரிந்தெடு, choose, make choice of, take in preference to others.—*a.* பொறுக்கெடுத்த, தெரிந்த, மேன்மையான, selected, choice, chosen, picked. [L. *se*, from + *legere*, to pick.]

Se-lec′tion, *n.* தெரிவு, தெரிந்தெடுக்கை, picking out, culling; மேன்மையானதை தெரிந்தெடுக்குதல், வரித்தல், வரணம், கோருதல், choosing, choice, preference; தெரிந்தெடுத்தது அ-து எடுத்தவை, a thing or things selected. [fr. Select.]

Sel′enite, *n.* சந்திரகாந்தம், a transparent variety of gypsum.

Self, *n.* தான்; ஆத்துமா; சுயலாபம், தன்பிரயோசனம், one's own interest or good. [AS.]

Self′-acquired, *a.* சுவார்ஜிதமான.

Self′-act′ing = Automatic.

Self′-ad-just′ing, *a.* தனக்குத் தானே திருத்திக்கொள்ளும் அ-து சரிப்படுத்திக்கொள்ளும், adjusting itself.

Self′com-mand′, *n.* தன்னடக்கம், இந்திரியநிக்கிரகம், தமம், self-control.

Self′-con-ceit′, *n.* அகங்காரம், கருவம், vanity, an unduly high opinion of oneself.

Self′-con-ceit′ed, *a.* அகங்காரமுள்ள, கருவியான, vain, conceited, having an over-weening opinion of onself.

Self′-con′fidence, *n.* தைரியம், தன்னம்பிக்கை, self-reliance, confidence in oneself or one's own strength or powers.

Self′-con′fident, *a.* தனக்குத்தோன்றியது சரியென்று இடநம்பிக்கையுள்ள, self-reliant, confident of one's own powers or ability, relying on one's own judgment.

Self′-con′tra-dic′tion, *n.* தான் சொன்னதற்கு விரோதமாய்ச் சொல்லுதல், ஸ்வவிருத்தம், விசம்வாதம், முன்பின் விரோதம், contradicting one's self or itself.

Self′-con′tra-dict′ory, *a.* ஸ்வவிருத்தமான, முன்பின் விரோதமான, contradicting one's self or itself.

Self-con-trol′, *n.* இந்திரியநிக்கிரகம். ஜிதேந்திரியத்துவம், தமம், தன்னடக்கம், சித்தஸ்வாதீனம், restraint exercised over one's self, self-command.

Self-cul′ture, *n.* ஆத்துமசிட்சை அ-து அபிவிருத்தி, culture, training, or education of one's self by one's own efforts.

Self-deceit′, } *n.* பிரமை,
Self′-de-cep′tion, } being misled by one's own mistake or error.

Self′-def-ence′, *n.* ஆத்துமரக்ஷணம், defence of one's self.

Self′-de-lu′sion, *n.* பிரமை, the delusion of one's self.

Self′-de-ni′al, *n.* வைராக்கியம், ஆத்மபரித்தியாகம், denying one's self the gratification of one's own desires, passive self-sacrifice.

Self′-de-ny′ing, *a.* வைராக்கியமுள்ள, forbearing to gratify one's own desires, denying one's self.

Self′-de-vo′tion, *n.* ஆத்மசமர்ப்பணம்; ஆத்மசுகத்தியாகம்; self-sacrifice.

Self′-ev′ident, *a.* பிரத்தியக்ஷமான, evident without proof or reasoning, axiomatic.

Self′-ex-ist′ence, *n.* சுயம்புதன்மை.

Self′-ex-ist′ent, *a.* சுயம்புவான, existing of or by himself.

Self′-gov′ernment, *n.* ஜிதேந்திரியத்துவம், self-control, self-command; பிரஜாபிரபுத்துவம், democracy.

Self′-help′, *n.* தன்பிரயத்தினம், aiding one's self without depending on others.

Self′-im-por′tance, *n.* கெர்வம், self-conceit.

Self′-im-por′tant, *a.* கெர்வியான, செருக்கான, இறுமாப்புள்ள, அகங்காரமுள்ள, self-conceited.

Self′-im-posed′, *a.* தானேமேல் போட்டுக்கொண்ட, imposed, or voluntarily taken, on one's self.

Self′-in′terest, *n.* ஸ்வார்த்தம், ஸ்வப்பிரயோஜனம், ஸ்வலாபம், தன்லாபம், one's own interest, advantage, or good.

Self′-in′terested, } *a.* ஸ்வயலாப
Self′ish, } திர்ஷ்டிமாத்திரமுள்ள, ஸ்வார்த்தபரனான, ஸ்வார்த்தபராயண, caring supremely or unduly for one's self. [fr. Self.]

Self′ishness, *n.* ஸ்வார்த்தபரத்துவம், ஸ்வப்பிரயோசனத்துவம், exclusive, undue or inordinate regard to one's interest.

Self′-love′, *n.* தன்க்ஷேமத்தில் இச்சை, the love of one's self, desire of one's own happiness.

Self′-made, *a.* அன்னியர் சகாயமில்லாமல் ஸ்வயபுத்தியினாலேயே விருத்தியடைந்த, having risen to eminence by one's own exertions.

Self′-o-pin′ion, *n.* அகங்காரம், கெருவம், high opinion or overweening estimate of one's self.

Self′-o-pin′ioned, *a.* அகங்காரமுள்ள, கெருவியான, opinionated, conceited.

Self′pos-ses′sion, *n.* தைரியம், குழப்பம் அ-து கலக்கம் இன்மை, composure, presence of mind, self-command.

Self′-praise′, *n.* ஆத்மஸ்துதி, தற்புகழ்ச்சி, praise of one's self, self-applause.

Self′-re-li′ance, *n.* தன்சக்தியையே நம்பிஇருத்தல், reliance on one's own abilities, resources or judgment, self-trust, independence of character.

Self′-re-spect′, *n.* மானம், தன்மேல் தனக்கு இருக்கவேண்டிய கௌரவம், respect for one's self, regard for one's character.

Self-respecting, *a.* மானமுள்ள, தன்மேல் தனக்கு கிரமமான கௌரவமுள்ள, having, or actuated by, self-respect.

Self′-right′eous, *a.* தான் நீதியுள்ளவன் என்று நினைக்கிற, righteous in one's own esteem, pharisaic.

Self′-sac′rifice, *n.* ஆத்மசுக பரித்தியாகம், தன்சுகத்தைவிடுதல், the sacrifice or subordination of one's own welfare or interest for others' sake, self-devotion.

Self-sacrificing, a. ஆத்ம சுகபரித்தியாகம்செய்கிற, தன்சுகத்தைவிடுகிற, sacrificing one's own happiness.

Self'-same', a. அதுவேயான, அன்னியமல்லாத, precisely the same, the very same, identical.

Self'-seek'er, n. சுவார்த்தபரன், சுவார்த்தபராயணன், a selfish person.

Self'-seek'ing, a. தன்னுடைய லாபமாத்திரம் பார்க்கும், actively selfish.—n. ஸ்வார்த்தபரத்துவம், தன்னயம், selfishness.

Self'-suf-fi'ciency, n. மிக செருவம், haughtiness,conceit,self-conceit.

Self'-suf-fi'cient, a. மிகசெருவமுடைய, haughty, overbearing, conceited, self-conceited.

Self'-taught', a. தனக்குத்தானே கற்றுக்கொண்ட, self-educated.

Self'-will', n. அடம், பிடிவாதம், முரண்டுத்தனம்,obstinacy; ஸ்வேச்சை, one's own will.

Self'-willed', a. அடமுள்ள, obstinate,headstrong, willful.

Sell, vt. விக்கிரயி, விலைக்குக்கொடு, வில், transfer to another for an equivalent, dispose of in return for money, vend.—vi. விக்கிரயஞ்செய்; விக்கிரயமாகு, விலையாகு, be sold, be in demand, find buyers or a market. [AS.]

Sell'er, n. விற்கிறவன்; வர்த்தகன், வியாபாரி, கடைக்காரன்; one who sells, vender.

Sel'vage, } n. துணியின் குறுக்கு
Sel'vedge, } கரையைச்சேர்ந்துள்ள நூலை, the edge of cloth woven so as to prevent raveling. [self + edge: lit. 'an edge formed of the stuff itself.']

Sem'blance, n. போலி, ரூபம், ஆகாரம், சாயும்விதம், appearance, show; ஆபாசம், தோற்றம், likeness, resemblance. [F., fr. *sembler*, to seem, L. *similis*, like.]

Se'men, n. இந்திரியம், தாது, வீரியம், ரேதஸ், sperm, seed. [L. 'seed'; cog. *sero*, I sow.]

Sem'i, *pref.* அரை என்று அர்த்தமுள்ள உபசர்க்கம், demi, hemi, half; கொஞ்சபாகம், கொஞ்சம், partly. [L.; Sk. *sami*.]

Sem'i-annual, a. } ஆறுமாதத்
Se'mi-annually, *adv.* } திற்கு ஒரு தடவையான;—தடவையாய்; half-yearly.

Sem'i-cir'cle, n. அரைவட்டம், விருத்தார்த்தம், the half of a circle.

Sem'i-cir'cular, a. அர்த்தவர்த்துலாகாரமான, அரைவட்டமான, having the form of a half circle.

Sem'i-co'lon, n. படிப்பில் நிறுத்துவதற்குப்போடும் (;) இம்மாதிரிகுறி.

Sem'i-flu'id, } a. கொஞ்சம் திரவ
Sem'i-liq'uid, } மான அ-துநீரான, கெட்டியும் நீரும் அல்லாத, half liquid.

Sem'i-liquid'ity, n. கெட்டியும் திரவமும் அல்லாத ஸ்திதி, partial liquidity.

Sem'i-lu'nar, a. அர்த்தசந்திராகாரமான, shaped like a half moon.

Sem'inal, a. ரேதசு அ-து தாதுசம்., pert. to semen. [L., fr. *semen*, seed.]

Sem'inary, n. பாடசாலை, பள்ளிக்

கூடம், a place of education. [L. *seminarium*, fr. *semen*, seed : lit. 'a place where seed is sown'.]

Sem'i-na'tion, *n.* விதைப்பு, வித்திடல். [டியிரெழுத்து.

Sem'i-vow'el, *n.* உயிர்ப்பொலி, குற்

Sem-pi-ter'nal, *a.* ஆதியுள்ளதும் அந்தமில்லாததுமான, having beginning but no end, endless.

Sem'pi-ter'nity, *n.* ஆதியிருந்து அந்தமின்மை.

Semp'ster, Semp'stress, = Seamster, Seamstress.

Sen'ary, *a.* ஆறுள்ள, containing six.

Sen'ate, *n.* அதிகாரிசபை, an assemby or council, or a body of elders, having supreme legislative authority; சர்வகலாசாலை சபை, the governing body of a university. [F.; L. *senatus*, fr. *senex*, *senis*, old, aged; Sk. *sanas*, old. Cog. Senior: lit. 'a council of elders'.]

Sen'ator, *n.* அதிகாரி சபையிலொருவர், a member of a senate. [L.; see Senate.]

Send, *vt.* அனுப்பு, cause, commission, or direct, to go, dispatch; எறி, cast, throw, hurl.—*vi.* வார்த்தையனுப்பு, சொல்லியனுப்பு, dispatch a message or messenger. S. for = கூப்பிடவனுப்பு; ஒருவஸ்துவின் பொருட்டு சொல்லியனுப்பு. [AS.]

Sender, *n.* அனுப்புவோன்.

Se-nes'cence, *n.* விருத்தாப்பியம், இழுத்தனம்; பழுதாகுதல், ஜீர்ணித்தல், க்ஷீணித்தல்.

Sen'eschal, *n.* காரியதிருவாஹகன்.

Se'nile, *a.* விருத்தாப்பியத்திற்குரிய, pert. to, proceeding from, or characteristic of, old age, affected with the infirmities of old age. [L. *senilis*, fr. *senex*, old.]

Se-nil'ity, *n.* விருத்தாப்பியம், கிழத்தனம், old age. [fr. Senile.]

Sen'ior, *a.* மூத்த, ஜியேஷ்ட, வயது அதிகாரம் அந்தஸ்து மு. வைகளில் பெரிய, elder, superior, more advanced in age, rank, office &c. —*n.* ஜேஷ்டன், மூத்தவன், மேலாள், one who is more advanced in age, rank, or office, elder, superior. [L. compa. of *senex*, old.]

Sen-ior'ity, *n.* வயசு உத்தியோகம் மு.தில் ஆதிக்கியம், மூத்தன்மை, ஜேஷ்டத்துவம், priorityof birth, service, or rank. [fr. Senior.]

Sen'na, *n.* (Indian-) நிலவாகை, நாட்டுநிலாவிரை; (Alexandrian-) சூரத்து நிலாவிரை, சீமைநிலாவிரை. [A. *sana*.]

Sen'night, *n.* ஒருவாரம், ஸப்தராத்திரம், week. [cont. fr. Sevennight.]

Sol′vency, *n.* கடன் தீர்க்க நிர்வாகமுடையதன்மை, ability to pay all debts. [fr. Solvent.]

Sol′vent, *a.* மற்றொருபதார்த்தத்தை உருக்கும் அ-து கரைக்கும் சக்தியுள்ள, dissolving; கடன்தீர்க்க நிர்வாகமுடைய, able to pay all debts.—*n.* மற்றொருபதார்த்தத்தை கரைக்கும்நீர், a fluid substance that dissolves a solid substance. [L., *solvens*, pr. p. of *solvere*, to melt.]

Som′ber, } Som′bre, } *a.* மங்கலான, இருளான, பிரகாசமற்ற, dull, dusky, gloomy, murky, somewhat

dark ; விசனமாயுள்ள, வியசனத்தை தெரிவிக்கிற; melancholy, sad. [F.; L. *sub*, under + *umbra*, a shade.]

Some, *a.*, *pron.*, & *adv.* சில (ர்) (*m.*&*f.*), சில (*n.*), of indefinite number; கொஞ்ச (ம்), of indefinite or indeterminate quantity or amount; ஒரு, a certain; கொஞ்ச, அற்ப, not much, a little, moderate; சுமார், ஏறக்குறைய, about, as, s. fifty men. [AS.]

Some'-body, *n.* எவனோ ஒருவன், யாவனோ, some person.

Some'-how', *adv.* எப்படியோ, எவ்விதமோ, எவ்வகையேனும், one way or other, in one way or another, by some means (or other).

Som'ersault, Som'erset, *n.* குட்டிக்கரணம், கரணம், அந்தர்பல்டி, a leap in wh. a person turns his heels over his head & lights upon his feet.—*vt.* குட்டிக்கரணம்போடு, கரணம்போடு, make a s.. [L. *supra*, over + *saltus*, a leap, *salire*, to leap.]

Some'thing, *n.* ஏதோ, எதுவோ, ஏதாகிலும், யாதொன்று, ஒரு விஷயம் அ-து சங்கதி, an unknown or indeterminate thing or event; ஒருபாகம், சிலபாகம், கொஞ்சம், a part, a portion, a little, an indefinite quantity or degree.—*adv.* கொஞ்சமட்டும், somewhat, to some extent, in some degree.

Some'time', *adv.* முன், ஒருகாலத்தில், பூர்வத்தில், formerly, once; எப்பொழுதோ ஒருவேளை, at one time or other (hereafter).—*a.* பூர்வமொரு காலத்திலிருந்த, முந்தின, பூர்வத்து, பழய, former, late, whilom, quondam.

Some'times', *adv.* சிலவேளையில், இடைக்கிடை, at times, now and then, occasionally, not always.

Some'what', *n.* கொஞ்சம், ஒருபாகம், something, a part.—*adv.* கொஞ்சமட்டும், கொஞ்சம், குறைவாய், in some degree or measure, a little.

Some'where', *adv.* எங்கேயாகிலும் அ-து எவ்விடத்திற்காகிலும், in or to some unknown or unspecified place; எங்கேயோ ஒரு இடத்தில் அ-து எவ்விடமோ ஒரு இடத்திற்கு, in or to some (existent) place.

Som-nam'bulism, *n.* நித்திரையில் நடக்கை, sleep-walking, noctambulism. [L. *somnus*, sleep + *ambulare*, to walk.]

Som-nam'bulist, *n.* நித்திரையில்நடக்கிறவன், சொப்பனசாரி, sleep-walker, noctambulist. [see Somnambulism.]

Som-nif'erous, Som-nif'ic, *a.* நித்திரை உண்டாக்குகிற, causing or inducing sleep, soporific, dormitive, narcotic.

Som-nil'oquence, Som-nil'oquy, *n.* நித்திரையில் பேசுதல் அ-து பிதற்றுதல், talking in sleep.

Som-nip'athy, *n.* ஆக்ருஷணத்தினால் அ-து வசியத்தினால் உண்டாக்கும் நித்திரை, யோகநித்திரை, a mesmeric or hypnotic sleep.

Som'nolence, *n.* தூக்கமயக்கம், drowsiness.

Som'nolent, *a.* தூக்கம்வருகிற, நித்

நித்திரைமயக்கமுள்ள, சோம்புள்ள, sleepy, drowsy, inclined to sleep.

Son, *n.* மகன், குமாரன், புத்திரன், மைந்தன், a male child. [AS.; Sk. *sunu.*]

So'nant, *a.* தொனி சம்., ஓசை சம்., pert. to sound; சப்திக்கும், தொனிக்கும், sounding.

Song, *n.* பாட்டு, கீதம், கீர்த்தனை, பதம், that wh. is sung or uttered with musical modulations of the voice, a vocal melody, a lay, a strain; சங்கீதம், கானம், singing, music. [AS.; see Sing.]

Song'ster, *n.* பாடகன், சங்கீதக்காரன், காயகன், one who sings, one skilled in singing, singer, a vocal musician, vocalist. [AS.]

Song'stress, *n.* சங்கீதம்பாடும்ஸ்திரீ, பாடகி, a woman who sings, a female singer. [fr. Songster.]

Son'-in-law', *n.* மருமகன், ஜாமாதா, the husband of one's daughter.

Son'net, *n.* இங்கிலீஷ்காவியத்தில் பதினான்கு அடியுள்ள ஒருவகைச் செய்யுள். [F. & It., a dim. fr. L. *sonus*, a sound.]

Son'net-eer', *n.* பதினான்குஅடியுள்ள செய்யுள்செய்பவன், a composer of sonnets.

Son'o-rif'ic, *a.* தொனி உண்டாக்கும், producing sound.

So-no'rous, *a.* தொனிக்கிற, அடித்தால் பெரிதாய் தொனிக்கும், பேரொலியான, giving sound when struck, resonant, loud-sounding. [L., *sonus*, sound.]

Soo'dra, *n.* சூத்திரன். [Sk.]

Soon, *adv.* வேகமாய், சீக்கிரமாய், ஆலசியமில்லாமல், கொஞ்சநேரத்தில், விரைவாய், விரைவில், சுறுக்காய், துரிதமாய், in a short time, quickly, promptly; நேரத்தோடே, நேரத்தில், early. As s. as = So s. as = தக்ஷணமே, உடனே. [AS.]

Soot, *n.* ஒட்டறை, ஒட்டடை, புகைக்கரி, புகையூரல், a black substance wh. is formed by combustion & rises & adheres to the sides of chimneys &c. [AS.]

Sooth, *n.* மெய், உண்மை, நிஜம், யதார்த்தம், truth. [AS.; akin to Sk. *sat*, *sant*, real, being.]

Soothe, *vt.* ஆற்று, தணி, உபசமனம் செய், சாந்தப்படுத்து, mitigate, allay, assuage; தேற்று, மனம்குளிரச்செய், pacify, calm, tranquillize. [AS. ori. 'to assent to as true and please' *soth*, true.]

Sooth'say', *vi.* குறிசொல், வரப்போகிறதை முன்னறிவி, foretell, predict. [Sooth + say.]

Sooth'say'er, *n.* குறிசொல்வோன், prognosticator, diviner, foreteller. [Sooth + sayer.]

Soot'ish, } *a.* ஒட்டறைப்போன்ற;
Soot'y, } ஒட்டறைபிடித்த, புகைபடிந்த, புகைப்பிடித்த, like, or soiled by, soot. [fr. Soot.]

Sop, *n.* ஊறவைக்கப்பட்ட (வஸ்)து, anything steeped in liquid; இலஞ்சம், bribe.—*vt.* ஊறவை, steep in any liquid.

Soph'ism, *n.* குதர்க்கம், கள்ள நியா

um, ஹேத்வாபாஸம், fallacy. [Gr. 'a quibble', *sophos*, clever.]

Soph'ist, *n*. குதர்க்கம்செய்வோன், a specious dialectician, quibbler. [Gr.; see Sophism.]

So-phis'tical, *a*. குதர்க்கமான, ஹேத்வாபாஸமான, கள்ளநியாயமான, பொய்மாதமான, fallacious, quibbling.

So-phis'ticate, *vt*. கெடு, பழுதாக்கு, புரட்டு, pervert, vitiate.

Soph'istry, *n*. குதர்க்கம், ஹேத்வாபாஸம், கள்ளநியாயம், fallacious reasoning, casuistry, quibbling.

Sop'o-rif'erous, Sop'o-rif'ic, } *a*. தூக்கம் உண்டாக்கும், causing sleep, somniferous, narcotic.

So-pr'ano, *n*. = Treble.

Sor'cerer, *n*. மாந்திரிகன், மந்திரக்காரன், சூனியம்வைப்பவன், conjuror, enchanter, magician, necromancer, wizard. [F.; L. *sors*, *sortis*, a lot : lit. 'a caster of lots'.]

Sor'ceress, *n*. மந்திரக்காரி, சூனியக்காரி, a female sorcerer, witch.

Sor'cerous, *a*. மந்திரவாதம் சம். அ-து செய்கிற, pert. to or practicing sorcery.

Sor'cery, *n*. மந்திரவித்தை, மந்திரவாதம், சூனியம், necromancy, witchcraft, enchantment, magic. [OF.; see Sorcerer.]

Sor'did, *a*. நீசமான, க்ஷுத்திரமான, ஈனமான, அற்பமான, இழிவான, mean, base, vile. [F. & L., fr. L. *sordes*, filth.]

Sore, *n*. புண், இரணம், a painful or diseased part of an animal body, a boil, ulcer, or wound.—*a*. நோவுள்ள, நோவுகிற, நோகும், வேதனையுள்ள, painful, inflamed, tender. S. throat = தொண்டைநோவு. S. eye = கண்ணோய், ophthalmia.—*adv*. நோவாய், நோவுடன், with pain ; துக்ககரமாய், விசனகரமாய், grievously. [AS.]

Sore'ly, *adv*. நோவுண்டாகும் வண்ணம், நோவுண்டாகும்படி, painfully ; துக்ககரமாய், grievously.

Sor'rel, *n*. சிவப்பு கலந்த ஒரு நிறம் ; சீமை காசுருக்கீரை, சிவப்புகாசுருக்கீரை.

Sor'row, *n*. துக்கம், துயரம், விசாரம், விசனம், கிலேசம், சோகம், கவலை, grief, sadness, regret, unhappiness, affliction, distress, mourning, lamentation.—*vi*. துக்கப்படு, துக்கி, சோகி, விசனப்படு, grieve. [AS.]

Sor'rowful, *a*. துக்கப்படுகிற, துக்கிக்கிற, விசனமுள்ள, விசாரமுள்ள, சோகப்படுகிற, full of or oppressed with sorrow, sad, distressed, mournful, dejected, grieved, unhappy, melancholy ; துக்ககரமான, விசனகரமான, producing or causing sorrow, exciting grief, distressing, grievous, lamentable ; துக்கந்தெரிவிக்கும், விசனமுணர்த்தும், expressing sorrow. [fr. Sorrow.]

Sor'ry, *a*. துக்கமுள்ள, விசாரமுள்ள, விசனப்படுகிற, விசனமுள்ள, grieved, pained, feeling regret,

regretful, distressed; ஈனமான, நீசமான, இழிவான, உதவாத, poor, mean, worthless, paltry. [AS.'sore', hence, painful, sad.]

Sort, *n.* விதம், வகை, தினிசு, தரம், ரகம், ஜாதி, இனம், வகுப்பு, kind, species, variety, class, order, character, nature. In some s.= கொஞ்சமட்டும்.—*vt.* வகைவகையாய் ஏற்படுத்து, வகைப்படுத்து, வகு, தினிசுபடிக்கு வெவ்வேறாய் செய், assort, classify; சரிப்படுத்து, சரியாகும்படிச் சேர்.—*vi.* தன் இனத்தோடு சேர் அ-து கூடு, join with others of the same kind; ஒத்திரு, சரிப்படு. [F.; L. *sors, sortis*, a lot, a condition.]

Sor'tie, *n.* கோட்டையிலுள்ள இராணுவம் முற்றுகை போட்ட இராணுவத்தை தாக்கல்.

So'-so', *a.* மிகு நல்லதும் மிகுகெட்டதும் அல்லாத, நடுதரமான.—*adv.* ஒருவிதமாய், ஒருமாதிரியாய்.

Sot, *n.* அதிகக்குடியினால் புத்திக்கெட்டவன், a person made stupid by habitual drunkenness, drunkard.

Sot'tish, *a.* குடித்துவெறியேறின, drunken; அறிவில்லாத, stupid, foolish.

Sought, *pt.* & *pp.* of Seek.

Soul, *n.* ஆத்துமா, the incorporeal or immaterial nature or part of man, the spirit; முக்கியாதாரம். There were twenty s-s present there= அங்கே இருபது பெயர் இருந்தார்கள். [AS.]

Sound, *a.* கெடாத, கெட்டியான, நல்ல ஸ்திதியிலுள்ள, unimpaired, unhurt, undecayed, perfect, in good condition or state; ஆரோக்கியமாயிருக்கிற, சௌக்கியமாயுள்ள, healthy, not diseased; ஆழ்ந்த, காடமான, deep, profound, as, s. sleep; நியாயமான, சரியான, கிரமமான, founded in truth or right, not fallacious, correct, right, valid; ஆழ்ந்த, சரியான (அறிவு), deep, profound, correct.—*adv.* நன்றாய், கெட்டியாய், ஆழ்ந்ததாய், soundly.—*n.* சத்தம், தொனி, ஓசை, ஒலி, நாதம், the sensation produced through the organs of hearing, noise; இரண்டு பெரிய கடல்களை சேர்க்கும் இடுக்கமான கடற்கால்வாய்; சலாகை.—*vt.* ஆழமளந்தறி, measure the depth of, fathom; பரிசோதி, examine, try, test, probe; அபிப்பிராயம்தெரிந்துகொள் அ-து கண்டுகொள், ascertain the thoughts or intentions of; வாசி; ஊது; பாடு; cause to send forth a sound or sounds, play on.—*vi.* சப்தி, send forth a sound; ஆழம்பார். [AS. 'healthy'; akin to L. *sanus*, sound (*a*).—L. *sonus*; akin to Sk. *svana*.]

Sound'ings, *n.* கடலில் அடியெட்டுமிடம், any place or part of the ocean or other water where a sounding line reaches the bottom.

Sound'less, *a.* அடியெட்டாத, unfathomable; சத்தமில்லாத, silent.

Sound'ly, *adv.* நன்றாய், சரியாய், correctly; கெட்டியாய், கடினமாய்,

hard, severely; ஆழ்ந்ததாய், profoundly.

Sound′ness, *n.* கெட்டி, பலம், திடம், sound condition; ஆரோக்கியம், சுகம், healthiness; ஸ்திரம், firmness; சரி, நியாயம், correctness.

Soup (ஸூப்), *n.* சாறு, குழம்பு, strong broth. [F.]

Sour, *a.* புளியான, புளிப்பான, acid, tart; அசிஷ்டமான, அருவருப்பான, disagreeable, unpleasant; வெடுவெடுப்பான, peevish, morose, crabbed.—*vt.* புளிக்கவை, cause to become s., acidulate; கடினமுண்டாக்கு, make unkind; வெடு வெடுக்கப்பண்ணு, make morose; விசனமாக்கு, make sad. —*vi.* புளிப்பாகு, become s. [AS.]

Source, *n.* மூலம், உற்பத்திஸ்தானம், ஆதாரம், காரணம், ஆதி, அடி, origin, spring, fountain, beginning.

Sour′ish, *a.* கொஞ்சம் புளிப்பான, somewhat sour.

Sour′ness, *n.* புளிப்பு, acidity; வெடு வெடுப்பு, moroseness.

Souse, *n.* உப்பில் ஊறப்போட்டது, pickle made with salt.—*vt.* முக்கு, அமிழ்த்து, plunge, immerse; நன்றாய் நனைத்துப்போடு, d r e n c h, wet thoroughly; ஊறவை, pickle. —*vi.* திடீரென்றுமேல்விழு, swoop, plunge or fall suddenly (upon).

South, *n.* தெற்கு, தக்ஷிணம், the region or direction to the right of a person who faces the east. —*a.* தெற்கேயுள்ள, southern, pert. to, situated in, or proceeding from, the s..—*adv.* தென் திசைக்கு, toward the s., southward.—*vi.* தெற்கேதிரும்பு, turn, move, or veer, toward the s.. [AS.]

South′east′, *n.* & *a.* தென்கிழக்கு, ஆக்கினேய அ-து அக்கினிமூலை, the direction midway bet. south & east.

South′erly, } *a.* தெற்கேயுள்ள, தக்ஷி
South′ern, } ண, pert. to, situated in, proceeding from or toward, the south.

South′erner, *n.* தக்ஷிணதேசத்தான், an inhabitant or native of the south.

South′ern-most′, *a.* மிகவும்தெற்கேயுள்ள, அறதக்ஷிணத்திலுள்ள, farthest south, most southerly.

South′ward, *adv.* தெற்காய், தக்ஷிணமாய்.—*a.* தெற்கேயான. toward the south.

South′wardly, } *adv.* தெற்குதிசை
South′wards, } யாய், தென்திசைக்கு, towards the south.

South′west′, *n.* தென்மேற்கு, the direction midway bet. south & west.

Sou′ve-nir′, *n.* ஞாபகார்த்தப் பொருள், keepsake, memento, remembrancer. [F.; L. 'to come to mind', *sub*, under + *venire*, to come.]

Sov′ereign, *n.* இராஜன் அ-து ராணி, சக்கரவர்த்தி அ-து சக்கரவர்த்தினி, a supreme ruler, monarch, king or queen, emperor or empress; ஒரு பொன் நாணயம்.—*a.* இராஜாதிகாரமுள்ள, supreme or highest in power; சிரேஷ்ட, மேலான

உத்தமமான, pre-eminent. [OF.; LL. *superanus*, L. *super*, above.]

Sov′ereignty, *n.* பிரபுத்துவம், ஆஞ்ஞை, supreme power, sway, dominion, reign, rule. [OF.; fr. Sovereign.]

Sow, *n.* பெண்பன்றி, a female hog. —*vt.* & *vi.* விதை, வித்திடு, plant, scatter; மேலே விதை தூவு, scatter seed upon; வியாபிக்கச்செய், propagate. [AS.]

Sow′er, *n.* விதைவிதைப்போன் அ-து விதைப்பது, one who or that wh. sows.

Sow′ing, *n.* விதைத்தல்.

Space, *n.* ஸ்தலம், இடம், place, room; ஆகாசம், extension; மத்தியஸ்தலம், அந்தரம், interval, distance; காலம். அவகாசம், an interval of time, time, period, duration.—*vt.* இடையில் ஸ்தலம் அ-து இடம்விடு. [F. *espace*; L. *spatium*, fr. *spa*, to stretch. Cog. Span.]

Spa′cious, *a.* விசாலமான, விஸ்தாரமான, விரிவான, வீதியான, அகன்ற, large in extent, widely expanded, capacious, roomy. [L. *spatiosus*.]

Spade, *n.* பாரை, கனித்திரம், an implement for digging or cutting the ground; சீட்டாட்டத்தில் இஸ்பேட் என்னும் சீட்டு.—*vt.* பாரையால் தோண்டு, dig with a s.. [AS.]

Span, *n.* சாண், ஒன்பதங்குலம், அரைமுழம், the space from the end of the thumb to that of the little finger when extended, nine inches; கொஞ்சகாலம், a small space or brief portion of time.—*vt.* சாணிடு, சாணளா, measure by the s.; இக்கரையிலிருந்து அக்கரைவரையிலும் இரு, reach from one side to the other side of, stretch or extend over. [AS.; see Space.]

Span′gle, *n.* தளதளவென்று மின்னுகிறவஸ்து, any sparkling object.

Span′iel, *n.* ஒருஜாதிநாய். [OF. lit. 'a little Spanish dog.']

Spank, *vt.* அடி, அறை, slap.

Span′-long, *a.* சாணளவுள்ள.

Spar, *n.* ஸ்படிகமண்; தூலம், உத்திரம், beam. —*vi.* சண்டைசெய், அறை, குத்து, box. [AS.]

Spare, *vt.* மிதச்செலவிடு, refrain from using, keep unused, save, use frugally; விட்டுவிடு, க்ஷமி, இரங்கு, forbear to punish, treat with pity; மிச்சம்வைத்துக்கொடு, (save and) give, grant, part with.—*vi.* மிதசெலவிடு; மன்னி, க்ஷமி.—*a.* கொஞ்சமான, மிதமான, தாராளமல்லாத, scanty. not abundant; மீந்திருக்கிற, ஜாஸ்தியாயிருக்கிற அதிகம் அ-து சேஷமாயுள்ள, superfluous; இளைத்த, ஒல்லியான, lean, thin. [AS.]

Spar′ing, *a.* கொஞ்சம், அற்ப, மிதமான, தாராளமல்லாத, scanty, scarce, slight.

Spar′ingly, *adv.* மிதமாய், கொஞ்சமாய், தாராளமல்லாமல், frugally.

Spark, *n.* தீப்பொறி, அக்கினிப்பொறி, a small particle of fire emitted by a body in combustion, a scintillation; கொஞ்சநேர

மிருக்கும் சொற்பகாந்தி, a small transient light; கொஞ்சம், a little; சிறியகாரணம், மூலம், a feeble germ or cause, an elementary principle. [AS.]

Spar′kle, *n.* சிறுதீப்பொறி, a little spark; சிறுபிரகாசம், கொஞ்சம் காந்தி, gleam, glitter.—*vt.* மின்னு, மினுங்கு, தளதள, twinkle; தீப்பொறி பற, emit sparks, scintillate. [dim. & freq. fr. Spark.]

Spar′row, *n.* ஊர்க்குருவி. [AS.]

Spar′ry, *a.* ஸ்படிகம்போன்ற, resembling spar.

Sparse, *a.* சிதறுண்ட, செறிவில்லாத, thinly scattered, not dense. [L. *sparsus*, pp. of *spargo*, I strew.]

Spasm, *n.* நரம்புப்பிடிப்பு, வலிப்பு, வலி, an involuntary, unnatural and convulsive contraction of muscles. [F.; L.; Gr., fr. *spao*, to draw.]

Spas-mod′ic, } *a.* நரம்புப்பிடிப்பு
Spas-mod′ical, } சம். அ-து போன்ற, pert. to, or of the nature of, a spasm, convulsive. [Gr. *spasmos*, spasm + *eidos*, likeness.]

Spat, *pt.* of Spit.—*n.* கிளிஞ்சிலின் குஞ்சு, spawn of shell-fish, a young oyster or the like.

Spa′tial, *a.* ஸ்தலம் சம்., pert. to space.

Spat′ter, *vt.* மேல் நீர் சேறு மு.து தெளி, தூவு, சிந்து, சிதறு, sprinkle with water, mud &c., bespatter; அபகீர்த்தியுண்டாக்கு, defame.—*vi.* உமிழ்நீர்தெளி, scatter spittle from the mouth, sputter. [see cog. Spit.]

Spav′in, *n.* குதிரையின்காலில் வீக்கமுண்டாகும் ரோகம்.

Spawl, *n.* துப்பல், உமிழ்நீர், spittle. —*vi.* துப்பு, உமிழ், spit.

Spawn, *n.* மீன்சினை அ-து முட்டை, the ova or eggs of fishes &c.—*vt.* & *vi.* முட்டையிடு, produce or deposit eggs. [OF. lit. 'to expand'.]

Spawn′er, *n.* பெண்மீன், a (mature) female fish.

Spay, *vt.* பெண்விலங்குக்கு நலமடி, remove or extirpate the ovaries from, castrate (a female animal).

Speak, *vi.* & *vt.* பேசு, talk; சொல், வசனி, utter, say, tell; சபையில் உபனியாசம்செய், உபனியசி, பிரசங்கி, பிரசங்கம்செய், deliver an address, make a speech, discourse, address a public assembly; சம்பாஷி, converse. [AS.]

Speak′er, *n.* பேசுகிறவன், one who speaks; உபனியாசம் செய்வோன், பிரசங்கி, வக்த, orator.

Speak′ing, *n.* பேசல், பிரசங்கித்தல். —*a* பேசுகிற; பேசுவதுபோலிருக்கிற, உயிரோடிருப்பது போலிருக்கிற, life-like.

Spear, *n.* வல்லயம், ஈட்டி, lance.—*vt.* வல்லயத்தினுல் குத்து, pierce with a s. [AS.]

Spear′man, *n.* வல்லயம்பிடித்தபடைஞன், ஈட்டிக்காரன், one who is armed with a spear, lancer.

Spe′cial, *a.* விசேஷமான, அசாமானியமான, முக்கியமான, சாதாரணமல்லாத, particular, peculiar, extra-

ordinary, uncommon; பிரத்தியேகமாய் ஒருகாரியத்துக்கு உத்தேசிக்கப்பட்ட, intended for a particular purpose. [L. *specialis*, fr. *species*, a particular sort.]

Spe′cialism, *n.* பிரத்தியேகமான ஒரு வித்தையில் இருஷிச்செய்தல்.

Spe′cialist, *n.* பிரத்தியேகமாய் ஒரு வித்தைமாத்திரம் அப்பியசித்தவன், a person devoted to some one line of study &c..

Spe′ci-al′ity, *n.* விசேஷம், விசேஷகுணம், peculiarity, peculiar feature; மற்றவர்களுக்கில்லாத சாமர்த்தியம், that for wh. a person is specially distinguished; அரும்பொருள், rarity.

Spe′cially, *adv.* முக்கியமாய், பிரத்தியேகமாய், விசேஷமாய், பிரதானமாய், particularly, especially.

Spe′cialty = Speciality.

Spe′cie, *n.* நாணயம், காசு, ரொக்கம், coin. [L.; see Species.]

Spe′cies, *n. sing. & pl.* இனம், வருக்கம், வகுப்பு, ஜாதி, கூட்டம், class; பேதம், விதம், kind, sort, variety. [L. 'a sight', 'appearance', 'a sort', *specio*, to look.]

Spe-cif′ic, *a.* விசேஷமான, பிரத்தியேகமான, peculiar, special; பிரத்தியேகமாய் ஒரு சங்கதியைக் குறித்த, distinct, particular, explicit; தனியாய்சொல்லப்பட்ட, specified. distinctly and plainly set forth.—*n.* ஒரு ரோகத்திற்கு பிரத்தியேகமான மருந்து, அமோகமானமருந்து, a medicine specially fitted to cure some particular disease. [L. *species*, a particular sort + *facere*, to make.]

Spe-cif′ical, *a.* = Specific.

Spec′ifi-ca′tion, *n.* விவரமான வருணனை, a minute description. [fr. Specify.]

Spec′ify, *vt.* ஸ்பஷ்டமாய்ச்சொல், விவரி, பிரத்தியேகித்து உதஹரி, state in full and explicit terms, name expressly or particularly. [L. *species*, sort + *facere*, to make.]

Spec′imen, *n.* மாதிரி, sample, model. [L., fr. *specio*, to behold.]

Spe′cious, *a.* தோற்றத்திற்கு மாத்திரம் நியாயமாயுள்ள, வெளிக்கு மாத்திரம் சரியாயுள்ள, appearing right or correct at first sight, plausible, colorable. [L. *speciosus*, good-looking, fr. *species*, appearance.]

Speck, *n.* புள்ளி, மாசு, வடு, கறை, களங்கம், spot, stain, blemish; அணு, லேசம், particle, atom.—*vt.* புள்ளிபோடு, spot, speckle. [AS.]

Spec′kle, *n.* சிறுபுள்ளி, a little speck or spot.—*vt.* சிறுபுள்ளிபோடு, mark or variegate with small spots. [dim. of Speck.]

Spec′tacle, *n.* காட்சி, திர்ஷ்டிவிஷயம், something exhibited to view; வேடிக்கை, விநோதம், a remarkable sight, show, pageant; s-s, மூக்குக்கண்ணாடி, சுலோசனம், உபனேத்திரம், உபநயனம், glasses, eye-glasses. [F.; L. *spectaculum*, fr. *spectare*, to look at.]

Spec-ta′tor, *n.* பார்க்கிறவன், காண்போன், looker-on, beholder, observer, witness. [L., fr. *specto*, freq. of *specio*, to behold.]

Spec′ter, *n.* மாயாரூபம், பேய், பிசாசு, மனக்காட்சி, வெறுந்தோற்றம், ghost, phantom, apparition. [F., fr. L. *spectrum*, an appearance, *specto*, to behold.]

Spec′tral, *a.* பிசாசு சம்., pert. to a specter, ghostly. [fr. Spectre.]

Spec′tre=Specter.

Spec′trum, *n.* சாயாரூபம், சாயை. [L.] [resembling a speculum.

Spec′ular, *a.* கண்ணாடிபோன்ற,

Spec′ulate, *vi.* யோசி, விசாரி, ஆலோசி, meditate, contemplate, theorize; யூகி, conjecture; துணிந்து வியாபாரஞ்செய்; [L., fr. *speculari*, to observe, *specere*, to look.]

Spec′u-la′tion, *n.* யோசனை, ஆலோசனை, meditation, contemplation; துணிந்துசெய்யும் வியாபாரம். [fr. Speculate.]

Spec′ulative, *a.* ஆலோசிக்கிற, சிந்திக்கிற, given to speculation, contemplative; நிச்சயமல்லாத, துணிந்துசெய்கிற. [L.; see Speculate.]

Spec′u-la′tor, *n.* ஆலோசனைசெய்வோன், one who speculates, theorist; லாபாபேக்ஷையினுல் துணிந்து வியாபாரம் செய்வோன்.

Spec′ulum, *n.* கண்ணாடி, ஆதரிசனி, mirror, looking-glass. [L.]

Sped, *pt.* & *pp.* of Speed.

Speech, *n.* பேச்சு, பாஷணம், speaking, talking, talk, utterance; பேசும்சக்தி, the power of speaking; பாஷை, language, tongue, dialect; உபந்நியாசம், பிரசங்கம், oration, address, discourse, harangue. [AS.]

Speech′ify, *vi.* பிரசங்கம்செய்: இது பரிகாசச்சொல்.

Speech′less, *a.* ஊமையான, பேசற்ற, dumb; பேசாத, மௌனமான, silent, mute.

Speed, *n.* வேகம், துரிதம், விரைவு, கதி, quickness, rapidity, swiftness, celerity, velocity; ஜயம், ஸபலம், success, prosperity in an undertaking, good fortune, favorable issue.—*vi.* வேகமாய்போ, ஓடு, தீவிரப்படு, தீவிரி, move rapidly, make haste; ஜயி, காரியசித்தியடை, prosper, have success, fare well.—*vt.* சீக்கிரப்படுத்து, வேகப்படுத்து, துரிதப்படுத்து, hasten, expedite; விரைவாய் அனுப்பு, send or despatch quickly; சகாயம்பண்ணு, உதவிசெய், help; கொல், வதை, kill; நாசம்செய், ruin. [AS.]

Speed′ily, *adv.* வேகமாய், துரிதமாய், சீக்கிரமாய், விரைவாய், சடிதியாய், quickly.

Speed′y, *a.* வேகமான, துரிதமான, சீக்கிரமான, விரைவான, சடிதியான, ஆலசியமில்லாத, quick, rapid, swift. [fr. Speed.]

Spell, *vt.* எழுத்துக்கூட்டு; மந்திரத்தால்வசியப்படுத்திக்கொள், charm, bewitch.—*vi.* எழுத்துகிரமமாய்

எழுது அ-து வாசி.—*n.* மந்திரம், incantation, charm. [AS.]

Spell′bound′, *a.* மந்திரத்தால் கட்டப்பட்ட, மந்திரபத்தமான, மந்திர பலத்திற்குட்பட்ட, bound by (or as by) a spell, under the influence of a spell.

Spell′ing, *n.* எழுத்துக்கூட்டுதல், formation of words by letters, orthography.

Spel′ter, *n.* துத்தநாகம்.

Spen′cer, *n.* ஒருமோஸ்தர் சட்டை.

Spend, *vt.* செலவுபண்ணு, செலவிடு செலவழி, lay out, expend; உபயோகப்படுத்து, use, consume; கடத்து, pass; இளைப்புறச்செய், exhaust, waste, wear away.—*vi.* செலவு செய்; முடி, தீர். [AS., fr. L. *expendere*, to weigh out, dispense.]

Spend′thrift′, *n.* ஊதாரி, அழிப்பாளி, ஆராதூரி, prodigal, one who lavishes or wastes his estate.

Spent, *pt.* & *pp.* of Spend.—*a.* செலவு செய்யப்பட்ட; இளைத்துப் போன; exhausted.

Sperm, *n.* இந்திரியம், வீரியம், தாது, விந்து, ரேதசு, semen. [L. & Gr. 'seed'.]

Sper′ma-ce′ti, *n.* மீன்கொழுப்பு.

Sper-mat′ic, *a.* இந்திரிய அ-து ரேதசு சம்., pert. to sperm or semen.

Sperm′whale′, *n.* ஒருவகைதிமிங்கிலம். [கக்கு, vomit.

Spew, *vt.* & *vi.* வாந்திபண்ணு,

Sphere, *n.* கோளம், உண்டை, மண்டலம், globe; அதிகாரம் முதலியதற்கு உட்பட்ட பிரதேசம், range, compass, province; ஸ்திதி, அவஸ்தை, தசை, அந்தஸ்து, rank, position. [L. & Gr.]

Spher′ical, *a.* கோளாகாரமான, உண்டையான, globular, round. [fr. Sphere.]

Sphe-ric′ity, *n.* கோளாகாரம், கோளவடிவம், globularity, roundness.

Spher′ics, *n.* கோளகணித சாஸ்திரம்.

Sphe′roid, *n.* அண்டாகிருதி, a body having nearly the form of a sphere.

Spher′ule, *n.* சிற்றுண்டை, சிறுகோளம், a little sphere.

Sphinx, *n.* ஸ்திரீமுகமும் சிங்கசரீரமும் உள்ளகவிகல்பிதமானராக்ஷஸி. [Gr.]

Spice, *n.* வாசனைத்திரவியம், வாசனைச்சரக்கு, சம்பாரம், மசாலை, an aromatic pungent vegetable substance used in cookery.—*vt.* வாசனைச் சரக்குசேர், mix aromatic substances with, season with s., season, flavor. [see cog. Species.]

Spi′cer, *n.* சம்பாரம் அ-து வாசனைச் சரக்குவிற்போன், a dealer in spices.

Spi′cery, *n.* வாசனைத்திரவியங்கள், சுகந்தவஸ்துகள், சம்பாரம், மசாலை, spices.

Spi′cy, *a.* சுகந்தவஸ்து சம்., சம்பாரம் சம்., pert. to spices; சுகந்தவஸ்துபோட்டு ருசியுண்டாக்கின, வாசனையுள்ள, சம்பாரம்போட்ட, containing, or flavored with, spice or spices, f r a g r a n t,

aromatic, piquant, pungent, racy. [fr. Spice.]

Spi′der, *n.* சிலந்திப்பூச்சி, சிலம்பி. The large venomous s. =பொட்டுப்பூச்சி. [for 'spinder', cor. of 'spinner', that wh. spins.]

Spig′ot, *n.* அடைப்பு, பிரடை.

Spike, *n.* ஆணி, சலாகை, கூர்ச்சு, a piece of pointed iron (set or fixed with the point upward or outward).— *vt.* ஆணிகடாவு, fasten with s-s.

Spike′nard, *n.*ஜடாமாசிஎன்றசெடி.

Spik′y, *a.* கூரான முனையுள்ள, like a spike, pointed.

Spill, *vt.* சிந்தப்பண்ணு, suffer or allow to fall or run out of a vessel.—*vi.* சிந்து, run over, fall out and be lost or wasted, be shed.—*n.* சின்ன அடைப்பு அ-து பிரடை. [AS.]

Spin, *vt.* நூல்நூல், திரி, draw out and twist into threads; நீட்டு, extend, lengthen; ஆட்டு, சுற்று, திரி, whirl, twirl.—*vi.* நூல்நூல், make yarn or thread; சுற்று, சுழல், revolve, whirl. [AS.]

Spi′nal, *a.*முதுகெலும்பு சம்., pert. to the back-bone, vertebral. S. column=முதுகெலும்பு,வம்சம். S. cord=ஸுஷும்னா. [fr. Spine.]

Spin′dle, *n.* கதிர், வடிக்கதிர்,a slender rod by wh. the thread is twisted and wound in spinning; உருளையாய்த்திரியும் வஸ்துவின் மத்தியிருசு. [AS. *spindel*, lit. the instrument for spinning.]

Spine, *n.* முள், thorn; முதுகெலும்பு, முள்ளெலும்பு, கசேரு, backbone, vertebral column. [L. *spina*, a thorn: from its sharp projections.]

Spin′ner, *n.* நூல்நூற்போன், நூல் திரிப்போன், one who spins.

Spin′ning-wheel′, *n.* நூல்நூற்கும் ராட்டினம், a machine for spinning yarn or thread.

Spi′nous, *a.* முள்போன்ற, thorny.

Spin′ster, *n.* நூல்நூற்கும்ஸ்திரீ, நூல்நூற்பவள், a woman whose occupation is to spin; விவாகமில்லாதவள், கன்னி, an unmarried or single woman. [fr. Spin.]

Spin′y, *a.*முள்ளுள்ள, full of spines, thorny.

Spi′ral, *a.* சுழியுள்ள, புரியுள்ள, முறுக்குள்ள, winding and rising like the thread of a screw, helical. —*n.* சுழிரேகை. [fr. Spire.]

Spire, *n.* சுழல்போல் சுற்றச்சுற்ற மேலேபோவது; முனை, சிகரம், a tapering, conical or pyramidal form. [L. *spira*, coil.—AS.ori. 'a blade of grass.']

Spir′it, *n.* ஆத்துமா, soul; பிராணம், life; பேய், பிசாசம், ghost, specter, apparition, sprite, elf,fairy; தைரியம்,உற்சாகம்,courage,ardor, vivacity, enthusiasm,animation, fire; சக்தி, வீரியம், பலம், energy; சாரம்,உத்தேசிக்கப்பட்ட அர்த்தம், true meaning, intent; s-s, சாராயம், alcoholic or intoxicating liquor. Be in good s-s=சந்தோஷமாயிரு, உல்லாசமாயிரு. [L. *spiritus*, breath, *spirare*, to breathe.]

Spir′ited, *a.* சுறுசுறுப்புள்ள, உல்லாசமான, தைரியமுள்ள, full of spirit or fire, full of life or vigor, lively, animated, ardent, vivacious, active, mettlesome, high-mettled, fiery.

Spir′itless, *a.* சுறுசுறுப்பற்ற, உற்சாகமில்லாத, மந்தமான, தைரியமில்லாத, destitute of spirit, wanting life, animation or fire, wanting courage or cheerfulness; பிராணமில்லாத, lifeless, dead.

Spir′itual, *a.* ஆத்தும சம்., ஆத்மார்த்தமான, உலகத்திற்கு சம்பந்தமில்லாத, பரமார்த்தமான, pert. to the soul, not worldly or temporal; அசரீரமான, நிராகாரமான, ஆகாரமில்லாத, incorporeal, immaterial. [fr. Spirit.]

Spir′itualism, *n.* பிசாசங்கள் இருக்கிறதென்று நம்பிக்கை.

Spir′itualist, *n.* பிசாசங்கள் இருக்கிறதென்று நம்புகிறவன்.

Spir′itu-al′ity, *n.* அசரீரத்துவம், சரீரமின்மை; ஆத்மஞானம்.

Spir′ituous, *a.* சாராயம் சம்., வெறியுண்டாக்கும், alcoholic, intoxicating, ardent. [fr. Spirit.]

Spirt = Spurt.

Spir′y, *a.* கூரான, tapering; மறையாணிபோல் சுற்றிக்கொண்டு மேலுக்குபோகிற, spiral, curled, wreathed, serpentine. [fr. Spire.]

Spis′situde, *n.* தடிப்பு, களித்தன்மை. [L.]

Spit, *n.* துப்பல், உமிழ்நீர், வாய்நீர், spittle, saliva; முனை, இரும்புக்கோல், a pointed iron bar (on wh. meat is fixed to be roasted before a fire).—*vt.* & *vi.* துப்பு, உமிழ், eject or throw out (saliva or other matter) from the mouth; இரும்புக்கோல் குத்து; thrust a s. through, fix upon a s. [AS.]

Spit-box = Spittoon.

Spite, *n.* பகை, துவேஷம், விரோதம், ill-will, hatred, malice, grudge, rancor, pique. In s. of all his entreaties = அவன் எவ்வளவாய் வேண்டிக்கொண்டாலும் அதையெல்லாம் நிராகரித்து.—*vt.* பகை சாதி, வர்மம்வை, பகைதீர், show one's s. toward, injure or annoy out of malice. [abbre. fr. Despite.]

Spite′ful, *a.* பகையுள்ள, வன்மமுள்ள, filled with, or moved by, spite, malicious, malignant.

Spit′tle, *n.* துப்பல், உமிழ்நீர், வாய்நீர், எச்சில், spit, saliva. [fr. Spit.]

Spit-toon′, *n.* தம்பலப்படிக்கம், துப்பற்படிக்கம், spit-box. [fr. Spit.]

Splash, *n.* துள்ளி மேல்விழும் சேறு, சகதி மு.-து, water & dirt thrown or falling upon anything.—*vt.* சேறுசகதி மு.-து சிதறி மேல்விழும்படிசெய்.—*vi.* சேறு மு.-து துள்ளயடி, strike & dash about water, mud, &c., dash so as to spatter. plash. [a form of 'plash' with inten. pref. s.]

Splash′board′, *n.* சேறுசகதிதெறிக்காதபடி வண்டிக்குபோடும்பலகை.

Splash′y, *a.* சேறுசகதியுள்ள, full of dirty water.

Spleen, *n.* மண்ணீரல், the milt; கோபம், பகை, குரோதம், anger, malice, spite, ill humor. [L. & Gr.]

Splen'did, *a.* பிரகாசமுள்ள, பிரகாசமான, shining, very bright, brilliant; திவ்வியமான, கனமான, மேன்மையான, magnificent, grand, gorgeous, dazzling. [L., fr. *splendere,* to shine.]

Splen'dor,—our, *n.* பிரகாசம், காந்தி, தேஜசு, சோபை, வைபவம், தேசு, பிரபை, ஒளி, brightness, brilliancy, lustre, magnificence, grandeur, glory. [L.; see Splendid.]

Splen'etic, *a.* கோபியான, morose, sullen. [fr. Spleen.]

Splen'ic, *a.* மண்ணீரல் சம்., pert. to the spleen.

Splice, *vt.* கயிற்றோடு கயிறு சேர்த்துத்திரி, தொற்றவை, unite by interweaving the strands.—*n.* பற்று, a junction or joining made by splicing. [connected with 'split' the ends of the rope being split for splicing.]

Splint, }
Splin'ter, } *n.* சிராய், செலும்பு, சிறிவு, a thin flat piece of wood, sliver.—*vt.* உடை, பிள, split, sliver; சிராய்வைத்துக்கட்டு, fasten or confine with s-s. [nasalized form of 'split'.]

Split, *vt.* உடை, பிள, divide lengthwise, cleave, rive, rend, tear asunder.—*vi.* உடை, கிழி, be rent, part asunder, burst.—*n.* பிளப்பு, உடைவு, crack, rent, longitudinal fissure. [LG.]

Spo'gel, *n.* ஈசப்புகொல் என்றவிரை.

Spoil, *vt.* கெடு, பழுதாக்கு, அழி, destroy or impair the value of, injure, mar, vitiate, render useless; கொள்ளையிடு, சூறையிடு, plunder, strip by violence, rob, pillage; பலாத்காரமாய் எடுத்துக்கொள், take or seize by violence or force.—*vi.* கெடு, கெட்டுப்போ, lose useful qualities, be corrupted, decay.—*n.* கொள்ளை, சூறை, plundering, robbery; கொள்ளையிடப்பட்ட பொருள், கொள்ளையடித்த சாமான், booty, pillage, plunder. [F.; L. *spoliare,* to plunder.]

Spoilt, *pp.* of Spoil.

Spoke, *pt.* of Speak.—*n.* சக்கரத்தின் இலை, ஆர், வண்டிச்சிறகம்பு, the radius or ray of a wheel, one of the bars inserted in the hub or nave and supporting the rim or felly. [AS.; cog. Spike, Pike.]

Spo'ken, *pp.* of Speak.

Spokes'man, *n.* மற்றொருவருக்குபதிலாய்பேசுவோன், one who speaks for another or others.

Spo'liate, *vt.* & *vi.* கொள்ளையிடு, சூறையாடு, plunder, despoil. [see cog. Spoil.]

Spo'li-a'tion, *n.* கொள்ளையிடுகை, கொள்ளை, சூறை, plundering, robbery, despoliation. [fr. Spoliate.]

Sponge, *n.* கடற்பஞ்சு.—*vt.* கடற்பஞ்சால் துடை.—*vi.* உறிஞ்சு; இச்சகம் பேசி சம்பாதி. [OF. *esponge*; L. & Gr.]

Spon′ger, *n.* இச்சகம்பேசுவோன்; பரான்னபோஜி.

Spon′gy, *a.* மெதுவாயிருந்து துவாரங்களோடு நிறைந்திருக்கிற, soft and full of cavities; திரவங்களை உறிஞ்சும் குணமுள்ள; imbibing fluids.

Spon′sor, *n.* பிணையாளி, உத்தரவாதி, surety; கிறிஸ்தவர்களில் ஞானத்தகப்பன் அ-து ஞானத்தாய் என்று சொல்லப்படுவோர், a godfather or godmother. [L. *spondeo, sponsum,* to promise.]

Spon′ta-ne′ity, *n.* தனக்குத்தானே யாகுதல், internal impulse.

Spon-ta′neous, *a.* தனக்குத்தானே யாகிற, acting by internal impulse; சுவேச்சையாலான, voluntary, uncompelled. [L., fr. *sponte,* of free will.]

Spon-ta′neously, *adv.* தனக்குத்தானே, சுவேச்சையாய், by internal impulse, without external force or influence, of one's own inclination, of its or one's own accord.

Spool, *n.* நூல்சுற்றும்குச்சு, a piece of reed or a hollow cylinder of wood used to wind thread or yarn on.

Spoon, *n.* கரண்டி, அகப்பை, a small shallow bowl with a handle, used in serving or eating food. [AS.; G. ' a chip ': ori. a chip of wood for supping up liquids.]

Spoon′bill, *n.* ஒருவகைக்கொக்கு, [அகப்பை மூக்கன்.

Spoon′ful, *n.* கரண்டிகொண்ட அளவு, as much as, or the quantity wh., a spoon contains.

Spo-rad′ic, *a.* தனித்தனியாய், சம்பவிக்கிற (வியாதி), occurring singly or in scattered instances, single, isolated, separate, as, s. disease, in distinction from an epidemic. [Gr. ' dispersed ', fr. *speiro,* to sow, to scatter.]

Spore, *n.* சிலஜெந்துக்களின் அதிசூக்ஷமமான முட்டை. [Gr.]

Sport, *n.* ஆட்டம், விளையாட்டு, கிரீடை, கேளி, விநோதம், play, game, pastime, amusement, diversion, recreation; வேட்டை மு-து, fowling, hunting, & the like; பரிகாசம், கேலி, fun, pleasantry, derision, mockery; விளையாட்டுப் பொருள், play-thing, toy.—*vi.* விளையாடு, ஆடு, play, frolic, game; வேட்டை மு-து செய்; அலக்ஷியம் பண்ணு, make s. or jest, trifle. [abbre. of Disport.]

Sport′ful, *a.* விளையாடும், உல்லாசமுள்ள, merry, frolicsome.

Sport′ive, *a.* விளையாடும், உல்லாசமுள்ள, gay, frolicsome, merry, playful; பரிகாசமான, jocose. [fr. Sport.]

Sports′man, *n.* வேட்டைக்காரன், one skilled in hunting, shooting, & the like. [fr. Sport.]

Spot, *n.* புள்ளி, பொட்டு, கறை, மாசு, speck, blot; கொஞ்சஸ்தலம், இடம், a small extent of space, place; ஒருஸ்தலம், a particular place, a definitelocality; அபகீர்த்தி, தோஷம், களங்கம், a stain

(on character or reputation), blemish, reproach, disgrace. On the s.=தட்சணம், உடனே.—*vt.* புள்ளியிடு, புள்ளிபோடு, mark with spots, dot; அபகீர்த்தியுண்டாக்கு, stain, sully, taint, tarnish, blemish, disgrace. [Cog. Spit.]

Spot′less, *a.* புள்ளியில்லாத, மாசில்லாத, free from spots; களங்கமற்ற, தோஷமற்ற, unspotted, unblemished, blameless, pure, irreproachable, immaculate.

Spot′ted, Spot′ty, } *a.* புள்ளியுள்ள, marked with spots.

Spous′al, *a.* விவாக சம்., pert. to marriage.—*n.* விவாகம், marriage, espousal.

Spouse, *n.* மனையாட்டி; கணவன்; one joined in wedlock, a partner in marriage, wife or husband. [OF., fr. L. *sponsus*, betrothed, pp. of *spondere*, to promise.]

Spout, *n.* நீர்பாயுந் துவாரக்குழல், tube, pipe, conduit, nozzle; நீர் பீரிட்டுப்பாய்கை, a discharge or jet of water or other liquid.—*vt.* பீரிடப்பண்ணு, eject in a jet, pour out forcibly & copiously.—*vi.* பீரிடு, issue in a jet, burst forth in a stream, spurt, gush out.

Sprain, *n.* சுளுக்கு, a violent straining or twisting of the ligaments surrounding a joint.—*vt.* சுளுக்குப்பண்ணு, cause a s. in, overstrain. [OF.; L.; see cog. Express.]

Sprang, *pt.* of Spring.

Sprat, *n.* ஒருவகை சிறுமீன்.

Sprawl, *vi.* கால்கை அவலக்ஷணமாய் நீட்டிக்கொண்டுகிட, lie with the limbs stretched out carelessly & ungracefully.

Spray, *n.* [Da.] கிளை, a small branch, twig, shoot, sprig; [AS. 'to pour'.] மழை மு. வற்றின்றூறல், water dispersed or flying in small drops or particles.

Spread, *vt.* பரப்பு, விரி, extend, stretch, expand, open, unfurl; சிதறு, தெளி, scatter, disperse, strew; வியாபிக்கச்செய், விஸ்தரிக்கச்செய், diffuse, propagate, circulate, disseminate.—*vi.* வியாபி, விஸ்தரி, extend, expand; நீளு, be extended by drawing or beating; பிரசித்தமாகு, be made known; அனேகஜனங்களுக்கு வியாபி அ-து ஒட்டு, be propagated or diffused.—*n.* வியாபித்தல், expansion; விருத்தி, வியாபகம், propagation, diffusion; விசாலம், விஸ்தீர்ணம், extent. [AS.]

Sprig, *n.* சிறுகிளை, twig, shoot. [AS.]

Spright, *n.* பேய், பிசாசம், spirit, ghost, apparition, shade. [cont. & cor. of 'spirit'.]

Spright′ly, *a.* உல்லாசமான, உற்சாகமுள்ள, முயற்சியுள்ள, சுறுசுறுப்புள்ள, lively, brisk, animated, gay.

Spring, *n.* துள்ளு, குதி, குதிப்பு, leap, bound, jump; விசை, வில், an elastic contrivance yielding

under stress and recovering its normal form when the stress is removed; விசை, elastic power or force; வில்போல் பின்னுக்குத்து ள்ளல், a flying back, resilience; நீரூற்று, a natural fountain; மூலம், காரணம், origin, cause; வசந்தருது அ-து காலம், வசந்தம், the vernal season.—*vi.* துள்ளு, குதி, leap, bound, jump; பாய், start suddenly, issue with speed, dart, shoot; வில்போல்பின்னுக்கு த்துள்ளு, fly back; முளை, அங்குரி, shoot up, shoot forth, emerge, rise out of the ground; உண்டாகு, உற்பவி, result, issue, proceed, originate. [AS.] [noose.

Springe, *n.* கன்னி, பாசம், பொறி,

Spring'y, *a.* வில்போன்ற குணமுள்ள, having the properties of a spring, elastic.

Sprin'kle, *vt.* & *vi.* தூவு, தெளி, scatter in small drops or particles, strew, disperse; மேல்தெளி, scatter on, disperse something over, besprinkle.—*n.* தெளிக்கப் பட்டது, a small quantity scattered, a sprinkling. [AS., caus. of *springan*, to spring.]

Sprink'ling, *n.* தூவுதல், தெளிக்கை, a small quantity falling in drops; கொஞ்சம், a small number or quantity.

Sprit, *n.* சிறு தூலம், உத்தரம்.

Sprite, *n.* பேய், பிசாசம், goblin, elf, fairy.

Sprout, *n.* முளை, அங்குரம்.—*vi.* முளை, அங்குரி, germinate, shoot. [LG.]

Spruce, *a.* சொகுசான, சிங்காரமுள்ள, neat, trim. [fr. Spruce, Pruse, old name for Prussia: lit. 'after the Prussian style'.]

Sprung, *pt.* & *pp.* of Spring.

Spud, *n.* களைபறிக்குங்குறுங்கத்தி.

Spume, *n.* நுரை.—*vi.* நுரைகட்டு. froth, foam. [L., *spuma*, foam, fr. *spuo*, to spit out.] [foamy.

Spu'my, *a.* நுரையினால் மூடப்பட்ட,

Spun, *pt.* & *pp.* of Spin.

Spunge=Sponge. [ஓர்வகைமரம்.

Spunk, *n.* விரைவாய் தீப்பிடிக்கும்

Spur, *n.* குதிரைசவாரி செய்யும்போது குதிரைப்பக்கத்தில் உதைக்கும்குதிமுள், a pricking or goading instrument worn on a horseman's heel; கோழிக்காலின் பொர்முள், the spine on a cock's leg; உற்சாஹஹேது, ஏவல், incitement, incentive.—*vt.* முள்ளினால் குத்தி வேகமாய் செலுத்து, prick with a s., goad, urge or drive on; எழுப்பு, தூண்டு, ஏவு, உற்சாகப்படுத்து, incite, stimulate, impel, instigate. [AS. lit. 'to kick'. Cog. Spurn.]

Spurge, *n.* (Triangular—)மட்டைக்கள்ளி; (Indian—) இலைக்கள்ளி. [OF.; L. *ex*, out of+*purgo*, to purge: from being a purgative.]

Spu'rious, *a.* பொய்யான, இருத்திரமமான, கள்ளமான, கற்பிதமான, false, fictitious, not genuine, counterfeit. [L. 'bastard', *sperno*, to despise. Cog. Spurn.]

Spurn, *vt.* உதை, தள்ளு, kick; வெறு, விலக்கு, reject with disdain,

scorn to receive or accept.—*n.* உதைத்தல், kick; விலக்குகை, இகழுகை, disdainful rejection. [AS.]

Spurt, *vt.* குழாய்மு-வற்றிலிருந்து நீர்மு-து வேகமாய்பாயச்செய், தாரையாய்பாயச்செய், throw or force out in a stream or jet, squirt.—*vi.* தாரையாய்ப்பாய், come forth in a jet.— *n.* வேகமாய்ப்பாயும் தாரை, jet, gush, spirt.

Sput'ter, *vi.* & *vt.* வேகமாய்ப்பேசும்போது வாயிலிருந்து உமிழ்நீர்தூற்று, emit saliva from the mouth in rapid speaking; உமிழ்நீர்தூற்றும்படி விரைவாய்ப் பேசு; ஸ்பஷ்டமில்லாமல்பேசு, jabbor.—*n.* உமிழ்நீர் தூற்றல்.

Spy, *n.* வேவாள், உளவன், வேவுக்காரன், ஒற்றன், சாரணன், emissary, scout.— *vt.* & *vi.* பார், கண்டுகொள்; வேவுபார், உளவுபார்; உசாவு, see, espy, discover. [OF.; allied to L. *specio*, I see.]

Spy'-glass', *n.* சிறு தூரதரிசனி, a small telescope.

Squab, *a.* ஸ்தூலமான, fat, plump. —*n.* ஸ்தூலமான குள்ளன்; தடிப்பமான பஞ்சுமெத்தை.

Squab'ble, *n.* சண்டை, குழப்பம்.—*vi.* சண்டைபிடி, வாதாடு, scuffle, wrangle, brawl, quarrel, dispute. [Sw.]

Squad, *n.* சேனையின் சிறு வகுப்பு, a small detachment of troops. [abbre. of Squadron.]

Squad'ron, *n.* சதுரவியூஹம், a body of troops drawn up in a square; சுமார் இருநூர் குதிரைப் பட்டாளம்; ஒரு வேலைக்கு அனுப்பப்படும் கப்பற்கூட்டம், a detachment of vessels employed on any particular service. [OF.; L. *ex* + *quadra*, a square.]

Squal'id, *a.* அழுக்கான, அஸஹ்யமான, dirty, filthy, foul. [L.]

Squa-lid'ity, *n.* அழுக்காயிருத்தல், foulness, filthiness.

Squall, *n.* கதறுகை, கூவல், a loud scream; காற்றுமழை, a sudden and violent gust of wind (often) attended with rain.—*vi.* கதறு, கத்து, கூச்சிடு, cry out. [Imi.]

Squal'or, *n.* அழுக்குடைமை.

Squan'der, *vt.* விருதாவாய்ச் செலவழி, waste, lavish, dissipate. [AS.]

Square, *n.* சதுரம், சதுட்கம், a plane rectilineal figure of four equal sides and equal angles; சதுரமாய் ஏற்பாடு செய்யப்பட்ட வீடுகளின் கூட்டம், a number of houses built in the form of a square; நேர்கோணமறிகருவி, an instrument for testing or describing right angles; சதுரவியூஹம், squadron; வர்க்கம், வர்க்கராசி, ஒருஎண்ணை அதுடன் பெருக்கினல் வரும் மொத்தம்; பொருத்தம், இணக்கம், harmony, agreement, equality.—*a.* நாலு சமகோணங்களும் பக்கங்களுமுள்ள; பொருந்திய, இசைந்த, exactly suitable or correspondent; நியாயமான, just. S. measure = சதுரஅளவு, வர்க்கமானம். S. root = வர்க்கமூலம். —*vt.* சதுரம்பண்ணு, make s.;

வர்க்கி, ஒரு எண்ணை அதுடன் பெருக்கு; இசையச்செய், திருத்தி சரிப்படுத்து, adjust, regulate, fit. —*vi.* தகு, இசை, பொருந்து, suit, fit, accord or agree exactly, be consistent (with). [OF.; L. *ex* + *quadra*, a square. fr. *quatuor*, four.] [—*vt.* நசுக்கு, கசக்கு.

Squash, *n.* மெதுவானது, மொத்தை.

Squat, *vi.* தரையிலுட்காரு, குந்தியிரு, sit close to the ground, sit down upon the hams or heels.—*n.* குந்தியிருத்தல், a squatting posture or position.—*a.* குந்தியிருக்கிற, squatting; குட்டையும் தடிப்புமுள்ள. [OF.]

Squeak, *vi.* கீச்சிடு.—*n.* கீச்சென்னும் சத்தம். creak.

Squeal, *vi.* கீச்சென்று தீர்க்கமாய் சத்தமிடு.—*n.* கீச்சென்ற தீர்க்க சத்தம்.

Squeam′ish, *a.* வெறுக்கிற, குமட்டுள்ள, qualmish; சுலபமாய் இஷ்டப்படாத, fastidious, overnice. [AS. lit. 'a swimming or giddiness'.]

Squeeze, *vt.* நெருக்கு, அமுக்கு, press bet. two bodies, press together closely, compress; நசுக்கு, கசக்கு, grasp or clasp closely; பிழி, பிதுக்கு, express.—*vi.* கூட்டத்து நெருக்கிக்கொண்டு போகு. [AS.]

Squib, *n.* பட்டாசு; வையாண்டி, பரிகாசம், a sarcastic speech.

Squill, *n.* (Indian-) நரிவெங்காயம்.

Squint, *a.* வாக்குக்கண்ணுள்ள, ஓரக்கண்ணுள்ள, வக்கிரதிர்ஷ்டியுள்ள, looking obliquely or askance, cross-eyed.—*vi.* வாக்குக்கண்ணாய் பார், சரிவாய்ப்பார், look asquint or awry.—*vt.* (கண்ணை) ஓரக்கண்ணுப்போல் செய், direct obliquely.—*n.* வாக்குக்கண், வக்கிரதிர்ஷ்டி சரிவான பார்வை, ஓரக்கண், oblique look, a want of coincidence of the axes of the eyes. [Du. 'sloping.']

Squint′-eyed, *a.* வாக்குக்கண்ணுள்ள, வக்கிரதிர்ஷ்டியுள்ள, சரிவாய்பார்க்கிற, having eyes with axes not coincident, cross-eyed.

Squire, *n.* ஒரு சூரனிடத்தில் கேடகமும் கவசமும் பிடித்துக்கொண்டிருப்போன், an attendant on a knight, a knight's shield-bearer or armor-bearer. [cont. of Esquire.]

Squir′rel, *n.* அணில், அணிற்பிள்ளை. [OF. & L.; Gr. *skia*, shadow + *oura*, tail.; 'shadow-tail'.]

Squirt, *vt.* பீர்ச்சு, பீரிடச்செய், spurt, spirt.—*n.* பீச்சாங்குழல், syringe; நீர் பீரிட்டுப்பாய்கை, பலமாய்போகும் சிறுதாரை, jet.

Stab, *vt.* கூரான ஆயுதத்தினால் குத்து, pierce with a pointed weapon; குத்திக்கொல், kill by the thrust of a pointed weapon. —*n.* கூரான ஆயுதத்தினால் குத்து, the thrust of a pointed weapon. [allied to 'staff.']

Sta-bil′ity, *n.* உறுதி, உறுதிப்பாடு, ஸ்திரம், stableness, steadiness, firmness, immovability; சஞ்சலமின்மை, constancy. [fr. Stable.]

Sta′ble, *a.* நிலையான, ஸ்திரமான,

அசையாத, firm, fixed, immovable, steady; நிச்சலமான, நிடசித்தமுள்ள, constant, steady.—*n.* லாயம், மிருகங்களின் சாலை, a building with stalls for beasts to lodge & feed in.—*vt.* லாயத்திலடை, put into a s., lodge in a s.. [L. *stabilis*, fr. *sto*, I stand.]

Stack, *n.* (வைக்கோல் மு.வற்றின்) போர், பட்டடை, குவி.—*vt.* போர்வை அ-து அடுக்கு, குவி, போர்போடு, make into a large pile. rick. [Da.]

Staff, *n.* கோல், தண்டம், stick, pole; அதிகாரக்கோல் அ-து தண்டம், a pole, stick, or wand, borne as an ensign of authority, a badge of office; உத்தியோகஸ்தர்கூட்டம் அ-து சமுதாயம், a body of assistants, a corps of executive officers. [AS.]

Stag, *n.* கலைமான், ஆண்மான், the male red deer. [AS.; G. 'to mount': lit. the mounter.]

Stage, *n.* நாடகசாலை, அபிநயசாலை, அரங்கம், theatre, play-house; சாரம், scaffold; அஞ்சல், a place of rest on a journey, a station, a place appointed for a relay of horses &c.; தசை, நிலைமை, அவஸ்தை, அந்தஸ்து, a degree of advancement, step. [OF.; L. *stare*, to stand. Cog. State, Station.]

Stage′-coach′, *n.* அஞ்சல்வண்டி, தபால்வண்டி, a coach that runs regularly from one place to another.

Stage′-play′, *n.* நாடகம், கூத்து.

Stage′-play′er, *n.* நாடகன், கூத்தாடி, an actor on the stage.

Sta′ger, *n.* நீர்க்கானுபவமுள்ளவன். [lit. one who has acted long on the stage of life.]

Stag′ger, *vi.* தடுமாறு, தள்ளாடு, தளர்ந்துநட, reel, totter; தைரியம் கெடு, சமுசயி, தளம்பு, become less confident or determined, doubt, waver, hesitate.-*vt.* ஆடச்செய், ஆட்டு; தைரியத்தைக்கெடு, சமுசயிக்கச்செய்; cause to totter or waver.

Stag′geringly, *adv.* தள்ளாடித்தள்ளாடி, தடுமாற்றமாய், with a staggering gait.

Stag′nancy, *n.* நீர்தங்கல், அசைவின்மை, நீர்பாய்ச்சலின்மை, a stagnant condition, stagnation; மந்தம், dullness. [fr. Stagnant.]

Stag′nant, *a.* (நீர்) பிரவஹியாமலிருக்கிற, அசைவற்ற, not flowing or running, motionless, still, standing; மந்தமான, dull. [L.; see Stagnate.]

Stag′nate, *vi.* பிரவஹியாமலிரு, அசைவற்றிரு, be stangnant, cease to flow, be motionless or still. [L. *stagno*, *stagnatum*.]

Stag-na′tion, *n.* பிரவஹியாமலிற்கை, நீர்தங்கல், a stagnant condition, stagnancy. [fr. Stagnate.]

Staid, *pt.* & *pp.* of Stay.—*a.* ஸ்திரமான, சொஸ்தபுத்தியுள்ள, சாந்தமான, அமைதியுள்ள, steady, sedate, sober.

Stain, *n.* மாசு, கறை, களங்கம், அழுக்கு, spot, blot, blemish, taint, pollution; நிந்தை, அபகீர்த்தி, தோஷம், reproach, disgrace, shame, infamy.—*vt.* கறைபடுத்து, மாசுபடுத்து, களங்கமுண்டாக்கு, spot, blot, soil, sully; சாயம்போடு, சாயந்தோய், சாயமிடு, color, dye; அபகீர்த்தி அ-து பாவம் உண்டாக்கு, bring reproach on, blot, tarnish, spot with guilt or infamy. [abbre. of 'distain'.]

Stain'less, *a.* கறையில்லாத, மாசற்ற, அகளங்கமான, நிஷ்களங்கமான, spotless; தோஷமில்லாத, தோஷமற்ற, பாவமில்லாத, blameless, faultless, immaculate.

Stair, *n.* படி, சோபானம், a step; படிக்கட்டு, a series of steps. A flight of s.s = படிக்கட்டு. Up s-s = மெத்தை வீட்டில் அ-து மெத்தைமேல். [AS. *staeger*, fr. G. *steigen*, to mount: lit. that by wh. one mounts.]

Stair'-case', *n.* படிக்கட்டு, a flight of stairs with their supporting frame work.

Stake, *n.* கூர்ச்சு, முளை, a stick sharpened at one end and set in the ground; கழுமரம், a post to wh. a person is bound to be burned alive; பந்தயம், ஒட்டம், that wh. is staked, something hazarded, wager, pledge. At s.= அபாய ஸ்திதியிலிருக்கிற, in danger.—*vt.* முளை நாட்டு; பந்தயம் போடு, பந்தயம்வை, wager, bet; அபாயத்திலவை, risk, venture. [AS.]

Stale, *a.* ஊசின, பழுதான, சாரமற்ற, vapid or tasteless from age, having lost its life, spirit and flavor from standing or being kept long; புதிதல்லாத, பழமையான, not new or fresh; விசேஷமில்லாத, சாமானிய, விந்தையல்லாத, trite, common. [allied to 'Stall': from standing long.]

Stalk, *n.* காம்பு, தாள், pedicle, peduncle; தண்டு, கால், stem.—*vi.* மேட்டிமையாய்நட, walk with high and proud steps. [Da.]

Stall, *n.* கொட்டில், தொழுவம், கொட்டகம், a division or compartment of a stable for one animal; லாயம், stable; கடை, a small apartment or booth where merchandise is exposed for sale. —*vt.* லாயத்திலடை, put into a s. or stable, keep in a s. or s-s. [AS.]

Stal'lion, *n.* விரையடியாதகுதிரை, an uncastrated male horse (kept for breeding). [OF. lit. 'a horse kept in the stall'.]

Stal'wart, Stal'worth, } *a.* பலமும் சாகசமும் உள்ள, பராக்கிரமமுள்ள, strong or sturdy & brave. [AS. lit. 'worthy of stall or place'.]

Sta'men, *n.* அல்லி, கர்ணிகை, அல்லித்தாள், பூந்தாது, the male organ of flowers that furnishes the pollen or fecundating dust; காம்பு, தண்டு; ஆதாரம், பலம். [L.'the warp of a web', 'thread', fr. *sta*, to stand.]

Sta′mens, } *n., pl.* of Stamen.
Stam′ina, }

Stam′mer, *vi.* & *vt.* திக்கிப்பேசு, நாக்குத்தட்டிப்பேசு, கொன்னிப்பேசு.—*n.* திக்கிப்பேச்சு, கொன்னல். stutter. [AS. freq. 'speaking with difficulty'.]

Stamp, *n.* முத்திரை, an instrument for making impressions or marks, an engraved block, die; அடையாளம், mark; முத்திரையிடுதல், அச்சுபோடுதல், impressing, marking; முத்திரைகாகிதம், a stamped paper; சுபாவம், குணம், nature, character, cast.—*vt.* முத்திரையிடு, அடையாளம் போடு, impress with a mark, figure, &c.; பதி, impress, imprint; (நிலத்தை) உதை, strike (the ground) with the bottom of the foot; நிலத்தின்மேல் (கால்) பலத்துடன் வை, bring down (the foot) forcibly on the ground.—*vi.* நிலத்தையுதை, strike the foot forcibly upon the ground. [LG.]

Stanch, *vt.* ஒழுகும் இரத்தம் மு.வற்றைதடு, அடை, stop or check the flow of.—*a.*=Staunch. [OF., fr. L.*stagnare*, to make stagnant.]

Stand, *vi.* நில், be at rest in an erect or upright position; இரு, பொறு, கெடாமலிரு, அதிககாலமிரு, last, endure, continue or remain without injury or impairment; தோற்றுபோகாமல் நில், maintain one's ground, not to yield or fail. S. to=விடாமலிரு. S. up=எழுந்துநில்.—*vt.* சஹி, பொறு, தாங்கு, endure, sustain, bear; உட்படாமலிரு, withstand, resist.—*n.* நிற்கை, halt, stop; எதிர்த்துநிற்கை, standing firmly for the purpose of resistance or opposition; வண்டிகள் மு-வை நிற்கும் இடம், a place where carriages &c stand; வசதியான இடம் அ-து ஸ்தலம், a convenient place; ஏதேனும் வஸ்துக்களிடும் சட்டம், a rack or frame on wh. articles may be put for support. [AS.; L. *sto*; Sk. *stha*.]

Stand′ard, *n.* துவஜம், கொடி, விருதுக்கொடி, flag, banner, ensign; ராசாங்கத்தினால் நிருணயிக்கப்பட்ட அளவு, பரிமாணம், any measure of extent, quantity, quality or value, established by law or government; பிரமாணம், திட்டம், பரிசைக்ஷ, criterion, test; மாதிரி, model; தரம், வகுப்பு, grade, class.—*a.* பிரமாணமான, அளவான, serving as a s.; ஸ்திரமான, சாசுவதமான, of permanent value. [OF.; L. 'extend.']

Stand′ard-bear′er, *n.* துவஜதாரி, கொடிபிடிப்போன், ensign-bearer, ensign.

Stand′er-by′, *n.* கிட்டப்பார்த்துக்கொண்டு நிற்கிறவன், by-stander.

Stand′ing, *pa.* ஸ்திரமான, சாசுவதமான, lasting, permanent; அசையாத, பிரவஹியாத, not flowing, stagnant; நட்டமாய்நிற்கிற, remaining erect or upright.—*n.* நட்டமாய் நிற்கை, remaining

erect; இருக்கை, நிலையாயிருத்தல், lasting, continuance; நிற்கும் ஸ்தலம், place to stand in; சாசுவதம், permanence; ஸ்தானம், அந்தஸ்து, ஸ்திதி, condition or position in society, rank, grade, reputation, repute.

Stand′ish, *n.* எழுத்துமுஸ்திதுவை க்கும் தட்டம், a stand or case for pen and ink. [stand + dish.]

Stand′point′, *n.* ஒரு வஸ்துவை பார்ப்பதற்கு நிற்கும்ஸ்தலம், a position from wh.an object is viewed or regarded; ஒருவிஷயத்தை ஆலோசிக்கும் விதம், a position or point of view from wh.a matter or subject is considered. ['a fixed point or station'.]

Stand′still′, *n.* நிற்கை, அசையாமை, a stop, a complete pause, cessation of motion or action, halt. ['a standing at rest'.]

Stan′za, *n.* சுலோகம், பாட்டு, கவி, பத்தியம், a number of lines or verses forming a division of a poem, containing every variety of measure in that poem. [It., fr. L. *stans, stantis,* pr. p. of *sto,* to stand.] [மபு.

Sta′pes, *n.* காதுக்குள்ளிருக்கும் எலு

Sta′ple, *n.* ஒருதேசத்தின் முக்கிய சரக்கு, the principal commodity or production of a country; பிரதானமான வர்த்தகவஸ்து, a well-established article of trade or commerce; இரும்புக்கொக்கி, அள்ளு, a U-shaped piece of metal driven into or fixed in wood. —*a.* முக்கிய, பிரதான, வாடிக்கையான, principal, chief. [AS.]

Sta′pler, *n.* முக்கியசரக்குவிற்கும் வர்த்தகன், a dealer in staple goods.

Star, *n.* நட்சத்திரம், தாரகை, a celestial body so distant as to appear like a luminous point; நக்ஷத்திராகார அடையாளம், asterisk; ஒருவனுடைய கிரகஸ்திதி, a planet, or a configuration of the planets, considered as influencing one's fortune or destiny. [AS.; cog.L.*stella, astrum,* Sk. *tara.*]

Ten'der-heart'ed, *a.* உருகுநெஞ்சுள்ள, நெஞ்சிரக்கமுள்ள, குழைந்தமனதுள்ளவனான, compassionate, sensitive, affectionate.

Ten'derly, *adv.* மிருதுவாய், தயவாய், நோவுண்டாக்காமல், gently, mildly, softly, kindly.

Ten'derness, *n.* சொய்மை, மிருது, சுகுமாரம், delicacy, softness; இளமை, youth; தயை, தயவு, kindness.

Ten′don, *n.* தசைநாரையும் எலும்பையும் சேர்க்கும் கயிறுபோன்ற நரம்பு, ஸ்நாயுபந்தனம், sinew. [F., fr. L. *tendere*, to stretch.]

Ten′dril, *n.* வேறொன்றின்மேல் சுற்றும் படர்கொடி. [OF.; F. *tendre*, tender.]

Ten′ement, *n.* வாசஸ்தலம், வீடு, house, dwelling, abode, habitation; குடிக்கூலிவீடு; குடியானவன் எடுத்துக்கொண்டபூமி. [OF., fr. L. *tenere*, to hold.]

Ten′et, *n.* அபிப்பிராயம், மதம், சித்தாந்தம், principle, doctrine, dogma, opinion, position. [L. *tenet*, he holds, *tenere*, to hold.]

Ten′nis, *n.* ஒருவிதபந்தாட்டம். [F. *tenez*, take it, a word used by the French when the ball is struck; L. *tenere*, to hold.]

Tennis-court, *n.* பந்தாடும்இடம்.

Ten′on, *n.* இரண்டுமரங்கள் சேர்ப்பதில் ஒன்றின் நுனியில் செதுக்கும் கழுந்து. [F., fr. L. *tenere*, to hold.]

Ten′or, *n.* குணம், சுபாவம், தன்மை, character, nature; அபிப்பிராயம், முக்கியஉத்தேசம், தாற்பரியம், drift, meaning, intent, purport; போக்கு, ரீதி, ஒழுங்கு, நடை, tendency, course. [L. 'a holding on', 'course', *tenere*, to hold.]

Tense, *n.* (இலக்கணத்தில்) வினையின் காலம், the modification of a verb for the indication of time.—*a.* இறுக்கமான, பிகுவான, stretched tight, not lax, rigid. [OF.; F. *temps*, L. *tempus*, time.—L. *tensus*, stretched, fr. *tendere*.]

Ten′sion, *n.* இழுத்தல், stretching; இழுக்கப்பட்டிருத்தல், stretched condition; இறுக்கம், பிகுவு, tightness, strain. [L. *tensio*, fr. *tendere*, to stretch.]

Tent, *n.* கூடாரம், pavilion.—*vi.* கூடாரம்போடு, கூடாரத்திலிரு, pitch a t., encamp in t-s.—*vt.* கூடாரம் போட்டு மூடு, cover with a t.. [F. *tente*, lit. something stretched out or extended; L. *tendere*, to stretch.]

Ten′tative, *a.* பிரயத்தனித்துப்பார்க்கிற, experimental.—*n.* பிரயத்தனம், பரிசோதனை, எப்படியாமோவென்று செய்துபார்த்தல், trial, experiment. [L. *tentare*, to try.]

Tenth, *a.* & *n.* பத்தாம், பத்தாவதான; பத்தாவது; பத்தாம்பாகம்.

Te-nu′ity, *n.* நொய்மை, மென்மை, சன்னம், thinness; திரவத்துவம், rarity.

Ten′uous, *a.* நொய்மையான, மெல்லிய, சன்னமான, thin; திரவமான, rare, not dense. [L. *tenuis*, thin.]

Ten′ure, *n.* சுவாதீனம், அநுபவம்; சுவாமியம், ஆட்சி; வைத்துசெய்துகொண்டஉடன் படிக்கை; holding. [F., fr. L. *tenere*, to hold.]

Tep′efy, *vt.* & *vi.* கொஞ்சம் அனலாக்கு அ-து அனலாகு, make or become tepid.

Tep′id, *a.* கொஞ்சம் அனலான, இளஞ்சூடான, மென்சூடான, moderately warm, lukewarm. [L. *tepidus*, fr. *tepere*, to be warm; akin to Sk. *tap*, to be warm, *tapas*, heat.]

Te-pid'ity, Tep'idness, Te'por, n. இளஞ்சூடு, சிற்றனல், moderate warmth, lukewarmness, gentle heat.

Term, n. வார்த்தை, பதம், word, expression; நிர்ணயக்காலம், கெடு, any limited time, period, a proscribed duration; காரியநிருவாகக்காலம், வேலை நடத்துங்காலம், a period or time of work or business; எல்லை, பரியந்தம், அவதி, கடை, limit, extremity, bound, boundary; உறுப்பு, a member of a compound quantity; t-s, உடம்படிக்கையில்இருபக்ஷத்தாரும் சம்மதிக்கும் நிபந்தனைகள், ஷரத்துகள் அ-து ஏற்பாடுகள், conditions, stipulations. Be on good t-s = சிநேகமாயிரு, சிநேகிதனாயிரு. Come to t-s = சமாதானப்படு.—vt. சொல், பெயரிடு, நாமங்கொடு, name, call, denominate, designate. [F. *terme*, end, word, period, fr. L. *terminus*, a boundary.]

Ter'magant, n. சண்டைக்காரி, shrew, a boisterous, brawling, turbulent woman, virago.—a. சண்டைபிடிக்கிற, boisterous, turbulent, quarrelsome, scolding, vixenish, shrewish. [OF. & It.]

Ter'minable, a. முடிக்கத்தக்க, தீர்க்கத்தக்க, which may be terminated.

Ter'minal, a. கடைசியான, முடிவிலிருக்கிற, கடைசி சம்., forming the end or extremity, pert. to the end.—n. கடைசி, இறுதி, முடிவு, end, extremity, termination.

Ter'minate, vt. முடி, தீர், சமாப்திசெய், நிறுத்திப்போடு.—vi. முடிவுக்குவா, முடி, சமாப்தியடை, நின்றுபோ. end, close, stop. [see Term.]

Ter'mi-na'tion, n. கடைசி, முடிவு, அந்தம், end, extremity; முடித்தல், சமாப்தி, completion; அந்தம், பலம், result, conclusion. [see Term.]

Ter'mi-nol'ogy, n. பரிபாஷை, nomenclature, technical terms, the terms used in any science &c.

Ter'minus, n. அந்தம், கடைசி, எல்லை, end, boundary, limit. [L.]

Ter'nary, a. மும்மூன்றுள்ள, proceeding by threes; மூன்றுள்ள, consisting of three.—n. மூன்று, three things taken together, triad. [L.]

Ter'ra, n. பூமி, the earth; மண், earth. [L.]

Ter'race, n. உன்னதமாயும் சமமாயுமிருக்கும்ஸ்தலம், உப்பரிகை, a raised level space; மேல்தளம், மெத்தை, a flat roof of a house. [F., fr. L. *terra*, earth.]

Ter-ra'queous, a. நீரும் நிலமும் சேர்ந்துள்ள, consisting of land and water.

Ter-rene', Ter-res'trial, a. பூகோள சம்.; இகலோக சம்.; earthly.

Ter'rible, a. பயங்கரமான, கோர

மான, உக்கிரமான, fearful, frightful, terrific, dreadful, horrible, awful, formidable, shocking; அதி, மஹா, excessive. [F., fr. L. *terrere*, to frighten.]

Ter′ribly, *adv.* பயங்கரமாய், உக்கிரமாய்; மிகவும்.

Ter′rier, *n.* தைரியமுள்ள ஒருஜாதி சிறுநாய், a small and courageous variety of dog. [F. 'a burrow', lit. 'burrow-dog', following animals into their burrows.]

Ter-rif′ic, *a.* பயங்கரமான, கோரமான, causing terror, terrible. [see Terrify.]

Ter′rify, *vt.* பயப்படுத்து, வெருட்டு, strike with terror or fear, frighten, alarm. [L. *terrere*, to frighten + *facere*, to make.]

Ter-rig′enous = Earth-born.

Ter′ri-to′rial, *a.* பூமி அ-து நிலம் சம்., pert. to territory or land.

Ter′ritory, *n.* தேசம், பூமி, a tract of land, country, region, district; ராஜ்ஜியம், சமஸ்தானம், dominion. [L., fr. *terra*, earth.]

Ter′ror, *n.* பயம், திகில், extreme fear, dread, fright, alarm; பயக்காரணம், பயத்திற்கு ஏது, cause of fear. [L., fr. *terrere*, to frighten; akin to Sk. *tras*, to tremble.]

Terse, *a.* சங்க்ஷேபமான, சுருக்கமான, short and pointed, pithy, brief. compact, concise, laconic. [L. *tersus*, rubbed or wiped clean, *tergere*, to rub.] [மாய், நன்றாய்.

Terse′ly, *adv.* சங்க்ஷேபமாய், சுருக்க

Ter′tian, *a.* மூன்று நாளுக்கொரு முறை வருகிற. [L., fr. *tertius*, the third.]

Ter′tiary, *a.* மூன்றும், மூன்றுவதான, third. [see Tertian.]

Tes′se-la′ted, } *a.* பலவர்ணச்சதுரக்கோடுள்ள, சதுரங்க அறையாய் வர்ணம்போட்ட, inlaid, mosaic. [L. *tessella*, dim. of *tessera*, a square.]
Tes′sel-la′ted, }

Test, *n.* பரீக்ஷை, சோதனை, examination, trial; உரைகல், touchstone; மாதிரி, பிரமாணம், standard, criterion; நிதரிசனம், ருசு, means of trial, proof, experiment.—*vt.* பரீக்ஷி, சோதி, try, examine, put to the proof. [OF., fr. L. *testum*, an earthen vessel.]

Tes-ta′ceous, *a.* ஓடுள்ள, ஓட்டுகுரிய, having a hard shell, shelly. [L. *testa*, a shell.]

Tes′tament, *n.* மரணசாச (or த)னம், a will; கிறிஸ்தவர்களின் வேதபுஸ் என்றகிரந்தத்தில்ஒருபாகம், either of the two divisions of the Bible. [L., fr. *testis*, a witness.]

Tes′ta-men′tary, *a.* மரணசாசனசம்.; மரணசாசனத்தினால் நிர்ணயிக்கப்பட்ட அ-து கொடுக்கப்பட்ட, pert. to, appointed by, founded on, bequeathed or given by, a testament or will.

Tes′tate, *n.* மரணசாசனமெழுதி இறந்துபோனவன்.—*a.* மரணசாசனமெழுதிவைத்த, having made & left a will.

Tes-ta′tor, *n.* மரணசாசனமெழுதி இறந்துபோனவன், a man who

makes & leaves a will at death. [L., fr. *testari*, to make one's last will.]

Tes-ta′trix′, *n.* மரணசாசன மெழுதி இறந்துபோன ஸ்திரீ, a woman who makes and leaves a will at death.

Tes′ticle, *n.* பீசம், அண்டம், விதை, one of the glands wh. secrete the semen in males, a testis. [L. *testiculus*, dim. of *testis*, a t.]

Tes′tifi-ca′tion, *n.* சாக்ஷிசொல்லல், பிரமாணப்பூர்வமாய் தெரிவித்தல், testifying, giving testimony or evidence.

Tes′tify, *vi.* & *vt.* சாக்ஷிசொல், பிரமாணஞ்செய்துதெரியச்செய், give or bear testimony or evidence (to), attest (*t.*). [L. *testis*, a witness + *facere*, to make.]

Tes′ti-mo′nial, *n.* யோக்கியதாப்பத்திரம், யோக்கியதாப் பிரமாணம், certificate. [see Testimony.]

Test′timony, *n.* சாக்ஷியம், திருஷ்டாந்தம், பிரமாணம், ருசு, proof, evidence. [L., fr. *testis*, a witness.]

Tes′tis, *n.* (*pl.* Testes.) = Testicle.

Test-tube, *n.* கண்ணாடிக்குழாய், கண்ணாடிமூசை, a thin glass tube used in making chemical tests.

Tes′ty, *a.* வெடுவெடுப்பான, கோபியான, irritable, peevish, fretful. [OF. 'headstrong', fr. *teste*, the head.]

Tet′anus, *n.* இழுப்புவாயு, தனுர்வாயு, a disease characterized by a violent and rigid spasm of the voluntary muscles. [Gr., fr. *teino*, to stretch.]

Tetch′y = Techy.

Teth′er, *n.* மிருகங்கள் கழுத்திற்கட்டும் கயிறு, தாமணி, தாம்பு, a rope by wh. an animal is fastened.—*vt.* கயிறுகட்டு, fasten or confine with a t. [Ic.]

Tet′rad, *n.* நாலு, சதுஷ்கம், a collection of four things, quaternion. [Gr.]

Tet′ragon, *n.* சதுஷ்கோணம், quadrangle. [Gr. *tetra*, four + *gonia*, angle.] [quadrangular.

Te-trag′onal, *a.* சதுஷ்கோணமான,

Tet′ra-he′dron, *n.* நாலுதிரிபுஜங்களினால் செய்யப்படும் கனாகிருதி, a solid figure bounded by four triangles. [Gr. *tetra*, four + *hedra*, a base.]

Te-tram′eter, *n.* நாற் சீரடி, நாலடிச்செய்யுள், a verse or line of four measures. [Gr. *tetra*, four + *metron*, measure.]

Te-tras′tich, *n.* நாலடிப்பா, a stanza of four verses or lines. [Gr. *tetra*, four + *stichos*, verse.]

Tet′ra-syl′lable, *n.* நாலசைப்பதம், quadrisyllable.

Tet′ter, *n.* கரப்பன், தேமல், படர்தாமரை, herpes.

Text, *n.* மூலக்கிரந்தம், வியாக்கியானத்திற்கு மூலமான கிரந்தம், a discourse, work or composition on wh. a commentary or notes are written; வாக்கியம், சூத்திரம், a verse or passage (of Scripture); விஷயம், subject, topic, theme.

[F., fr. L. *textus*, texture, *texere*, *textum*, to weave, compose.]

Text'-book, *n.* மூலகிரந்தம், பாடப் புஸ்தகம், a manual of instruction, school-book.

Text'-hand', *n.* குண்டெழுத்து, பெரிய அக்ஷரமெழுதும் கையெழுத்து, a large hand in writing.

Tex'tile, *a.* நெய்யப்பட்ட, பின்னப்பட்ட, woven; பின்னல் சம்., pert. to weaving. [L., fr. *texere*, to weave.]

Tex'tual, *a.* மூலகிரந்தம் சம்., மூலகிரந்தத்திலுள்ள, pert. to or contained in the text. [fr. Text.]

Tex'ture, *n.* நெசவு, பின்னல், weaving; நெசவு வேலை, woven fabric; நெய்த நூலின்விதம் அ-து நெருக்கம், the disposition or closeness of threads in a fabric. [L., fr. *texere*, *textum*, to weave.]

Than, *conj.* பார்க்கிலும், காட்டிலும், இல், விட. [ori. same as 'then'.]

Thank, *vt.* உபகாரம்செய்தவனுக்கு நன்றிசெலுத்து, வந்தனம் செய், express gratitude or obligation to, give thanks to, make acknowledgments to.—*n.* (generally used in the *pl.*) நன்றிசெலுத்தல், வந்தனம், an expression of gratitude or obligation, an acknowledgment of a favor or kindness received. [AS. ori. 'a thought', 'a thinking'. Cog. Think.]

Thank'ful, *a.* நன்றியறிதலுள்ள, அடைந்த நன்றியைநினைக்கிற, grateful. [fr. Thayk.]

Thank'less, *a.* நன்றியறிதலற்ற, நன்றிகெட்ட, ungrateful, unthankful.

Thanks'giv'ing, *n.* நன்றிசெலுத்தல், உபகாரஸ்துதி, வந்தனம், rendering thanks, expression of gratitude.

Thank'-wor'thy, *a.* நன்றிக்குப் பாத்திரமான, வந்தனருகமான, நன்றியறிதல் காட்டத்தக்க, deserving thanks, worthy of gratitude.

That, *pron.* அது.—*a.* அந்த.—*conj.* என்று. He says t. it is a good book = அவன் அது நல்ல புஸ்தகமென்றுசொல்லுகிறான்.—*rel. pron.* The king t. rules well = நன்றாய் அரசாளுகிற அரசன்.

Thatch, *n.* வீடுவேயும்புல் மு-து, கூரைபோடும்விழல் மு-து, straw &c. used for making or covering the roofs of buildings.—*vt.* புல் முதலானவற்றால் வீடுவேய் அ-து கூரையிடு, cover with straw or with a roof of straw &c.

Thatched, *pa.* புல்மு-வற்றால் வேய்ந்த அ-து கூரைபோட்ட, covered with straw &c.. [fr. Thatch.]

Thatch'er, *n.* வீடு வேய்கிறவன், கூரைபோடுகிறவன், one who thatches.

Thatch'ing, *n.* வீடுவேய்தல், கூரையிடல், covering buildings with thatch; வீடுவேயும் புல் மு-து, straw or other materials used for covering buildings.

Thaw, *vi.* கரை, உருகு.—*vt.* கரை உருக்கு. melt.—*n.* பனிக்கட்டி உருகிப்போதல், the melting of ice &c. [AS.]

The, *def. art.* அந்த; இந்த. [AS.]
The'ater, } *n.* அரங்கம், நாடகசாலை,
The'atre, } அபிநயசாலை, playhouse. [F.; L. *theatrum*; Gr. *theatron*, fr. *theaomai*, to see.]
The-at'ric, } *a.* நாடகரங்கம் அ-து
The-at'rical, } நாடகசாலைசம்., pert. to a theater, histrionic. [fr. Theatre.]
Thee, *pron.* உன்னை. [AS.]
Theft, *n.* கள்ளத்தனம், திருட்டு, களவு, கள்ளம், சோரம், stealing, larceny, (சொற்பமானது) pilfering. [AS., fr. *theof*, a thief.]
Their, *pron.* அவர்களுடைய; அவற்றினுடைய; இவர்களுடைய; இவற்றினுடைய; belonging or relating to them. [AS. & Ic.]
Theirs, *pron.* அவர்களுடையது; அவர்களுடையவை; அவற்றினுடையது; இவற்றினுடையது, மு.; what or that wh. belongs, or those wh. belong, to them.
The'ism, *n.* ஈஸ்வரவாதம், கடவுள் உண்டென்னுங் கோட்பாடு, belief in the existence of a God. [F., fr. Gr. *Theos*, God.]
The'ist, *n.* ஈஸ்வரவாதி, கடவுள் உண்டென்றநம்புகிறவன், one who believes in the existence of a God.
The-is'tic, } *a.* ஈஸ்வரவாத சம்.,
The-is'tical, } pert. to theism.
Them, *pron.* அவர்களை; அவற்றை; இவர்களை; இவற்றை.
Theme, *n.* விஷயம், சங்கதி, subject, topic, text; பிரசங்கம், discourse; வியாசம், கிரந்தம், a composition, essay. [Gr. *thema*, a proposition, fr. *tithemi*, to place.]
Them-selves', *pron.* அவர்களே; அவைகளே; தாமே; அவர்களையே; மு.
Then, *adv.* அப்போது, at that time; அப்பால், பிறகு, next or immediately afterward. Till t.= அதுவரைக்கும்.—*a.* அக்காலத்திலிருந்த, அப்போதுள்ள, அக்காலத்து, existing at that time, as, the t. administration.—*conj.* அப்படியானால், in that case, if it is so; ஆகவே, ஆகையால், for that reason, therefore. [AS.]
Thence, *adv.* அங்கிருந்து, from that place; அப்போதிலிருந்து, from that time, thenceforward, thenceforth, thereafter; அதினால், for that reason, therefore; therefrom. [AS.]
Thence'forth', } *adv.* அதுமுதலாய், அது
Thence'for'ward, } முதல், அன்றுதொடங்கி, from that time, thereafter.
The-og'ony, *n.* தேவர்ஜன்மம், தேவதைவமிசாவளி, the generation or genealogy of the gods.
The'o-lo'gian, *n.* வேதாந்தி, one versed in theology, a professor of divinity, a divine.
The'o-log'ic, } *a.* வேதாந்த
The'o-log'ical, } சம்., pert. to theology. [logian.
The-ol'ogist, *n.* வேதாந்தி, theo-
The-ol'ogy, *n.* வேதாந்தசாஸ்திரம், the science of God or religion. [Gr. *Theos*, God + *logos*, discourse.]
The'orem, *n.* சித்தாந்தம், a proposition to be proved. [Gr. *theorema*, fr. *theoreo*, to view.]

The'o-ret'ic, The'o-ret'ical, } a. ஊஹிக்கப்பட்ட, கோட்பாட்டுக்குரிய, pert. to theory, speculative; விவஹாரயோக்கியமல்லாத, not practical. [fr. Theory.]

The'ory, n. வாதம், ஊஹை, கோட்பாடு, hypothesis, a supposition for explaining something. [F.; L. *theoria*; Gr. *theoria*, a looking at.]

The'o-soph'ic, The'o-soph'ical, } a. ஈசுவரஞான சம்., யோகவித்தை சம்., pert. to theosophy.

The-os'ophist, n. ஈஸ்வரஞான முள்ளவன், யோகி, one who cultivates theosophy.

The-os'ophy, n. ஈஸ்வரஞானம், யோகவித்தை, knowledge of God and divine things. [Gr. *Theos*, God + *sophia*, wisdom.]

Ther'a-peu'tic,—cal, a. வைத்தியம் அ-து சிகிச்சை சம்., pert. to therapeutics, curative.

Ther'a-peu'tics, n. வைத்தியசாஸ்திரம், சிகிச்சை, the department of medical science wh. relates to the treatment of disease and the action of remedies. [Gr. *therapeuo*, to nurse, serve.]

Ther'a-peu'tist, n. வைத்தியசாஸ்திரி, one versed in therapeutics.

There, *adv.* அங்கே, அவ்விடத்தில், in or at the place; அவ்விடத்திற்கு, அந்தஸ்தலத்திற்கு, அங்கே, to or into that place, thither. [AS.; akin to Sk. *tatra*.]

There'a-bout', There'a-bouts', } *adv.* அவ்விடங்களில், அச்சமீபத்தில், அப்பிராந்தத்தில், near that place; சுமார் அ-து ஏறக்குறையஅவ்வளவு, near that number, degree, or quantity, nearly.

There-af'ter, *adv.* அதின்பின், அதின்மேல், after that, afterward; அப்பிரகாரம், அந்தப்படி, according to that, accordingly.

There-at', *adv.* அங்கே, அவ்விடத்தில், at that place, there; அதன்மேல், அதன்பேரில், at that occurrence or event, thereon, thereupon; அதினிமித்தம், அதினால், on that account.

There-by', *adv.* அதினால், by that, by that means.

There-for', *adv.* அதிற்காக, for it.

There'fore, *conj.* & *adv.* ஆகையால், அதினால், அப்படியிருப்பதால், ஆகவே, for that or this reason, consequently, in consequence, as a consequence.

There-from', *adv.* அங்கேயிருந்து, from that place; அதிலிருந்து, இதிலிருந்து, from that or this; thence.

There-in', *adv.* அவ்விடத்தில், அதில், in that place &c.; அவ்விஷயத்தில், in that respect.

There-of', *adv* அதினுடைய, of that, of it, its. [that, thereupon.

There-on', *adv.* அதின்மேல், on

There-to', There'un-to', } *adv.* அவ்விடத்திற்கு; அதற்கு; to that, to it.

There'up-on', *adv.* அதின்பேரில், அதன்மேல், upon that; அதினால், on account, or in consequence, of that.

There-with', *adv.* அதினுடன், with that, with it.

Ther'mal, } *a.* உஷ்ண சம்., உஷ்
Ther'mic, } ணத்திற்குரிய, pert. to heat. [Gr. *thermos*, hot.]

Ther-mom'eter, *n.* சீதோஷ்ண பரிமாணமறியும் சாதனம், உஷ்ணநிதானமளக்குங்கருவி, an instrument for measuring temperature. [Gr. *therme*, heat + *metron*, measure.] [கள்; இவைகள்; இந்த.

These, *pron.* & *a.*, *pl.* of This. இவர்

The'sis, *n.* பக்ஷம், வாதம், கோட்பாடு, position, proposition; வியாஸம், சித்தம், essay, dissertation, treatise. [L.; Gr., fr. *tithemi*, to set.]

Thew', *n.* நரம்பு, தசை, பலம், muscle, sinew, brawn, nerve; strength. [AS. ori. 'manner', 'habit.']

Thew'y, *a.* நரம்புப்புஷ்டியுள்ள, தசைப்புஷ்டியுள்ள, பலமான; muscular, sinewy, strong.

They, *pron.* அவர்(கள்);(அவை(கள்); இவர்(கள்);இவை(கள்);(*refl.*)தாம், தாங்கள். [AS.]

Thick, *a.* கனமான, தளமுள்ள, having a certain dimension from one surface to the opposite; தடித்த, கனதியான; கெட்டியான, இறுக்கமான, inspissate, dense; நெருக்கமான, கிட்டகிட்ட இருக்கிற, close, compact; not thin; நிறைந்திருக்கிற, நெருக்கமான, crowded, abounding; தடித்த, கனத்த, plump; மந்தமான, சுவச்சமல்லாத, dull, turbid, muddy, misty; (*collo.*) பழக்கமான, பிரியமான, intimate, familiar.—*n.* மிகவும் கனதியுள்ள அ-து அடர்ந்த பாகம், the thickest part.—*adv.* கனதியாய், நெருக்கமாய், closely; வேகமாய், அடிக்கடி, fast, frequently. Through t. and thin = எல்லா விக்கினங்களையும் அ-து தடைகளையும் தாண்டி. [AS.]

Thick'en, *vt.* இறுக்கமாக்கு, உறையச்செய், inspissate; தடிப்பாக்கு, கனதியாக்கு, make dense; make thick.—*vi.* இறுக்கமாகு, உறை; தடிப்பாகு, கனதியாகு; become thick.

Thick'et, *n.* நெருக்கமாய் செடிகளுள்ள காடு, புதர், a thick wood or collection of trees or shrubs. [AS.]

Thick'ly, *adv.* இறுக்கமாய், தடிப்பாய், கிட்டகிட்ட, closely, densely.

Thick'ness, *n.* கனதி, தடிப்பம், the dimension or measure of a thing from one surface to the opposite; இறுக்கம், நெருக்கம், closeness, density; மந்தம், dullness.

Thick'set', *a.* தடிப்பமான, இறுக்கமான, அடர்த்தியான, set closely, dense; குட்டையும் பருமனுமான, having a short thick body, stout.

Thick'-skin', *n.* தடியன், உணர்ச்சியில்லாதவன், a person of coarse, gross or stolid nature, a person void of sensibility or sensitiveness, dullard.

Thick'-skinned', *a.* முரடான, உணர்ச்சியற்ற, not sensitive,

dull, obtuse, not easily moved or irritated.

Thick′-skull′, *n.* மந்தபுத்தியுள்ளவன், மடையன், மடைத்தலையன், block-head, numskull, dullard.

Thief, *n.* கள்ளன், திருடன், சோரன், one who steals, or commits theft or larceny, robber; சிறு கள்ளத்தனம்செய்வோன், pilferer. [AS.]

Thieve, *vi.* & *vt.* திருடு, களவுசெய், களவாடு, steal. [AS.]

Thiev′ery, *n.* திருட்டு, களவு, கள்ளம், stealing, theft, thievishness.

Thiev′ish, *a.* திருடுகிற, given to stealing, addicted to theft, pilfering; கள்ளத்தனமாய்செய்த, stealthy, furtive, sly, secret.

Thigh, *n.* தொடை, ஊரு, the part of the leg bet. the hip and the knee. [AS.]

Thigh′-bone′, *n.* தொடையெலும்பு, [the femur.

Thim′ble, *n.* விரல்புட்டில், அங்குலித்திராணம், a metal cap or cover for the finger used while sewing. [AS., fr. *thuma*, thumb: being formerly worn on the thumb.]

Thin, *a.* இலேசான, தடிப்பமில்லாத (பலகை மு.), of little thickness, not thick; இறுக்கமில்லாத, உறையாத (திரவபதார்த்தம்), fluid, liquid; தூரம்தூரமாயிருக்கிற, இடையுள்ள, நெருக்கமற்ற, not close or compact, not crowded, not filling the space, sparse, loose, scattered, rare, not dense; tenuous; மென்மையான, மெலிவான, பருமனற்ற, சன்னமான, not stout, slim, slender, lean, gaunt.—*vt.* இலேசாக்கு, make t.—*vi.* இலேசாகு, become t. [AS.; akin to L. *tenuis*, Sk. *tanu.*]

Thine, *pron.* உன்னுடைய, of or belonging to thee; உன்னுடையது, உன்னுடையவை, what belongs or belong to thee. [AS.]

Thing, *n.* வஸ்து, பதார்த்தம், பொருள், விஷயம், சங்கதி, whatever exists, any object of thought, entity. [AS.]

Think, *vi.* & *vt.* ஆலோசி, யோசி, விசாரி, சிந்தனைசெய், நினை, deliberate, consider, meditate, muse, cogitate, reflect, ponder, reason; நினை, எண்ணு, கருது, உணர், regard, esteem, consider, believe, take for or as. [AS.]

Think′er, *n.* ஆலோசிப்போன், சிந்திப்போன், one who thinks.

Think′ing, *n.* ஆலோசனை, சிந்தனை, deliberation, thought, cogitation; அபிப்பிராயம், opinion, judgment, idea.—*pa.* ஆலோசனை சக்தியுள்ள, possessing the faculty of thought, cogitative.

Think′ingly, *adv.* ஆலோசனையுடன், by thinking or thought.

Thin′ly, *adv.* மெல்லியதாய், தூரம் தூரமாய், இடைக்கிடையே, not thickly, closely, or densely, rarely, loosely.

Thin′ness, *n.* கொஞ்சம்தளம் அ-தகனம், little thickness; தடிப்ப

யின்மை, rarity, rareness, tenuity; நீர்போன்றதன்மை, திரவத்துவம், fluidity; மெலிவு, மென்மை, leanness, slenderness.

Thin'-skinned', *a.* இலேசான, தோலுள்ள, having a thin skin; உணர்ச்சியுள்ள, சுளிதமான, sensitive, irritable, easily offended or moved.

Third, *a.* மூன்றும்,மூன்றாவதான.—*n.* மூன்றாவது; மூன்றாம்பாகம். [AS.; cog. L. *tertius*, Sk. *tritiya*.]

Third'ly, *adv.* மூன்றாம்இடத்தில், மூன்றாவது, in the third place.

Thirst, *n.* தாகம், விடாய், தவனம், desire for drink, a sensation or feeling of dryness in the mouth & throat; கோரிகை, ஆசை, ஆத்துரம், eager desire, craving, longing.—*vi.* தாகமுண்டாகு, தவனமுண்டாகு, feel t.; ஆத்துரத்துடன் கோரு, ஆசி, தீவிரமாய் விரும்பு, desire strongly, vehemently, or eagerly, long. [AS.; allied to L. *torrere*, to parch, Sk. *thrish*, to thirst.]

Thirst'y, *a.* தாகமுள்ள, தாகங்கொண்ட, feeling thirst; உலர்ந்துபோன, dry, parched; ஆசையுள்ள, கோரிக்கையுள்ள, eagerly or strongly desirous, longing. [fr. Thirst.]

Thir'teen', *n.* & *a.* பதின் மூன்று. [AS. lit. 'three & ten'.]

Thir'teenth', *a.* பதின்மூன்றாம்.—*n.* பதின்மூன்றாம்பாகம்.

Thir'tieth, *a.* முப்பதாம், முப்பதாவதான.—*n.* முப்பதாம் பாகம்.

Thir'ty, *n.* & *a.* முப்பது. [AS. *threo*, three + *tig*, ten.]

This, *pron.* இது; இவன்.—*a.* இந்த. [AS.]

This'tle, *n.* ஒரு முள்செடி, a class of prickly plants. [AS.]

This'tly, *a.* முள்செடிகளால் நிறைந்த, overgrown with thistles; முள்ளுள்ள, prickly.

Thith'er, } *adv.* அவ்விடத்திற்கு, அப்பக்கத்திற்கு, to that place or quarter.
Thith'erward, } [AS; Sk. *tatra*, there.]

Thong, *n.* தோல்வார், a strap of leather. [AS.] [ரஸக்ஞரவாஹினி.

Thorac'ic, *a.* fr. Thorax. T. duct=

Tho'rax, *n.* மார், உரம், chest. [Gr.]

Thorn, *n.* முள், கண்டகம், spine. [AS.]

Thorn-apple, *n.* ஊமத்தைச்செடி.

Thorn'y, *a.* முள்ளுள்ள, bearing, or full of, thorns or prickles, prickly, spiny; முள்போன்ற, கூரான, sharp; நோவுண்டாக்குகிற, தொந்தரவுண்டாக்குகிற, painful, vexatious, troublesome. [fr. Thorn.]

Thor'ough, *a.* சம்பூர்ணமான, பரிபூரணமான, perfect, complete, full. [same as Through.]

Thor'ough-fare', *n.* சர்வசாமானிய மார்க்கம், பஹிரங்கமானவழி, ஒரு வீதியிலிருந்து இன்னொன்றிற்கு போகிறவழி, an unobstructed way open to the public, a public road. [AS.]

Thor'ough-go'ing, *a.* பரிபூரணமான, going through or to the end or bottom, perfect, complete.

Thor'oughly, *adv.* பரிபூரணமாய்,

கடைசிவரைக்கும், fully, completely, entirely, perfectly. [அவை.

Those, *pron., pl.* of That. அவர்கள்;

Thou, *pron.* நீ. [AS.; akin to L. *tu*, Sk. *tvam*.]

Though (தோ), *conj.* என்றாலும், ஆகிலும், ஆயினும், இருந்தும், although, granting, admitting, supposing, or notwithstanding, that, if. As t. = ஆனபடி, போல, as if. As t. he was deaf = செவிடன்போல். [AS.]

Thought, *pt.* & *pp.* of Think.—*n.* ஆலோசனை, சிந்தனை, thinking, consideration, deliberation, reflection, meditation, contemplation, cogitation; எண்ணம், அபிப்பிராயம், உத்தேசம், notion, idea, conception, fancy, imagination, conceit, supposition. [AS.]

Thought′ful, *a.* ஆலோசனையுள்ள, யோசிக்கிற, full of thought, contemplative, meditative, reflective; சாவதானமான, ஜாக்கிரதையுள்ள, attentive, careful, wary, considerate, discreet.

Thought′less, *a.* ஆலோசனையில்லாத, விவேகமில்லாத, unthinking, stupid, dull; நினைப்பில்லாத, கருத்தற்ற, யோசனையில்லாத, inconsiderate, rash, careless.

Thou′sand, *n.* & *a.* ஆயிரம், சகஸ்ரம், ten hundred. [AS.]

Thou′sandth, *a.* ஆயிரத்தாம், ஆயிரத்தாவது.—*n.* ஆயிரத்தாம்பாகம்.

Thral′dom, *n.* அடிமைத்தனம், சிறையிருப்பு, the condition of a thrall, slavery, bondage, servitude. [fr. Thrall.]

Thrall, *n.* அடிமை, சிறை, slave, bondman; அடிமைத்தனம், சிறையிருப்பு, slavery. [AS.]

Thrall′dom = Thraldom.

Thrash, *vt.* தானியம் மு. வைகளைப் போரடி, சூட்டி, கதிரடி, beat out or separate grain from, by a flail or by the treading of animals; கெட்டியாய் அடி, பலமாயடி, beat soundly, drub, belabor.—*n.* போரடித்தல்; அடித்தல். [AS.]

Thrash′ing-floor′, *n.* தானியம் போரடிக்கும் களம், a floor or area on wh. grain is thrashed or beaten out.

Thread, *n.* நூல், இழை, புரி, fine or slender cord, string, or twine.—*vt.* நூல் கோ, தொடு, pass a t. through (the eye of a needle &c.). [AS. lit. 'what is twisted', *thrawan*, to twist.]

Thread′bare′, *a.* பழையதாகி நூல் இடையிட்ட, சிதிலமான, நசிவுள்ள, worn to the naked thread, so worn that the threads are seen separately; சாதாரணமாய்ப்போன, trite, commonplace, hackneyed.

Thread′-worm′, *n.* நூல்போன்ற பூச்சி, திமிர்பூச்சி, a threadlike worm.

Thread′y, *a.* நூல்போன்ற, like or resembling thread, filamentous.

Threat, *n.* பயமுறுத்தல், அச்சமுறுத்தல், வெருட்டுகை, மிரட்டுகை, threatening, menace, expression of an intention to inflict evil. [AS.]

Threat'en, *vt.* பயமுறுத்து, அச்சமுறுத்து, உறுக்கு, மிரட்டு, utter or use threats against, menace, inspire with apprehension or fear. [fr. Threat.]

Three, *a.* & *n.* மூன்று, திரி; மூவர், மூன்றுபேர். [AS.; L. *tres*; Sk. *tri*.]

Three'fold', *a.* மும்மடங்கான, மூன்றான, மூன்றுமிருக்கிற, three times as great or as many, made up, or consisting, of three, triple, thrice repeated.

Three'-score', *a.* அறுபது, thrice twenty, sixty.

Thresh=Thrash.

Thresh'er, *n.* போரடிக்கும் கம்பு அ-து சாதனம், a thrashing machine.

Thresh'old, *n.* வாயிற்படி, door-sill; ஆரம்பம், பிராரம்பம், entrance, outset, beginning. [AS. *therscan*, to thresh + *wald*, wood: lit. 'the piece of wood beaten by the feet'.]

Threshing-floor=Thrashing-floor.

Threw, *pt.* of Throw.

Thrice, *adv.* மூன்றுமுறை, மூன்றுதரம்; மூன்றுமடங்கு; three times.

Thrift, *n.* மட்டானசெலவு, மிதவியயம், வரையறை, திட்டம், economy, frugality, good husbandry; பெருக்கம், விர்த்தி, செழிப்பு, வாழ்வு, prosperity, gain. [Ic.; see Thrive.]

Thrift'less, *a.* மிதமற்ற செலவுசெய்கிற, ஊதாரித்தனமான, without thrift, lacking frugality infrugal.

Thrift'y, *a.* மட்டான செலவுசெய்கிற, வரையறையான, திட்டமான, frugal, economical; விர்த்தியடைகிற, செழிப்பான, வாழ்வடைகிற, thriving by industry, prosperous. [fr. Thrift.]

Thrill, *n.* நெஞ்சில் நடுக்கமான அசைவு, சிலிர்ப்பு, a tremor, quiver, or shiver of feeling, a sudden and keen sensation, a tremulous excitement.—*vt.* தொளையிடு, bore, perforate; உடம்பு சிலிர்க்கும்படிசெய், நடுங்கும்படிசெய், affect with a sudden and deep feeling, produce a sense of quivering, produce a vibration through.—*vi.* குத்து, குத்திக்கொண்டுபோ, pierce; கம்பி, அசை, சிலிர், feel a sharp shivering sensation. [AS.]

Thrive, *vi.* விர்த்தியடை, செழி, தழை, தலைக்கட்டு, prosper (by industry and economy). [Ic.]

Thriv'en, *pp.* of Thrive.

Thriving, *pa.* விர்த்தியடைகிற.

Throat, *n.* தொண்டை, குரல்வளை, மிடறு, the anterior or front part of the neck, pharynx. [AS.]

Throb, *vi.* இருதயமாவது நாடியாவது அடித்துக்கொள், துடி, பதை, beat or pulsate rapidly or strongly, palpitate.—*n.* அடித்துக்கொளல், நாடியதிகமாய்த் துடித்தல், a strong or violent beating or pulsation, palpitation. [origin doubtful.]

Throe, *n.* அதிகவேதனை, கடின

நோவு, extreme pain, violent pang, anguish, agony; பிரசவ வேதனை. [AS.]

Throne, *n.* சிங்காசனம், இராஜாசனம், பத்திராசனம், the seat of a sovereign, a royal seat.—*vt.* சிங்காசனத்திலேற்று, enthrone. [OF.; L. *thronus*, Gr. *thronos*, a seat, chair.]

Throng, *n.* ஜனசமூஹம், ஜனநெருக்கம், ஜனக்கூட்டம், multitude, crowd, host, concourse.—*vi.* கூட்டங்கூடு, மொய், crowd together, gather in multitudes.—*vt.* கூட்டமாய் வந்து நிறை, crowd into, occupy fully, fill closely by pressing into; கும்பலாய் சுற்றிக்கொண்டு நெருக்கு, press or crowd upon, oppress, annoy or impede by crowding around. [AS.]

Throt′tle, *n.* தொண்டை, குரல்வளை, மிடறு, throat, windpipe, trachea. —*vt.* தொண்டைநெரித்துக்கொல், மூச்சுவிடாமற் செய், கழுத்துத்திருகு, compress the throat of, strangle, choke. [dim. fr. 'throat'.]

Through (த்ரு), *prep.* ஊடே, உள்ளே, from end to end or side to side of, into & out of at another point; உருவ, முற்ற, from the beginning to the end of, to the conclusion of; ஆல், ஆன், இருந்து, காரணத்தினால், by means, instrumentality, agency, or aid, of, by.— *adv.* ஒருபக்கத்திலிருந்து இன்னொரு பக்கத்திற்கு, from one end or side to the other; முதலிலிருந்து கடைசிவரைக்கும், from beginning to end; கடைசிவரைக்கும், முழுதும், to the end, to the ultimate purpose, to a conclusion.—*a.* கடைசிவரைக்குமிருக்கிற, சம்பூர்ணமான, going or extending from beginning to end, thorough, complete. [AS.]

Through-out′, *prep.* & *adv.* முழுதும், ஏகத்திற்கு, சர்வத்திற்கு, in every part (of); கடைசிவரைக்கும், quite through, from one extremity to the other (of).

Throw, *vt.* போடு, வீசு, எறி, ஏற்று, cast, fling, hurl, toss, chuck, dash, pitch, project, propel; விழத்தட்டு, cause to fall or tumble, overturn. T. away = எறிந்துவிடு; வியர்த்தமாய்ப்போக்கடி. T. up = விட்டுவிடு; வாந்திபண்ணு, வமனஞ்செய்.—*vi.* போடு; சொக்கட்டான்போடு.—*n.* போடல், எறிதல், வீசல், cast, fling, hurl; சொக்கட்டான் போடுதல்; சொக்கட்டான் விழுதல்; எறிந்ததூரம். [AS.]

Thrown, *pp.* of Throw. [சிக்கம்பு.

Thrum, *n.* நெய்ததுணியின் கடை

Thrush, *n.* மனோஹரமாய்ப் பாடும் ஒரு குருவி; பிள்ளைகளுக்கு வாயிலுண்டாகும் ஒருநோய்.

Thrust, *vt.* தள்ளு, நெட்டு, push, shove, drive; அமுக்கு, அடக்கு, press; குத்து, pierce, stab.—*vi.* தள்ளு; குத்து; make a push.— *n.* தள்ளுதல், a push, shove; குத்து, stab.

Thud, *n.* மெதுவான வஸ்துவின்மேல் தப்பென்ற அடிச்சத்தம்.

Thug, *n.* வழிகாத்துக் கொல்லும் கள்ளன். [Hi.]

Thumb (தம்), *n.* கைப்பெருவிரல், அங்குஷ்டம், the short thick first digit or finger of the human hand.—*vt.* முரடாய்ப் பிடித்துக் கொண்டு வழங்கு, மிகவும் கையினால் தொறங்கடி, handle awkwardly, soil with the t. or fingers, wear out by frequent handling. [AS.]

Thump, *n.* தடித்த பருவானவஸ்து தப்பென்றுவிழல், a heavy fall of or blow with something thick; தப்பென்ற சத்தம், the sound made by the fall of a heavy body. —*vi.* அடி, மொத்து, strike or beat with something thick or heavy.—*vi.* பொத்தென்று அடி அ-து விழு, strike or fall with a heavy blow. [Imi.]

Thun′der, *n.* இடி, முழக்கம், கர்ஜிதம், the sound or report of a discharge of atmospheric electricity; பெருந்தொனி அ-து முழக்கம், a loud noise.—*vi.* முழங்கு, கர்ஜி, இடி, produce t., give forth a peal or peals of t.; பெருஞ்சத்தம்போடு, make a loud noise. —*vt.* கர்ஜனை செய்து பயங்கரமாய்ச்சொல், utter with vehemence or power so as to cause terror, fulminate. [AS.]

Thun′der-bolt′, *n.* இடி, a shaft of lightning, a destructive flash of lightning or discharge of atmospheric electricity.

Thun′der-clap′, *n.* இடிமுழக்கம், a clap or sharp burst of thunder, a thunder-peal.

Thun′der-cloud′, *n.* இடியும் மின்னலுமுள்ளமேகம், a cloud charged with electricity and producing thunder and lightning.

Thun′derous, *a.* இடிபோன்ற.

Thunder-peal, *n.* கடகடவென்று பிரதித்தொனிசெய்யும் இடி, a reverberating thunder-clap.

Thun′der-strike′, *vt.* ஏக்கம்பிடிக்கச்செய், astonish, amaze.

Thunder′struck, *a.* ஏக்கம்பிடித்த, ஆச்சரியம் அ-து பயத்தினால் ஸ்தம்பிக்கப்பட்ட அ-து பேசமுடியாத, struck dumb by something sudden, surprising, and terrible, astonished, amazed.

Thurs′day, *n.* வியாழக்கிழமை, குருவாரம், the fifth day of the week. [Thor’sday: consecrated to Thor, god of thunder.]

Thus, *adv.* இப்படி, இவ்விதமாய், அப்படி, அவ்வண்ணம், in this or that way or manner, in the way just indicated; இதுவரைக்கும், to this degree or extent, to such extent. [AS.]

Thwart, *vt.* குறுக்கேதடு, மறி, இடையூறுசெய், தடைசெய், run counter to, cross, oppose, hinder, obstruct, prevent, frustrate, defeat, baffle. [Ic. ‘athwart’, ‘across’.]

Thy, *pron.* உன்னுடைய, உன், of or belonging to thee. [short for ‘thine’.]

Thy′roid, *a.* கேடகம்போன்ற, shield-shaped, scutiform.

Thy-self′, *pron.* நீவே; உன்னையே.

Ti′ar, Ti-a′ra, } *n.* ஒருவித கிரீடம், the pope's triple crown.

Tib′ia, *n.* காலிலுள்ள இரண்டெலும்புகளில் உள்ளேயிருக்கும் பெரிய எலும்பு, காலின்பேரெலும்பு, the inner and larger of the two bones of the leg below the knee.

Tick, *n.* கடியாரம் மு.வற்றின் டிக்டிக்கெனும் தொனி, a quick audible beat, as of a clock; அடையாளத்திற்காகப்போடும் கீறல் அ-து புள்ளி, a small mark to direct attention or to serve as a check; கைக்கடன், credit; மெத்தையுறை, the cover or case of a bed or mattress; உண்ணி, a small parasitical mite wh. infests oxen, dogs &c.—*vi.* டிக்டிக்கென்ற தொனிசெய், click, beat; மெதுவாய்த்தட்டு, strike gently.—*vt.* அடையாளக்கீறல்போடு, check off by a small mark, score.

Tick′et, *n.* சீட்டு, a slip of paper or cardboard containing some notice or certificate.—*vt.* சீட்டுக்கொடு, furnish with a t.; சீட்டு ஒட்டு, put a t. on. [F., fr. G. *stecken*, to stick: being something stuck on.]

Tic′kle, *vt.* சக்கிலிமுக்கிலிசெய், touch lightly in some sensitive spot and cause a peculiar thrilling sensation; சந்தோஷமுண்டாக்கு, please, amuse; titillate. [freq. of 'tick', to touch lightly.]

Tic′kling, *n.* சக்கிலிமுக்கிலிசெய்தல், கூச்சம், titillation.

Tic′klish, *a.* கூச்சமுள்ள, easily tickled; சுன்னிதமான, easily affected.

Ti′dal, *a.* கடல் மு. வற்றின் ஏற்றம் வற்றம் சம்., pert. to tides.

Tide, *n.* கடல் மு. வற்றின் ஏற்றம் வற்றம், the periodic & alternate rise and fall, or flow and ebb, of the waters of the ocean, due to the attraction of the moon and sun; பிரவாஹம், stream, current, flood; போக்கு, விதம், சாய்வு, நடை, tendency, direction; காலம், வேளை, time. [AS. 'time', 'season'.] [சாய்.

Ti′dily, *adv.* நேர்த்தியாய், சொகு

Ti′dings, *n. pl.* வர்த்தமானம், சமாசாரம், செய்தி, விசேஷம், சங்கதி, news, information, intelligence.

Tid′y, *a.* நேர்த்தியாய் ஏற்படுத்தின, சொகுசான, சீரான, ஒழுங்கான, neat, orderly, precise, trim, clean, properly arranged. [fr. 'tide', time, season.]

Tie, *vt.* கட்டு, பந்தி, பிணை, bind, fasten; முடிபோடு, form a knot, knot, knit; கடமைப்பட்டவனுக்கு, கடமைப்படுத்து, oblige, constrain, restrain, bind (down).—*n.* கட்டு, பந்தம், a fastening; முடி, knot; பாசம், கடமை, bond, obligation, any uniting force or relationship. [AS. *tyge*, a rope, *teon*, to pull.]

Tier, *n.* ஒருவரிசை, பந்தி, சிரேணி, நிரை, ஒழுங்கு, one rank or row in a series of such.

Tierce, *n.* சிறுபீப்பாய், a small cask.
Tif'fany, *n.* மெல்லியபட்டு, a species of gauze or very thin silk.
Tif'fin, *n.* பலகாரம், சிற்றுண்டி, இடைப்போஜனம், a light meal or repast bet. breakfast and dinner, lunch, luncheon. [from 'tiff' (obs.), a small draft of liquor.
Ti'ger, *n.* புலி, வேங்கை. [F. &L., fr. Pe. *tigra*, an arrow: from its quickness.]
Ti'gerish = Tigrish.
Tight, *a.* இழுக்கப்பட்டிருக்கிற, இறுக்கமான, விறுவான, stretched fully, not slack or loose, taut, tense; இறுக்கப்பட்ட, கெட்டியான, நெருக்கப்பட்ட, closely drawn, fastened, close, firm; இறுக்கமான, தளர்ச்சியற்ற, நெருக்கமான, fitting closely, compact; சந்தில்லாத, காற்று நீர் முதலியவை நுழையாத, impervious, impermeable, not leaky. [allied to Thick.]
Tight'en, *vt.* இறுக்கு, இறுக்கிக்கட்டு. —*vi.* இறுகு. make, draw, or become, tight, stretch.
Tight'ly, *adv.* இறுக்கமாய், நெருக்கமாய், கிட்டக்கிட்ட.
Tight'ness, *n.* இறுகியிருத்தல், விறுவு, tenseness, tension; இறுக்கம், நெருக்கம், closeness, compactness.
Ti'gress, *n.* பெண்புலி, a female [tiger.
Ti'grish, *a.* புலிபோன்ற, resembling a tiger, tigerish.
Tile, *n.* ஓடு, a thin piece of baked clay used for covering roofs &c. —*vt.* ஓட்டினால் மூடு, cover with t-s. [AS.; L. *tegula*, fr. *tegere*, to cover.]
Til'er, *n.* (வீடுகளுக்கு) ஓடுசெய்கிறவன் அ-து வேய்கிறவன், a maker or layer of tiles.
Til'ery, *n.* ஓடுகள்செய்யும்ஸ்தலம், ஓட்டுச்சூளை, a tile-kiln, a place where tiles are made or burned.
Till, *conj.* & *prep.* மட்டும், வரைக்கும், வரையில், பரியந்தம், until, as far as, up to, to.—*n.* [AS. *tyllan*, to draw.] கடைக்காரன் பணம் வைத்துக்கொள்ளும் பெட்டி, பணப்பெட்டி, a money-drawer, cash-drawer, or money-box, in a shop.—*vt.* [AS.] உழு, விவசாயம்செய், பயிரிடு, plow, cultivate. [தக்க, arable.
Till'able, *a.* உழத்தக்க, பயிரிடத்
Till'age, *n.* உழவு, கிருஷி, விவசாயம், சாகுபடி, cultivation, ploughing, husbandry, agriculture, farming. [fr. Till, *v.*]
Till'er, *n.* கிருஷிகன், விவசாயக்காரன், cultivator, ploughman, husbandman. [fr. Till, *v.*]
Tilt, *vt.* கொஞ்சம்சாய், ஒருபுறம்சாய், incline, tip; ஈட்டியினால்குத்து, attack with a lance; குறிவை அ-து குத்து, aim or thrust.—*vi.* ஈட்டியினால்சிலம்பம்செய், practice the military exercise of thrusting with a lance, joust; கொஞ்சம்சாய், ஒருபுறம்சாய், lean, tip, heel.—*n.* குத்து, thrust; ஈட்டியினால் குதிரைகளின்மேலிருந்து செய்யும் சிலம்பம், a military

exercise on horseback with lances, joust; சொருஞ்சம்சாய்தல், inclination, slant. [AS. 'unstable'.]

Tilt'er, *n.* குதிரைமேலிருந்து ஈட்டி ஞல் சிலம்பமாடுகிறவன், jouster.

Tim'ber, *n.* தூலங்கள் மு. வற்றிற் குபயோகிக்கும்மரம், வெட்டுமரம், wood. [AS.]

Tim'bre, *n.* குரல்பேதம், துவனி பேதம், quality of tone distinguishing voices or instruments, tone-color. [F., fr.L. *tympanum*, a drum.]

Tim'brel, *n.* பறைபோன்ற ஒருவித தோல் வாத்தியம், a kind of drum, tabor, tambourine. [F. dim. of *timbre*, a bell, ori. a drum.]

Time, *n.* காலம், சமயம், வேளை, duration, successive existence; ஒருகாலம், a particular period or part of duration, age, epoch, era; ஒருகாரியம் நடந்தகாலம், date; தாளம், லயை, measured duration of sounds, rhythmical division, rhythm; முறை, தரம், பரியாயம், தடவை, repetition. At t-s=ஒவ்வொருவேளையில், now and then. In t. = யுக்தசமயத்தில், வேளைமிஞ்சாமல், timely, in good season, sufficiently early, at the right moment or time, before it is too late; காலக்கிரமத்தில், கடைசியில், in the course of things, eventually. From t. to t.=காலத்துக்குக்காலம், அப்போதைக்கப்போது. Kill t.=காலம் கடத்து.—*vt.* யுக்தசமயத்தில் செய், சமயத்திற்கேற்கச்செய், காலங் கிரமப்படுத்து, adapt to the time or occasion, perform at the proper season or time; தாளம் சரிப்படுத்து, regulate as to time. —*vi.* காலம் அ-து தாளம் சரிப்படு, keep time, harmonize. [AS.]

Time'-hon'ored, *a.* வெகுகாலத்திலிருந்து ஆசரிக்கப்படுகிற, honored for a long time, venerable and worthy of honor by reason of antiquity or long continuance.

Time-keep'er, *n.* கடியாரம், timepiece, chronometer; வேலைக்காரர் வேலைசெய்யும் நேரத்தை எழுதி வைக்கிறவன், one who records the time spent by employees at their work.

Time'ly, *a.* சமயத்திற்கேற்ற, யுக்தகாலத்திலான, சமயோசிதமான, வேளைக்கு உதவிய, தற்சமயமான, occurring in good or proper time, seasonable, opportune, sufficiently early, not too late.—*adv.* யுக்தகாலத்தில், வேளைமிஞ்சாமல், சமயத்திற்கு, in time, in good season, seasonably, opportunely. [fr. Time.]

Time'piece', *n.* கடியாரம், a clock or watch, chronometer, timekeeper.

Time'-serv'er, *n.* சமயோசிதமாய் நீசமாய் சுயனயத்திற்காக நடந்துகொள்ளுகிறவன், one who meanly and selfishly adapts his conduct to the circumstances.

Time'-serv'ing, *a.* சமயத்திற்கேற்க

நேமாய் நடந்துகொள்ளுகிற, obsequiously complying with the humors of those in power.—*n.* சமயோசிதமான நேர்வர்த்தனே, வேண்டுகொண்டு நடத்தல், mean compliance with the requirements of the time and circumstances.

Time'-ta'ble, *n.* காரியங்கள்வாறை கிரமத்தைக்காட்டும் அட்டவணை, a tabular statement of the times at wh. certain things are to be done.

Tim'id, *a.* கோழையான, அச்சமுள்ள, பயப்படுகிற, not bold, cowardly, timorous, pusillanimous, faint-hearted, easily frightened, afraid, fearful. [L., fr. *timere*, to fear; akin to Sk. *tamas*, darkness, *tam*, to become breathless.]

Tim'idly, *adv.* கோழையாய்.

Ti-mid'ity, } *n.* கோழைத்தனம், தைரியமின்மை, பயம், அச்சம், cowardice, cowardliness, timorousness, pusillanimity, fear.
Tim'id-ness, }

Tim'orous, *a.* கோழையான, தைரியமில்லாத, அச்சமுள்ள, பயப்படுகிற, timid. [L., fr. *timor*, fear, *timere*, to fear.]

Tin, *n.* தகரம், வெள்ளீயம்; ஈயம்பூசின இரும்புத்தகடுகள், thin plates of iron covered with tin, tin-plate; தகரடப்பி மு.த, an article of tinware, a vessel of tin-plate.—*vt.* தகரம்பூசு, ஈயம்பூசு, கலாய்போடு, cover or coat with t., overlay with tinfoil; தகரடப்பி களில்வை, incase or put in t-s. [AS.]

Tin'cal, *n.* சுத்தம்பண்ணாத வெண்காரம்.

Tinc'ture, *n.* கொஞ்சநிறம், a shade of color, tint; கொஞ்சம்ருசி, a slight taste superadded; ஒருபதார்த்தத்தின் கொஞ்சம் சேர்க்கை, tinge; திரவரூபமான ஔஷதம், a solution of a medicinal substance.—*vt.* வேறுபதார்த்தம் கொஞ்சம்சேர், mix some extraneous matter with, tinge. [L. *tinctura*, a dyeing, *tingere*, *tinctum*, to dye.]

Tin'der, *n.* தீமூட்டுவதற்கு உபயோகிக்கும் சீக்கிரம் பற்றிக்கொள்ளும் (கந்தை மு.) வஸ்து, சக்கிமுக்கிப் பஞ்சு, an inflammable substance that ignites on contact with a spark, used for kindling fire. [AS., fr. *tyndan*, *tendan*, to kindle.] [தகரத்தகடு.

Tin'-foil', *n.* லேசான அ-து மெல்லிய

Ting, *n.* டிங்கெனும் மணி மு-வற்றின் சத்தம், a sharp sound, as of a bell, a tinkling. [Imi.]

Tinge, *n.* வேறுபதார்த்தங்களின் கொஞ்சம் சேர்க்கை, a slight quality added to something, a shade, a tincture, a smack; இளஞ்சாயம், சிறுநிறம், a shade of color.—*vt.* வேறுபதார்த்தம் கொஞ்சம் கல, mix with something foreign; கொஞ்சம் வேறு ருசி மு.து சேர், give a foreign taste to flavor; கொஞ்சம் வர்ணம்போடு, color slightly, stain, impart a tint to. [L. *tingere*, to dye.]

Tin'gle, *vi.* உடம்புசிலுத்து, சுணை,

கள்ளிடு, feel a thrilling sensation. [dim. fr. Ting.]

Tink'er, *n.* லோஹபாத்திரங்களைப் பழுதுபார்க்கிறவன், a mender of metal ware.—*vi.* & *vt.* லோஹபாத்திரங்களைப் பழுதுபார் அ-து ஒட்டவை, mend or solder utensils of metal. [from 'tink' or 'ting' a sharp metallic sound.]

Tin'kle, *vi.* கணகண, கிலுகிலு, கனீரென்.—*n.* கணகணவெனும்தொனி. clink, jingle. [freq. of 'tink' or 'ting'.]

Tin'man, *n.* தகரப்பாத்திரங்கள் செய்வோன், a maker of or dealer in tinware.

Tin'ning, *n.* ஈயம்பூசுதல், களாய் போடுதல், coating with tin.

Tin-plate, *n.* தகரத்தகடு, தகரம் பூசின இரும்புத்தகடு.

Tin'sel, *n.* காக்காய்ப்பொன், a thin shining metallic plate or foil for ornamental purposes; வெளிமினுக்கு, வீண்டம்பம், superficial show, false lustre, something showy & gaudy. [F., fr. L. *scintilla*, a spark.]

Tint, *n.* இளஞ்சாயம், இளநிறம், நிறத்தில் கொஞ்சபேதம், a faint tinge of any color, a variety of color. [It. &F., fr. L. *tinctus*, pp. of *tingere*, to dye.]

Tin'-ware, *n.* தகரம்பூசின இரும்புத்தகட்டு சாமான், articles made of tin plate or tinned iron.

Ti'ny, *a.* சிறு, சின்ன, அற்ப, சொற்ப, very small, little, minute. [AS. ficori, 'poor' 'insigniant.']

Tip, *n.* நுனி, முனை, தலைப்பு, கூர், end, extremity, point.—*vt.* முனையில் பூண்போடு, நுனியில் ஏதாவது ஒட்டவை, cover the t. or end of, furnish with a t..—*vi.* சாய், ஒருபுறம்சார், incline to one side, fall on one side, tilt. [allied to 'top'.]

Tip'pet, *n.* கழுத்திலகட்டிக்கொள்ளும் கம்பளித்துணி மு-து.

Tip'ple, *vi.* கள்குடி, மதுபானஞ்செய், மதுவுண், drink intoxicating liquors habitually. [freq. & dim. fr. 'tip', to tilt.]

Tip'pler, *n.* குடிக்காரன், மதுபானி.

Tip'sy, *a.* வெறிகொண்ட, மத்துள்ள, partially intoxicated, fuddled, drunk. [akin to Tipple.]

Tip'toe', *n.* கால்விரல்நுனி, the tip or end of thetoe.—*a.* கால் விரல்மேல்நிற்கிற, standing on t.; ஆத்திரமாயிருக்கிற, anxious.

Ti-rade', *n.* நாஷணை, நிந்தைப்பிரசங்கம், a censorious speech or harangue. [F., fr. *tirer*, to draw or lengthen out.]

Tire, *vt.* இளைக்கச்செய், தொய்யப்பண்ணு, weary, fatigue, jade, exhaust the strength of; ஆயாசமுண்டாக்கு, அலுப்புண்டாக்கு, அருவருப்புண்டாக்கு, exhaust the patience of.—*vi.* இளை, அலு, களை, become weary, be fatigued; அருவருப்புண்டாகு, have the patience exhausted.—*n.* வண்டிசக்கரம் சுற்றிப்போடும் இரும்புவளையம், a band or hoop surrounding the rim of a wheel. [AS.]

Tired, *a.* இளைத்த, களைத்த, அயர்ந்த, weary, fatigued; ஆயாசப்பட்ட, அருவருப்புண்டான, having the patience exhausted.

Tired'ness, *n.* இளைப்பு, களைப்பு, அயர்ப்பு, weariness; அருவருப்பு, ஆயாசம், loss of patience.

Tire'some, *a.* இளைப்புண்டாக்கும், அயர்ப்புண்டாக்குகிற, fatiguing, wearisome, exhausting; ஆயாசமுண்டாக்குகிற, அருவருப்புண்டாக்குகிற, tedious.

Tiro=Tyro.

Tis'sue, *n.* செய்யப்பட்டது, பின்னப்பட்டது, நெசவு, பின்னல், துணி, a woven fabric; சரிகைத்துணி; வர்ணம்போட்டதுணி. [F. *tissu*, woven; L. *texere*, to weave.]

Tit, *n.* சிறுகுதிரை, a small horse; கொஞ்சம், சிற்றளவு, a bit. T. for tat=பதில், பிரதி, an equivalent, retaliation.

Ti'tan, } *a.* ராக்ஷஸ சம்., பிரமாண்டமான, pert. to the
Ti-tan'ic, } Titans, huge, enormous in size or strength, gigantic.

Tit'bit', *n.* நல்லருசியுள்ள வஸ்து விள்ளுண்டு, a delicious morsel.

Tithe, *n.* தசாம்சம், பத்திலொருபாகம், a tenth; பத்திலொருபாகம்தீர்வை, a tax of one tenth.—*vt.* பத்திலொருபாகம் தீர்வையாயெடுத்துக்கொள், levy a t. on. [AS. *teotha*, the tenth.]

Tit'illate=Tickle.

Tit'il-la'tion, *n.* சக்கிலிமுக்கிலி, கூச்சம், கூச்சம்காட்டல், tickling. [L.]

Ti'tle, *n.* பெயர், நாமம், name, appellation, designation, denomination, epithet; பட்டம், விருதுப்பெயர், வக்கணை, an appellation of dignity, distinction or pre-eminence; உரிமை, சுவாதந்திரியம், அதிகாரம், சுவாமியம், அக்கு, right, claim. T. deed = உரிமையை ஸ்திரப்படுத்தும் தஸ்தாவேசு, a writing proving a right or title to property, a muniment of title.—*vt.* பெயரிடு, நாமங்கொடு, name, call, entitle. [OF., fr. L. *titulus*.]

Ti'tled, *a.* பெயருள்ள; விருதுப்பெயருள்ள; having or bearing a name or title.

Ti'tle-page, *n.* புஸ்தகத்தில் பெயர் எழுதியிருக்கும்தலைவாசகவொற்றை, பாயிரவொற்றை, முகப்பத்திரம், a page at the front of a book wh. contains its title.

Titter, *n.* & *vi.* அடக்கிச்சிரிப்பு, உட்சிரிப்பு, கிளுகிளு, giggle. [Imi.]

Tit'tle, *n.* சொற்பம், கொஞ்சம், சிற்றளவு, a particle, jot, iota. [OF.]

Tit'tle-tat'tle, *n.* பசபசப்பு, பிதற்று, idle talk, empty prattle.

Tit'ular, } *a.* பேருக்குமாத்திரமிருக்கிற, existing in
Tit'ulary, } title or name only, nominal; விருதுப்பெயர் சம்., pert. to a title. [F., fr. L. *titulus*, a title.]

To, *prep.* கு; இடத்திற்கு, அண்டை; ஒடு, உடன். To and fro.= அங்குமிங்கும், முன்னுக்கும் பின்னுக்கும், forward and backward, up and down. [AS.] [AS.]

Toad, *n.* தேரை, ஒருவகைதவளை.

Toad-eater, *n.* இச்சகம் பேசுகிறவன், flatterer. [ori. a mounte-

bank's assistant who pretended to eat toads supposed to be poisonous.]

Toad′stool′, n. நிலக்காளான், mush-room, fungus.

Toad′y, n. இச்சகம் பேசுகிறவன், a mean flatterer, sycophant.—vi. & vt. இச்சகமாடு, flatter, fawn upon. [short for 'toad-eater'.]

Toad′yism, n. இச்சகமாடல், flattery, sycophancy.

Toast, vt. வாட்டு, சுடு, வறட்டு, கருக்கு, dry & scorch by the heat of a fire ; ஒருவன் கௌரவத்திற் காவது சுபம் அ-து ஆரோக்கியமாக என்று சொல்லியாவது குடி, வந்தனம் சொல்லிப் பானம் பண்ணு, drink in honor, or to the success or health, of.—n. வாட்டினரொட்டி, toasted bread ; வாழ்த்துப்பானம்செய்தல், drinking in honor, or to the health, of some one. [OF. & L.]

To-bac′co, n. புகையிலை. [Sp., fr. Ame.]

To-bac′conist, n. புகையிலை வியாபாரி, a dealer in tobacco.

To-day′, n. & adv. இன்று, இன்றைத்தினம், இன்றைக்கு, (on) the present day, (on) this day. [AS. to, corr. of 'the' or 'this' + day.]

Tod′dle, vi. அடியடிநட, பலவீனமாய்நட, walk with short and unsteady steps.

Tod′dy, n. கள், மது, சாறு, a juice drawn from various palms, palm-wine. [Hi.]

Toe, n. கால்விரல், one of the digits of the foot. The great t. = கால் பெருவிரல். [AS.]

To-geth′er, adv. கூட, கலந்து, ஒருமிக்க, சஹி, தம், கூடி, in company or association, unitedly, in concert, conjointly, at the same time or place. [AS. to, to + gador, at once.]

Toil, vi. [OD.; akin to Till, v.] பாடுபடு, கஷ்டப்படு, சிரமப்படு, வேலை செய், பிரயாசப்படு, labor, work. —n. பாடு, வேலை, கஷ்டம், labor, work, exertion; [F., fr. L. tela, a web.] வலை, பாசம், net, snare, web.

Toil′er, n. கஷ்டப்படுவோன், உழைப்பாளி, பாட்டாளி, laborer.

Toi′let, n. உடுப்பு, துஸ்து, அணிகலம், dress, attire. [F. toilette, formerly a sort of wrapping cloth, toile, a cloth, fr. L. tela, a web.]

Toil′some, a. பாடுள்ள, கஷ்டமான, வருத்தமான, laborious, wearisome. [fr. Toil.]

To′ken, n. அடையாளம், குறி, sign, symbol, indication, mark. [AS.]

To′la, n. தோலா, ரூபாயெடை. [Hi., fr. Sk. tula, a balance.]

Told, pt. & pp. of Tell. சொன்னேன், சொன்னான், மு-வை.

Tol′erable, a. சஹிக்கக்கூடிய, சஹிக்கத்தக்க, bearable, endurable, supportable; சம்மதிக்கத்தக்க, அனுமதிக்கத்தக்க, sufferable, allowable; சாதாரணமான, மிகவும் நல்லதும் மிகவும் கெட்டதுமல்லாத, moderately good or agreeable, passable. [L.; see Tolerate.]

Tol′erance, n. சஹித்தல், பொறுத்

தல், endurance ;சம்மதித்தல்,இருக்கவிடல்,நடக்கவிடல்,சகிக்கானம், toleration. [L.; see Tolerate.]

Tol'erant, *a.* மற்றவர்களைத் தம்முடைய இஷ்டப்படி நடக்கவிடுகிற, சகிக்கிற, இருக்கவிடுகிற, தடுக்காத, tolerating, forbearing, indulgent. [L.; see Tolerate.]

Tol'erate, *vt.* சகி, பொறு, bear, endure; ஒப்பு, இருக்கவிடு, செய்யவிடு, நடக்கவிடு,தடாமலிரு, allow, permit, put up with, suffer or allow to exist or take place. [L. *tolero, toleratum*, to bear or support; Sk. *tul*, to bear.]

Tol'er-a'tion, *n.* சகித்தல், ஒப்பல், சம்மதித்தல், அன்னியமத அபேஷம் இல்லாமை,tolerating,allowance of what is not wholly approved, allowance of differences of opinion, freedom from bigotry. [fr. Tolerate.]

Toll, *n.* [AS.] சுங்கம், ஆயம், தீர்வை, வரி, custom, duty, tax, impost ; [imi.] திருத்தி திருத்தியடிக்கும் மணிச்சத்தம், the sound of a bell rung slowly.—*vt.* & *vi.* மணியடி, ring(slowly).

Toll'er, *n.* ஆயக்காரன், சுங்கம்வாங்குகிறவன், toll-collector ;மணியடிக்கிறவன்.

Toll'-gate', *n.* சுங்கச்சாவடி, சுங்கத்துறை, a gate where toll is taken.

Tom'ahawk, *n.* கைக்கோடரி, மழு, a kind of war-hatchet, battle-axe.

Trim, *a.* சொகுசான, நேர்த்தியான, ஒழுங்கான, கிரமமான, சரியாய் ஏற்படுத்தப்பட்ட, neat, in good order, fair, compact, fitly or properly adjusted, tidy, spruce, precise, nice; ஆயத்தம் சித்தம் அ. தயார் செய்யப்பட்ட, made ready for service or use.—*n.* வஸ்து, உடுப்பு, அலங்காரம், கோலம், dress, gear, ornaments; ஸ்திதி ஏற்பாடு, condition, order, disposition, state of preparation.—*vt.* சீர்திருத்து, திருத்து, ஒழுங்கு பண்ணு, நேர்த்தியாக்கு, make t., put in due order for any purpose, adjust, make neat, right or pleasing; உடுப்புப்போடு, அலங்கரி, சிங்காரி, dress, decorate, embellish; தலைமயிர் செடி மு-வைகளைகத்திரித்துத்திருத்து, make orderly, remove excrescences and ragged edges of, clip, lop, shave, prune, or do the like, as, the hair, a tree &c.—*vi.* இரண்டுபக்ஷத்தாரிலொருவருடனும் சேராமல் இருவருக்கும் அனுகூலமாயிருந்தால்போலிரு, hold a middle course or position bet. parties so as to appear to favor each. [AS.]

Trim′eter, *n.* முச்சீரடிச் செய்யுள், a line or verse of three measures.

Trim'ly, *adv.* நேர்த்தியாய், அழகாய், சொகுசாய், neatly, nicely, sprucely; ஆயத்தமாய், சித்தமாய், தயாராய், in readiness.

Trim'mer, *n.* இரண்டுபக்கத்தாரோடும் சேராமலிருப்பவன், சமயத்திற்குத்தக்கபடி நடப்போன், time-server.

Trin'ity, *n.* திரிமூர்த்தி, திரியேகத்துவம், மூர்த்தித்திரியம், a union of three in one, triunity, triad. [F.; L. *trinitas*, fr. *trini*, three each.]

Trin'ket, *n.* சிற்றாபரணம், அற்பபூஷணம், சிற்றுடைமை, a small ornament; கொஞ்சம் விலையுள்ள வஸ்து, a thing of little value, a trifle.

Tri'o, *n.* திரியம், திரிகம், மூவர், a set of three, three united. [It., fr. L. *tres*, three.]

Trip, *n.* சிறுபிரயாணம் சு.யாத்திரை, பயணம், அற்பதூரம்போதல், a short journey, excursion, jaunt; லேசாயும் சீக்கிரமாயும் நடத்தல், moving with light quick steps; கால்தவறல், அடிதவறல், a false step, misstep, a stumble; இடறு, வழுக்கு, error, mistake.—*vi.* லேசாயும் வேகமாயும் நட, move with light quick steps, move the feet nimbly, walk lightly; சிறுபிரயாணஞ்செய், அற்பதூரம் போ, make a brief journey or pleasure excursion; கால்தவறு, அடிதவறு, make a false step, stumble; தவறு செய், தப்பிதஞ் செய், err, mistake, fail.—*vt.* கால் தவறிவிழும்படி செய், தட்டிவிழுத்து, cause to stumble; பங்கப்படுத்து, cause to fail, overthrow.

Trip'artite, *a.* மூன்றுபங்காயிருக்கிற, divided into three parts; மூன்றுபிரதியுள்ள, having three copies; மூவர் சேர்ந்துசெய்த, made bet. three parties.

Trip'ar-ti'tion, *n.* மூன்றுபாகங்கள் செய்தல், division into three parts.

Tripe, *n.* வயிற்றிலுள்ள குடல்.

Triph'thong, *n.* ஆங்கிலேயாதி பாஷைகளில் ஒரு தொனிமாத்திரமுள்ளமூன்று உயிரெழுத்துகளின் கூட்டம், a combination of three vowels forming one sound.

Trip'le, *a.* மும்மடங்கான, மூன்றுவிதமான, thrice repeated, threefold.—*vt.* மும்மடங்காக்கு, make threefold or thrice as much, treble. [L. *triplus*. see Double.]

Trip'let, *n.* செய்யுளின் மூவடி, three verses or lines rhyming together; மூன்றின்கூட்டம், a group or collection of three things.

Trip'licate, *a.* மும்மடங்கான, threefold.—*n.* ஒரு எழுத்தின்மூன்றாம் நகல், a third copy.

Tri-plic'ity, *n.* மும்மடங்கு, திரிகுணம், trebleness.

Trip'ly = Trebly.

Tri'pod, *n.* முக்காலிப்பலகைச் சட்டம் மு-து, a three-legged stool, stand or the like, trivet. [Gr. *tri*=*treis*, three + *pous*, *podos*, a foot.]

Trip'ping, *a.* விரைவான, வேகமான;

குறித்ததுபோல சித்திரமெழுதப் பட்ட.

Tri-sect′, *vt.* மூன்று சமபாகங்கள் செய், divide into three equal parts.

Tri-sec′tion, *n.* மூன்று சமபாகங்கள் செய்தல், division into three equal parts.

Tris′yl-lab′ic, *a.* மூன்றசையுள்ள, consisting of three syllables.

Tri-syl′lable, *n.* மூவசைமொழி, மூன்றசைப்பதம், a word of three syllables.

Trite, *a.* விந்தையில்லாத, விசேஷமில்லாத, சாமானிய, அற்ப, சர்வ சாதாரணமாய்த் தெரிந்த, stale, worn-out, common, common-place, hackneyed. [L. *tritus*, pp. of *terere*, to rub, wear out.]

Trit′urate, *vt.* அரை, பொடிசெய், சூரணம்செய், தூள்செய், rub, grind, pulverize, comminute, powder, levigate. [L. *triturare*, to thrash, fr. *terere*, *tritum*, to rub.]

Trit′u-ra′tion, *n.* அரைத்தல், பொடி செய்தல், சூரணம்செய்தல், தூள் செய்தல், powdering, pulverization, comminution, levigation.

Tri′umph, *n.* ஜயம், வெற்றி, விஜயம், success, victory, conquest; வெற்றியினாலுண்டாகும் சந்தோஷம் அ. உற்சாகம், ஆர்ப்பரிப்பு, joy for success, exultation; ஜயோச்சவம் அ. பவனிபோதல், a magnificent procession & ceremonial in honor of a victorious general, great gladness & rejoicing. — *vi.* ஜெயி, வெல், சாதி, வெற்றிகொள், கெலி, obtain victory, meet with success, be successful; வெற்றிகொண்டதினால் சந்தோஷி, rejoice over success, exult. [L.]

Tri-um′phal, *a.* ஜய சம்., ஜயசூசகமான, pert. to, indicating, or in honor of, a triumph or victory.

Tri-um′phant, *a.* வென்ற, கெலித்த, ஜயமடைந்த, ஜெயித்த, victorious, crowned with victory or success, successful; வென்றதினால் சந்தோஷிக்கிற, rejoicing or exulting for victory, exultant.

Tri-um′virate, *n.* மூவர் துரைத்தனம், government by three men in coalition.

Tri′une, *a.* திரியேகத்துவ, திரியேக, being three in one.

Tri-u′nity, *n.* மூன்றொன்றாயிருக்கும் தன்மை, திரைகத்துவம், திரியேகம்.

Triv′et, *n.* முக்காலிப்பலகை அ. சட்டம், a three-legged stool or stand.

Triv′ial, *a.* சொல்பமான, அல்பமான, எளிய, நிஸ்ஸாரமான, of little worth or importance, trifling, petty, paltry, inconsiderable. [F; L. 'common', fr. *trivium*, a place where three roads meet, *tri*, three + *via*, a way.]

Triv′i-al′ity, *n.* அமுக்கியம், நிஸ்ஸாரம், முக்கியமின்மை, insignificance; அல்பம், அற்பவிஷயம், a trifle

Tri′week′ly, *a.* வாரத்திற்கு மூன்று

முறையாவது மூன்று வாரத்திற் கொருமுறையாவது ஆகிற, occurring or appearing thrice a week or once in three weeks.—*n.* வாரத்திற்கு மூன்றுமுறை பிரசுரிக்கும் பத்திரிகை, a t. publication.

Tro-cha′ic, *a.* (யாப்பிலக்கணத்தில்) குருவும் லகுவுமுள்ள கணங்களோடு கூடிய, consisting of trochees.

Tro′chee, *n.* யாப்பிலக்கணத்தில் குருவும் லகுவுமுள்ள கணம், a foot of two syllables, the first long or accented and the second short or unaccented. [Gr. *trecho*, to run.]

Tro-chom′eter, *n.* வண்டிச்சக்கரம் சுற்றும் தடவையின் எண்ணிக்காட்டும் யந்திரம், a contrivance for computing the revolutions of a wheel, odometer.

Trod, Trod′den, *pt.* & *pp.* of Tread.

Troll, *vt.* வட்டமாய்ச்சுற்று, roll, turn; பல்லவிபாடு; மீன்பிடி.—*vi.* சஞ்சரி, திரி.—*n.* ஒருவிதப்பாட்டு.

Trol′ly, *n.* சிறுவண்டி, a form of truck.

Trom′bone, *n.* பெரும்பூரிகை, எக்காளம், a kind of large trumpet.

Troop, *n.* கூட்டம், கும்பு, சமூகம், a collection of people, a company, a party, group; சேனை, படை, சைனியம், பட்டாளம், அணி, army; சிறுகுதிரைப்பட்டாளம், a small body of cavalry; = troupe.—*vi.* கூட்டமாய்ப்போ, move in t-s or crowds. [F. fr. LL. *troppus.*]

Troo′per, *n.* குதிரைவீரன், cavalryman, horse-soldier.

Trope, *n.* (ரூபகமுத.) அர்த்தாலங்காரம், a figure of speech, a figurative use of a word. [F.; L. *tropus*, Gr. *tropos*, a turn, *trepo*, to turn.]

Tro′phy, *n.* சத்துருக்களிடத்தில் பறித்த பொருள், ஜயசின்னம், வெற்றிக்குறி, any thing taken from an enemy and preserved as a memorial of victory, a memento of success. [F. & L.; Gr. *trope*, a putting to rout.]

Trop′ic, *n.* அயனாந்த விருத்தம்.—*a.* உஷ்ணதேச சம்.. [L. *tropicus*, Gr. *tropikos*, turning, pert. to a turn (of the sun).]

Trop′ical, *a.* = Tropic.

Trot, *n.* ஒருவித குதிரைநடை, கெச்சை நடை, கதம், a particular kind of pace of a horse.—*vi.* குலுக்கிநட, கெச்சை நடை நட.—*vt.* கெச்சை நடை நடக்கச்செய். [F. & It., fr. L. *tolutare.*]

Troth, *n.* சத்தியம், நிஜம், யதார்த்தம், truth; விசுவாசம், நம்பிக்கை, belief. [a fo. of 'truth.']

Trou′ble, *n.* தொந்தரவு, கஷ்டம், ஆயாசம், அலைக்கழிவு, toilsome exertion, labor, pains; வியாகுலம், துக்கம், கலக்கம், grief, sorrow, affliction, annoyance, vexation, agitation, uneasiness, anxiety, worry; ஆபத்து, விபத்து, calamity, adversity, misfortune; சங்கடம், தொல்லை, சல்லியம், inconvenience; தொந்தரவு செய்தல், இம்சைசெய்தல், molestation, disturbance.—*vt.* தொந்தரவு செய்,

சங்கடப்படுத்து, தொடு, உலை, குழப்பு, annoy, vex, tease, harass, molest, afflict, grieve, distress, disturb ; சங்கடமுண்டாக்கு, give inconvenience or labor to. [F. *troubler*, fr. L. *turbula*, dim. of *turba*, a crowd, confusion.]

Trou'blesome, *a.* தொந்தரவுண்டாக்குகிற, வாதையான, தொந்தரையான, giving trouble, annoying, vexatious, tiresome, wearisome, harassing, disgusting.

Trou'blous, *a.* கலக்கமான, தொந்தரவான, வியாகுலமான, அலைக்கழிவான, அலட்டான, full of trouble, causing trouble, tumultuous, full of commotion, disturbance, or disorder.

Trough, *n.* நீண்ட மரத்தொட்டி, பீலி, பத்தல், a long tub. [AS.; akin to Tray.]

Troupe, *n.* நாடகர்குழு. கூட்டம், மேளம், a troop or company of actors or stage-players or performers of any sort. [F.; same as Troop.]

Trou'sers, *n.* காற்சட்டை, காலுடை, சல்லடம், இஜார், ஷருய், a garment extending from the waist to the ankles or the knees, pantaloons. [OF.]

Trout, *n.* ஒருவிதமீன்.

Trove, *n.* கண்டுபிடிக்கப்பட்டவஸ்து, a thing found.

Trow'el, *n.* கொல்லறு, a mason's tool for spreading mortar or plaster. [L. *trulla*, dim. of *trua*, a ladle.]

Trow'sers=Trousers.

Troy'-weight, *n.* பொன் வெள்ளி நிறுக்கும் அளவு. [From Troyes in France, where it was first adopted.]

Tru'ancy, *n.* சோம்பல்தனம், வேலைக்கள்ளத்தனம், idleness, shirking duty.

Tru'ant, *a.* சோம்பலான, வேலையைவிட்டுத்திரிகிற, சோம்பித்திரிகிற, wandering from business or duty, idle, shirking duty.—*n.* சோம்பேறி, வேலைக்கள்ளன், சோம்பன், வேலையை விட்டுத்திரிகிறவன், one who stays away from business or duty, idler, loiterer, shirker. [OF. 'a vagabond'.]

Truce, *n.* கொஞ்சக்காலம் யுத்தவோய்வு, சண்டையொழிவு, போர்விடுகை, சண்டை நிறுத்தியிருக்கை, a temporary cessation or suspension of hostilities, armistice. [AS. *treow*, fidelity, faith.]

Truck, *n.* கெட்டியான சிறுசக்கரம், a small strong wheel ; ஒருவித சரக்கு வண்டி, a kind of strong carriage for goods; பண்டமாற்று, சரக்குமாற்று, barter.—*vi.* & *vt.* பண்டமாறு, சரக்குமாற்றிக்கொள், barter. [L. *t r o c h u s*, an iron hoop ; Gr. *trochos*, a wheel.]

Truc'kle, *n.* சிறு சக்கரம், a small wheel or caster.—*vi.* இணங்கு, சம்மதி, பதுங்கு, நீசமாய் ஒருவனுக்குள்ளடங்கு, yield servilely. [dim. of 'truck'.]

Truc'kle-bed', *n.* ஒருகட்டிலின் கீழ் தள்ளத்தக்க கால்களுக்குசக்கரங்கள்

அமைந்த சிறு கட்டில், a low bed on wheels to be pushed under another when not in use, trundle-bed.

Tru'culence,—cy, n. குரூரம், பயங்கரம், வேடத்தனம், savageness, ferociousness.

Tru'culent, a. பயங்கரமான, குரூரமான, மிருகப்பிராயமான, கொடிய, வேடத்தனமான, fierce, ferocious, savage, barbarous, cruel. [L., fr. *trux, trucis,* fierce, savage.]

Trudge, vi. கஷ்டமாய்நடந்துபோ, தளர் நடையாய்ப் பிரயாணம்போ, walk or march with labor, jog along, move wearily. [Prob. modi. of 'tread', and influenced by 'drudge'.]

True, a. நிஜமான, சத்தியமான, யதார்த்தமான, வாஸ்தவமான, conformable to fact, real, not false; சரியான, கச்சிதமான, வித்தியாசமில்லாத, correct, exact, accurate; நம்பத்தக்க, சுவாமிபக்தியுள்ள, faithful, loyal, not false or perfidious; சுத்தமான, உண்மையான, genuine, pure, real. [AS.; cog. Sk. *dhru,* to be fixed.]

Tru'ism, n. பிரத்தியக்ஷமான அ. ஸ்பஷ்டமான நிஜம், a statement wh. is plainly true.

Tru'ly, adv. நிஜமாய், உண்மையாய், சத்தியமாய், உள்ளபடி, according to truth or fact, really; சரியாய், கச்சிதமாய், exactly, accurately; பக்தியாய், faithfully; நிஷ்கபடமாய், சுத்தமாய், sincerely, honestly; நிஜத்தில், வாஸ்தவத்தில், உள்ளபடி, in fact, indeed, in reality, in truth.

Trump, n. பூரிகை, எக்காளம், trumpet; வெற்றிக்கடுதாசி, துருபு, a winning card, a card of the suit that temporarily ranks above, and takes any card of, the other suits. [cor. & cont. of 'triumph.']

Trump'ery, n. வெறும்வேஷம், பொய் வீண்பேச்சு, worthless finery. [F. *tromper,* to deceive.]

Trump'et, n. பூரிகை, எக்காளம், a wind instrument with a flaring mouth.—*vt.* எக்காளமூதிசாற்று, பிரசித்தம் பண்ணு, publish by sound of trumpet, proclaim.—*vi.* எக்காள மூது; பெருந்தொனி செய்; give forth a sound from or as from a t.. [F. *trompette,* dim. of *trompe.*]

Trump'eter, n. எக்காளமூதுகிறவன்; சாற்றுகிறவன்; one who sounds a trumpet or proclaims.

Trump'et-flow'er, n. ஒரு வகைப் புஷ்பம்.

Trun'cate, vt. முனை அ. சிகரம் அறு, கூழையாக்கு, மொட்டையாக்கு, cut the top or end from, lop.

Trun-ca'tion, n. முனை அ. சிகரம் அறுத்தல், கூழையாக்கல், மொட்டையாக்கல்.

Trun'cheon, n. குறுந்தடி, தண்டம், கதை, a short staff, club, cudgel; சேனாதிபதியின் வேத்திரம் அ. கோல், a military staff of command, baton. [OF.]

Trun'dle, n. சிறுசக்கரம், உருளை,

a little wheel; உருண்டைவஸ்து, a round body; புரளுதல், உருளுதல், a rolling motion.—*vt.* புரளு, உருளு, roll along.—*vi.* சிறுசக்கரங்களின்மேல்போ, go or move on small wheels; புரண்டுபோ, உருண்டுபோ, roll. [AS. 'a little shield'.]

Trun'dle-bed'=Truckle-bed.

Trunk, *n.* அடிமரம், அடியிலிருந்து கிளைவரைக்குமிருக்கும் பாகம், the stem or body of a tree, stock, stalk; தலையும் அவயவங்களும் தவிர மற்றபாகம், முண்டம், the body of an animal apart from the head and limbs; எதாவதின் (கிளைகள் மு. வை விட்டு மற்ற) முக்கிய பெரிய பாகம், the main body of anything; தும்பிக்கை, proboscis; (பிரயாணத்தில்கொண்டுபோகும்) உடுப்புப்பெட்டி, a box or chest for containing clothes &c. [F.; L., fr. *truncus*, maimed, mutilitated.]

Truss, *n.* மூட்டை, கட்டு, bundle; பீஜத்தை மேலேபிடிக்கும்படி இடுப்பில் கட்டிக்கொள்ளும் ஒருவித இடைக்கச்சை, a bandage or apparatus used in cases of hernia.

Trust, *n.* நம்பிக்கை, விசுவாசம், confidence, faith, reliance, belief; நம்பி சரக்கு மு-வை கொடுத்தல், credit, delivery or sale of goods on credit; நம்பி ஒருவன் சுவாதீனத்தில் வைக்கப்பட்டது, that wh. is intrusted to one, charge; ஜாக்கிரதை, safe-keeping, care; பொறுப்பு, உத்தரவாதம், responsibility.—*vt.* நம்பு, (ஒருவன் மேல்) பாரம்வை, rely on, confide in, place confidence in; (வார்த்தை) நம்பு, விசுவாசி, believe, give credence to; நம்பி ஒப்புவி, intrust; கடனுக்குக்கொடு, sell to upon credit.—*vi.* நம்பிக்கை யுண்டாயிரு, have t., confide, place confidence, be confident. [Ic.; cog. Trow, True.]

Trus-tee', *n.* (ஒருகாரியத்தினிமித்தம் உபயோகப்படுத்த) ஒரு ஆஸ்தியை தன் சுவாதீனத்தில் வைத்துக் கொள்ள நியமிக்கப்பட்டவன், தர்மகர்த்தா, one who is appointed to hold a property in trust.

Trust'ful, *a.* நம்பின, பூரணவிசுவாசமுள்ள, full of trust, trusting.

Trust'ingly, *adv.* பூரணவிசுவாசத்துடன், நம்பிக்கையாய், trustfully.

Trust'-wor'thy, } *a.* நம்பத்தக்க, நம்
Trust'y, } பப்படத்தக்க, worthy of trust or confidence, reliable.

Truth, *n.* நிஜம், சத்தியம், வாஸ்தவம், யதார்த்தம், உண்மை, மெய், conformity to fact or reality, exact accordance with that wh. is, has been, or shall be; சத்தியவாதித்துவம், veracity; பரமார்த்தம், தத்துவார்த்தம், reality, verity; சித்தாந்தம், சூத்திரம், an established principle, a fixed law. [AS.]

Truth'ful, *a.* சத்தியவாதியான, நிஜம் தப்பாத, உண்மையான, மெய்யான, veracious.

Try, *vi.* யத்தனி, செய்யப்போ,

செய்யப்பார், endeavor, make an effort or attempt, strive.—*vt.* பிரயத்தனி, attempt, endeavor, essay; பரீக்ஷி,பரிசோதி,examine, test; லோஹங்களை சுத்திபண்ணு, purify, refine, assay; விசாரணை செய், விமரிசி, examine, investigate judicially, inquire into; அநுபவித்துப்பார், செய்துபார், experiment with; கடின சிரமை யுண்டாக்கு, strain; கஷ்டமுண்டாக்கி சோதி, cause suffering or trouble to for testing faith, subject to tribulation, afflict. [F. *trier*, to pick out, cull; L. *terere*, to rub, grind, thresh.]

Try'ing, *pa.* கடினசிரமை யுண்டாக்குகிற, ஆயாசகரமான, கஷ்டமான, severe, hard, testing.

Tryst'ing-day', *n.* சிநேகிதர் மு. வர்கள் சந்திக்க நிச்சயித்துக்கொண்ட தினம்.

Tryst'ing-place', *n.* சிநேகிதர் மு.வர்கள் சந்திக்க நிச்சயித்துக்கொண்ட இடம், rendezvous, a pre-arranged meeting place.

Tub, *n.* தொட்டி, a broad open-topped vessel. [Du.]

Tube, *n.* குழல், குழாய், pipe, a long hollow cylinder.—*vt.* குழல் வை, furnish with a t. [F.; L. *tubus.*]

Tube'form=Tubular.

Tu'ber, *n.* கிழங்கு, an underground thickened root-stock of plants.

Tu'bercle, *n.* பரு, புண், any small mass or aggregation of morbid matter; கழலை, காய், any small warty excrescence.

Tu'biform=Tubular.

Tub'ing, *n.* குழாய்செய்தல், making tubes; குழாய்கள், tubes, collectively; குழாய்த்துண்டு, a length or piece of a tube.

Tu'bular, *a.* குழல்போலிருக்கிற,குழாயாகாரமாயிருக்கிற, in the form of a tube, tubiform.

Tu'bulous, *a.* குழாய்போன்ற, resembling a tube; சிறுகுழாய்கள் நிறைந்த, consisting of small tubes.

Tuck, *n.* துணிச்சொருகு, மடிப்பு, துணியின் சொருகின பாகம், a plait.—*vt.* சொருகு, மடி, சுருக்கு, சுற்றிப்போடு, draw up, shorten, fold in, gather up; மூடு, மறை, inclose, put within.

Tues'day, *n.* செவ்வாய்க்கிழமை, மங்களவாரம், ஐயவாரம், the third day of the week. [AS. 'Tiw's day,: Tiw, the Northern Mars or god of war.]

Tuft, *n.* குஞ்சம், குச்சம்; கொலை; திரள், கற்றை; குடுமி, கொண்டை, சிண்டு, தாரை, a collection, knot, or bunch of small, flexible, or soft things; கற்றை, திரள், cluster, clump. [F. *touffe.*]

Tuf'ted, *a.* குச்சமுள்ள, having a tuft.

Tuft'y, *a.* குஞ்சங்களுள்ள, having tufts; கும்புகும்பாய் வளருகிற, growing in tufts.

Tug, *vt.* & *vi.* இழு, வலி, வாங்கு, pull or draw with great effort, drag, tow, haul.—*n.* பூரணபலத்துடன் இழுத்தல், a pull with the utmost effort. [AS.]

Tu-i'tion, *n.* படிப்பித்தல், பயிற்சி, சிக்ஷை, teaching, instruction; சம்ரக்ஷணை, superintending care over a young person, guardianship. [L. *tuitio*, fr. *tueri*, to see, watch.]

Tu'lip-tree', *n.* பூவரசுமரம்.

Tum'ble, *vi.* புரளு, roll over; இடறிவிழு, roll or fall down suddenly and violently; கரணம்போடு, perform an acrobatic feat, vault. —*vt.* புரட்டு, உருட்டு, விழுத்து, turn over, roll, throw down or headlong; குழப்பு, disorder.—*n.* விழுதல், விழுகை, fall; புரளல், உருளல், rolling over, tumbling. [AS. *tumbian*, to turn heels over head.]

Tum'bler, *n.* கரணம்போடுகிறவன், கூத்தாடி, acrobat; [ori. made with a pointed or convex base, causing it to tumble over if set down and so compelling the drinker to finish his measure.] பஞ்சபாத்திரம்போன்ற பானபாத்திரம், a drinking glass.

Tum'brel', *n.* சேனையின்பின்போகும் சரக்குவண்டி.

Tu'me-fac'tion, *n.* வீக்கம், புடைப்பு, உப்பல், swelling, rising in a tumor. [rise in a tumor, swell.

Tu'mefy, *vi.* வீங்கு, உப்பு, புடை,

Tu'mid, *a.* வீங்கின,உப்பின,swollen. [L. *tumere*, to swell.] [state.

Tu-mid'ity, *n.* வீங்கல், a swollen

Tu'mor, *n.* கட்டி, பரு, a morbid enlargement; வீக்கம், a swelling. [L., fr. *tumere*, to swell.]

Tu'mult, *n.* சந்தடி, கலஹம், கலக்கம், குழப்பம், ஊர்ப்புரளி,uproar, turmoil, commotion, agitation, turbulence, disturbance, riot, noise, hubbub, bustle, noisy confusion. [L. *tumultus*, fr. *tumere*, to swell.]

Tu-mul'tuous, *a.*குழப்பமான,அமளியான,கலஹமான,noisy,turbulent, agitated, boisterous, riotous.

Tun, *n.* பெரும்பீப்பாய், a large cask.—*vt.* பெரும் பீப்பாய்களில் வை, put into t-s. [AS.]

Tune, *n.* இராகம், a melodious succession of musical tones, air, melody; இன்னிசை, சமதாளம், மேளனம், harmonious accordance; சுதி, pitch of the voice or an instrument; ஐக்கியம்,சம்மதம், harmony, concord.—*vt.* சுதிகூட்டு, தந்திமுறுக்கு, வாத்தியம் சரிப்படுத்து, put in t., attune; பாடு, sing (with melody or harmony); செவ்வைப்படுத்து, adjust. [a fo. of Tone.]

Tune'ful, *a.* இன்னிசையான, மதுரநாதமுள்ள, musical, melodious, harmonious.

Tune'less, *a.* இன்னிசையற்ற, அபஸ்வரமான, unmusical, inharmonious.

Tu'nic, *n.* ஒருவித உள்ளுடுப்பு, உட்சட்டை, a sort of under-garment. [L.]

Tun'nage=Tonnage.

Tun'nel, *n.* தரைக்கீழ்ப்பாதை, சுரங்கம், மலை மு. வைகளில் துளைத்த வழி, a subterranean passage,

passage cut through a hill &c.; சோக்களில் திரவம் வார்ப்பதற்கு உபயோகிக்கும் வாயகன்ற குழல், funnel. [dim.: from its resemblance to a 'tun'.]

Tur'ban, } n. தலைப்பாகை, a form
Tur'band, } of head-dress. [F., fr. Tu. & Pe.] [wearing a turban.

Tur'baned, a. தலைப்பாகையுள்ள,

Tur'bid, a. சேறுன, கலங்கலான, தெளிவற்ற, சகதியான, muddy, having the lees or sediment stirred up, thick, not clear, foul with extraneous matter. [L., fr turba, tumult, turbare, to disturb.]

Tur-bid'ity, } n. மண்டி சேறு
Tur-bid'ness, } அழுக்கு கலந்திருத்தல், muddiness, foulness.

Tur'bith, n சிவதைவேர்.

Tur'bot, n. திருக்கைமீன்.

Tur'bulence, n. கலகம், கொந்தளிப்பு, குழப்பம், கலக்கமான ஸ்திதி, குழப்பமானஸ்திதி, a disturbed state, tumult, commotion, agitation, disorder.

Tur'bulent, a. குழப்பமான, கொந்தளிப்பான, கலக்கமான, கலகமுள்ள, disturbed, tumultuous, agitated, riotous; அடிப்பான, முரண்டான, கீழ்ப்படியாத, refractory, unquiet. [L., fr. turba, disorder.]

Turf, n. புற்பொழி, புற்றரை, சாட்வலம், புல்லின் வேர் மூ-லை உள்ள மேலடுக்குமண், புற்பற்றை, புன்னிலம், the upper stratum of earth filled with the roots of grass &c., sward, sod. [AS.; akin to Sk. darbha, a kind of grass, a tuft of grass.]

Turf'y, a. கழுப்பற்றையால் மூடப்பட்ட, covered with turf.

Tur'gid, a. வீக்கமான, உப்பின, swelled, swollen, bloated, inflated, tumid. [L., fr. turgere, to swell.]

Tur-gid'ity, n. வீக்கம், அதைப்பான ஸ்திதி, a swollen state, tumidness.

Turk, n. துலுக்கன்.

Tur'key, n. சீமைக்கோழி, வான் கோழி, கானுங்கோழி.

Tur'meric, n. மஞ்சள். [doubtful origin.]

Tur'moil, n. கலக்கம், தாறுமாறு, சந்தடி, குழப்பம், சிரழிவு, tumult, disturbance, commotion; தொந்தரவு, சிரமம், harassing labor, trouble. [doubtful origin.]

Turn, vi. திரும்பு, பெயர், புரளு, take the opposite, or a different, direction, be directed otherwise, be deflected; வட்டமாய்த்திரும்பு, சுற்றித்திருகு, சுற்று, move round, have a circular motion, revolve, rotate; ஆடு, அசை, move, go; மாறிப்போ, வேறுபதார்த்தமாய்ப் போ, be changed or transformed, become transmuted; அந்தமாகு, முடி, result, terminate, issue. At last it t-ed out true= கடைசியில் அது நிஜமாய் ஏற்பட்டது.—vt. திருப்பு, give another direction to, deflect; வட்டமாய்த்திருப்பு, cause to revolve; ஆட்டு, move, put in motion; மாற்று, ரூபமாற்று, வேறுபதார்த்த மாக்கு, change, alter, transform,

metamorphose, transmute, convert; கடை, கடைச்சல்பிடி, form, shape, or fashion, in a lathe. T. out=வெளியேதுரத்து. T. over =புரட்டு, உருட்டு. T. the head of=தலைகிறுகிறுக்கச் செய். T. the stomach of=வயிற்றில் புரளும்படி அ.வாந்திவரும்படிசெய், nauseate, sicken.—*n.* திரும்புதல், change of direction or course, deflection, bend; வட்டமாய்த்திரும்புதல், சுழற்சி, revolution, rotation; மாற்றம், change, vicissitude; வளவு, a meander, bend; முறை, an opportunity, occasion, or chance, had in alternation with another or others, or in rotation; ரூபம், ரீதி, சாயல், form, cast, shape; இஷ்டம், inclination, bent; அவசியம், அக்கறை, அகத்தியம், exigence By t-s=முறைப்பிரகாரம், ஒருவன்பின்னொருவன். Do one a good or a bad t.=ஒருவனுக்கு உபகாரம் அ அபகாரம் செய. [F. *tourner*, fr. L. *tornare*, to turn in a lathe, *tornus*, a lathe.]

Turn′-coat′, *n.* கக்ஷிமாறி, பக்கமாறி, நிலைமாறி, renegade, apostate.

Turn′er, *n.* கடைச்சற்காரன், one who forms articles with a lathe.

Turn′ery, *n.* கடைச்சல், turning articles in a lathe, or a place where the work is carried on.

Turn′ing, *n.* புறமாறுகை, திரும்புதல், changing direction; வளைவு, bend; மூலை, corner; கடைச்சல், shaping articles in a lathe; t-s., கடைச்சல் பிடிக்கும்போது விழும் துண்டுகள், the chips cut off in the process of t.

Tur′nip, *n.* ஒருவகைகிழங்கு.

Turn′key, *n.* சிறைச்சாலைசாவியைப் பத்திரம் பண்ணுகிறவன், warder.

Turn′pike′, } *n.* வண்டிகள் மு. வ
Turn′stile′, } ற்றிற்கு சுங்கம்வாங்குமிடத்தில் வழிக்குக்குறுக்கே போட்டிருக்கும் கதவுபோன்றது, toll-gate; நிலையாடிக்கதவு.

Tur′pentine, *n.* தேவதாரு மரத்தின் பிசின். T. oil = கர்ப்பூரத்தைலம் எனசொல்லப்படுவது.

Tur′pitude, *n.* துஷ்டத்தனம், துன்மார்க்கம், shameful wickedness, depravity. [L., fr. *turpis*, foul, base.]

Tur-quois′, *n.* வைடூரியம் [F.: because first brought from Turkey.]

Tur′ret, *n.* சிறுகோபுரம், a small tower rising above a larger structure. [OF. *tourette*, dim. of *tour*, a tower; L. *turris*, a tower.]

Tur′tle, *n.* ஆமை, tortoise.

Tush, *interj.* சீ! pshaw!

Tusk, *n.* (கிலஜந்துக்களின்) தந்தம், a long pointed tooth. [AS.]

Tusked, } *a.* தந்தமுள்ள, hav-
Tusk′y, } ing tusks.

Tus′sle, *n.* சண்டை, குழப்பம்.—*v.i.* சண்டைபோடு. struggle, scuffle. [coll.]

Tut, *interj.* சீ! தா! tush!

Tu′telage, *n.* பாலனம், போஷணை,

சம்ரக்ஷணை, guardianship, protection; ஒருவன்போஷணையிலிருத்தல், பாலியாவஸ்தை, the condition of being under a guardian. [L. *tutela*, protection, fr. *tutus*, safe, *tueri*, to watch.]

Tu′telar, } *a.* சம்ரக்ஷணைசெய்கிற,
Tu′telary, } protecting, guardian. A t. deity=குலதேவதை, ஆத்மதேவதை. [L.; see Tutelage.]

Tu′tenag, *n.* துத்தநாகம், crude zinc. [In.]

Tu′tor, *n.* சம்ரக்ஷகன், guardian; சிக்ஷகன், குரு, ஆசான், உபாத்தியாயன், படிப்பிக்கிறவன், teacher.—*vt.* சம்ரக்ஷணைசெய், have the care of; கற்பி, ஓதுவி, teach, instruct. [L., fr. *tueri*, to watch, guard.]

Tu′torage, *n.* சம்ரக்ஷணை, guardianship; ஆசிரியத்துவம், tutorship.

Tu′toress, *n.* சம்ரக்ஷணைசெய்யும் ஸ்திரீ, a female guardian; படிப்பிக்கும் ஸ்திரீ, உபாத்திச்சி, a female tutor, an instructress.

Tu-to′rial, *a.* சம்ரக்ஷகன் அ. உபாத்தியாயன், சம்., pert. or belonging to a tutor. [prate, prattle.

Twad′dle, *n.* & *vi.* அலப்பு, பிதற்று,

Twain, *a.* & *n.* இரண்டு; இருவர்; two. [AS.]

Twang, *n.* வில்லின் நாணின் தொனி, a ringing vibrating sound, as of a bow-string when pulled & let go; மூக்கினுல் ஒருவிததொனி, a kind of nasal sound.—*vi.* தொனி, கிண்கிணிடு, sound with a ringing vibration. [imi.]

Tweed, *n.* ஒருவிததுணி, a twilled woollen fabric. [cor. of Twills.]

Twee′dle, *vt.* மெதுவாய்த்தொடு, handle lightly; மயக்கு, ஏய், coax, allure.

Twee′zers, *n. pl.* இடுக்கி, சாவணம், குறடு, small pinchers.

Twelfth, *a.* பன்னிரண்டாம், துவாதச.—*n.* பன்னிரண்டாம்பாகம்.

Twelve, *a.* & *n.* பன்னிரண்டு, துவாதசம். [AS.] [a year.

Twelve′-month, *n.* வருஷம், ஆண்டு,

Twen′tieth, *a.* இருபதாம், இருபதாவது.—*n.* இருபதாம்பாகம்.

Twen′ty, *a.* & *n.* இருபது. [AS. *twentig*, *twa*, two + *tig*, ten.]

Twice, *adv.* இரண்டுமுறை, இருதடவை, இருதரம்; இருமடங்கு, இரட்டிப்பாய், doubly; two times. [AS.]

Twig, *n.* சிறுகொம்பு, கிளை, a small shoot or branchlet of a tree or plant; வளார், மிலாறு, a small slender stick.—*vt.* மிலாற்றுல் அடி, beat with t-s. [AS., akin to *twa*, two: from the bifurcation of the branch.]

Twig′gy, *a.* சிறுகிளைகளால் நிறைந்திருக்கிற, full of twigs.

Twi′light′, *n.* சந்திவெளிச்சம், சந்தியாகாலம், faint light reflected on the earth for a short time after sunset or before sunrise. [AS. *twi*, double (in the sense of doubtful or half) + light.]

Twill, *n.* ஒருவிததுணி அ. நெசவு, a variety of textile fabric or texture.—*vt.* ஒருவித நெசவுநெய், பின்னு, weave in a particular manner. [Sc.]

Twin, *a.* & *n.* ஒரேநரம் பிறந்த இரட்டை பிள்ளைகளிலொன்று, one of two young produced at a birth; t-s, *pl.* இரட்டைப்பிள்ளைகள்; மிதுனராசி. [AS.]

Twin′-born′, *a.* இரட்டையாய்ப் பிறந்த, ஒரேநரம்பிறந்த, born at the same birth.

Twine, *vt.* முறுக்கு, திரி, twist, wreath; சுற்று, wind; சுற்றிக்கொள், encircle, entwine.—*vi.* பின்னப்படு, ஒன்றாய்சேர், twist together, intertwine; கல, கலந்துபோ, become united.—*n.* பின்னப்படல்; முறுக்கல், திரித்தல், பின்னல், twining, twisting, twist; கெட்டிநூல், நூற்கயிறு, புரி, a strong thread, a small cord or string. [AS., fr. *twi*, two.]

Twinge, *n.* நோவு, குற்று, வலி, a sudden sharp pain, a darting pain.—*vi.* குத்து, வலி, நோ, feel a keen, darting, or shooting pain. [AS.]

Twin′kle, *vi.* பொறிபற, மின்னு, sparkle, gleam fitfully, scintillate; கண்சிமிட்டு, blink.—*n.* மினுக்கம், துலக்கம், sparkle, glimmer; இமைப்பு; இமைப்பொழுது; wink. [AS.]

Twin′kling, *n.* கண் இமைத்தல், a wink; மினுக்கம், துலக்கம், sparkling; இமைப்பொழுது, the time of a wink.

Twirl, *vt.* சுற்று, சுழற்று, move or turn round rapidly, whirl round.—*vi.* வட்டமாயும் வேகமாயும் திரும்பு, revolve rapidly.—*n.* சுழற்சி, சுழல், whirl.

Twist, *vt.* பின்னு, திரி, முறுக்கு, twine, form by winding strands together; கோணலாய்த்திருப்பு, distort, pervert; சுற்றிக்கொள், encircle.—*vi.* பின்னப்படு, ஒன்றாகசேர், be twisted or united.—*n.* திரிப்பு பின்னல், twisting, twining; வளைவு, கோணல், a bending, flexure, convolution, contortion; நூல், திரி, சரடு, கயிறு, thread, cord. [AS., fr. *twa*, two.]

Twit, *vt.* வடுச்சொல்லு, தப்புகாண்பித்து நிந்தி, குறைகூறு, taunt, revile, reproach, upbraid.

Twitch, *vt.* இழு, பறி, பிடுங்கு, பிய், pull with a sudden jerk, pluck, snatch.—*n.* இழுப்பு, பறிப்பு, பிடுங்கல், a pull with a jerk, a sudden quick pull.

Twit′ter, *n.* & *vi.* கொடுகொடென்றுசிரி, a half suppressed laugh; giggle.

Two, *a.* & *n.* இரண்டு, துவயம், இரு, உபயம், இருவர். [AS. *twa*; akin to L. & Gr. *duo*, Sk. *dva*.]

Two′fold′, *a.* & *adv.* இரண்டுமடங்கான; இரட்டிப்பாய்; double or doubly.

Ty′ing, *pr. p.* of Tie. கட்டுதல்; முடிப்போடல்.

Tym′panum, *n.* செவித்துவாரம், the middle ear கர்ணபேரி, the drum of the ear, ear-drum. [L. & Gr. 'a kettle-drum'.]

Typ′al, *a.* fr. Type.

Type, *n.* முத்திரை, அச்சு, mark, impression; அடையாளம், குறி, sign, symbol; உதாரணம், மாதிரி,

மோஸ்தர், example, specimen, model, representative, pattern; அச்சு அக்ஷரம், முத்திராக்ஷரம், அச்செழுத்து. [F. & L., fr. Gr. *typos*, a blow, an impression, *typto*, to strike.]

Ty′phoid, *a.* fr. Typhus.

Ty′phoon′, *n.* புசல், hurricane. [Chinese.]

Ty′phus, *n.* விஷசுரம். [Gr. *typhos*, stupor, coma.]

Typ′ical, *a.* மாதிரியான, உதாரணமான, மாதிரியைத் தெரிவிக்கும், pert. to or serving as a type, representative, emblematic. [fr. Type.]

Typ′ify, *vt.* மாதிரிகாட்டு, உதாரணத்தினால் தெரிவி, முன்னறிவி, represent, exemplify, symbolize.

Ty-pog′rapher, *n.* அச்சுப்போடுகிறவன், அச்சுப்பதிப்போன், printer.

Ty′po-graph′ic,—cal, *a.* அச்சு சம்., pert. to typography.

Ty-pog′raphy, *n.* அச்சுப்போடுதல், அச்சுப்பதித்தல், printing with types. [Gr. *typos*, type *grapho*, I write.]

Ty-ran′nic, } *a.* குரூரமான, கொடிய, : கொடுமையான, ஹிம்ஸிக்கிற, cruel, oppressive, despotic, arbitrary.
Ty-ran′nical, }

Tyr′annize, *vi.* & *vt.* கொடுங்கோல் செலுத்து, கொடுமைசெய், act the tyrant, rule with unjust severity, exercise arbitrary power; நெருக்கு, ஒடுக்கு, ஹிம்ஸி, வருத்து, oppress: often with *over*.

Tyr′annous = Tyrannical.

Tyr′anny (டிரனி), *n.* கொடுங்கோன்மை, பிரஜாபீடனம், cruel government, absolute or arbitrary power, despotism; கொடுமை, குரூரம், இடுக்கம், ஹிம்சை, oppression.

Ty′rant (டைரன்ட்), *n.* கொடுங்கோலன், பிரஜாபீடனம் செய்யும் ராஜன், an oppressive or cruel monarch or ruler, despot; ஒடுக்குகிறவன், குரூரன், ஹிம்ஸிக்கிறவன், oppressor. [L. & Gr. 'a despotic ruler'.]

Ty′ro, *n.* எந்தவித்தையாவது வேலையாவது புதிதாய்க் கற்றுக்கொள்ள ஆரம்பித்தவன், ஆரம்பகன், அநுபவமில்லாதவன், beginner, novice, neophyte. [L. 'a newly levied soldier.']

U

U-biq′uitous, *a.* சர்வவியாபியான, எங்குமிருக்கிற, omnipresent. [see Ubiquity.]

U-biq′uity, *n.* சர்வவியாபித்துவம், எங்குமிருத்தல், omnipresence. [L. *ubique*, everywhere.]

Ud′der, *n.* பசு முதலியவற்றின் மடி, the organ in cows & other quadrupeds that secretes milk, milk-bag. [AS.; cog. Gr. *outhar*, Sk. *udhar*.]

Ug′liness, *n.* குரூபம், அவலக்ஷணம், அந்தக்கேடு, want of beauty, deformity of person.

Ug′ly, *a.* குரூபியான, அவலக்ஷணமான, அந்தக்கேடான, சுந்தரமில்லாத, அசஹ்யமான, offensive to

the sight, disagreeable in appearance, unsightly, ill-looking, deformed, ill-shaped, ungainly, uncouth. [Ic.'fearful','dreadful.']

Ul'cer, *n.* ரணம், புண், சிலந்தி, பிளவை, a sore discharging pus. [F.; L. *ulcus, ulceris*; Gr. *helkos*.]

Ul'cerate, *vi.* ரணமாகு, புண்ணாகு, become an ulcer, become ulcerous.—*vt.* புண்ணாக்கு, விரணமாக்கு, form an ulcer.

Ul'cer-a'tion, *n.* புண்ணாகுகை, விரணம், the forming of an ulcer.

Ul'cered, *a.* புண்ணான, ulcerated, ulcerous.

Ul'cerous, *a.* புண் சம்., புண்ணான, having the character of an ulcer, discharging pus or other matter, ulcerated.

Ul'na, *n.* முன்னங்கையிலுள்ள இரண்டு எலும்புகளில் உள்ளிருப்பது, முழவெலும்பு, கூர்ப்பராஸ்தி, the larger of the two bones of the fore-arm. [L. 'elbow'.]

Ul'nar, *a.* முன்னங்கையின் உள்ளெலும்பு சம்., pert. to the ulna.

Ul-te'rior, *a.* அப்பாலுள்ள, situated beyond or on the further side; மேலுள்ள, பின்னுள்ள, தூரத்து, further, remoter, more distant, succeeding. [L. compa. fr. *ulter*, beyond.]

Ul'timate, *a.* கடைசியான, இறுதியான, அந்தமான, last, final; இன்னும் விபாகிக்கக்கூடாத, not susceptible of further analysis, fundamental, elementary, primary. [L. *ultimus*, furthest, last, superl. of *ulter*, beyond.]

Ul'timately, *adv.* கடைசியில், முடிவாய், in the end, at last, finally.

Ul'ti-ma'tum, *n.* கடைசித்தீர்ப்பு, (யுத்தசமாதானம் பேசும்போது ஒரு பக்ஷத்தார்) கடைசியில் தீர்ப்பாய்சொல்லுவது, a final or last statement, proposal, offer, or demand.

Ul'timo, *adv.* கடந்தமாசத்தில், in the last month. [L. *ultimo, mense*, in the last month.]

Ul'tra, *pref.* அப்பால், மிஞ்சின, மிகவும், அதிக, beyond, on the other side. [L.]

Ul'tra-ma-rine', *a.* சமுத்திரத்திற்கு அக்கரையிலுள்ள, மறுகரையிலுள்ள, situated beyond the sea.

Ul'tra-mon'tane, *a.* பர்வதத்திற்கு அப்பாலுள்ள, situated beyond the mountains.

Ul'tra-mun'dane, *a.* பூலோகத்திற்கு அப்பாலுள்ள, இக்கோளத்திற்குவெளியான, being beyond the world or the limits of our system.

Um-bil'ic, **Um-bil'ical**, *a.* நாபி அ. கொப்பூழ்சம்., கொப்பூழுக்கடுத்த, pert. to the navel.

Um'bra, *n.* கிரஹத்தின் நிழல் அ. சாயை, the shadow of a planet.

Um'brage, *n.* நிழல், சாயை, shade, shadow, obscurity; அனுமானம், எரிச்சல், குரோதம், suspicion, jealousy; கோபம், விசனம், offence, resentment. [L. *umbra*, a shade.]

Um-bra'geous, *a.* நிழலுள்ள, நிழல்கொடுக்கிற, shady, shaded.

Um-brel′la, *n.* குடை, ஆதபத்திரம், a portable shade, screen, or canopy, carried as a protection against the sun or rain. [It. dim., fr. L. *umbra*, a shade.]

Um′pire, *n.* மத்தியஸ்தன், நடுவன், இரு பக்ஷத்தாருக்கும் சரியாய் நியாயந்தீர்க்க கோரப்பட்டவன், judge, arbiter, arbitrator, referee. [OF. *nomper*, F. *non-pair*, uneven, hence, third person.]

Un, *neg. pref.* எதிர்மறைக்காட்டு முதலடைமொழி.

Un-a′ble, *a.* இயலாத, ஏலாத, சாமர்த்தியமில்லாத, சக்தியில்லாத, கல்வி முதலிய போதாத, not able, incapable, impotent, incompetent. U. to write=எழுதமுடியாத.

Un′a-bridged′, *a.* சுருக்கமில்லாத, சவிஸ்தாரமான, full, complete.

Un′ac-cept′able, *a.* அங்கீகரிக்கத்தகாத, ஏற்கப்படக்கூடாத, unwelcome.

Un′ac-com′plished, *a.* முடியாத, தீராத, unfinished.

Un′ac-count′able, *a.* காரணம் தெரிந்துக்கொள்ளக்கூடாத, ஆச்சரியகரமான, அற்புதமான, that cannot be accounted for, inexplicable, mysterious, strange; உத்தரவாதியல்லாத, பொறுப்பற்ற, not responsible.

Un′ac-cus′tomed, *a.* வழக்கமில்லாத, அப்பியாசமில்லாத, not habituated, unused, unfamiliar; மாமூலில்லாத, புதிய, unusual, new, unwonted.

Un′ac-quaint′ed, *a.* தெரியாத, பழக்கமற்ற, lacking acquaintance, not familiar.

Un′adorned, *a.* அலங்காரமற்ற, சிங்காரிக்கப்படாத, not adorned or decorated.

Un′a-dul′ter-a′ted, *a.* கலப்பில்லாத, சுத்த, கலந்துபழுதுபடாத, pure.

Un′ad-vis′able, *a.* ஹிதமல்லாத, செய்யவொண்ணாத, inadvisable.

Un′ad-vised′, *a.* ஆலோசனையில்லாத, யோசனையற்ற, அவிவேகமான, புத்தியற்ற, மதியீனமான, ஆலோசியாமல்செய்த, ill-advised, not prudent or wise.

Un′ad-vis′edly, *adv.* ஆலோசனையில்லாமல், அவிவேகமாய், புத்தியீனமாய், unwisely, imprudently.

Un′af-fect′ed, *a.* கபடமற்ற, சஹஜமான, இயல்பான, natural, real, sincere, genuine; மனதிரங்காத, உருக்கமற்ற, unmoved.

Un′af-fect′edly, *adv.* நிஜமாய், கபடமில்லாமல், சகஜமாய்.

Un′aided, *a.* சஹாயமில்லாத, உதவியற்ற, துணையற்ற, unassisted, unhelped, unbacked.

Un′alterable, *a.* மாற்றக்கூடாத, திருப்பக்கூடாத, ஸ்திரமான, unchangeable.

Un′a-nim′ity, *n.* ஐக்கியம், ஏகசிந்தை, ஒருமைப்பாடு, அபிப்பிராயத்தில் ஏகோபாவம், having one mind, agreement in opinion, consensus. [see Unanimous.]

U-nan′imous, *a.* ஐக்கியமான, ஏகசிந்தையுள்ள, ஒருமையான, ஒன்றித்த, ஒரே அபிப்பிராயமுள்ள, being of one mind, agreeing in opinion, consentient, harmonious. [L. *unus*, one + *animus*, mind.]

U-nan′imously, *adv.* ஒருமனமாய், ஐக்கியமாய், ஒருமுகமாய், ஏகோபாவமாய்.

Un-an′swerable, *a* விடைகொடுக்கக்கூடாத, ஆக்ஷேபனை யில்லாத, irrefutable, conclusive, decisive.

Un-approa′chable, *a.* கிட்டப்போகக்கூடாத, that cannot be approached, inaccessible; அசமானமான, சமானமில்லாத, not to be equalled.

Un′-ap-proved′, *a.* அங்கீகரிக்கப்படாத, மெச்சப்படாத, not approved.

Un-apt′, *a.* தகாத, அயுக்தமான, தகுதியற்ற, unfit, unsuitable; புத்தி குசலமற்ற, மந்த, பயிற்சியற்ற, dull, slow.

Un-armed′, *a.* நிராயுதனான, ஆயுதமற்ற, having no arms or weapons.

Unasked, *a.* கேட்கப்படாத, unsolicited, uninvited.

Unassisted, *a.* துணையற்ற, உதவியற்ற, unaided, unhelped, unbacked.

Un′as-sum′ing, *a.* நிரஹங்காரியான, அடக்கமான, தாழ்மையான, கர்வமில்லாத, not arrogant or presuming, humble, modest, retiring, not bold or forward.

Un′at-tain′able, *a.* துர்லபமான, கிடைக்காத, பெறக்கூடாத, that cannot be attained.

Unattended, *a.* துணையற்ற, தனித்த, accompanied by no one, alone, having no retinue or attendants.

Un-au′thorized, *a.* உத்தரவில்லாத, கட்டளையற்ற, விதியில்லாத, not sanctioned, unwarranted.

Un′a-vail′ing, *a.* நிஷ்பலமான, பலனில்லாத, பிரயோஜனமில்லாத, of no avail, useless, vain, ineffectual.

Un′a-void′able, *a.* தப்பாத, தவிர்க்கக்கூடாத, விலக்கக்கூடாத, inevitable, necessary.

Un′a-void′ably, *adv.* தப்பாமல்.

Un′a-ware′, *a.* அறியாத, தெரியாத, not aware, knowing, or cognizant, unconscious, ignorant.—*adv.* = Unawares.

Un′a-wares′, *adv.* அகஸ்மாத்தாய், அறியாமல், நினையாமல், suddenly, unexpectedly.

Un-backed′, *a.* சஹாயமற்ற, உதவியில்லாத, unaided.

Un-bar′, *vt.* திற, தடைநீக்கு, தாழ்திற, remove a bar or bars from, unbolt, open.

Un-bark′, *vt.* மரப்பட்டையுரி, deprive of the bark, decorticate.

Un-bear′able, *a.* சஹிக்கக்கூடாத, பொறுக்கக்கூடாத, unendurable, intolerable.

Un′be-com′ing, *a.* தகாத, அயுக்தமான, அமரியாதையான, அடாத, improper, unsuitable, unfit, unworthy, indecorous.

Un′be-got′ten, *a.* சுயம்புவான, பிறப்பற்ற, self-existent.

Un′be-lief′, *n.* அவநம்பிக்கை, அவிசுவாசம், doubt, incredulity, skepticism; நாஸ்திகம், disbelief of divine revelation.

Un′be-liev′er, *n.* நம்பாதவன், அவிசுவாசி, a doubter, skeptic; நாஸ்திகன், disbeliever, infidel.

Un-bend′, *vt.* நிமிர்த்து, வளைவெடு, make straight; தளர்த்து,இளக்கு, loosen; பிரயாசம் அ. கஷ்டம் தீர், free from strain, tension, or exertion, relax, set at ease.

Un-bend′ing, *a.* வளையாத, not bending, stiff; அடங்காத, மூர்க்கமான, சண்டியான, unyielding, inflexible, resolute.

Un-bi′ased, *a.* பக்ஷபாதமில்லாத, ஓரவாரமற்ற, unprejudiced, impartial.

Un-bid′den, *a.* அழைக்கப்படாத, [uninvited.

Un-bind′, *vt.* கட்டவிழ், கழற்று,தளர்த்து, untie, unfasten, loose.

Unblamable, *a.* நிர்தோஷியான, குற்றமற்ற, நிரபராதியான, பிழையற்ற, blameless, innocent.

Un-bleached′, *a.* சலவையல்லாத, கோரா, not bleached.

Un-blem′ished, *a.* நிஷ்களங்கமான, கறையற்ற, மாசற்ற, மறுவற்ற, spotless, pure.

Un-blown′, *a.* மலராத, விரியாத, in the bud, not expanded.

Un-blush′ing, *a.* வெட்கமற்ற, shameless.

Un-bos′om, *vt.* மனந்திறந்துசொல், வெளியாய்ச்சொல்,disclose freely, reveal in confidence, free one's bosom of: often used *reflexively.*—*vi.* ரஹசியம் சொல் லிக்கொள், unburden one self of secret thoughts, open the heart.

Un-bot′tomed, *a.* அகாதமான, அடியற்ற. [or tied.

Un-bound′, *a.* கட்டாத, not bound

Un-bound′ed, *a.* அளவற்ற, எல்லையற்ற, அபரிமிதமான, முடிவற்ற, unlimited, limitless, boundless; தடையற்ற,மட்டற்ற,unrestrained.

Un-bri′dle, *vt.* கடிவாளங்கழற்று, கடிவாளம்வாங்கு, free from the bridle, set loose.

Un-bri′dled, *a.* கடிவாளமில்லாத, having no bridle on; தடையற்ற, மிதமில்லாத, தன்னிஷ்டமான, unrestrained, unruly, licentious.

Un-bro′ken, *a.* முறியாத, இடைவிடாத, நெகிழாத, continuous; சாதுவாக்கப்படாத, unsubdued.

Un-buc′kle, *vt.* கட்டவிழ், விடுவி, unfasten the buckle or buckles of.

Un-build′, *vt.* இடி, விழத்தட்டு, நாசஞ்செய், demolish, raze.

Un-bur′den, } *vt.* பாரமிறக்கு, சுமையிறக்கு, relieve
Un-bur′then, } or free from a burden, rid of a load, relieve, ease.

Un-bur′y, *vt.* தோண்டி வெளியேஎடு, disinter, exhume, enearth.

Un-but′ton, *vt.* பொத்தான் கழற்று, loose the buttons of.

Un-cage′, *vt.* கூட்டிலிருந்து திறந்துவிடு, loose or release from a cage.

Un-called′, *a.* அழைக்கப்படாத, uninvited.

Un-called′-for′, *a.* அனுவசிதமான, அக்கறையற்ற, நிமித்தமல்லாத,அக்கிரமமான,not called for,required or needed, gratuitous, unnecessary, not justified.

Un-can′ny, *a.* விகாரமான,விசித்திரமான, விபரீதமான, strange,weird, ghostly; பயிற்சியில்லாத, unskilful.

Un-cap′, *vt.* தொப்பியெடு, குல்லாயெடு, மூடியெடு, திற, remove a cap or cover from.

Un-case′, *vt.* உறையெடு, மூடியெடு, uncover ; உறையிலிருந்தெடு, உரி, take out of a case.

Un-ceas′ing, *a.* இடைவிடாத, நிரந்தரமான, ஓயாத, continuous, ceaseless, incessant.

Un-cer′e-mo′nious, *a.* அமரியாதையான, உபசாரமற்ற, discourteous, uncivil ;யதாவிதியில்லாத,informal, familiar.

Un-cer′tain, *a.* அநிச்சயமான, சமுசயமான, சந்தேகமான, doubtful, unreliable, dubious, precarious, not sure, problematical ; நிச்சயமில்லாத, நம்பிக்கையில்லாத, not assured in mind, not sure, undecided.

Un-cer′tainty, *n.* அநிச்சயம், சமுசயம், சந்தேகம், doubtfulness, dubiety, unreliability ; அநிச்சயமானசங்கதி, a doubtful matter, contingency ; நிச்சயமின்மை, தடுமாற்றம், ஐயம், doubt, doubting, hesitation.

Un-chain′, *vt.* சிறைநீக்கு, தளைவிடு, free from chains, unfetter, unshackle, let loose, set at liberty.

Un-change′able, *a.* மாறாத, நிலைபேறாத, ஏகரீதியாயிருக்கிற, unchanging, changeless, unvarying, invariable, constant, immutable.

Un-char′itable, *a.* கடினமான, தருமசிந்தையற்ற, இரக்கமில்லாத; தப்புப்பிடிக்கிற, severe in judging, ready to think evil or impute bad motives, unkind.

Un-chaste′, *a.* கற்பில்லாத, விபசரிக்கிற, தூர்த்த, போக்கிரியான, lewd, libidinous, incontinent, licentious, profligate, dissolute, lecherous.

Un-chas′tity, *n.* விபசாரம், ஜாரத்துவம், தூர்த்தம், lewdness, incontinence, licentiousness, profligacy, lechery.

Un-checked, *a.* தடையற்ற, தாராளமான, தடைப்படாத, unrestrained, uncontrolled.

Un-civ′il, *a.* அமரியாதையான, நாகரிகமில்லாத, முரட்டான, discourteous, impolite, rude,unmannerly, ill-mannered.

Un-civ′ilized, *a.* நாகரிகமில்லாத, சீர்திருத்தமற்ற,barbarous rude, savage.

Un-civ′illy, *adv.* அமரியாதையாய், [impolitely.

Un′cle, *n.* தாய்தந்தையர் சகோதரன், the brother of one's father or mother;பெரியதாய்,சிறியதாய், அ.அத்தை,புருஷன்,an aunt's husband. Paternal u.=பெரியதகப்பன் ; சிறியதகப்பன். Maternal u. =மாமன்.[OF., fr. L. *avunculus*, an uncle, dim. of *avus*, a grandfather.]

Un-clean′, *a.* அசுத்த, அழுக்கான, அசுசியான, துப்புரவில்லாத, dirty, filthy, foul, impure, polluted, defiled.

Un-clean′liness, *n.* அசுத்தம்,அசுசி, அழுக்கு, dirtiness.

Un-clean′ly, *a.* அசுத்த, அழுக்கான, துப்புரவற்ற, foul, filthy, dirty.

Un-clean′ness, *n.* அசுத்தம், அழுக்கு, துப்புரவின்மை, filthiness, foulness.

Uncle-in-law, *n.* பெண்சாதியின் அ. புருஷனின் தகப்பனுடைய சகோதரன், பெரியமாமன் அ. சிறியமாமன்.

Un-close′, *vt.* திற, அவிழ், open.

Un-clothe′, *vt.* புடவைகழற்று, துணியுரி, நிருவாணமாக்கு, strip of clothes, make naked.

Unclouded, Uncloudy, } *a.* மப்பில்லாத, மந்தாரமில்லாத, free from clouds; சுத்த, நிர்மலமான, clear.

Un-coil′, *vt.* சுருள்குலை, unwind.

Un-come′ly, *a.* சுந்தரமில்லாத, அழகற்ற, அவலட்சணமான, விகாரமான, not beautiful.

Un-com′fortable, *a.* அசௌக்கியமான, சங்கடமான, causing discomfort, disagreeable, unpleasant; அசுகமாயிருக்கிற, சங்கடமாயிருக்கிற, feeling discomfort, uneasy, ill at ease.

Un-com′mon, *a.* அசாதாரணமான, அபூர்வமான, விந்தையான, நூதன, unusual, extraordinary, rare, remarkable, strange, peculiar.

Un′com-mu′nicative, *a.* தாராளமாய் மனதுவிட்டுப்பேசாத, reserved, taciturn, reticent.

Un-com′pro-mi′sing, *a.* சமாதானத்திற்கு ஒவ்வாத, பின்னிடாத, நிச்சலமான, unyielding, inflexible, strict, obstinate.

Un′con-cern′, *n.* உபேக்ஷை, அசட்டை, கவலையின்மை, absence of anxiety, freedom from concern or solicitude, indifference, apathy.

Un′con-cerned′, *a.* சம்பந்தமில்லாத, அக்கறையற்ற, ஜோலியற்ற, கவலையற்ற, having no concern or anxiety, not anxious or solicitous, regardless, indifferent, taking no interest, not affected.

Un′con-di′tional, *a.* நிபந்தனையில்லாத, நிரங்குசமான, தடையற்ற, limited by no conditions, absolute.

Unconnected, *a.* அசங்கதமான, சம்பந்தமில்லாத, சந்தர்ப்பமில்லாத, not connected or coherent, separate, loose, rambling.

Un-con′scious, *a.* அறியாத, தெரியாத, not knowing, ignorant, unaware; உணர்ச்சியற்ற, மைமறந்த, having no mental perception, senseless, insensible.

Un′con-trol′lable, *a.* அடக்கக்கூடாத, தடுக்கக்கூடாத, ungovernable, irresistible.

Un′con-trover′ted, *a.* நிராக்ஷேபமான, நிர்விவாதமான.

Un-cork′, *vt.* அடைப்புக்குச்செடு, பிரடைவாங்கு, draw the cork from.

Uncorrected, *a.* திருத்தாத, சீர்திருத்தாத.

Uncourtly, *a.* அமரியாதையான, uncivil.

Un-couth′, *a.* விந்தையான, விகாரமான, அசஹ்யமான, அவலக்ஷணமான, awkward, clumsy, ungainly, strange, odd, boorish, outlandish. [AS. *uncuth*, unknown, strange, *un*, not + *cuth*, pp. of *cunnan*, to know.]

Un-cov'er, *vt.* மூடியெடு, உறையெடு, முட்டாக்கெடு, திற, remove a cover from, lay bare; தொப்பியெடு, take off the hat or cap from, bare the head of.—*vi.* மரியாதைக் கடையாளமாய் தொப்பியெடு, take off the hat or cap, bare the head in token of respect.

Un'cre-ate', } *a.* சிருஷ்டிக்கப்படாத, சுயம்புவான,
Un'cre-at'ed, } படைக்கப்படாத, self-existent.

Un-crown', *vt.* கிரீடமெடுத்துப் போடு, ராஜ்யப்பிரஷ்டனுக்கு, deprive of a crown, dethrone.

Unc'tion, *n.* தைலம், லேபனம், unguent,ointment, salve; அப்பியங்கம், அபிஷேகம், anointment. [F., fr. L. *unctio*, fr. *ungere*, *unctum*, to anoint.] [oiliness.

Unc'tuosity, *n.* நிணம், கொழுப்பு,

Unc'tuous, *a.* நிணமுள்ள, கொழுப்பான, தைலசுபாவமுள்ள, oily, fatty, greasy. [see Unction.]

Uncultivated, *a.* உழாத, கிருஷிபண்ணாத, செய்கை பண்ணாத, கரம்பான, untilled; திருத்தாத, படியாத, நாகரீகமில்லாத,uncultured, rude.

Un-curl', *vt.* சுருள்குலை, நேராக்கு, straighten.—*vi.* நேராகு, become straight.

Un-cur'rent, *a.*வழங்காத, செல்லாத.

Un-cur'tain, *vt.* திரையெடு ; திற.

Un-cut', *a.* வெட்டாத, அறுக்காத.

Un-dat'ed, *a.* தேதிபோடாத, having or bearing no date.

Un-daunt'ed, *a.* பயப்படாத, நிர்பயமான, திடமுள்ள, அஞ்சாத, வீரமுள்ள, fearless, brave, intrepid, bold, courageous.

Un-dec'agon, *n.* பதினொன்றுகோணமுள்ள ஆகாரம்,a figure of eleven sides.

Un'de-ceive', *vt.* வாஸ்தவம் அ. நிஜஸ்திதி தெரியச்செய், மருள் நீக்கு, மயக்கறு, free from deception or mistake, open the eyes of.

Un'de-cen'nial, *a.*பதினொருவருஷங்களுக்கு ஒரு முறை வருகிற, occurring every eleventh year.

Un'de-ci'ded, *a.* நிச்சயமில்லாத, அநிச்சயமான, unsettled, not determined; சமுசயமாயிருக்கிற, சந்தேகமான, hesitating, irresolute, not having the mind made up.

Undeclinable, *a.* ரூபபேதமில்லாத.

Un'de-fined', *a.* அஸ்பஷ்டமான, indefinite.

Un'de-mon'strative, *a.* மனோபாவத்தை வெளிக்குக்காட்டாத, not betraying or exhibiting feeling, reserved.

Un'de-ni'able, *a.* அல்லவெனக்கூடாத,இல்லையெனத்தகாத, பிரத்தியக்ஷமாய் நிஜமான, indisputable, undoubted, obvious.

Un'der, *prep.* & *adv.* கீழே, அடியில், below, beneath, lower (than); குறைவாய், கீழாய், less (than), inferior to.—*a.* கீழான, lower; அதிகாரம் மு. வற்றில் குறைவான, கையின் கீழான, inferior, subordinate, subject. [AS.; cog. L. *inter*, Sk. *antar*, in the midst, Sk. *adhas*, below.]

Un'der-bid', *vt.* குத்தகை மு. வற்றில் ஒருவனைப்பார்க்கிலும் குறைவான தொகைக்குக்கேள், தணித்துக்கேள், குறைத்துக்கேள், bid less than, offer for a less price than.

Under-brush = Underwood.

Un'der-charge', *vt.* குறைந்த விலைக்கு வாங்கிக்கொள், take too low a price from or charge less than the usual price for.—Un'der-charge', *n.* குறைந்தவிலை, a charge or price less than usual.

Un'der-clothes', *n. pl.* உள்ளுடுப்பு, clothes worn under others or next the skin.

Un'der-coat', *n.* உள்சட்டை, a coat worn under another.

Un'der-cur'rent, *n.* உள்பிரவாஹம், a current below another or below the surface.

Un'der-do', *vt.* போதாமல்செய், do less than is proper or necessary.

Un'der-dose', *n.* குறைந்த மாத்திரை அ. மருந்து, a too small or insufficient dose.—Un'der-dose', *vt.* & *vi.* குறைந்தமாத்திரை அ. மருந்திடு, give an u. to.

Un'der-es'timate, *vt.* குறைந்தமதிப்பிடு, குறைவானவிலையிடு, குறைவாய்மதி, underrate, undervalue.

Un'der-feed', *vt.* போதாதபடி தீனிகொடு அ. போஷி, give too little food to, supply with insufficient food.

Un'der-go', *vt.* படு, அடை, அனுபவி, சஹி, pass through, experience, suffer, endure.

Un'der-grad'uate, *n.* கீழ்பரீக்ஷை கொடுத்து பட்டபரீக்ஷை கொடாத வித்தியார்த்தி.

Un'der-ground', *a.* தரைக்குக்கீழான, பூமிக்குள்ளான.—*adv.* தரையின் கீழே. beneath the surface of the earth.

Un'der-hand', *a.* ரஹஸியமான, secret, clandestine; அக்கிரமமான, unfair, fraudulent, mean.—*adv.* ரஹஸியமாய், by secret means; அக்கிரமமாய், கள்ளத்தனமாய், unfairly, by fraud.

Un'der-jaw', *n.* கீழ்தாடை, the lower jaw.

Un'der-lie', *vt.* ஒன்றின்கீழிரு, lie or be situated under or beneath; ஆதாரங்கொடு, form the foundation or support of, support.

Un'der-line', *vt.* (எழுத்தில் முக்கியமான வார்த்தைகளுக்குக்) கீழ்கோடு, mark underneath or below with a line, underscore.

Un'derling, *n.* கீழானவன், a subordinate, an inferior person or agent; நீசன், கீழ்மகன், a mean fellow.

Un'der-lip', *n.* கீழுதடு, the lower lip.

Un'der-ly'ing, *a.* ஒன்றின்கீழிருக்கிற, lying under or beneath something; ஆதாரமான, fundamental.

Un'der-mine', *vt.* கீழேதோண்டு, விழத்தட்டசுரங்கமறு, கீழறு, excavate the earth beneath, form a mine under, sap, cause to fall; உள்ளோநாசஞ்செய், அழி, கெடு, injure or ruin by secret means.

Un'der-most', *a.* எல்லாவற்றிற்கும் கீழே, lowest.

Un'der-neath', *prep. & adv.* கீழே, அடியில், beneath, below, under.

Un'der-of'ficer, *n.* கீழுத்தியோகஸ்தன், a subordinate officer.

Un'der-pay', *vt.* குறைவாய்ப்பணங்கொடு, pay insufficiently or inadequately.

Un'der-plot', *n.* கிளைக்கதை, a plot subordinate to another plot; ரஹசிய ஆலோசனை அ. சூது, a secret scheme. [undervalue.

Un'der-prize', *vt.* குறைந்தவிலையிடு,

Un'der-prop', *vt.* கீழாதாரம்வை, prop from beneath.

Un'der-rate', *vt.* குறைந்தவிலை அ. மதிப்பிடு, rate too low, undervalue; குறைவாயெண்ணு, குறை, குறைவாய்ப்பார், underestimate.

Un'der-score', *vt.* கீழே கோடிடு, underline.

Vi′o-lin′, *n.* ஒருவித வாத்தியம், பிடில், fiddle. [It. *violino,* dim. of *viola.* see Viol.]

Vi′o-lin′ist, Vi′olist, *n.* பிடில் வாசிப்போன், fiddler. [fr. Violin & Viol.]

Vi′per, *n.* விரியன்பாம்பு, a venomous snake, (the common European kind) adder; துஷ்டன், வஞ்சகன், உள்ளுக்குள்ளே கெடுதிசெய்வோன், a mischievous, malignant, treacherous, & dangerous person. [F.; L. *vipera,* cont. fr. *vivipera, vivus,* alive + *parere,* to bring forth: being believed to be the only serpent that brings forth living young.]

Vi′perous, *a.* விஷமுள்ள, venomous.

Vi-ra′go (விரேகோ), *n.* புருஷதேகபலமும் பராக்கிரமமுள்ள ஸ்திரீ, ஆண்மாரி, a woman of masculine or extraordinary stature, strength, and courage; சண்டைக்காரி, termagant. [L., fr. *vir,* a man.]

Vir′gin (வர்ஜின்), *n.* கன்னிகை, குமரி, a woman who has had no carnal knowledge of man, maid, maiden.—*a.* கன்னிகைக்குத்தகுந்த, becoming a virgin, maidenly; பரிசுத்தமான, புதிய, அசுசிதமான, pure, chaste, untouched, fresh, unsullied; நாணமுள்ள, அடக்கமுள்ள, modest. [OF. *virgine,* L. *virgo, virginis,* a virgin.]

Vir′gin-hood, Vir-gin′ity, *n.* கன்னியாத்துவம், maidenhood. [fr. Virgin.]

Vir′go, *n.* கன்னியாராசி. [L.]

Vi-rid′ity, *n.* செடிகளின்பசுமை, verdure.

Vi′rile, *a.* புருஷ சம்., pert. to man, masculine, manly, [F. *viril*; L. *virilis,* fr. *vir,* a man; cog. AS. *wer,* a man; Gr. *heros,* Sk. *vira,* a hero.]

Vi-ril′ity, *n.* புருஷத்துவம், ஆண்மை, manliness, manhood. [fr. Virile.]

Vir′tual, *a.* வாஸ்தவமான, நிஜமான, உண்மையான, real, practical. [F.; see Virtue.]

Vir′tually, *adv.* வாஸ்தவத்தில், நிஜம் விசாரிகையில், காரியத்தில், really, in effect, practically.

Vir′tue, *n.* நீதி, தர்மம், சன்மார்க்கம், சற்குணம், சுசீலம், moral excellence or goodness, morality, rectitude, righteousness, purity, integrity; சுகுணம், நற்குணம், a particular moral excellence; புண்ணியம், சுகிர்தம், spiritual good or merit; சுபாவம், குணம், property, characteristic, nature; சக்தி, பலம், பிரபாவம், சாரம், சத்து, strength,

inherent power, efficacy, potency. [F. *vertu*, L. *virtus*, *virtutis*, strength, courage, excellence, worth, fr. *vir*, a man.]

Vir′tuous, *a.* சன்மார்க்கனான, நீதிமந்தனான, தர்மசாலியான, புண்ணியமான, தர்மமான, நீதியான; moral, righteous, pure, upright, good, right; பதிவிரதையான, chaste, pure. [OF.; L. *virtuosus.* see Virtue.]

Vir′ulence,—cy, *n.* தீவிரம், உக்கிரம், கொடுமை, கடினம், குரூரம், தீக்ஷணம், acrimony, bitterness, severity; துவேஷம், பகை, malignity, enmity. [fr. Virulent.]

Vir′ulent, *a.* தீவிரமான, தீக்ஷணமான, உக்கிரமான, கடின, குரூர, acrimonious, bitter, severe; துவேஷமுள்ள, பகையான, malignant. [F.; L., fr. *virus*, poison.]

Vi′rus, *n.* ரோகசம். விஷநீர் அ. சீழ், contagious poisonous matter, a morbid poison. [L.; allied to Sk. *visha.*]

Vis′age, *n.* முகம், முகாகாரம், முகாகிருதி, face, countenance, look. [F.; L. *visus*, a look, fr. *videre*, *visum*, to see.]

Vis′cera, *n. pl.* of Viscus.

Vis′cid, *a.* பிசுபிசுப்பான, பசையான, ஒட்டுகிற, glutinous, sticking, sticky, viscous, clammy, tenacious. [L. *viscidus*, clammy, fr. *viscum*, birdlime.]

Vis-cid′ity, Vis-cos′ity, *n.* பிசுபிசுப்பு, ஒட்டுந்தன்மை, stickiness, glutinousness.

Vis′count (வைகௌண்ட்), *n.* ஒரு பிரபுப்பட்டம் அ. ஸ்தானம். [lit. 'vice-count'; OF. *viceconte.*]

Vis′countess, *n. fem.* of Viscount.

Vis′cous, *a.* பிசுபிசுப்பான, பசையான, ஒட்டுகிற, glutinous, sticky, viscid. [L. *viscosus.* see Viscid.]

Vis′cus, *n.* தேஹத்திலுள்ளான ஒரு பாகம், an internal organ of the body. [L.]

Vise=Vice (instrument).

Vi-si′-bil′ity, *n.* பிரத்தியக்ஷம், காணப்படுந்தன்மை, காணக்கூடிய தன்மை, perceptibility by the eye. [fr. Visible.]

Vis′ible, *a.* காணப்படுகிற, தோற்றமுள்ள, கோசரமான, பிரத்தியக்ஷமான, கண்ணுக்குத் தெரிகிற, perceivable by the eye, perceptible, in view, apparent. [L. *visibilis*, fr. *videre*, *visum*, to see.]

Vis′ibly, *adv.* கண்ணுக்குத்தெரியும்படி, ஸ்பஷ்டமாய், பிரத்தியக்ஷமாய், obviously, manifestly.

Vis′ion, *n.* திருஷ்டி, பார்வை, தரிசனம், sight; காணப்படுவது, தோற்றம், that wh. is seen, sight; சாயை, மனோதோற்றம், சொப்பன தரிசனம், apparition, phantom, spectre, fancy, imaginary sight, something seen in a dream, &c. . [F.; L. *visio*, *visionis*, fr. *videre*, *visum*, to see.]

Vi′sionary, *a.* மனகல்பிதமான, மனோரதமான, வீண்தோற்றமுள்ள, அவாஸ்தவமான, நிஜமல்லாத, imaginary, fanciful, unreal, dreamy; சாத்தியமல்லாத, அசாத்தியமான,

impracticable; வீண்பிரமையுள்ள' disposed to act upon fancies, impractical, dreamy.—*n.* அசாத்தியம்யோசிப்போன், வீண்கோரிக்கையுள்ளவன், பைத்தியகாரன், an unpractical schemer. [F.; see Vision.]

Vi'sionist, *n.* = Visionary.

Vis'it, *vt.* போய்ப்பார், தரிசனம்செய், கண்டுகொள், go or come to see, call on or upon, make or pay a v. to; (ஓரிடத்திற்கு) போ, come or go to; சிட்சையாயாவது வெகுமானமாயாவது உண்டாகு அ. சம்பவி, come or go or occur to, for chastising or rewarding; (சிக்ஷையாய்) ஆபத்துண்டாக்கு, afflict.—*n.* போய்பார்த்தல், தரிசனம்செய்தல், கண்டுகொளல், visiting, a call, a going to see a person or place, a short stay in a place or with a person. [F. *visiter*; L. *visitare*, freq. fr. *visere*, to go to see, fr. *videre*, *visum*, to see.]

Vis'itant, *n.* பார்க்கவருவோன் அ. வருவது, one who or that wh. visits, visiter. [L.; see Visit.]

Vis'it-a'tion, *n.* தரிசிக்கப்போதல், போய்ப்பார்த்தல், தரிசிக்கை, visiting; தைவதண்டனை, divine judgment, retribution, retributive calamity. [fr. Visit.]

Vis'iter, } *n.* தரிசனத்திற்கு வந்தவன், தரிசிப்போன், one
Vis'itor, } who visits, one who comes or goes to see another, caller. [fr. Visit.]

Vis'or, *n.* முகத்தின் மேலிருக்கும் கவசபாகம், the front piece of a helmet; முகத்தில்போடும் முக்காடு, வேஷம், mask; கண்ணுக்கு நிழலுக்காக முன்னுக்குவரும் தொப்பி பாகம், the fore piece of a cap projecting over and protecting the eyes. [F. *visiere*, fr. OF. *vis*, the face or visage.]

Vis'ta, *n.* விருக்ஷசாலைமத்தியில் காணப்படும் காட்சி, a view through an avenue, as bet. rows of trees; சாலைப்பாதை, விருக்ஷசாலை, the trees that form an avenue. [It. 'sight', 'view', fr. L. *videre*, *visum*, to see.]

Vis'ual, *a.* திருஷ்டி சம்., பார்வைக்குரிய, pert. to sight. [L. *visualis*, fr. *visus*, a seeing, sight.]

Vi'tal, *a.* பிராணமான, உயிரான, பிராணாதாரமான, உயிருக்காதாரமான, necessary to life; ஜீவ சம்., relating to life; முக்கியமான, அவசிகமான, essential, necessary. [F.; L. *vitalis*, fr. *vita*, life, akin to *vivere*, to live.]

Vi-tal'ity, *n.* ஜீவம், பிராணம், உயிர், vital force, animation, (the principle of) life. [fr. Vital.]

Vi'tals, *n. pl.* ஜீவஸ்தானம், உயிர்நிலையம், the vital parts, organs essential or necessary to life.

Vi'tiate, *vt.* கெடு, அழி, பாழ்செய், சீர்குலை, பழுதாக்கு, make vicious, faulty, defective, or imperfect, impair, contaminate, spoil, corrupt, pollute, deprave, demoralize; துர்பலமாக்கு, பலவீனமாக்கு, weaken. [L. *vitiare*, fr. *vitium*, a fault, vice.]

Vi'ti-a'tion, *n.* கெடுத்தல், கெடுதல், corruption, depravation, demoralization; துர்பலமாக்கல் அ. ஆகல், weakening or being weakened, invalidation. [fr. Vitiate.]

Vi'tious = Vicious.

Vit'reous, *a.* கண்ணாடி சம்., pert. to glass, glassy. [L., fr. *vitrum*, glass.] [glass-like.

Vit'riform, *a.* கண்ணாடிபோன்ற,

Vit'rify, *vt.* கண்ணாடியாக்கு.—*vi.* கண்ணாடியாகு. convert into or become glass.

Vit'riol, *n.* (white—) பால்துத்தம்; (green—) அன்னபேதி; (blue—) மயில்துத்தம், துரிசு. Oil of v. = கந்தக திராவகம்.

Vi-tu'perate, *vt.* நிந்தி, திட்டு, பழி, தூஷி, abuse, rail at, scold, censure. [F.; L. *vitium*, a fault + *parare*, to prepare.]

Vi-tu'per-a'tion, *n.* நிந்தித்தல், பழித்தல், தூஷித்தல், abuse, blame, censure. [fr. Vituperate.]

Vi-tu'perative, *a.* நிந்திக்கிற, திட்டுகிற, தூஷணையான, abusive.

Vi-va'cious, *a.* உல்லாசமுள்ள, உற்சாகமுள்ள, சுறுக்கான, lively, active, sprightly, spirited, animated, brisk, gay, merry, cheerful. [L. *vivax*, *vivacis*, fr. *vivus*, alive, *vivere*, to live.]

Vi-vac'ity, *n.* சுறுக்கு, உல்லாசம், உற்சாகம், liveliness, life, animation, spiritedness, sprightliness, gayety, cheerfulness, briskness, spirit. [fr. Vivacious.]

Viva voce, *adv.* & *a.* வாய்மொழியாய்; வாய்மொழியான. [L. 'by the living voice'.]

Viv'id, *a.* ஸ்பஷ்டமான, விசதமான, தெளிவான, பிரகாசமான, clear, lucid, bright, striking, lively. [L. *vividus*, fr. *vivus*, alive.]

Viv'idly, *adv.* ஸ்பஷ்டமாய், காந்தியாய், பிரகாசமாய், clearly, brightly.

Viv'ifi-ca'tion, *n.* பிராணம்வருதல்; பிராணம்வருத்தல், உயிர்ப்பிக்கை; revival, restoration of life.

Viv'ify, *vt.* பிராணங்கொடு, உயிர்ப்பி, endue with life, animate. [L. *vivus*, alive + *facere*, to make.]

Vi-vip'arous, *a.* ஜராயுஜமான, குட்டியீனுகிற, bringing forth living young, producing young alive. [L. *vivus*, alive + *parere*, to bring forth.]

Viv'i-sec'tion, *n.* உயிருடனிருக்கும் ஜந்துக்களைச்சேதித்து சோதித்தல், ஜீவமிருகாங்கச்சேதம், dissection of living animals for physiological investigation. [L. *vivus*, alive + section.]

Vix'en, *n.* பெண்நரி, a she-fox; சண்டைக்காரி, துஷ்டை, termagant. [AS. *fixen*, fem. of 'fox'.]

Vix'enish, *a.* சண்டைக்காரியான, ill-tempered, cross.

Viz, a contr. of *videlicet*. அதாவது, namely, to wit, that is. [ter.

Viz'ier, *n.* மந்திரி, பிரதானி, minis-

Vo'cable, *n.* வாக்கு, சொல், பதம், word, term, name. [L. 'name', fr. *vocare*, to call.]

Vo-cab'ulary, *n.* சப்தசமுதாயம், சப்தங்கள், the sum or stock of

words used, words, collectively; சப்தசங்கிரஹம், அகராதியாய் எழுதப்பட்ட நிகண்டு, a collection of words, word-book, dictionary. [F.; L. *vocabulum*, name, fr. *vocare*, to call.]

Vo'cal, *a.* கண்டதொனி சம்.; குரல் சப்தத்தாலான அ. உச்சரிக்கப்பட்ட, pert. to, or uttered or modulated by, the voice, oral. [L. *vocalis*, fr. *vox*, *vocis*, voice.]

Vo'calist, *n.* பாடுகிறவன், காயகன், a vocal musician, singer. [fr. Vocal.]

Vo'cally, *adv.* கண்டதொனியால், with the voice, orally.

Vo-ca'tion, *n.* தொழில், உத்தியோகம், வேலை, occupation, profession, calling, employment, trade, business. [F.; L. *vocatio*, a bidding, fr. *vocare*, to call.]

Voc'ative, *a.* சம்போதன அ. அழைப்பைக் காட்டுகிற, denoting, or used in, calling or address.—*n.* விளிவேற்றுமை, சம்போதனவிபக்தி, nominative of address, v. case. [L., fr. *vocare*, to call.]

Vo-cif'erate, *vi.* & *vt.* உரத்தசத்தமிடு, இரை, utter loudly, shout out, bawl, cry out, clamor, exclaim. [L. *vox*, *vocis*, voice + *ferre*, to bear.]

Vo-cif'er-a'tion, *n.* உரத்தசத்தமிடுதல், இரைதல், vehement utterance, violent outcry, clamor.

Vo-cif'erous, *a.* உரத்தசத்தமிடுகிற, இரைகிற, shouting out, uttering loudly, clamorous, noisy. [see Vociferate.]

Vogue, *n.* வழக்கம், பாங்கு, நடை, வாடிக்கை, லோகாசாரம், the prevalent way or fashion, popular mode or practice. [F.; It. *voga*, a rowing, *vogare*, to row.]

Voice, *n.* கண்டதொனி, குரல்சத்தம், ஸ்வரம், sound uttered by the mouth, utterance, tone; அபிப்பிராயம், அபிப்பிராயம் கொடுக்க அதிகாரம், vote, suffrage, opinion, right to express one's opinion. Active v. of a verb = செய்வினை, கர்த்தரிப்பிரயோகம். Passive v. of a verb= செயப்பாட்டுவினை, கர்மணிப்பிரயோகம். [L. *vox*, *vocis*, voice; akin to Sk. *vach*, to speak.]

Voice'less, *a.* பேசவொட்டாத, ஊமையான, குரலற்ற, dumb, mute; அபிப்பிராயங்கொடுக்க அதிகாரமில்லாத, having no suffrage or vote.

Void, *a.* வெறு, ஒன்றுமில்லாத, வெறுமையான, empty, vacant, unoccupied; ஒன்றுமில்லாமலிருக்கிற, destitute, devoid, free, clear; நியாயசட்டப்பிரகாரம்பலமில்லாத, துர்பலமான, நிரர்த்தகமான, null, having no legal force.—*n.* சூனியம், சூனியஸ்தலம், வெளி, அவாந்தரம், an empty space, vacuum. —*vt.* வெறுமையாக்கு, empty, vacate; விட்டுவிடு, விஸர்ஜி, discharge, evacuate; நியாயசட்டப்பிரகாரம் பலமாகாதபடிசெய், nullify, annul, render of no validity. [OF.]

Void'able, *a.* தப்பித்துக்கொள்ளத்தக்க, that may be avoided or annulled; விட்டுவிடத்தக்க.

Void'ance, *n.* விஸர்ஜனம், விட்டுவிடல், தள்ளிவிடல், voiding, ejecting, emptying. [fr. Void, *v.*]

Vo'lant, *a.* பறக்கிற, flying.

Vol'atile, *a.* பறக்கிற, ஆவியாய்ப்போகிற, evaporating rapidly, subject to evaporation ; அதிக உல்லாசமான, light-hearted, lively; சபலமான, நிலையற்ற, changeable, fickle. [F.; L., fr. *volare*, to fly.]

Vol'a-til'ity, *n.* ஆவியாய் பறக்கும் தன்மை, the property of rapidly evaporating ; அதிக உல்லாச சுபாவம், light-heartedness ; சபல புத்தி, நிலையற்றதன்மை, fickleness.

Vol'atize, *vt.* ஆவியாகச்செய், evaporate.

Vol-can'ic, *a.* எரிமலை சம்., எரிமலைக்குரிய, pert. to a volcano.

Vol-ca'no, *n.* எரிமலை, அக்கினிபர்வதம், a hill or mountain from wh. molten rock, cinders, and the like are ejected, a burning mountain. [It., fr. L. *Vulcanus*, Vulcan, the god of fire ; cog. Sk. *ulka*, fire.]

Vol'i-ta'tion, *n.* பறத்தல், flight.

Vo-li'tion, *n.* மனம், சித்தம், இச்சா சக்தி, ஸங்கல்பசக்தி, the exercise of the will, willing, will, choice. [F.; L. *volitio*, fr. *volo*, I will.]

Vol'itive, *a.* சித்தசக்தியுள்ள, இச்சா சக்தியுள்ள, having the power to will.

Vol'ley, *n.* ஒருதடவைபோடுங்குண்டுகள் மு. வை, தாரை, a flight, or simultaneous discharge, of missiles. [F. *volee*, a flight, fr. *voler*, L. *volare*, to fly.]

Vol-taic'i', *a.* மின்தாது சம்., galvanic.

Vol'taism, *n.* மின்தாது, மின்சாரம், galvanism.

Vol'u-bil'ity, *n.* சுளுவாய்திரும்பும் அ. ஆடுங்குணம், turning readily, revolving ; வாசாலம், அலப்புத்தனம், fluency, glibness, flippancy.

Vol'uble, *a.* சுளுவாய்திரும்புகிற அ. ஆடுகிற, turning readily, rotating, revolving ; வாசாலமுள்ள, அலப்புகிற, fluent, glib, flippant. [L., fr. *volvere*, to roll, turn round.]

Vol'ume, *n.* புஸ்தகம், சம்புடம், book, tome ; சுருட்டு, roll, coil, wreath ; கனபரிமாணம், பருமம், cubic contents, mass, bulk. [F., fr. L. *volumen*, a roll of writing, fr. *volvere*, to roll.]

Vo-lu'minous, *a.* அனேக புஸ்தகங்களாயிருக்கிற, consisting of many volumes ; பெரிய, விஸ்தாரமான, of great volume or bulk, large, bulky ; அனேகஙிரந்தங்கள் எழுதின, having written much, or many volumes. [L.; see Volume.]

Vol'untarily, *adv.* தனக்குத்தானே, சுவேச்சாப்பூர்வமாய், of one's own (free) will or choice, spontaneously, of one's own accord.

Vol'untary, *a.* சுவேச்சாப்பூர்வமான, தனக்குத்தானே செய்கிற அ. ஆகிற, தன்னிஷ்டமான, யதேச்சையான, acting of one's self, free, spontaneous, unconstrained ; புத்திப்பூர்வமான, intentional. [L., fr. *voluntas*, will, *volo*, I will.]

Vol′un-teer′, n. (சம்பளமின்றி) தனக்குத்தானே ஒருவேலையில் பிரவேசிப்போன், உமேத்வார், one who enters into any service of his own free will.—vi. கேட்கப்படாமல் தனக்குத்தானே ஒருகாரியத்தில் பிரவேசி, enter into any service or work of one's own free will.—vt. கேட்கப்படாமல் தனக்குத்தானே கொடுக்கப்போ அ. செய்யப்போ, offer or bestow voluntarily, unasked or unsolicited. [F. *volontaire*. see Voluntary.]

Vo-lup′tuary, n. காமி, போகப்பிரியன், இந்திரிய சுகாசக்தன், sensualist.—a. = Voluptuous. [see Voluptuous.]

Vo-lup′tuous, a. காமாதுர, இந்திரியசுகாசக்தியுள்ள, போகப்பிரியனான, காமியான, given to luxury or sensual enjoyments or pleasures, sensual; இந்திரியசுககரமான, காமமுண்டாக்குகிற, இந்திரியசுகேச்சையுண்டாக்குகிற, producing or yielding sensual gratification, exciting sensual desires, luxurious. [L. *voluptas*, pleasure.]

Vom′it, vi. & vt. வாந்திசெய், வமனம் செய், கக்கு, ஓக்காளி, eject from the stomach through the mouth, throw up, spew, puke, disgorge.— n. வாந்தியானது, கக்கப் பட்டது, vomited matter. [L. *vomere*, *vomitum* ; akin to Sk. *vam*.]

Vom′iting, Vo-mi′tion, } n. வாந்திசெய்தல், வமனம், கக்கல், வாந்தி.

Vom′itive, a. வமனகரமான, வாந்தியுண்டாக்குகிற, causing vomiting, emetic.

Vo-ra′cious, a. பெருந்தீனி தின்கிற, அதிகப்பசியுள்ள, வயிறுதாரியான, greedy in eating, very hungry, gluttonous, rapacious, ravenous, edacious. [L., fr. *vorare*, to devour ; akin to Sk. *gar*, to swallow.]

Vo-ra′ciously, adv. ஆவலாய், ஆத்திரமாய், அதிதீபனமாய், greedily, ravenously.

Vo-rac′ity, n. அதிகப்பசி, அதிதீபனம், gluttony, greedinessr, apacity, edacity. [fr. Voracious.]

Vor′tex, n. நீர் மு. வற்றின் சுழி, whirlpool, eddy ; சூறைக்காற்று, காற்றுசுழற்சி, whirlwind. [L., fr. *vortere* or *vertere*, to turn.]

Vor′tical, a. சுழிபோன்ற, like a vortex.

Vo′taress, n. அடியாள், தாசி, பக்தியுள்ளவள், a female votary.

Vo′tary, n. பக்தன், தாசன், அடியான், தொண்டன், one devoted or engaged by a vow or promise, devotee.—a. நேர்ந்துகொண்ட, consecrated by a vow or promise, devoted, promised, consequent on a vow, votive. [from L. *votum*, a vow, *vovere*, to vow, devote.]

Vote, n. அபிப்பிராயம், இஷ்டம், சம்மதி, wish, choice, opinion, suffrage.— vi. அபிப்பிராயங்கொடு, சம்மதிகாட்டு, give a v., express or signify the mind or will (*viva*

voce or by ballot.)—*vt.* அனுகூலாபிப்பிராயங் கொடுத்து நியமி, கோரிக்கொள், நிர்ணயி, நிச்சயி, choose by suffrage, elect, enact, determine, or grant, by vote. [L. *votum*, a vow, wish, will, *vovere*, to vow.]

Vot'er, *n.* அபிப்பிராயங்கொடுக்க அதிகாரமுள்ளவன், one who votes, elector.

Vo'tive, *a.* நேர்ந்துகொண்டு கொடுத்த, நேர்த்திக்கடன்செய்து கொடுத்த, பிரார்த்தனையால் கொடுக்கப்பட்ட, given by, or in fulfilment of, a vow, consecrated by a vow, devoted, promised, votary. [L., fr. *votum*, a vow.]

Vouch, *vt.* & *vi.* உறுதிப்படுத்து, சாட்சிசொல், திடப்படுத்து, ஸ்திரமாய்ச்சொல், attest, assure, confirm, warrant. [OF., fr. L. *vocare*, to call.]

Vouche'r, *n.* சாட்சி சொல்வோன், one who vouches ; உறுதிச்சீட்டு கணக்குப்புஸ்தகம், சீட்டு, தஸ்தாவேசு, மு. நிதரிசனம், a paper, writing, or document wh. serves to establish any fact. [fr. Vouch.]

Vouch-safe', *vt.* தயவுசெய், அனுக்கிரஹித்துக்கொடு, கிருபையாய்க்கொடு, அருள்செய், கடாக்ஷி, bestow graciously, condescend to grant, deign. [vouch + safe : 'to vouch or attest as safe'.]

Vouch-safe'ment, *n.* தயவுசெய்தல், பிரசாதம், கடாக்ஷம், அருள்செய்தல், a gift or grant in condescension.

Vow, *n.* நேர்கடன், நோன்பு, பிரார்த்தனை, a solemn promise made to God or some deity or saint ; விரதம், நியமம், பிரதிக்கினை, சபதம், தீக்ஷை, a solemn engagement to adpot a certain course. —*vi.* நேர்ந்துகொள், பிரார்த்தனை செய்துக்கொள்; விரதம்பிடி, பிரதிக்கினை அ. சபதம்செய்துகொள், make a v.—*vt.* நேர்ந்துகொண்டு கொடு அ.செய், give, consecrate, or dedicate by a v., devote ; சபதம்செய், assert solemnly, asseverate. [OF.; L. *votum*, a vow, *vovere*, to vow.]

Vow'el, *n.* உயிரெழுத்து, உயிர், ஆவி, அச்சு, ஸ்வரம். [F. *voyelle*, fr. L. *vocalis*, vocal, fr. *vox*, *vocis*, the voice : lit. a vocal letter.]

Voy'age, *n.* கப்பல் பிரயாணம், கப்பல்யாத்திரை, கடல்பிரயாணம், சமுத்திரபிரயாணம், a journey by sea or water.—*vi.* சமுத்திரயாத்திரைசெய், கப்பல்பிரயாணம்செய், make a v., journey by water. [F. 'a journey';L., fr. *via*, way.]

Voy'ageable, *a.* கப்பல்கள்போகத்தக்க, navigable.

Voy'ager, *n.* சமுத்திரயாத்திரைசெய்வோன், கப்பல்பிரயாணி, one who makes a voyage, navigator.

Vul'can, *n.* அக்கினிதேவதை. [L.; see Volcano.] [சம்..

Vul-ca'nian, *a.* அக்கினிதேவதை

Vul'gar, *a.* சாமானியஜன சம்., பாமரஜன சம்.; pert. to the common people, plebeian ; கீழ்மையான, இழிய, நீசமான, கொச்சையான

coarse, rude, inelegant, rustic, boorish, low, base, mean; அசப்பியமான, வெட்கம் கெட்ட, obscene, indecent. V. fraction=சாமானிய பின்னராசி.—*n.* சாமானிய பிரஜை, பாமரஜனம், the common people. [F.; L., fr. *vulgus*, the common people.]

Vul′garism, *n.* கொச்சைப்பேச்சு, a vulgar phrase or expression; அநாகரிகநடை, நாட்டுப்பாங்கு, இழிஜனவழக்கு, rudeness, grossness, vulgarity. [fr. Vulgar.]

Vul-gar′ity, *n.* அசப்பியம், நீசம், கொச்சை, இழிமை, coarseness, clownishness, rudeness, lack of refinement, inelegance, grossness. [fr. Vulgar.]

Vul′garly, *adv.* சாதாரணமாய், commonly, by popular usage; கொச்சையாய், அசப்பியமாய், coarsely.

Vul′nera-bil′ity, *n.* fr. Vulnerable.

Vul′nerable, *a.* காயப்படத்தக்க, சேதப்படத்தக்க, வஜ்ஜிரதேஹமல்லாத, capable of being wounded. [L., fr. *vulnus*, a wound; akin to Sk. *vrana*.]

Vul′nerary, *a.* காயமாற்றுகிற, healing wounds.

Vul′pine, *a.* நரி சம்., நரிக்குரிய, pert. to the fox, foxy; தந்திரமுள்ள, உபாயமுள்ள, கபடான, cunning, crafty. [L., fr. *vulpes*, a fox.]

Vul′ture, *n.* ராஜாளி. [OF. & L.]

Vul′turine, } Vul′turous, } *a.* ராஜாளி போன்ற, குரூரமான, pert. to a vulture.

Vul′va, *n.* யோனி, புகம், the external parts or the opening of the female genital organs. [L., fr. *volvere*, to roll.]

Vy′ing, *pr. p.* of Vie.

W

Wabble, *vi.* ஆடு, அசை; சமுசயி.

Wad, *n.* துப்பாக்கியில் போட்டு கெட்டிசெய்யும் காகிதம் மு-து.

Wad′dle, *vi.* அசைந்து சிறுநடையாய் நட, toddle.

Wade, *vi.* நீர், மணல், மு. வற்றில் கஷ்டமாய்நட, walk or move with difficulty in water, sand, or the like; பிரயாசத்துடன் மெதுவாய் போ செய் அ. நடத்து, move or proceed with difficulty or labor. [AS.; akin to L. *vadere*, to go, walk, *vadum*, a ford.]

Wa′fer, *n.* பசையான முத்திரைவில்லை, a small disk of dried paste used in sealing; கிருஸ்தவர்களில் ஆசீர்வாதஅப்பம் அ. சற்பிரசாத முத்திரைஎன்று சொல்லப்படுவது. [OF.]

Waft, *vt.* & *vi.* நீர், காற்று மு. வற்றில் கொண்டுபோ அ. கொண்டு போகப்படு, மிதந்துபோ, bear along or be borne along on a buoyant medium, float. [closely akin to 'wave'.]

Wag, *vt.* ஆட்டு, அசை, அலை, குலுக்கு.—*vi.* இடு, அசை, அலை. move or shake to & fro.—*n.* கோமாளி, விதூஷகன், one fond of making jokes, a joker. [AS.]

Wage, *vt.* செய், engage in, carry on, as, to w. war; பந்தயம்பிடி, ஒட்டம்வை, wager.—*n.* used

chiefly in the *pl.* see W-s. [OF. *wager*, to pledge, to promise.]

Wa′ger, *n.* பந்தயம், bet, stake; பந்தயம்வைத்தது, பந்தயப்பொருள், ஒட்டம், the thing deposited, laid or hazarded, in a bet, stake; பந்தயவிஷயம், the subject of a bet.—*vt.* & *vi.* பந்தயம்கட்டு, பந்தயம்போடு, bet, stake, lay, make a bet, lay a w. [see Wage.]

Wa′ges, *n.* கூலி, சம்பளம், price paid for labor, hire, salary, remuneration, stipend, pay.

Wag′gery, *n.* கேலி, சரசம், பரிகாசம், pleasantry.

Wag′gish, *a.* கேலிசெய்கிற, சரசமான, jocular, frolicsome.

Wag′gon, } *n.* பெரும்வண்டி, சகடம், a carriage for
Wag′on, } the transport of heavy goods.—*vt.* & *vi.* பெரும்வண்டியில் சரக்கனுப்பு அ. கொண்டுபோ, transport or carry in a w.. [Du.; connected with 'weigh'; cog. Sk. *vah*, L. *vehere*, to carry: lit. what 'carries'.]

Wag′onage, *n.* வண்டிக்கூலி, money paid for conveyance in a wagon.

Wag′oner, *n.* சரக்குவண்டிக்காரன், one who drives a wagon.

Wag′tail′, *n.* வாலாட்டிக்குருவி.

Waif, *n.* கண்டெடுத்தபொருள், an unclaimed article.

Wail, *n.* அழுகை, புலம்பல், குரலெடுத்தழல், lamentation, loud weeping, plaintive cry, moan.—*vi.* & *vt.* அழு, புலம்பு, பிரலாபி, துக்கி, lament, weep, bewail, bemoan. [Ic.]

Wail′ingly, *adv.* அழுகையாய், பிரலாபித்துக்கொண்டு, with lamentation.

Wain, *n.* பெரியசரக்குவண்டி, wagon.

Wain′scot, *n.* சுவருக்கிட்டபலகைகள், a wooden lining of the walls of an apartment.—*vt.* சுவருக்குப் பலகையிடு, line with wood or boards. [Du.]

Wain′scoting, *n.* சுவருக்கிட்ட பலகைகள், wainscot.

Waist, *n.* இடுப்பு, அரை, இடை, நடு, the small part of the body bet. the thorax & the hips. [AS. ori. 'growth', 'form'; cog. wax, to grow.]

Waist′band, *n.* நடுக்கட்டு, இடைக்கட்டு, அரைக்கச்சை, a band round the waist.

Waist′cloth, *n.* இடைக்கட்டுதுணி, a cloth worn around the waist.

Waist′coat, *n.* மார்புச்சட்டை, அரைச்சட்டை, a sleeveless coat, vest.

Wait, *vi.* காத்திரு, எதிர்பார், பொறு, வரவுபார், be or stay in expectation, look forward to something. W. on or upon = கிட்ட காத்துக் கொண்டிரு, attend upon (as a servant); போய்ப்பார் அ. தரிசனம்செய், call upon, visit.—*vt.* காத்திரு, எதிர்பார், நிரீக்ஷி, stay for, await.—*n.* பதிவிடை, ஒளிப்பிடம், a waiting in concealment, ambush; காத்துக்கொண்டிருத்தல், waiting; தாமதம், ஆல

சியம், delay. Lie in w.=பதிவிரு, இடமொன்றமேல்விழுவதற்கு ஒளித்திரு, lie in ambush, be in hiding, ready to attack. Lay w.=பதிவிடைடதயார்செய், prepare or form an ambuscade. [OF. 'to watch or lie in wait', fr. *waite*, a sentinel;akin to 'wake','watch'.]

Wait'er, *n.* கிட்ட காத்துக்கொண்டிருக்கும் சேவகன், ஏவலாள், attendant,a servant in attendance; தட்டு, தாம்பாளம், tray, salver.

Wait'ress, *n.* கிட்டகாத்துக்கொண்டிருக்கும்சேவகத்தி, வெள்ளாட்டி, a waiting maid or woman.

Waive, *vt.* தனக்குள்ள பலத்தையும் உரிமையும் விட்டுவிடு, பரித்தியஜி, relinquish, give up claim to, forego. [OF.]

Waiv'er, *n.* நியாயமாய்தனக்குள்ள பலத்தை அ. உரிமையை விட்டுவிடல், waiving some right, claim, or privilege, relinquishment of a right.

Wake, *vi.* விழி, துயிலொழி, be roused from sleep, awake, cease to sleep; விழித்துக்கொண்டிரு, நித்திரையில்லாமலிரு, be awake, watch, not to sleep.—*vt.* எழுப்பு, விழிக்கச்செய், rouse from sleep, awake.—*n.*விழித்துக்கொண்டிருத்தல், ஜாகரம், watch,vigil;போகும் கப்பலின்பின் நீர்மேல் காணப்படும் சாடை அ. சால், the track left by a ship passing through the water. In the w. of=பின்னால். [AS.; cog. L. *vigil*, watchful.]

Wake'ful, *a.* விழித்துக்கொண்டிருக்கிற, தூக்கம்வராத, நித்திரையற்ற, not sleeping, remaining awake, watchful, vigilant; விழிப்பாயிருக்கிற, ஜாக்கிரதையுள்ள, alert. [fr. Wake, *n.*]

Wak'en, *vi.* நித்திரை எழும்பு, விழி, wake.—*vt.*நித்திரைஎழுப்பு, விழிக்கச்செய், awaken, awake, arouse from sleep. [AS.]

Walk, *vi.* நட, செல், move along on foot, advance by steps, step along; விஹரி, திரி, அலைந்துதிரி, take a w. for exercise, recreation, ro amusement, ramble. W. in=பிரவேசி,உள்ளேவா அ. போ. —*vt.* மேல்நட, திரி, அ. சஞ்சரி, pass. upon, over, or through, traverse, perambulate; நடத்து, ஓட்டு, cause to w., lead drive.—*n.* நடை, walking; நடக்கும்விதம், manner of walking, gait, step; விஹாரம், திரிதல், walking for recreation or exercise, stroll, promenade; நடக்கும்ஸ்தலம், விஹாரஸ்தலம்,a place for walking, promenade; கால்வழி, பாதை, மார்க்கம், a path for foot-passengers, way, road; நடக்கும்தூரம், distance walked over; ஜந்துக்கள் மேயும்ஸ்தலம், a place in wh. animals may graze; நடத்தை, பிரவர்த்தனை, conduct; விருத்தி, வேலை, தொழில், profession, occupation, calling. [AS. *wealcan*, to roll, turn about, rove.]

Walk'er, *n.* நடப்போன், one who walks, pedestrian.

Walk'ing-staff, Walk'ing-stick, } *n.* கைக்கோல், தடி அ. பிரம்பு,

ஊன்றுகோல், a staff or stick carried in the hand in walking, cane.

Wall, *n.* சுவர், மதில், a structure of brick, stone, or the like, serving to inclose a space. Go to the w.=தோல்வியடை. Drive to the w.=ஜெயி, கெலி. Take the w.=அக்கிரஸ்தானம் எடுத்துக் கொள்.—*vt.* சுற்றிலும் சுவர்வை, பிராகாரம்கட்டு, inclose with a w. [AS. *weall,* fr. L. *vallum,* a wall, *vallus,* a stake.]

Wal′let, *n.* சாமான் பை, தோல்பை, அடைப்பை, bag, sack, knapsack. [cor. of old 'watel', a bag.]

Wall′-eyed′, *a.* வெள்ளைக் கண்ணுள்ள, having an eye of a whitish color.

Wal′low, *vi.* புரளு, roll about; அழுக்கில்பிழை, live in filth. [AS. *wealwian*; L. *volvere*; Sk. *val;* to turn.]

Wall-paper, *n.* சுவரிலும் மச்சிலும் ஒட்டும் காகிதம், paper used for covering walls and ceilings.

Wall-piece, *n.* மதில்மேல் நிறுத்திய பீரங்கி, a gun mounted on a wall.

Wal′nut, *n.* கடுக்காய் அ. அச்செடி.

Wal′rus, *n.* ஒருசமுத்திர ஜந்து.

Wan, *a.* வெளுவெளுத்த, வெளிறின, பாண்டுபிடித்த, pale, pallid, having a sickly hue.—*vi.* வெளுத்துப்போ, வெளுரு, grow w., become pale. [AS.]

Wand, *n.* சிறுகம்பு, a small stick, rod; அதிகார அடையாளத்தண்டம், செங்கோல், a staff of authority; மந்திரக்கோல், a rod used by magicians or conjurers. [Da.]

Wan′der, *vi.* திரி, சஞ்சரி, அலைந்து திரி, rove, roam, ramble, range, stroll, gad; சலி, வழிதப்பிப்போ, வழிவிலகு, stray, straggle, digress, deviate, swerve, depart, go astray, err; (மனது) பரிபிரமி, மனஞ்சிதறு, be delirious. [AS.]

Wan′derer, *n.* சஞ்சாரி, நாடோடி, காலாடி, பரதேசி, திரிஇறவன், rambler, rover. [fr. Wander.]

Wane, *vi.* தேய், குறை, தணி, decrease, diminish, grow less, decline.—*n.* குறைவு, தேய்வு, decrease, diminution, decline; சந்திரகலா க்ஷீணம், decrease of the moon's visible illuminated part. [AS. *wanian,* fr. *wan,* deficient; akin to 'want'.]

Want, *n.* இல்லாமலிருத்தல், not having, being without something, destitution, lack; இல்லாமல்போதல், இன்மை, absence, lack, negation, privation; குறைச்சல், பஞ்சம், deficiency, scarcity, scarceness, scantiness; லோபம், குறைவு, defect; அவசியம், அக்கரை, தேவை, need, necessity; தரித்திரம், வறுமை, எளிமை, destitution, indigence, poverty; வேண்டியது, இல்லாதது, desideratum, necessity; கோரப்பட்டது, that wh.is required, requirement.—*vt.* இல்லாமலிரு,

குறைச்சலாயிரு, be without, be destitute of, not to have, lack; குறைவாயிரு, be deficient in; அக்கறையாயிரு, require, need; கோரு, கேள், wish or long for, desire, crave, ask, request.—*vi.* இல்லாமல்போ, be absent; குறைவாயிரு, போதாமல் போ, be deficient or lacking, fall or come short, lack. [Ic.]

Wanted, *a.* வேண்டிய, அகத்தியமான, அக்கறையான, required, necessary.

Want′ing, *a.* இல்லாமலிருக்கிற, இல்லாத, absent, lacking, missing, as, one leaf is w. in the book; போதாமலிருக்கிற, குறைவாயிருக்கிற, deficient, as, the book is w. in one leaf.

Wan′ton, *a.* கட்டுப்பாடு அ. நிபந்தனைக்கு உட்படாத அ. அடங்காத, unrestrained, free; அக்கிரமமான, அமிதமான, excessive, extravagant; ஒன்றும் ஆலோசிக்காத, முன் பின்பாராத, துர்புத்தியோடுகூடிய, heedless, reckless, inconsiderate, heartless, outrageous; காமாதுரமுள்ள, தூர்த்த, காமமிகுந்த, dissolute, libidinous, licentious.—*vi.* சுவேச்சையாய்த்திரி, சஞ்சரி, துள்ளு, ஆடு, frolic unrestrainedly, revel. [AS. lit. 'wanting training', 'ill-bred', 'undisciplined'.]

Wan′tonly, *adv.* விலாசமாய், சுவேச்சையாய், without restraint; அக்கிரமமாய், காரணமின்றி, without cause, recklessly, heartlessly.

Wan′tonness, *n.* சுவேச்சை, விலாசம், disregard of restraint, freedom; காமாதுரம், libidinousness.

War, *n.* யுத்தம், போர், சண்டை, contest; விரோதம், வைரம், hostility, enmity, strife.—*vi.* யுத்தம் செய், போரிடு, கலஹி, make w., carry on w. or hostilities, contend, strive. [AS.]

War′ble, *vi.* அனுக்குடன் பாடு, sing in a trilling manner.—*n.* பாட்டு, song, a musical trill. [OF.]

War′bler, *n.* பாடும்பக்ஷி, singing-bird, song-bird, singer, songster. [fr. Warble.]

Ward, *n.* காவல், சம்ரக்ஷணை, guarding, protection; காப்பாற்றுவோன், defender, protector; ஒருவன் சம்ரக்ஷணையிலிருத்தல், being under a guardian; சிறையில் வைக்கப்படல், custody, confinement; ஒருவன் சம்ரக்ஷணையிலிருக்கும் சிறுவன், a minor under the care of a guardian.—*vt.* கா, பாதுகா, ரக்ஷி, guard; (with *off*) வரும் அடி முதலியவற்றைத் தப்புவி, விலக்கு, turn aside, repel, fend off.—*aff.* பக்கம், இடம், புறம், என்னும் அர்த்தங்கொடுக்கும் உபசர்க்கம், as, homeward = வீட்டின் பக்கம். [AS. *weardian*, to guard, *weard*, a guard.]

Ward′en, *n.* இரக்ஷகன், keeper, guardian; ஒரு அதிகாரி. [OF.; see Ward.]

Ward′er, *n.* காவல்காப்போன், keeper, guard. [see Ward.]

Ward′robe′, *n.* வஸ்திரங்கள்வைக்கு மிடம், உடைவைக்கும் அறை அ. பெட்டி, a place, or piece of furniture, in wh. clothes are kept; வஸ்திரங்கள், துஸ்து, உடுப்பு, wearing apparel, articles of dress. [ward+robe.]

Ward′ship, *n.* ஒருவன்சம்ரக்ஷணையிலிருத்தல், pupilage; சம்ரக்ஷணை, guardianship.

Ware, *n.* ஒருதினுசுசரக்குகள் அ. வஸ்துகள், articles, goods, commodities. [AS.]

Ware′house′, *n.* சரக்குகள்வைக்கும் பண்டசாலை, மளிகை, a storehouse for wares or goods.

Wares, *n. pl.* சரக்குகள், வஸ்துகள், சாமான்கள், articles, goods, commodities, merchandise.

War′-fare′, *n.* யுத்தம், போர், சண்டை, கலஹம், war, hostilities, contest, struggle, strife. [War+fare (old), journey, course.]

War′-horse, *n.* யுத்தாசுவம், போர்க்குதிரை, a horse used in war, charger.

Wa′rily, *adv.* ஜாக்கிரதையாய், விழிப்பாய், cautiously.

Wa′riness, *n.* ஜாக்கிரதை, விழிப்பு, எச்சரிக்கை, caution.

War′like′, *a.* யுத்தசம்., relating to war, military, martial; யுத்தத்துக்குதகுந்த அ. உபயோகமான, fit for war; சௌரியமுள்ள, பராக்கிரமமுள்ள, சூரனான, soldierlike, martial, brave.

Warm, *a.* சூடுள்ள, வெப்பமான, உஷ்ணமான, கொஞ்சம்சூடான, having heat in a moderate degree, not cold; அக்கறையுள்ள, உற்சாகமுள்ள, சிரத்தையுள்ள, zealous, ardent, fervent; தீக்ஷ்ணமான, உக்கிரமான, தீவிரமான, violent, vehement, furious.—*vt.* காய்ச்சு, சுடவை, சூடுகொட்டு, make w., communicate a moderate degree of heat to; சிரத்தையுண்டாக்கு, make earnest, ardent, or enthusiastic, interest, excite ardour or zeal in.—*vi.* சூடாகு, காய், become w. or moderately heated; உற்சாகமடை, become ardent or animated. [AS.; akin to Sk. *gharma*, heat.]

Warm′-blood′ed, *a.* சுரோக்தமுள்ள (ஜந்துஜாதியான), having warm blood.

Warm′ly, *adv.* சூடாய், with warmth or heat; மனப்பூர்வமாய், உற்சாகமாய், ardently, eagerly.

Warmth, *n.* சூடு, வெப்பம், வெதுப்பு, gentle heat; உற்சாகம், ardor, fervor, fervency, zeal, eagerness, earnestness, vehemence. [fr. Warm, *a.*]

Warn, *vt.* வரப்போகிறதீங்கை முன்தெரிவித்து ஜாக்கிரதைசொல், எச்சரி, பிரபோதி, பயமுறுத்து, முன்னறிவி, give previous notice or information of evil or danger to, caution, admonish, precaution, forewarn, premonish. [AS. 'to make wary or aware'.]

Warn′ing, *n.* முன்ஜாக்கிரதைசொல்லல், எச்சரிக்கை, caution against danger or error, admonition, premonition, forewarnnig. [fr. Warn, *v.*]

Warp, *n.* நெசவுத்தறியில் நீளத்திலிடும் நூல், நெசவுபா, பாவுநூல், the threads wh.are extended lengthwise in the loom; கோணல், twist, distortion.—*vt.* கோணலாக்கு, நெளி, வளை, திருகு, புரட்டு, turn or twist out of shape; கெடு, புரட்டு, distort, pervert.—*vi.* கோணலாகு, நெளி, be twisted out of shape. [AS.]

War'rant, *n.* ஏதாவதொன்றைச் செய்ய ஒருவன் ஒருவனுக்குக்கொடுக்கும் அதிகாரப்பத்திரிகை, a writing authorizing a person to do something; அதிகாரம், authority, commission; பிரமாணம், நிதர்சனம், தஸ்தாவேசு, ஆதாரம், voucher, document; குற்றவாளியை பிடித்துக்கொண்டுவருவதற்கு அதிகாரப்பத்திரிகை, a writing giving power to arrest an offender.—*vt.* அபயங்கொடு, guarantee safety to; அதிகாரங்கொடு, செலவு அ. உத்தரவுகொடு, authorize, empower; ஆதாரங்கொடு, பலப்படுத்து, நிச்சயப்படுத்து, உறுதிப்படுத்து, support by proof or authority; நம்பும்படிசெய், தான்சொன்னபடியிராவிடில் நஷ்டப் பூர்த்திசெய்ய உத்தரவாதங்கொடு, assure, guarantee the quality or soundness of. [OF. & F.; see Guarantee.]

Warranted, *a.* அதிகாரங்கொடுக்கப்பட்ட, அதிகாரமுள்ள, authorized, empowered; நல்லசரக்கென்று பிணையின்மேல் கொடுக்கப்பட்ட, assured, guaranteed to be of good quality.

War'ranty, *n.* உடம்படிக்கை; பிரமாணப்பத்திரிகை; பிணை, உத்தரவாதம், guarantee. [fr. Warrant.]

War'rior, *n.* போர்வீரன், சூரன், வீரன், a man engaged in military life, a (brave) soldier. [fr. War.]

Wart, *n.* பாலுண்ணி, காய், கழலை, a small hard tumor. [AS.]

Wart'y, *a.* பாலுண்ணிபோன்ற.

War'y, *a.* ஜாக்கிரதையுள்ள, விழிப்புள்ள, எச்சரிக்கையுள்ள, cautious, careful, circumspect, guarded, watchful. [AS.; akin to 'aware'.]

Was, the first and third persons, singular, of Be in the indicative mood, past tense. இருந்தேன், இருந்தான், ஆயிருந்தேன், மு.வை. [AS.]

Wash, *vt.* கழுவு, பிரட்சாளனம்செய், (துணிகளை) துவை, தோய், cleanse, scrub, or scour, with water; ஸ்நானம்செய்வி, bathe.—*vi.* ஸ்நானம் செய், bathe; துணித் துவை, do the business of cleansing clothes.—*n.* கழுவுதல், பிரக்ஷாளனம், washing, ablution; ஒருதடவைதுவைத்ததுணிகள், a quantity of clothes washed at once; பூச்சு, ஆலேபனம், a thin coating or application; கழுவதற்கு உபயோகிக்கும் நீர் மு.து, lotion. [AS.]

Wash'er, *n.* வண்ணான் அ. வண்ணாத்தி, washerman or washerwoman.

Wash'erman, *n.* வண்ணான், laundryman, launderer.

Wash'er-wom'an, *n.* வண்ணாத்தி, laundress, launder.

Wash'ings, *n.* கழுவின அழுக்குநீர்.

Wash'y, *a.* ஈரமாயிருக்கிற, damp; பலவீனமான, feeble.

Wasp, *n.* குளவி, வண்டு. [AS.]

Wasp'ish, *a.* குளவிபோன்ற, resembling a wasp; வெடுவெடுப்பான, முன்கோபியான, snappish, irascible, peevish.

Wast'age, *n.* குறைவு, நஷ்டம், loss by use, wear, leakage &c., waste.

Waste, *vt.* வியர்த்தம்செய், துர்விரயம்செய், வீணாய்ச்செலவழி, விருதாவாக்கு, squander, lavish; பாழ்செய், நாசஞ்செய், அழி, devastate, desolate, destroy; தேய், நாள் வட்டத்தில் க்ஷீணிக்கச்செய், தின்றுவிடு, wear away by degrees, impair gradually, consume.—*vi.* தேய், குறை, மெலி, இருசி, lose substance or strength, be consumed, dwindle.—*a.* வியர்த்தமாய் கிடக்கிற, உதவாத, lying unused, worthless, valueless; பாழான, உழாமல் விட்டுவிடப்பட்ட, uncultivated, unproductive; நாசமாக்கப் பட்டு நிர்மானுஷியமா யிருக்கிற, desolate, devastated.—*n.* வியர்த்தம்செய்தல், வீண்செலவு, ஊதாரித்தனம், wasting, squandering, lavish expenditure; பாழ்செய்தல், நாசம், devastation; பாழ்நிலம், தரிசு, uncultivated land; நிர்ஜனபிரதேசம், a desert region, wilderness; வியர்த்தமானது, உதவாதது, refuse; தேய்வு, குறைவு, wastage. [OF.; L. *vastare*, to lay waste, fr. *vastus*, desert.]

Waste'bas'ket = Wastepaper-basket.

Waste'book', *n.* தினகணக்குப்புத்தகம், day-book.

Waste'ful, *a.* வியர்த்தமான, causing waste or loss, full of waste, ruinous; வீண்செலவு செய்கிற, ஊதாரியான, lavish, extravagant, prodigal.

Waste-paper, *n.* உதவாதகாகிதம், spoiled or used paper.

Waste-paper-basket, *n.* உதவாத காகிதங்கள்போடும் கூடை, a basket for holding waste papers or paper scraps.

Watch, *n.* காவல், காப்பு, guard; விழித்திருத்தல், ஜாகரம், a keeping awake, vigil, wakefulness; விழிப்பு, ஜாக்கிரதை, careful attention; காவற்காரன் அ. காவற்காரர், a guard or number of guards; காவல் ஸ்தலம், the place of a watchman; ஒரு காவற்காரன் காக்கும் காலம், a watchman's or sentinel's period of duty; சிறுகைக்கடியாரம், a small time-piece carried about the person.—*vi.* விழித்திரு, நித்திரை யில்லாமலிரு, be awake, keep vigil; காவலிரு, keep guard, act as sentinel; ஜாக்கிரதையாயிரு, விழிப்பாயிரு, be attentive or vigilant; எதிர்பார்த்திரு, காத்திரு, be expectant or in expectation, be on the look-out, wait.—*vt.* ஜாக்கிரதையாய்ப்பார், keep in view; கா, காவல்செய், பத்திரம்செய், guard, tend. [AS., fr. *wacan*, to wake.]

Watch'-dog', *n.* காவல் நாய், a dog

kept to watch& guard premises or property.

Watch'ful, *a.* விழிப்பான, ஜாக்கிரதையாயிருக்கிற, விழிப்பாயிருக்கிற, காத்துக்கொண்டிருக்கிற, careful, vigilant.

Watch'mak'er, *n.* கைக்கடியாரஞ் செய்வோன், one who makes watches.

Watch'man, *n.* காவற்காரன், ஜாமக்காரன், தலையாரி, guard, sentinel.

Watch'word', *n.* காவற்காரனுக்கும் உள்ளே போக விடத்தக்கவர்களுக்கும் தெரியும் குறிப்புச்சொல், குழூஉக்குறி, password, countersign.

Wa'ter, *n.* நீர், தண்ணீர், ஜலம், உதகம்; சரீரத்திலுள்ள மூத்திரம் மு. நீர்; வயிரத்தின் நீர் அ. காந்தி, the lustre of a precious stone. Make w. = மூத்திரம்பெய், ஒன்றுக்குபோ, சிறுநீர்விடு, urinate.—*vt.* நனை, நீர்தெளி, நீர்கட்டு, நீர் பாய்ச்சு, wet, moisten, irrigate; நீர்வார், குடிக்கச்செய், நீர்காட்டு, cause or allow to drink; நீர் சேர், add w. to, dilute.—*vi.* நீர் ஊறு, வியர், secrete or discharge w. The mouth w-s = வாயூறுகிறது; ஆசையுண்டாகிறது. [AS.; akin to Sk. *udan*, water.]

Wa'terage, *n.* கப்பற்கூலி, படவுக்கூலி, price paid for transportation by water.

Wa'ter-bird', *n.* நீர்பக்ஷி, நீர்க்குருவி, an aquatic bird, water-fowl.

Wa'ter-clos'et, *n.* எப்பொழுதும் நீரோடி சுத்தமாயிருக்கும்படி செய்யப்பட்ட கொல்லை, privy, latrine.

Wa'ter-col'or, *n.* நீர்கலந்தவர்ணம், a color ground with water.

Wa'ter-course, *n.* ஆறு, கால்வாய், மு. பிரவாஹம், a stream of water, as a river, canal &c.

Wa'tercraft', *n.* கப்பல், படகு, மு.அ, a vessel, a ship or boat.

Wa'ter-fall', *n.* அருவி, நீர்வீழ்ச்சி, cataract, cascade.

Wa'ter-fowl', *n.* நீர்க்கோழி, நீர்ப்புள், water-bird, an aquatic fowl.

Wa'ter-god', *n.* ஜலதேவதை, a deity residing in or presiding over any body of water.

Wa'ter-gru'el, *n.* கூழ், கஞ்சி, a gruel made with water.

Wa'tering, *n.* நீர்வார்த்தல்.

Wa'terish, *a.* நீராளமான, நீர்போன்ற, watery, thin.

Wa'ter-lev'el, *n.* நீர்மட்டம், the level formed by the surface of still water. [சாதனம்.

Water-lift, *n.* ஏத்தம் மு. நீரேற்றும்

Wa'terman, *n.* நீர்சுமப்போன், water-carrier.

Wa'ter-mel'on, *n.* சர்க்கரைகொம்மட்டி, மெலாம்பழம்.

Wa'ter-mill', *n.* ஜலயந்திரம், நீர்பிரவாஹபலத்தினல் நடக்கும் யந்திரம், a mill whose machinery is moved by water-power.

Wa'ter-plant, *n.* நீர்ச்செடி, a plant that grows in water, an aquatic plant.

Wa'ter-proof', *a.* நீர்சுவருத, நீர்க்கொள்ளாத, proof against penetration by water, impervious to water.—*n.* நீர்சுவருமல் செய்யப்

பட்ட ஒருவித துணி மு-த, cloth made w.

Wa'ter-shed', *n.* நதியுற்பத்திஸ்தான பிரதேசம், the whole region from wh. a river receives its supply of water; தண்ணீர்பந்தல், water-booth.

Wa'ter-side', *n.* நீர்க்கரை, the shore or margin of a body of water.

Wa'ter-snake', *n.* நீர்ப்பாம்பு, a snake that lives in water.

Wa'ter-tight', *a.* நீரொழுகாதபடி இறுக்கமான, so tight that water cannot enter or leak out.

Wa'ter-wheel', *n.* நீர்பலத்தினால் திரும்பும்படி செய்யப்பட்ட சக்கரம், a wheel moved or turned by water.

Wa'ter-work', *n.* used chiefly in the *pl.* இருவழி மு. உபயோகங்களுக்கான நீர்க்கால்வாய், அணைக்கட்டு மு.த.

Wa'tery, *a.* நீர்க்குரிய, நீரான, pert. to water; நீர்போன்ற, நீராளமான, resembling water, thin, liquid; ஈரமாயிருக்கிற, ஜலமயமான, wet, abounding with water.

Wave, *n.* அலை, தரங்கம், திரை, a swell on the surface of water, billow, surge, undulation.—*vi.* அலைபோலசை, ஆடு, move like a w., move in w-s or undulations, undulate.—*vt.* ஆட்டு, அசை, வீசு, move to and fro, brandish, flourish; எதையாவது ஆட்டி சைகைசெய், move as a signal. [AS. *wafian*, to waver, hesitate.]

Wave'let, *n.* சிறுஅலை, தளம்பு, n small wave, a ripple. [dim. of 'wave'.]

Wa'ver, *vi.* இங்குமங்கும் அசை, அலை, தளம்பு, தடுமாறு, move to & fro, swing, reel, totter; சமுசயி, சந்தேகி, அநுமானி, சங்கோசி, fluctuate, vacillate, be unsettled, undetermined, or irresolute, hesitate. [a freq. corresponding to 'wave', *v.*]

Wa'verer, *n.* நிச்சய அபிப்பிராயமில்லாதவன், சமுசயிப்போன், one who wavers or is unsettled in opinion.

Wa'veringly, *adv.* அனிச்சயமாய், சந்தேகமாய், with hesitation.

Wav'y, *a.* அலைகளுள்ள, அலைகளாயெழும்புகிற, அலைபோல், ஆடுகிற, full of waves, rising in waves, undulatory.

Wax, *n.* மெழுகு. Sealing w.=முத்திரை அரக்கு.—*vt.* மெழுகுபூசு, smear, rub, or treat, with w..—*vi.* (opp. to Wane.) அதிகமாகு, விருத்தியாகு, வளர், பெருகு, increase in size, grow bigger; ஆகு, become, grow. [AS.—AS. *weaxan*, to grow; akin to Sk. *vaksh*, to grow.]

Wax-cloth, *n.* மெழுகுதுணி, cloth covered with a coating of wax, floor-cloth.

Wax'en, *a.* மெழுகால்செய்த, மெழுகுபோன்ற, made of or resembling wax.

Wax'flower', *n.* சம்பகபுஷ்டம்.

Wax'y, *a.* மெழுகுபோன்ற, மெதுவான, like wax, soft.

Way, *n.* வழி, பாதை, மார்க்கம், road, path, passage; சாடை, track; தூரம், length of space, distance, interval; சாதனம், உபாயம், means, device, plan, scheme; விதம், மாதிரி, வகை, பிரகாரம், manner, mode, method, fashion, style. Give w.= வழிகொடு, விலகு, இடங்கொடு; உட்படு, அடங்கு; பாரம் மு. வை அதிகமானதால் உடைந்துபோ அ. விழுந்துபோ. By the w.= பிரஸ்தாவவசமாய், இடையிலே. [A.; akin to L. *via*.]

Way'far'er, *n.* வழிப்போக்கன், பயணக்காரன், traveller, passenger. [way + fare, to go.]

Way'far'ing, *a.* பிரயாணம்போகிற, பயணம்பண்ணுகிற, யாத்திரைசெய்கிற, travelling, journeying, being on a journey.

Way'lay', *vt.* கொள்ளையிடவாவது கொல்லவாவது பதிவிரு, சதிசெய்யக்காத்திரு, lie in wait for, watch for the passing of to seize, rob, or slay, beset in ambush. [way + lay.]

Way'side, *n.* & *a.* வழிப்பக்கத்திலிருக்கிற, (on or near) the side, border, or edge of a way or road.

Way'ward, *a.* அவிதேயனான, அடங்காத, சொன்னபடி கேட்காத, disobedient, froward, perverse, willful, taking one's own way. [For, 'awayward', turned away.]

We, *pron.*, *pl.* of I. (excluding *you*) நாங்கள்; (including *you*) நாம். [AS.; cog. Sk. *vayam*.]

Weak, *a.* (சரீரம்) பலஹீனமான, துர்பலமான, தளர்ச்சியாயுள்ள, மெலிந்த; புத்தி சாமர்த்தியமில்லாத, தைரியமில்லாத, துணிவில்லாத; not strong or vigorous, feeble, infirm, debiliated, frail, fragile, imbecile. [AS. *wac*, pliant, *wican*, to yield; akin to Sk. *vij*.]

Weak'en, *vt.* துர்பலம்செய், பலவீனமாக்கு, தளர்த்து, மெலிவி, பலங்குறை, make weak, enfeeble, enervate, debilitate, depress.

Weak'ly, *a.* பலவீனதேஹமுள்ள, feeble, weak, infirm, sickly.—*adv.* துர்பலமாய், பலவீனமாய், feebly, not forcibly.

Weak'ness, *n.* பலவீனம், துர்பலம், சோர்வு, தளர்ச்சி, அசத்தி, feebleness, debility, languor, imbecility, infirmness; தைரியமின்மை, timidity; லோபம், தோஷம், குற்றம், குறைவு, fault, defect, frailty, failing.

Weal, *n.* க்ஷேமம், செல்வம், வாழ்வு, பாக்கியம், welfare, prosperity, happiness. [AS. *wela*, prosperity, lit. the state of being well, fr. *wel*, well.]

Wealth, *n.* தனம், திரவியம், ஐசுவரியம், சம்பத்து, செல்வம், பொருள், riches, opulence, affluence, fortune; திரள், அதிகம், சமுத்தி, abundance, plenty. [From 'well' and suff. -th. see Weal.]

Wealth'y, *a.* தனவந்தனான, பாக்கியமுள்ள, ஐசுவரியமுள்ள, செல்வமுள்ள, having wealth, rich, opulent, affluent.

Wean, *vt.* (குழந்தையை) பால் மறக்கப்பண்ணு, முலைமறப்பி, take or separate from the breast or udder, or from the mother's milk as food, ablactate; வாடிக்கை தப்புவி, reconcile to the want or loss of something, disengage from a habit.—*n.* = Weanling. [AS. *wenian*, to accustom.]

Wean'ling, *n.* முலைப்பால்மறக்கப் பண்ணின பிள்ளை அ. ஜந்துக்குட்டி, a child or animal newly weaned, wean.—*a.* பால்மறந்த, recently weaned.

Weap'on, *n.* ஆயுதம், கருவி, அஸ்திரம், சஸ்திரம், an offensive or defensive instrument, an instrument to fight with, arm; போராடும்சாதனம், any means used against an adversary. [AS.]

Weap'oned, *a.* ஆயுததாரியான, ஆயுதந்தரித்த, furnished with weapons, armed.

Weap'onless, *a.* நிராயுதனான, ஆயுதமற்ற, படைக்கலமில்லாத, having no weapons, unweaponed, without weapons.

Wear, *vt.* அணி, தரி, உடுத்து, பூணு, போட்டுக்கொள், carry or bear upon the person, bear upon one's self, have on, put on; வஹி, பொறு, bear, assume; தேயப்பண்ணு, அரை, waste or impair by rubbing or friction, deteriorate or destroy by use, waste; படிப்படியாய்குறை அ. போக்கடி, diminish, consume gradually, destroy by degrees.—*vi.* தேய், அரை, குறை, be impaired or diminished gradually by use, waste gradually; கடத்து, pass away; பொறு, நில், இரு, last, bear the consequences of use, endure, hold out.—*n.* தரித்தல், அணிதல், wearing, puting on; தேய்வு, ஜீரணமாகல், வாடிக்கையால் குறைதல், diminution by friction, consumption, loss, or deterioration, by use. W. and tear = உபயோகிப்பதால் உண்டாகும்குறைவு, நஷ்டம். [AS.]

Wear'er, *n.* தரிப்போன், அணிவோன், one who wears.

Wearied, *a.* அலுப்புள்ள, தொய்வுள்ள, tired, fatigued.

Wea'riness, *n.* அலுப்பு, தொய்வு, ஆயாசம், தளர்ச்சி, களை, fatigue, tiredness, exhaustion, lassitude.

Wearing, *a.* தரிக்கிற, அணிகிற, designed for wear.

Wea'risome, *a.* அலுப்புண்டாக்குகிற, ஆயாசகரமான, tiresome, fatiguing, exhausting; சலிப்புண்டாக்குகிற, tedious, irksome, monotonous.

Wea'ry, *a.* அலுப்புள்ள, இளைப்பான, tired, fatigued, worn-out; இளைப்புண்டாக்குகிற, tiresome.—*vt.* இளைக்கச்செய், தளர்வி, வேசாரப்பண்ணு, ஆயாசமுண்டாக்கு, tire, fatigue, exhaust the strength of, jade; சலிப்புண்டாக்கு, exhaust or tire the patience of. [AS.]

Wea'sel, *n.* ஒருசிறுஜந்து. [AS.]

Weath'er, *n.* சீதோஷ்ணஸ்திதி வாயுஸ்திதி, காலசுபாவம், the state of

the air or atmosphere with respect to its temperature &c..—*vt.* சஹி, பொறு, endure, bear up against, sustain the trying effect of. [AS.]

Weath'er-beat'en, *a.* காற்றுமழைமுதலியவற்றில் அடியுண்ட, வாதாஹதமான, beaten or harassed by the weather; சிதிலமான, பழைமைபட்ட, worn by exposure to the weather.

Weath'er-cock', } **Weather-vane**, } *n.* காற்றுவீசும் திசைகாட்டும் ஒரு துவஜம்போன்ற சாதனம், காற்றுக்காட்டி, vane.

Weave, *vt.* நெய், நெசவுபண்ணு, இழை, entwine or interlace into a fabric, form a texture with.—*vi.* நெசவுவேலைசெய், work with a loom. [AS.; akin to Sk. *vabh.*]

Weav'er, *n.* நெசவுக்காரன், காருகன், சாலியன், சேணியன், an artisan whose occupation is to weave.

Weav'er-bird', *n.* ஒருவிதகுருவி.

Web, *n.* நெசவு, நெய்யப்பட்டது, that wh. is woven, a texture; சிலம்பிவலை, சிலந்திக்கூடு, cobweb. [AS.; see cog. Weave.]

Webbed, *a.* கால்விரல்களுக்கு இடையில் தோலுள்ள, தோலடியுள்ள, தோற்காலுள்ள, having the toes united by a web or membrane.

Web'by, *a.* மெல்லியநெசவுபோன்ற, சிலம்பி வலைபோன்ற, like a web.

Web'-foot', *n.* விரல்களுக்கு இடையில் சருமமுள்ளபாதம், தோலடி, a foot with the toes connected by a membrane.

Web'-foot'ed, *a.* தோலடியுள்ள, தோற்காலுள்ள, கால்விரல்களுக்கு இடையில்சருமமுள்ள, having webbed feet.

Wed, *vt.* மணம்புரி, விவாஹம்செய்துகொள், கலியாணம்செய்துகொள், marry, espouse, take in marriage, take as husband or wife; விவாஹம்செய், கலியாணம்செய், join in marriage, give in wedlock; சிநேஹமுண்டாக்கு, unite closely in affection, attach firmly by passion.—*vi.* கலியாணம்செய்துகொள், marry. [AS. *weddian*, to promise.]

Wed'ded, *a.* கலியாணமான, married, united in marriage; விவாஹ சம்., pert. to marriage or matrimony.

Wed'ding, *n.* கலியாணம், விவாஹம், marriage, nuptials, nuptial ceremony or festivities. [fr. Wed.]

Wedding-ring, *n.* கலியாணமோதிரம்.

